தமிழ்

ஆசிரியர் வளநூல்

க.பொ.த. உயர்தரம்
தரம் 12

(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

தமிழ்

ஆசிரியர் வளநூல்

க.பொ.த. உயர்தரம்
தரம் 12

(2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)

தமிழ்மொழித் துறை

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் : **info@nie.lk**

தமிழ்

ஆசிரியர் வளநூல்

க.பொ.த. உயர்தரம்

தரம் - 12

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2017

தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை,

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

இலங்கை.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் **: info@nie.lk**

அச்சுப் பதிப்பு:

தேசிய கல்வி நிறுவகம்

பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைவதற்கும், நல்லவற்றைப் பயன்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர்(Facilitator) போன்றவையெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும், பண்டைய அருஞ் செல்வங்களையும் கலக்கச் செய்து, தனது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை மாணவர்கள் அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி. வண. மாபுல்கொட சுமணரத்ன தேரர்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

பணிப்பாளர் அவர்களின் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்மொழித் துறையினர் தமக்கெனக் குறித்தொதுக்கப்பட்ட செயற்பாடுகளுடன், இவ்வருடத்திலிருந்து (2016) 'வளநூல்' வெளியிடுதலையும் ஒரு செயற்பாடாகச் சேர்த்துக்கொண்டுள்ளனர். இவ்வளநூல் சிறப்பாக அமையவேண்டும் என்பதில் பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களின் தலைமையிலான வளவாளர்கள் மிகுந்த சிரத்தை எடுத்துள்ளனர்.

புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டவுடன் புற்றீசல்கள் போலச் சில நூல்கள் வெளிவருவதுண்டு. அவை கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டிற்குத் துணையாக இருக்குமாயின் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால், அவற்றில் முழுமைபெறாத நிலையும் கருத்துக்களை முன்வைப்பதில் தொய்வு நிலையும் காணப்படுகின்றன. அதனால், மாணவர்களும் ஆசிரியர்களும் இடர்ப்பட நேரலாம். அவை பாடபேதம் கொண்டனவாக இருத்தல், செய்யுள்களின் கருத்துக்கள் வெவ்வேறு விதமாகக் காணப்படுதல், உயர்தர வகுப்பு மாணவர்களின் கொள்நிலையைத் தாண்டியனவாகக் கருத்துக்கள் முன்வைக்கப்படுதல் முதலிய காரணங்களால் ஆசிரியர்களும் மாணவர்களும் திசை தவற நேரிடலாம்.

இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டவிடத்துத்தான் வளநூலின் தேவைப்பாடு உணரப்பட்டது. ஆசிரியர் வழிகாட்டியின் விரிவாக்கமாக இருக்கின்ற இந்த வளநூல், ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டினை இலகுபடுத்தும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. மாணவர்களையும் இவ்வளநூல் கருத்திற்கொள்ளத் தவறவில்லை.

ஆசிரியர்கள் தமது கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது, இந்த வளநூலை அடிப்படையாகக்கொள்ளல் நன்று. விதிக்கப்பட்ட பாடப்பகுதிகள், இலக்கிய வரலாறு, இலக்கணம், ஆகியவற்றின் எல்லைகளையும் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் மொழித்திறன்களையும் கவனத்திற்கொண்டே இவ்வளநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வளநூல், சிறந்த வழிகாட்டியாக அமையத் தமது அயராத உழைப்பினைத் தந்துதவிய வள அணியினர் அனைவருக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வ.விஜயலெட்சுமி
பணிப்பாளர்,
தமிழ்மொழி துறை.

கலைத்திட்டக் குழு

ஆலோசனையும் அனுமதியும்:
கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்.

பாட விடய ஆலோசனை:
தகைநிலைப் பேராசிரியர். சி. தில்லைநாதன்
ஓய்வுநிலைப் பேராசிரியர். செ. யோகராஜா
பேராசிரியர். வ.மகேஸ்வரன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.
பேராசிரியர். ரமீஸ் அப்துல்லா
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி. க. இரகுபரன்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு. து.இராஜேந்திரம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
திருமதி. ரூபி வலன்ரினா பிரான்சிஸ்
சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.
திரு. ஈ. குமரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
செல்வி. வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

இணைப்பாக்கம்:
திரு. மு.தயாநிதி
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி.நா.சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

வளப் பங்களிப்பு:
திரு. த.யுவராஜன்
உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்பு.
திருமதி. த. மாணிக்கராஜா
ஓய்வு பெற்ற ஆசிரியை
திரு. கே. குணசேகரம்
உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், மட்டக்களப்புமேற்கு.
திரு. எஸ். கணபதிப்பிள்ளை
வலயக் கல்வி அலுவலகம், ஹற்றன்.
திரு. ந.யோகலிங்கம்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், இரத்தினபுரி.
திருமதி. ரதி தேவசுந்தரம்
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், கண்டி.
திரு. எஸ். கேசவன்
ஆசிரியர், கொ / இந்துக் கல்லூரி, இரத்மலானை.
திரு. பா. மகாலிங்கசிவம்,
ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.
திரு. சி.ரமேஸ்
யா / தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
திரு. ந.குகபரன்
கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளிநொச்சி.
ஜனாப்.எம்.அப்துல் றசாக்
அக் / அக்கரைப்பற்று, ஆசிராஜ் ம.வி.
திரு. எம். இந்திரகுமார்
பது / கோபோ தமிழ் மகா வித்தியாலயம், பதுளை

மொழிப் பதிப்பு: **செல்வி. வ. விஜயலெட்சுமி**
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

கணினிப் பதிப்பு: **திருமதி. அருணா தியாகராஜா**

நானாவித உதவி: **செல்வி. என். என். ரி. லியனஹே**
திரு. ஐ.பி. நவரத்ன

விடய உள்ளடக்கம்

பக்கம்

பகுதி - 1

01.	சங்கப் பாடல்கள்	01 - 12
02.	திருக்குறள்	13 - 29
03.	சிலப்பதிகாரம்	30 - 32
04.	கோயில் திருப்பதிகம்	33 - 37
05.	அமலனாதிபிரான்	38 - 41
06.	கம்பராமாயணம்	42 - 58
07.	தேம்பாவணி	59 - 68
08.	பாரதியார் கவிதைகள்	69 - 73
09.	ஈழநாட்டுக் குறம்	74 - 75
10.	பாரதியார்	76 - 77
11.	கட்டுரைகள்	78 - 89
12.	சிறுகதைகள்	90 - 112
13.	நாவல்	113 - 114
14.	நாடகம்	115 - 126

பகுதி - 2

01.	தமிழ் இலக்கிய வரலாறு	127 - 138
02.	ஈழத்து இலக்கிய வரலாறு	139 - 142
03.	இலக்கணம்	143 - 211

01. சங்கச் செய்யுள்கள்

அ. குறுந்தொகைச் செய்யுள்கள் (04)

சங்ககாலத்தில் எழுந்த தனிச்செய்யுள்களின் தொகுதிகளாய் அமைந்த எட்டு நூல்கள் ‘‘எட்டுத் தொகை’’ எனப்படும். அகத்திணை சார்ந்த செய்யுள்கள், அவற்றின் அடிகளின் எண்ணிக்கை அடிப்படையிலும் யாப்பின் அடிப்படையிலும் வேறுவேறு நூல்களாகத் தொகுக்கப்பட்டன. அவற்றுள் நாலடியைச் சிற்றெல்லையாகவும் எட்டடியைப் பேரெல்லையாகவும் கொண்ட நானூறு செய்யுள்களின் தொகுதியாய் அமைந்த நூலே ‘‘குறுந்தொகை’’ ஆகும்.

குறுந்தொகை - 126
ஆசிரியர் : ஒக்கூர் மாசாத்தியார்
இவர் சங்ககாலப் பெண்பாற் புலவர்களுள் ஒருவர். குறுந்தொகையில் 5 பாடல்களும் புறநானூற்றில் ஒரு பாடலும் அகநானூற்றில் 3 பாடல்களுமாக மொத்தம் 9 பாடல்கள் இவராற் பாடப்பட்டன.

இளமை பாரார் வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

இளமை பாரார் வளம் நசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவணரோ எனப்
பெயல் புறம் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்கு எயிறு ஆக
நகுமே தோழி நறும் தண் காரே.

பேசுபொருள்:
பொருளீட்டச் சென்ற தலைமகன், குறித்த பருவத்தில் வாராமை கண்டு வருந்திய தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

பொருள் :
தன்னுடையதும் என்னுடையதுமான இளமைப் பருவத்தின் அருமையைக் கருதாது, தலைவன் பிரிந்து சென்றது பொருள் மூலம் வரும் வளமான வாழ்க்கையை விரும்பியே. தலைவன் குறித்துச் சொன்ன கார்காலம் வந்துவிட்டது. ஆனால், அவன் இன்னும் இங்கு வரவில்லை. அவன் எங்குள்ளானோ? என்று கேட்டு, (கார்கால மழையால்) செழித்து வளர்ந்த முல்லையின் கொத்துக் கொத்தான அரும்புகளை ஒளிரும் பற்களாகக் கொண்டு கார்காலமானது (ஏளனமாகச்) சிரிக்கிறது.

- இளமை நிலையில்லாதது; போனால் மீளப் பெறமுடியாதது. ஆனால், பொருள் எக்காலத்திலும் தேடக்கூடியது. இளமை உள்ள காலத்தில் அனுபவிக்க வேண்டிய வாழ்க்கையை விட்டுவிட்டு, பொருளைத்தேடி இளமை கழிந்தபின் வந்து எதை அனுபவிக்கப் போகிறான்? என்று தலைவனின் அறியாமை குறித்துக் கார்காலம் சிரிப்பதாகத் தன் கருத்தை ஏற்றிச் சொல்கிறாள் தலைவி.

திணை : முல்லை
துறை : பருவங்கண்டிரங்கியது

அரும்பதங்கள் :

நசைஇ	- விரும்பி	இவண்	- இவ்விடம்
எவணரோ	- எவ்விடத்தில் உள்ளாரோ?	பெயல்	- மழை
முகை	- அரும்பு	இலங்குதல்	- விளங்குதல்
எயிறு	- பல்	நகுமே	- சிரிக்குமே

****

குறுந்தொகை - 225 ஆம் செய்யுள்

ஆசிரியர் : கபிலர்

இவர் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர். குறிஞ்சிப் பாடல்களைப் பாடுவதில் புகழ்பெற்றவர். ஔவையார், பரணர், இடைக்காடர் முதலானோரின் சமகாலத்தவர். பாரி, பேகன் போன்ற குறுநில மன்னர்களுடன் நட்போடு விளங்கியவர். 'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' என்றும் 'பொய்யா நாவிற் கபிலன்' என்றும் புலவர்களால் பாராட்டப் பெற்றவர். ஐங்குறுநூறில் மூன்றாம் நூறும், பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தும் இவரால் பாடப்பட்டவை. இவை தவிர, நற்றிணையில் 20 செய்யுள்களும் குறுந்தொகையில் 34 செய்யுள்களும் அகநானூற்றில் 17 செய்யுள்களும் கலித்தொகையில் 27 செய்யுள்களும் புறநானூற்றில் 28 செய்யுள்களும் இவரால் பாடப்பட்டவை. குறிஞ்சிப் பாட்டு இவரால் இயற்றப்பட்டது.

கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே.

கன்று தன் பயமுலை மாந்த முன்றில்
தினைப்பிடி உண்ணும் பெருங்கல் நாட
கெட்ட இடத்து உவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல,
நன்றி மறந்து அமையாய் ஆயின், மென்சீர்க்
கலிமயிற் கலாவத்து அன்ன இவள்
ஒலிமென் கூந்தல் உரியவால் நினக்கே.

பேசுபொருள்:

தலைவியோடு கொண்ட உறவை மறவாது, அவளை விரைந்து மணஞ்செய்து கொள்ளுமாறு தோழி, தலைவனை வற்புறுத்தல்.

பொருள்:

யானைக்கன்று, தன் தாய்மடியில் பால் அருந்திக் கொண்டிருக்கும்போதே, வீட்டின் முற்றத்தில் விளைந்த தினையினை உண்ணுதற்கு இடமாகிய பெரிய மலைநாட்டின் தலைவனே, கேடு வந்துற்றபோது விருப்புடன் ஒருவர் செய்த உதவியை, அரசு கட்டிலில் அமரும் சிறப்பு பெற்றபின் மறந்த அரசனைப் போல, (களவுக் காலத்தில்) உனக்கு நாம் செய்த நன்மையை / உதவியை மறவாது ஒழுகுவாய் ஆயின், தலைவியினுடைய, மெல்லிய மயிலிறகு போன்ற கூந்தல் உனக்கே உரிமையுடையதாகும்.

திணை : குறிஞ்சி

துறை : திருமணத்தின் அவசியத்தை வலியுறுத்தல் (வரைவிடை வைத்துப் பிரிவாற்குத் தோழி கூறியது.)

இது வரைவு கடாவுதல். தலைவியைத் திருமணம் செய்யும்படி, தலைவனை வற்புறுத்துவதாக அமைகின்றது.

தலைவியின் மதிநுட்பம்:

1. தலைவனின் ஆற்றலை உள்ளுறை / இறைச்சியூடாக விளக்குதல்
2. உவமையூடாகத் தலைவன் நன்றி மறக்காது, தனக்குரிய கடமையைச் செய்யவேண்டுமென்று வற்புறுத்தல்

தனது கருத்தை வலியுறுத்துவதற்காக தோழி உவமை, இறைச்சி என்பவற்றைக் கையாண்டு தலைவனது செயல்களை விளக்குகிறாள்.

1) பெண்யானை முற்றத்துத் தினையைத் தின்றபடியே தன் கன்றுக்குப் பாலூட்டுகின்றது. அங்ஙனமே நீயும் பொருள் தேடும் உன் கடமையை நிறைவேற்றுவதோடு, இவளது நலனையும் பேண வேண்டும்.
(இவ்வாறு குறிப்புத் தோன்றலினால் இது இறைச்சி அணியாகும்)

2) தலைவனே, நீ இதுவரை தலைவியிடம் அனுபவித்த நலங்களை மறந்தவனாக, அவளை விட்டுச் சென்றுவிடாமல், அவளை மணமுடித்து இல்லறம் நடத்துவாய் எனின், அவள் மகிழ்வாள்; அழகோடு துலங்குவாள். அவளது அழகு உனக்கு உரியதாய் அமையும். (நீ பிரியின் அவள் துன்புறுவாள்; அழகிழப்பாள்; அவளது அழகு உனக்கு உரியதல்லாத - தாக ஆகிவிடும் என்பது உட்கருத்து)

3) தான் பலமிழந்து இருந்த காலத்தில் பிறரின் உதவியைப்பெற்று அரசுகட்டில் ஏறியபின், தனக்கு முன்பு உதவிசெய்தவர்களை மறந்துவிடும் மன்னன் போல நன்றி மறந்தவனாக நீ அமையவில்லையெனில், தலைவியின் நலமெல்லாம் உனக்கு உரியதாகும் என்னும் தோழியின் அறிவுரையில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிவது அறம் அன்று என்ற கருத்துத் தொனிக்கிறது.

இதன் மூலமும் ‘‘விரைவாக மணஞ்செய்து கொள்ள வேண்டும்’’ என்பது வலியுறுத்தப்படுகின்றது.

தோழியின் மதிநுட்பம்:

- தலைவனது செயலை யானையின் செயலுக்கு உவமித்து, குறிப்பின் மூலம் அவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துதல்.
- நன்றி மறந்தவரது செயற்பாட்டை எடுத்துக்கூறி, தலைவனது தற்போதைய நிலையை எடுத்துக்காட்டல்.
- இவற்றின் மூலம் தலைவனது கடமையையும் பொறுப்பையும் எடுத்து விளக்குதல்.

அரும்பதங்கள் :

கன்று	- யானைக்கன்று	முன்றில்	- முற்றம்
பிடி	- பெண் யானை	பெருங்கல்நாடு	- பெரிய மலை நாடு
கெட்டித்து	- கேடு நேர்ந்த இடத்து	கலிமயில்	- ஆரவாரம் மிக்க மயில்
கலாபம்	- தோகை / பீலி	கட்டில்	- அரசு கட்டில் / அரியணை

* * * * *

குறுந்தொகை - 226

ஆசிரியர்: மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்

மதுரை சார்ந்தவராகவும் ஏடெழுதும் பணியில் இருந்தமையாலும் மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார் என அழைக்கப்பட்டவர். சேந்தன் என்பாரின் மகனாகிய இவர் குறிஞ்சி, நெய்தல், முல்லைத் திணைச் செய்யுள்களைப் பாடியுள்ளார். நற்றிணை (இரண்டு பாடல்கள்), குறுந்தொகை (3 பாடல்கள்), அகத்திணை (2 பாடல்கள்) முதலான நூல்களில் இவரது பாடல்கள் இடம்பெறுகின்றன.

பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல் வனப்பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

பூவொடு புரையும் கண்ணும் வேய் என
விறல் வனப்பு எய்திய தோளும் பிறை என
மதிமயக் குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன் வாழி தோழி அல்கலும்
தயங்கு திரை பொருத தாழை வெண்பூக்
குருகு என மலரும் பெரும்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ ஊங்கே.

பேசுபொருள்:

பிரிந்த தலைவன் திரும்பிவந்து மணமுடிக்கும் வரையிலான பிரிவுத்துயரினைத் தலைவி தாங்கமாட்டாளெனக் கருதி வருந்திய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

தலைவனைப் பிரிய முன்னர் இருந்த தலைவியின் அழகினை, உவமையணி மூலம் ஆசிரியர் விபரிக்கிறார்.

- இவளது பூவை ஒத்தனவாய் விளங்கும் கண்கள்
- மூங்கிலைப் போல அழகும் வெற்றியும் பெற்ற தோள்கள்
- பிறை என்று சொல்லும்படியாக, கண்டார் அறிவை மயங்கச் செய்யும் நெற்றி

பொருள் :

இராக்காலங்களில் மெல்லிய அலைகளால் தாக்கப்படும் தாழை மரங்களிலே, வெண்ணிறமான பூக்கள் கடற்பறவைகள்போல மலர்ந்து காட்சி அளிக்கின்ற பெரிய துறையை உடைய விரிந்த கடல்நிலத் தலைவனோடு இவள் சிரித்துப் பழகுவதற்கு முன்பு, பூவையொத்த கண்ணும் மூங்கிலை ஒத்த தோளும் பிறையை ஒத்ததான நெற்றியும் பெரிதும் நன்றாய் அமைந்திருந்தன.

தாழையின் வெண்ணிறமான பூக்கள் வெண்ணிறமான கடற்பறவைகள் போலத் தோன்றுகின்றன என்பதன் மூலம் தாழம்பூக்களைக் குருகு எனக் கருதிப் பிறர் அவற்றைக் கொய்து பயன் கொள்ளாதது போல, தலைவனும் தலைவியின் உண்மை நிலையினை உணராது திருமணம் செய்யாது அவளது அழகையும் வாழ்க்கையையும் வீணாக்குகிறான் என்பது குறிப்புப் பொருள்.

‘அல்கலும் தயங்குதிரை பொருத தாழை வெண்பூ’ என்பதன் மூலம் தலைவி இரவுதோறும் விரக வேதனையால் அலைக்கப்படுதல் குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

நெய்தல் நிலச்சிறப்பு

- அகன்ற நெய்தல் நில நீர்ப்பரப்பு, ‘‘பெருந்துறை விரிநீர்’’ எனச் சிறப்பிக்கப்படல்.
- தாழையின் வெண்ணிறப் பூ நாரைக்கு உவமிக்கப்படுகிறது. தாழையினது வெண்ணிறப் பூவை, நாரை எனக் கருதி துய்க்கப்படாது விடுபடுதல் போல, துய்க்கப்படாது வாழும் தலைவியின் நிலை குறிப்பால் உணர்த்தப்படல்.

திணை : நெய்தல்
துறை : ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி உரைத்தது.

அரும்பதங்கள் :

புரைதல்	- ஒத்தல்	வேய்	- மூங்கில்
விறல்	- வெற்றி	நுதல்	- நெற்றி
அல்கலும்	- இரவெல்லாம்	திரை	- அலை
குருகு	- நாரை / கடற்பறவை	பெருத	- மோதிய
சேர்ப்பன்	- நெய்தல் நிலத்தலைவன்	துறை	- அடைகரை
நகாஅ வூங்கே	- மகிழ்வதன் முன்	முன் நகுதல்	- சிரித்தல் / மகிழ்தல்
	- சிரித்து மகிழ்வதன் முன்		
	- நட்புக் கொள்வதன்		

* * * * *

குறுந்தொகை - 258
ஆசிரியர் : பரணர்
கடைச்சங்கப் புலவரான இவர் எண்பத்திரண்டு பாடல்களைப் பாடியவர். சோழன் உருவப்ப.ஃதேர் இளஞ்சேட் சென்னி, சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதன், வையாவிக் கோப்பெரும் பேகன் முதலான மன்னர்கள் பலரைப் பாடியுள்ளார். கபிலரின் நண்பராக விளங்கியவர்.

வாரலெஞ் சேரி தாரனின் றாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
அரியலம் புகவினங் கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன கண்டே.

வாரல் எம் சேரி தாரல் நின் தாரே
அலரா கின்றால் பெரும காவிரிப்
பலர் ஆடு பெரும் துறை மருதொடு பிணித்த
ஏந்து கோட்டு யானைச் சேந்தன் தந்தை
அரியல் அம் புகவின் அம் கோட்டு வேட்டை
நிரைய ஒள் வாள் இளையர் பெருமகன்
அழிசி ஆர்க்காடு அன்ன இவள்
பழி தீர் மாண் நலம் தொலைவன கண்டே.

பேசுபொருள்:
பரத்தையரிடம் சென்றுவந்த தலைவன்மேல் தலைவி கொண்ட ஊடல், தோழியால் தலைவனுக்கு எடுத்துரைக்கப்படல்.

பொருள் :
பெருமானே, பலரும் வந்து நீராடும் காவிரியின் பெரிய நீர்த்துறையின் கரையிலே, மருத மரத்தில் கட்டப்பட்ட நிமிர்ந்த கொம்புகளோடு / தந்தங்களோடு கூடிய யானைகளையுடையவன் சேந்தன். சேந்தனது தந்தை, கள்ளாகிய உணவையும் அழகிய விலங்குக் கூட்டங்களை வேட்டையாடும் தொழிலை உடைய அழிசி என்பவனாவான். அந்த அழிசி பகைவருக்கு நரகத்தைப் போலத் துன்பம் தரும் ஒளிபொருந்திய வாளையுடையவன்; இளைய வீரர்களுக்குத் தலைவனுமானவன். அழிசியின் ஊரான ஆர்க்காடு என்னும் ஊரைப் போன்ற இவளுடைய (தலைவியினுடைய) குற்றமற்ற மாட்சிமையுடைய நலங்கள் அழிதல் கண்ட பின்பாவது எம் சேரிக்கு வருவதனை நிறுத்திக் கொள்வாயாக. உனது மாலையைத் தருதலையும் கைவிடுக. உனது வருகையால் தலைவிக்குப் பழிச்சொல் உண்டாகின்றது.

திணை : மருதம்

துறை : **வாயில் நேர்ந்தது**
பரத்தையிடம் சென்ற தலைவன், தலைவியிடம் வந்து கபாடம் / கதவு / கடை திறக்கக் கேட்டல்
வாயில் மறுத்தது
தலைவன் / தோழி ஊடல் கொண்டு கடை திறக்க மறுத்தல்

உவமையணி கையாளப்படல் :
- அழிசி என்பவனின் ஆர்க்காடு நகரம், தலைவியின் குற்றமற்ற மாட்சிமையுடைய நலங்களுக்கு ஒப்பிட்டுக் காட்டப்படல்.
- சேந்தன் - யானை வேட்டுவனான அழிசியின் மகன். சோழர்களுக்காக காவிரிப் பெருந்துறை அருகே, யானைகளை வசப்படுத்துபவன். கோடை பொருநனாகிய கடிய நெடுவேட்டுவன் போல ஒரு படைத்தலைவன். இவன் சோழருக்குரியவன்.

அரும்பதங்கள் :

சேரி	-	வாழிடம்	தார்	-	மாலை
அலர்	-	பழிச்சொல்	பெரும	-	தலைவனே
பெருந்துறை	-	பெரிய நீர்த்துறை	மருது	-	மருதமரம்
பிணித்த	-	கட்டிய	கோடு	-	கொம்பு / தந்தம்
அரியல்	-	கள்	நிரயம்	-	நரகம்
தொலைதல்	-	அழிதல் / குறைதல்			

நிரிய ஒள் வாள் - பகைவருக்கு நரக வேதனைச் செய்யும் ஒளி படைத்த வாள்

* * * * *

ஆ. நற்றிணைச் செய்யுள் (1)

சங்ககாலத்துச் செய்யுள்களின் தொகுதிகளான எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாக நற்றிணை இடம்பெற்றுள்ளது. நானூறு செய்யுள்களைக் கொண்டுள்ளதால் நற்றிணை நானூறு எனவுங் குறிப்பிடப்படுகின்றது. அகத்திணை சார்ந்த ஒன்பதடியைச் சிற்றெல்லையாகவும் பன்னிரண்டடியைப் பேரெல்லையாகவும் கொண்ட அகவல் யாப்பிலான செய்யுள்களைக் கொண்ட நூல் இதுவாகும்.

நற்றிணை - 172

ஆசிரியர்: ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்கநீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா ருளவே.

விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளர் இசை கடுப்ப
வலம்புரி வான் கோடு நரலும் இலங்கு நீர்
துறைகெழு கொண்க நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவுமா உளவே.

பேசுபொருள்:
பகலில் தலைவியைச் சந்திக்க வந்த தலைமகனை நோக்கி, அவ்வாறு சந்திப்பதிலுள்ள இடஞ்சலை விளக்கிய தோழி, மணமுடித்துக்கொள்ளுமாறு அவனை வலியுறுத்தியது.

செய்யுள் விளக்கம் :
தலைவியோடு பகற்குறியில் சந்தித்தலைத் தவிர்த்து, விரைவாக தலைவியை மணஞ்செய்து கொள்ள வேண்டிய அவசியத்தை, தலைவனுக்குத் தோழி உணர்த்துதல்.

பொருள் :

புதியராய் வந்த பாணர்களது மெல்லிசை முழக்கைப் போல, வலம்புரிச்சங்கினது வெள்ளிய கோடானது ஒலித்துக் கொண்டிருக்கின்ற, நீர் விளங்கும் கடற்றுறை பொருந்திய நாட்டின் தலைவனே, விளையாட்டைவிரும்பும் ஆயமகளீரோடு வெண்மணலிடத்தே புன்னைக் காய்களை அழுத்திய படியாக விளையாடியிருந்தோம். அவற்றுள் ஒன்றை எடுக்க மறந்து போனோம். அங்ஙனம் யாம் அழுத்திய புன்னைக்காய் முளைவிட்டுத் தோன்றியது. அதனை நோக்கி மகிழ்வுற்றோம்;

நெய் பெய்து, கலந்த பாலினைப் பெய்து அதனை இனிதாக வளர்க்கவும் செய்தோம். அதனைக் கண்டனள் எம் அன்னை. நெய் பெய்த பாலினைப் பெய்து வளர்த்தது இதுவாதலின் நும்மைக் காட்டினும் சிறப்பானது, நுமக்குத் தங்கை போல்வது என்று கூறினாள். ஆதலினாலே இப்புன்னையின் நிழற்கீழாக நும்மோடு நகைத்து விளையாடி இன்புறுதற்கு நாமும் நாணமடைகின்றோம். அவ்வாறான பிற புன்னை நீழல்கள் இலவாகலின், பகலில் வாராது, அவளை வரைந்து கொள்வாயாக.

புன்னை எங்கள் தங்கை; தங்கையின் அருகிலே நின்று காதலனோடு சல்லாபிப்பது முறையானதன்று. நீங்கள் சல்லாபிப்பதற்கு இந்தப் புன்னையை விட, நிறைவான நிழலும் வேறு இல்லை. ஆகவே, அவளோடு பேசி மகிழ விரும்பினால், அவளை மணம் செய்வதைத்தவிர வேறு வழி இல்லை என்பது குறிப்புப்பொருள்.

திணை : நெய்தல்
துறை : பகற்குறியில் சந்திக்காது, விரைந்து மணம்செய்து கொள்ள வேண்டியதைத் தோழி வற்புறுத்தல்

பாடற் சிறப்பு :

உறவினராகிய புன்னை நிழற் கீழ் விளையாடி மகிழ்வதற்கு நாணமடைகின்றோம், என்று கூறுவதனால் தலைவன், தலைவி களவு ஒழுக்கத்தை (காதல்) ஊரார் அறிந்து கொள்வதாகிய அலர் தூற்றுதலையும் அதனாற் பகற் குறியிடத்து தலைவனைச் சந்திக்க அஞ்சுவதையும் கூறி, விரைவாகத் தலைவியை மணஞ்செய்து கொள்ளுமாறு தலைவனுக்குத் தோழி கூறுகிறாள்.

தனது கருத்தை வலியுறுத்துவதற்கு, தோழி கையாளும் உபாயங்கள் :

- புன்னை மரத்தை கருப்பொருளாகக் கொண்டு, அதன் காரணமாக தலைவி பகற்குறிக்கு அஞ்சுவதைக் குறிப்பிடல்.
- தலைவன் ஊரறியத் திருமணம் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தல்.

அரும்பதங்கள் :

விளையாடு ஆயம்	-	விளையாடுகின்ற தோழிமார்
காழ்	-	புன்னை
அகைய	-	வேரூன்றி முளை தோன்ற
நெய் பெய் தீம்பால்	-	நெய் கலந்த இனிய பால்
நாணுதம்	-	வெட்கப்படுகிறோம்
நுவ்வை	-	நும்முடன் பிறந்த தங்கை (நுமது தங்கை)
வலம்புரி	-	வலம்புரிச்சங்கு
வலம்புரி வான்கோடு	-	வெள்ளிய வலம்புரிச் சங்கு
நரலும்	-	ஒலிக்கும்
இலங்கு	-	விளங்கிய
விருந்திற் பாணர்	-	புதியராய் வந்த பாணர்
விளர் இசை கடுப்ப	-	மெல்லிய இசைப்பாட்டு ஒலி
விளர்	-	மென்மை / இளமை

****

இ. புறநானூற்றுச் செய்யுள்கள் (02)

சங்ககாலத்தைச் சார்ந்த புலவர்கள் பாடிய புறத்திணை சார்ந்த நானூறு செய்யுள்களின் தொகுப்பே புறநானூறு என்னும் நூல் ஆகும். வீரம், கொடை முதலிய பண்புகளையும் ஒழுகலாறுகளையும், நிலையாமைக் கோட்பாடுகளையும் கூறுவனவாக இச்செய்யுள்கள் அமைந்துள்ளன. இச்செய்யுள்கள் சிலவற்றின் பாட்டுடைத் தலைவர்களாக சங்ககாலத் தமிழகத்து சேர, சோழ, பாண்டிய வம்சத்து முடி மன்னர்களும் பாரி, ஓரி முதலிய குறுநிலத் தலைவர்களும் பிறரும் விளங்குகின்றனர். சங்ககால மக்களின் வாழ்வியல் அம்சங்கள் இச்செய்யுள்களினூடு நன்கு புலனாகின்றன.

புறநானூறு - 72

ஆசிரியர் : தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்

தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் எனும் பாண்டிய மன்னனால் பாடப்பெற்றது. இவனுக்கும் பகை அரசர்கள் எழுவருக்குமிடையில் தலையாலங்கானம் என்னுமிடத்தில் கடும்போர் மூண்டது. பகை அரசர் போர்க்களத்தில் எதிர்ப்படக் கூறிய புல்லிய வார்த்தைகளை (சிறு வார்த்தைகள்) பொறாது, கடுங்கோபமுற்று (வஞ்சினங் கொண்டு) வெகுளியும் எள்ளலும் வெளிப்படுவதாகிய வஞ்சின வார்த்தைகளால் பாடப்பெற்றது இப்பாடல்.

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத்தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

நகுதக் கனரே நாடுமீ கூறுநர்
இளையன் இவன் என உளையக் கூறி
படுமணி இரட்டும் பா அடிப் பணை தாள்
நெடு நல் யானையும் தேரும் மாவும்
படை அமை மறவரும் உடையம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கி
சிறு சொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை
அரும் சமம் சிதைய தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேன் ஆயின் பொருந்திய
என் நிழல் வாழ்நர் செல் நிழல் காணாது
கொடியன் எம் இறை என கண்ணீர் பரப்பி
குடி பழதூற்றங் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பில்
புலவர் பாடாது வரைக என் நிலவரை
புரப்போம் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே.

திணை : காஞ்சி
துறை : வஞ்சினக் காஞ்சி

பொருள் :

''இவனுடைய நாட்டை உயர்த்திப் பேசுபவர்கள் நகைப்புக்கு இடமானவர்கள்'', ''இவன் மிகவும் இளையவன்'' என்றெல்லாம் என் மனம் நோகும்படி கூறி, எனது பெருவலியைப் பொருட்படுத்தாது, ஒலியெழுப்பும் மணிகள் இருபுறமும் கட்டப்பட்டதும் பரந்த அடியோடு கூடிய பருத்த காலை உடையதுமான உயர்ந்த யானை, தேர், குதிரை என்பவற்றையும் ஆயுதங்கள் பொருந்தப்பெற்ற போர்வீரர்களையும் கொண்டவர்கள் நாம், என்று செருக்கோடு ஏளன வார்த்தைகளைப் பேசிய சினம் மிகுந்த அரசர்களை அரிய போரிலே சிதறும்படியாகத் தாக்கி, அவர்களது முரசத்தோடு அவர்களையும் ஒன்றாகக் கைப்பற்றுவேன். அவ்வாறு செய்யவில்லையெனில், பொருந்தியமைந்த என் நிழலிலே (பாதுகாப்பிலே) வாழ்பவர்கள் சென்று தங்குதற்குரிய வேறு நிழலைக் காணாதவர்களாக. எம் அரசன், ''கொடியவன்'' என்று கூறிக் கண்ணீர் விட்டு, குடிகள் பழிதூற்றுகின்ற (கொடுங்) கோலை உடையவனாகுவேன்; சிறந்த புகழையும் உயர்ந்த அறிவையும் உடைய மாங்குடி மருதனைத் தலைவனாகக் கொண்ட உலகத்தோடு (புகழால்) நிலைபெற்ற பலராலும் புகழப்படுகின்ற சிறப்பினை உடைய புலவர்களால் என் நாட்டு எல்லை பாடப்படாததாகட்டும். என்னால் பாதுகாக்கப்படுவோர் துயருறுமாறு என்னிடம் இரப்போருக்கு ஒன்றும் ஈயாதவாறு வறுமை என்னை வந்து அடையட்டும்.

பாடலில் வெளிப்படும் அம்சங்கள்

- பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வும் வீரமும்
- குடிகளைப் பாதுகாத்தலில் ஓர் அரசனுக்கு இருக்க வேண்டிய கடமை உணர்வு
- இரந்து வந்தவர்களுக்கு ஈதலின் உயர்வும் ஈயமுடியாமையின் இழிவும்
- பெரியவர்களின் புகழுக்கு உரியவராதலின் சிறப்பு, குடிகளின் பழிக்கு ஆளாவதன் இழிவு
- அக்காலப் புலவர்கள் ஒரு தலைமையின் கீழ் ஓர் அமைப்பாக இயங்கியமை
- அரசர்களிடம் நால்வகைப் படை காணப்பட்டமை.

அரும்பதங்கள்:

நகுதக்கனர்	-	சிரிக்கத் தக்கார்	மீக்கூறுநர்	-	மிகுத்துச் சொல்லுவார்
உளையக் கூறுதல்	-	வெறுப்பச் சொல்லுதல்	படுமணி	-	ஒலிக்கும் மணி
பணைத்தாள்	-	பெரிய கால்	பாவடி	-	பரந்த அடி
மறவர்	-	வீரர்	(உறு) துப்பு	-	(மிக்க) வலிமை
சிறுசொல்	-	புல்லிய இழிந்த வார்த்தை	சமம்	-	போர்
இறை	-	அரசன்	நிலைஇய	-	நிலைபெற்ற
புரப்போர்	-	ஆதரித்துக் காப்பவர்	புன்கண்	-	துயரம்
ஈயா இன்மை	-	கொடா வறுமை			

****

புறநானூறு - 101
ஆசிரியர்: ஔவையார்

சங்ககாலத்துப் பெரும்புலவர்களுள் ஒருவர் ஔவையார். பாரி, அதியமான் முதலான குறுநில மன்னர்களுடனும் சேர, சோழ, பாண்டியர்களோடும் பழகியவர். ஆயுள் நீட்டிப்புக்காகத் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியை அதியமான் தான் உண்ணாது, வயதுமுதிர்ந்து விளங்கிய ஔவையாருக்குக் கொடுத்தமை ஔவையார் பெற்றிருந்த பெருமதிப்பினைக் காட்டுவதாகும். புறநானூற்றிலும் ஏனைய தொகை நூல்களிலும் அவரியற்றிய 59 செய்யுள்கள் உள்ளன. அவை அவரது புலமைத் திறனை மட்டுமன்றிப் பரந்த உலகியல் அறிவினையும் ஆழ்ந்த வாழ்க்கை அனுபவத்தையும் காட்டுவனவாகும்.

ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய்யா காதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே.

ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ
அணி பூண் அணிந்த யானை இயல் தேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினும் நீட்டாது ஆயினும் யானை தன்
கோட்டிடை வைத்த கவளம் போல
கை அகத்தது அது பொய் ஆகாதே
அருந்த ஏமாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்க அவன் தாளே.

திணை : பாடாண்திணை
பாடாண்திணை என்பது புகழ்ந்து பாடத்தக்க ஆண்மகனின் ஒழுகலாறு. ஒருவனுடைய வீரம், கொடை, தண்ணளி முதலானவை புகழ்ந்து பாடப்படுதல்.

துறை : பரிசில் கடாநிலை

பரிசில் கடாநிலை என்பது யாவரும் பரிசில் பெற்றார். யான் பெற்றிலன் எனத் தனது பரிசில் பெறும் விருப்பத்தைப் பரிசில் கொடுப்போனிடத்தே புலப்படுத்திக் கூறுதல். பரிசிலரை விட்டு நீங்காமல் இருக்கும் தலைவனுக்குப் பரிசில் விரும்பியோன் தன் சுற்றத்தினரது துன்பம் முதலியவற்றைக் கூறிப் பரிசில் கேட்டு நின்ற நிலை, பரிசில் தாழ்ப்பினும் தருதல் தப்பாது என்று உரைத்து அதனைத் தருமாறு குறிப்பால் வேண்டுதல் முதலானவை ஆகும்.

பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம் :

ஔவையார் அதியமானிடம் பரிசில் வேண்டிப் பாடிச்சென்ற சமயம் அரசன் அதனை உடன் வழங்கவில்லை. அதியமான் ஔவையாரிடம் பெரும் மதிப்பும் விருப்பும் உடையவன். பரிசில் வழங்கத் தாமதித்த போதும் ஔவையார் அதியமானின் உண்மை உள்ளத்தைக் கருத்திற் கொண்டு, கொடையின் நிச்சயத்தன்மையை தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் அமைகிறது.

பாடப்பட்டோன் சிறப்பு :

அதியமான் நெடுமானஞ்சி கடையெழு வள்ளல்களில் ஒருவன், தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை தன் நன்மை கருதாது ஔவையாரின் நன்மை கருதி அவருக்குக் கொடுத்தவன். இவன் சேரமானின் உறவினன். கோவலூரை வெற்றி கொண்டவன். நாம் ஒரு நாள் அல்ல இரண்டு நாள் அல்ல பலநாளும் மீளமீளப் பலரோடு கூடச் சென்றாலும் முதல் நாளினைப் போலவே விருப்பமுடன் உதவும் பண்புடையவன். அணிகலன் அணிந்த யானையையும் தேரையும் உடையவன் அதியமான். அவன் பரிசில் தரக் காலம் சிறிது தாழ்ப்பினும் தாழ்த்தாவிடினும் அப்பரிசில் யானையினது கொம்பினிடையே வைக்கப்பட்ட கவளம்போல நம் கையகத்தது அது தப்பாமல் கிடைக்கும். உண்ண ஆசைப்பட்ட நெஞ்சே, நீ பரிசிலுக்கு வருந்த வேண்டாம். அவன் தாள் வாழ்க.

அதியமான் நெடுமானஞ்சியின் கொடை மாண்பு சிறப்பிக்கப்படல்

ஒருநாள், இருநாள், பலநாள் சென்றாலும் பலரோடு சென்றாலும் முதலில் சென்ற நாள் போன்ற விருப்பினன் என்றதனால் அதியமானின் சலியாத கொடைத்திறம் புலனாகின்றது.

உவமை அணியினூடாகக் கொடைச்சிறப்பு கூறப்படல்

"கோட்டிடை வைத்த கவளம் போல....."

யானையினது கோட்டிடை வைத்த கவளம் எப்படியும் அதன் வாயகத்தே போய்ச் சேரும். அதுபோல காலம் தாழ்ந்தாலும் தாழாவிட்டாலும் எப்படியும் கைவந்து சேரும்.

அரும்பதங்கள் :

தலைநாள்	-	முதலிற் சென்ற நாள்
பூண்	-	அணிகலன்
கோடு	-	கொம்பு (தந்தம்)
கவளம்	-	உணவுத்திரள்
ஏமாந்த	-	ஆசைப்பட்ட

****

02. திருக்குறள்

1. அறிவுடைமை

அ.ஃதாவது, கல்வி கேள்விகளின் ஆய அறிவோடு உண்மை அறிவு உடையன் ஆதல் அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

1. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்.

அறிவு அற்றம் காக்கும் கருவி - அரசர்க்கு அறிவு என்பது இறுதி வாராமல் காக்கும் கருவியாம்: செறுவார்க்கு அழிக்கலாகா உள் அரணும் - அதுவேயுமன்றிப் பகைவர்க்கும் அழிக்கலாகாத உள்ளரணும் ஆம்.

காத்தல்: மன் அறிந்து பரிகரித்தல். உள்ளரண்: உள்ளாய அரண்: உள்புக்கு அழிக்காலாகா அரண் என்றும் ஆம். இதனால் அறிவினது சிறப்புக் கூறப்பட்டது.

2. சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

சென்ற இடத்தால் செலவிடா - மனத்தை அது சென்ற புலத்தின் கண் செல்லவிடாது, தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு - அப் பலத்தின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீயதனின் நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு.

வினைக்கு ஏற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப் புலம் ஐந்தாயினும், ஒரு காலத்து ஒன்றின்கண் அல்லது செல்லாமையின் 'இடத்தால்' என்றார். 'விடாது' என்பது கடைக்குறைந்து நின்றது. குதிரையை நலமறிந்து செலுத்தும் வாதுவன்போல வேறாக்கி, மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவு என்றார், அ.ஃது உயிர்க்குணம் ஆகலின்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் - யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்டிபினும்: அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு - அப்பொருளின் மெய்யாய பயனைக் காணவல்லது அறிவு.

குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின் உயர்ந்த பொருள் அழிந்தார் வாயினும். இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப் பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும், ஒரோவழிக் கேட்கப்படுதலான் 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்'' என்றார். அடுக்குப் பன்மை பற்றி வந்தது. 'வாய்' என்பது அவர் அப் பொருளின்கண் பயிலாமை உணரநின்றது. மெய்யாதல்: நிலைபெறுதல். சொல்வாரது இயல்பு நோக்காது அப்பொருளின் பயன் நோக்கிக் கொள்ளுதல். ஒழிதல் செய்வது அறிவு என்பதாம்.

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

தான் என்பொருள ஆகச் செலச் சொல்லி - தான் சொல்லும் சொற்களை அரிய பொருள் ஆயினும் கேட்பார்க்கு எளிய பொருள ஆமாறு மனம் கொளச்சொல்லி; பிறர் வாய் நுண்பொருள் காண்பது அறிவு - பிறவாய்க் கேட்கும் சொற்களின் நுண்ணிய பொருள் காண அரிதாயினும் அதனைக் காணவல்லது அறிவு.

உடையவன் தொழில் அறிவின்மேல் ஏற்றப்பட்டது. சொல்லுவன வழுவின்றி இனிது விளங்கச் சொல்லுக என்பார் சொல் மேல் வைத்தும், கேட்பன வழுவினும் இனிது விளங்கா ஆயினும் பயனைக் கொண்டொழிக என்பார் பொருள் மேல் வைத்தும் கூறினார்.

5. உலகந் தழீஇய தொட்பம் மலர்தலங்
கூம்பலு மில்ல தறிவு.

உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

உலகம் தழீஇய ஒட்பம் - உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமால்; மலர்தலும் கூம்பலும் இல்லது அறிவு - அந் நட்பின் கண் முன் மலர்தலும் பின் கூம்புதலும் இன்றி ஒரு நிலையனாவது அறிவாம்.

'தழீஇயது''இல்லது' என்பன அவ்வத் தொழில்மேல் நின்ற. 'உலகம்' என்பது ஈண்டு உயர்ந்தோரை. அவரோடு கயப்பூப்'போல வேறுபடாது கோட்டுப் பூப்போல ஒரு நிலையே நட்பாயினான் எல்லா இன்பமும் எய்தும் ஆதலின், அதனை அறிவு என்றார். காரியங்கள் காரணங்களாக உபசரிக்கப்பட்டன. இதனைச் செல்வத்தில் மலர்தலும் நல்குரவில் கூம்பலும் இல்லது என்று உரைப்பாரும் உளர்.

6. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

உலகம் எவ்வது உறைவது - உலகம் யாதொருவாற்றான் ஒழுகுவதாயிற்று; உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு - அவ் உலகத்தோடு மேவித் தானும் அவ்வாற்றான் ஒழுகுவது அரசனுக்கு அறிவு.

'உலகத்தையெல்லாம் யான் நியமித்தலான் என்னை நியமிப்பாரில்லை' எனக் கருதித் தான் நினைத்தவாறே ஒழுகின் பாவமும் பழியும் ஆம் ஆகலான். அவ்வாறு ஒழுகுதல் அறிவு அன்று என விலக்கியவாறு ஆயிற்று. **இவை ஐந்து பாட்டானும் அதனது இலக்கணம் கூறப்பட்டது.**

7. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அ∴தறி கல்லா தவர்.

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவலார்
அ∴துஅறி கல்லா தவர்.

அறிவுடையார் ஆவது அறிவார் - அறிவுடையராவர் வரக்கடவதனை முன் அறியவல்லார்; அறிவிலார் அ∴து அறிகல்லாதவர் - அறிவிலராவர் அதனை முன் அறியமாட்டாதார்.

முன் அறிதல்: முன்னே எண்ணி அறிதல். அ∴து அறிகல்லாமை ஆவது: வந்தால் அறிதல். இனி 'ஆவது அறிவார்' என்பதற்குத் தமக்கு நன்மையறிவார் என்று உரைப்பாரும் உளர்.

8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்.

அஞ்சுவது அஞ்சாமை பேதமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை - அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமையாம்: அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் - அவ் அஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம்.

பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி 'அஞ்சுவது' என்றார். அஞ்சாமை; எண்ணாது செய்து நிற்றல். அஞ்சுதல்: எண்ணித் தவிர்தல். அது இறைமாட்சியாகச் சொல்லப்பட்டமையின், ஈண்டு அஞ்ச வேண்டும் இடம் கூறியவாறு. **இவை இரண்டு பாட்டானும் அதனை உடையாரது இலக்கணம் கூறப்பட்டது.**

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு - வரக்கடவதாகிய அதனை முன் அறிந்து காக்கவல்ல அறிவினை உடையார்க்கு; அதிரவருவது ஓர் நோய் இல்லை - அவர் நடுங்க வருவதொரு துன்பமும் இல்லை.

'நோய்' என வருகின்றமையின், வாளா 'எதிரதா' என்றார். இதனான் காக்கலாம் காலம் உணர்த்தப்பட்டது. காத்தல், அதன் காரணத்தை விலக்குதல். அவர்க்குத் துன்பம் இன்மை இதனான் கூறப்பட்டது.

10. அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவுடையார் பிறிதொன்றும் இலராயினும் எல்லாம் உடையராவர்; அறிவிலார் என் உடையரேனும் இலர் - அறிவிலார் எல்லாம் உடையராயினும் ஒன்றும் இலராவர்.

செல்வங்கள் எல்லாம் அறிவாற் படைக்கவும் காக்கவும் படுதலின் அ.ஃது உடையாரை 'எல்லாம் உடையார்' என்றும், அவை எல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும் அழியாமல் காத்தற்கும், தெய்வத்தான் அழிந்துழிப் படைத்தற்கும் கருவியுடையார் அன்மையின் அ.ஃது இல்லாதாரை என்னுடைய ரேனும் இலர்' என்றும் கூறினார். 'என்னும்' என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. இதனான் அவரது உடைமையும் ஏனையாரது இன்மையும் கூறப்பட்டன.

02. குற்றம் கடிதல்

அ.ஃதாவது, காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட குற்றங்கள் ஆறினையும் அரசன் தன்கண் நிகழாமல் கடிதல். இவற்றை வடநூலார் பகைவர்க்கம் என்ப. இவை குற்றம் என்று அறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கு அல்லது கூடாமையின் அதன் பின் வைக்கப்பட்டது.

1. செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் - மதமும் வெகுளியும் காமமும் ஆகிய குற்றங்கள் இல்லாத அரசரது செல்வம்; பெருமித நீர்த்து - மேம்பாட்டு நீர்மையினை உடைத்து. மதம்: செல்வக்களிப்பு. சிறியோர் செயலாகலின், அளவிறந்த காமம் 'சிறுமை' எனப்பட்டது. இவை நீதியல்லன செய்வித்தலான், இவற்றைக் கடிந்தார். செல்வம் நல்வழிப்பாடும் நிலைபேறும் உடைமையின், மதிப்புடைத்து என்பதாம். மிகுதி பற்றி இவை முற்கூறப்பட்டன.

2. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

இவறலும் - வேண்டும் வழிப்பொருள் கொடாமையும்; மாண்பு இறந்தமானமும் - நன்மையின் நீங்கிய மானமும்; மாணா உவகையும் - அளவிறந்த உவகையும்; இறைக்கு ஏதம் - அரசனுக்குக் குற்றம்.

மாட்சியான மானத்தின் நீக்குதற்கு 'மாண்பு இறந்த மானம்' என்றார். அஃதாவது ''அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம் முன்னோர், தந்தை தாய் என்றிவ''ரை (புறப்.வெ.பாடாண்.33) வணங்காமையும், முடிக்கப்படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின. அளவிறந்த உவகையாவது கழிகண்ணோட்டம். பிறரும் ''சினனே காமம் கழிகண்ணோட்டம்'' என்றிவற்றை ''அறந்தெரி திகிரிக்கு வழியடையாகும் தீது'' (பதிற்.22) என்றார். **இவை இரண்டு பாட்டானும் குற்றங்களாவன இவை என்பது கூறப்பட்டது.**

3. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

பழிநாணுவார் - பழியை அஞ்சுவார்; தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் - தம்கண் தினையின் அளவாம் குற்றம் வந்ததாயினும் அதனை அவ்வளவாக அன்றிப் பனையின் அளவாகக் கொள்வர்.

குற்றம்: சாதிப்பெயர் தமக்கு ஏலாமையின் சிறிது என்று பொறார் பெரிதாகக் கொண்டு வருந்திப் பின்னும் அது வாராமல் காப்பர் என்பதாம்.

4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தருஉம் பகை.

குற்றமே காக்க பொருளாக; குற்றமே
அற்றம் தருஉம் பகை.

அற்றம் தருஉம் பகை குற்றமே - தனக்கு இறுதி பயக்கும் பகை குற்றமே; குற்றமே பொருளாளக் காக்க - ஆகலான் அக் குற்றம் தன்கண் வாராமையே பயனாகக் கொண்டு காக்க வேண்டும். இவை பற்றி அல்லது பகைவர் அற்றம் தாராமையின் 'இவையே பகையாவன' என்னும் வடநூலார் மதம் பற்றிக் 'குற்றமே அற்றம் தருஉம் பகை' என்றும், இவற்றது இன்மையே குணங்களது உண்மையாகக் கொண்டு என்பார் 'பொருளாக' என்றும் கூறினார். 'குற்றமே காக்க' என்பது ''அரும்பண்பினாற் தீமை காக்க'' என்பது போல நின்றது.

5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை - குற்றம் வரக்கடவதாகின்ற முற்காலத்திலே அதனைக் காவாத அரசன் வாழ்க்கை; எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும் - அது வந்தால் எரிமுகத்து நின்ற வைக்கோல் குவை போல அழிந்துவிடும்.

'குற்றம்' என்பது அதிகாரத்தான் வந்தது. 'முன்னர்' என்றதன் ஈற்றது பகுதிப் பொருள் விகுதி. 'வரும்' என்னும் பெயரெச்சம் 'முன்னர்' என்னும் காலப் பெயர் கொண்டது. அதனால் காக்கலாம் காலம் பெறப்பட்டது. குற்றம் சிறிதாயினும் அதனால் பெரிய செல்வம் அழிந்தேவிடும் என்பது உவமையால் பெற்றாம்.

6. **தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்**
என்குற்ற மாகும் இறைக்கு.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்பிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு?

தன் குற்றம் நீக்கிப் பிறர் குற்றம் காண்கிற்பின் - முன்னர்த் தன் குற்றத்தைக் கண்டு கடிந்து பின்னர் பிறர் குற்றங் காண வல்லனாயின்; இறைக்கு ஆகும் குற்றம் என் - அரசனுக்கு ஆகக் கடவ குற்றம் யாது?

அரசனுக்குத் தன் குற்றம் கடியாதவழியே பிறர் குற்றம் கடிதல் குற்றம் ஆவது, கடிந்தவழி முறைசெய்தலாம் என்பார் 'என் குற்றம் ஆகும்' என்றார். எனவே, தன் குற்றம் கடிந்தவனே முறை செய்தற்கு உரியவன் என்பதாயிற்று. **இவை நான்கு பாட்டானும் அவற்றது கடிதற்பாடு பொது வகையால் கூறப்பட்டது.** இனிச் சிறப்பு வகையால் கூறுப.

7. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.

செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பாலது அன்றிக் கெடும்.

செயற்பால செய்யாது இவறியான் செல்வம் - பொருளால் தனக்குச் செய்து கொள்ளப்படும் அவற்றைச் செய்து கொள்ளாது அதன்கண் பற்றுள்ளம் செய்தானது செல்வம்; உயற்பாலது அன்றிக் கெடும் - பின் உளதாம் பான்மைத்து அன்றி வறிதே கெடும்.

செயற்பால ஆவன: அறம் பொருள் இன்பங்கள். பொருளாற் பொருள் செய்தலாவது பெருக்குதல்; அது ''பொன்னின் ஆகும் பொருபடை, அப்படை, தன்னின் ஆகும் தரணி, தரணியில், பின்னை ஆகும் பெரும்பொருள், அப்பொருள், துன்னும் காலைத் துன்னாதன இல்லையே'' (சீவக.விமலை.35) என்பதனான் அறிக. அறம் செய்யாமையானும் பொருள் பெருக்காமையானும் 'உயற்பாலதன்றி' என்றும் இன்பம் பயன் கொள்ளாமையின் 'கெடும்' என்றும் கூறினார். 'உயற்பாலதின்றி' என்று பாடம் ஓதுவாரும் உளர்.

8. பற்றுள்ள மென்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்று அன்று.

பற்றுள்ளம் என்னும் இவறன்மை - பொருளை விடத்தகும் இடத்து விடாது பற்றுதலைச் செய்யும் உள்ளம் ஆகிய உலோபத்தினது தன்மை; எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று - குற்றத் தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவது ஒன்று அன்று; மிக்கது.

இவறலது தன்மையாவது: குணங்கள் எல்லாம் ஒருங்கு உளவாயினும் அவற்றைக் கீழ்படுத்துத் தான் மேற்பட்ட வல்ல இயல்பு, ஒழிந்தன அதுமாட்டாமையின் 'எற்றுள்ளும் எண்ணப்படுவதொன்று அன்று' என்றார். 'எற்றுள்ளும்' என்பது இடைக்குறைந்து நின்றது. இவை இரண்டு பாட்டானும் உலோபத்தின் தீமை கூறப்பட்டது.

9. வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

வியவற்ற எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை.

எஞ்ஞான்றும் தன்னை வியவற்க - தான் இறப்ப உயர்ந்த ஞான்றும் மதத்தால் தன்னை நன்குமதியாது ஒழிக; நன்றி பயவா வினை நயவற்க - தனக்கு நன்மை பயவா வினைகளை மானத்தால் விரும்பாது ஒழிக.

தன்னை வியந்துழி இடமும் காலமும் வலியும் அறியப் படாமையானும், அறனும் பொருளும் இகழப்படுதலானும், 'எஞ் ஞான்றும் வியவற்க' என்றும், 'கருதியது முடித்தே விடுவல' என்று அறம் பொருள் இன்பங்கள் பயவா வினைகளை நயப்பின் அவற்றால் பாவமும் பழியும் கேடும் வருமாகலின், அவற்றை 'நயவற்க' என்றும் கூறினர். **இதனான், மத மானங்களின் தீமை கூறப்பட்டது.**

10. **காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்**
ஏதில ஏதிலார் நூல்.

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின் - தான் காதலித்த பொருள்களை அவர் அக் காதல் அறியாமல் அனுபவிக்க வல்லனாயின்; ஏதிலார் நூல் ஏதில - பகைவர் தன்னை வஞ்சித்தற்கு எண்ணும் எண்ணம் பழுதாம்.

அறிந்தவழி அவை வாயிலாகப் புகுந்து வஞ்சிப்பார். ஆகலின், அறியாமல் உய்த்தால், வாயில் இன்மையின் வஞ்சிக்கப்படான் என்பதாம். காமம், வெகுளி, உவகை என்பன முற்றக்கடியும் குற்றம் அன்மையின், இதனான் பெரும்பான்மைத்தாகிய காமம் நுகருமாறு கூறி, ஏனைச் சிறுபான்மையவற்றிற்குப் பொதுவகை விலக்கினையே கொண்டொழிந்தார்.

03. பெரியாரைத் துணைக்கோடல்

அ.ாவது, மூவிரு குற்றமும் முறைமையின் கடிதலின் காவற்சாகாடு உகைத்தற்கு உரியனாய அரசன், தீநெறி விலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். பேரறிவு உடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வாராமல் காத்தற்கு உரிய அமைச்சர், புரோகிதர்.

1. **அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
திறனறிந்து தேர்ந்து கொளல்.

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்.

அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை - அறத்தினது நுண்மையை அறிந்து தன்னின் மூத்த அறிவுடையாரது கேண்மையை; தேர்ந்து திறன் அறிந்து கொளல் - அரசன் அதனது அருமையை ஓர்ந்து, கொள்ளும் திறம் அறிந்து கொள்க.

அறநுண்மை நூலானேயன்றி உய்த்துணர்வானும் அறிய வேண்டுதலின் 'அறன் அறிந்து' என்றார். மூத்தல் அறிவானும், சீலத்தானும் காலத்தானும் முதிர்தல். அறிவு உடையார்: நீதியையும் உலக இயலையும் அறிதலை உடையார். திறன் அறிதலாவது நன்கு மதித்தல், உயரச் செய்தல், அவர்வரை நிற்றல் என்பன முதலாக அவர் பிணிப்புண்ணும் திறன் அறிந்து செய்தல்.

2. **உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

உற்றநோய் நீக்கி - தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கி; உறாமை முற்காக்கும் பெற்றியார் - பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன் அறிந்து காக்கவல்ல தன்மையினையுடையாரை; பேணிக் கொளல் - அரசன் அவர் உவப்பன செய்து துணையாகக் கொள்க.

தெய்வத்தான் வரும் துன்பங்களாவன: மழையினது இன்மை மிகுதிகளானும், காற்றுத் தீப்பிணி என்று இவற்றானும் வருவன. அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளான் நீக்கப்படும். மக்களான் வரும் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்றிவர்களான் வருவன; அவை சாம பேத தான தண்டங்கள் ஆகிய நால்வகை உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களால் அறிந்து, அச் சாந்திகளால் காத்தலும், மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம்,

செயல் என்பவற்றான் அறிந்து அவ் உபாயங்களுள் ஒன்றால் காத்தலும் ஆம். ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறாயிற்று. இங்கிதம்: குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில்.

ஆகாரம்: குறிப்பின்றி நிகழும் வேறுபாடு. உவப்பன: நன்கு மதித்தல் முதலியன. **இவை இரண்டு பாட்டானும் பெரியாரது இலக்கணமும், அவரைத் துணையாகக் கோடல் வேண்டும் என்பதூஉம், கொள்ளுமாறும் கூறப்பட்டன.**

3. அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராகக் கொளல்.

பெரியாரைப் பேணித் தமராக்கொளல் - அப் பெரியவர்களை அவர் உவப்பன அறிந்து செய்து, தமக்குச் சிறந்தாராகக் கொள்ளுதல்; அரியவற்றுள் எல்லாம் அரிது - அரசர்க்கு அரிய பேறுகள் எல்லாவற்றுள்ளும் அரிது.

உலகத்து அரியனவெல்லாம் பெறுதற்கு உரிய அரசர்க்கு இப்பேறு சிறந்தது என்றது. இதனால் அவையெல்லாம் உளவாதல் நோக்கி.

4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல் - அறிவு முதலியவற்றால் தம்மின் மிக்கார் தமக்குச் சிறந்தாராகத் தாம் அவர் வழி நின்று ஒழுகுதல்; வன்மையுள் எல்லாம் தலை - அரசர்க்கு எல்லா வலி உடைமையினும் தலை.

பொருள், படை, அரண்களான் ஆய வலியினும் இத்துணை வலி சிறந்தது என்றது, இவர் அவற்றான் நீக்கப்படாத தெய்வத்துன்பம் முதலியனவும் நீக்குதற்கு உரியர் ஆகலின்.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

சூழ்வார் கண்ஆக ஒழுகலான் - தன் பாரம் அமைச்சரைக் கண்ணாகக் கொண்டு நடத்தலான்; மன்னவன் சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் - அரசன் அத்தன்மையராய அமைச்சரை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்க.

இரண்டாவது விகாரத்தால் தொக்கது. தானே சூழ வல்லவனாயினும் அளவிறந்த தொழில்களான் ஆகுலம் எய்தும் அரசன் பாரம் அதுவே தொழிலாய அமைச்சரான் அல்லது இனிது நடவாமை பற்றி, அவரைக் கண்ணாகக் கூறினார். ஆராய்தல்: அமைச்சியலுள் சொல்லப்படும் இலக்கணத்தினர் என்பதனை ஆராய்தல். **இவை மூன்று பாட்டானும் பெரியாரைத் துணைக் கோடலின் சிறப்புக் கூறப்பட்டது.**

6. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானை - தக்கராகிய இனத்தை உடையனாய்த் தானும் அறிந்து ஒழுகவல்ல அரசனை; செற்றார் செயக் கிடந்தது இல் - பகைவர் செய்யக் கிடந்ததொரு துன்பமும் இல்லை.

தக்கார்: அறிவு ஒழுக்கங்களால் தகுதி உடையார். ஒழுகுதல்: அறநீதிகளின் நெறி வழுவாமல் நடத்தல். வஞ்சித்தல், கூடினரைப் பிரித்தல், வேறு பகை விளைத்தல் என்று இவற்றானும், வலியானும், பகைவர் செய்யுந் துன்பங்கள் பலதிறந்த ஆயினும், தானும் அறிந்து அறிவார் சொல்லும் கொண்டொழுகுவான்கண் அவற்றுள் ஒன்றும் வாராது என்பார் 'செற்றார் செயக்கிடந்தது இல்' என்றார்.

7. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்?

இடிக்கும் துணையாரை ஆள்வாரை - தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் துணையாந்தன்மையை உடையாரை இவர் நமக்குச் சிறந்தார் என்று ஆளும் அரசரை; கெடுக்கும் தகைமை யவர் யார் - கெடுக்கும் பெருமை உடைய பகைவர் உலகத்து யாவர்?

தீயன: பாவங்களும் நீதியல்லனவும் துணையாம் தன்மையாவது: தமக்கு அவையின்மையும் அரசன்கண் அன்புடைமையும் ஆம். அத்தன்மை உடையார் நெறியின் நீங்கவிடாமையின், அவரை ஆளும் அரசர் ஒருவரானும் கெடுக்கப்படார் என்பதாம். 'நெருங்கிச் சொல்லுமளவினோரை' என்று உரைப்பாரும் உளர். **இவை இரண்டு பாட்டானும் அதன் பயன் கூறப்பட்டது.**

8. இடிப்பாரை இல்லாத எமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

இடிப்பாரை இல்லாத ஏமாரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் - கழறுதற்கு உரியாரைத் தனக்குத் துணையாகக் கொள்ளாமையின் காவலற்ற அரசன்; கெடுப்பார் இலானும் கெடும் - பகையாய்க் கெடுப்பார் இல்லையாயினும் தானே கெடும்.

'இல்லாத' 'ஏமரா' என்பன பெயரெச்ச அடுக்கு. கெடுப்பார் உளராவர் என்பது தோன்ற. இலானும் என்றார். தானே கெடுதலாவது; பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச்சென்று கெடுதல்.

9. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்புஇலார்க்கு இல்லை நிலை.

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை - முதற்பொருள் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லையாம்; மதலையாம் சார்பு இலார்க்கு நிலை இல்லை - அதுபோலத் தம்மைத் தாங்குவதாம் துணையில்லாத அரசர்க்கு அதனான் வரும் நிலையில்லை.

முதலைப் பெற்றே இலாபம் பெறவேண்டுமாறு போலத் தாங்குவாரைப் பெற்றே நிலைபெற வேண்டும் என்பதாம். நிலை: அரசர் பாரத்தோடு சலியாது நிற்றல்.

10. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் கொடர்கை விடல்.

பல்லார் பகைகௌலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்து - தான் தனியனாய் வைத்துப் பலரோடும் பகைகொள்ளுதலின் பதிற்று மடங்கு தீமை உடைத்து; நல்லார் தொடர் கைவிடல் - அரசன் பெரியாரோடு நட்பினைக் கொள்ளாது ஒழிதல்.

பலர் பகை ஆயக்கால் ''மோதி முள்ளொடு முட்பகை கண்டிடல், பேதுசெய்து பிளந்திடல்'' (சீவக.விமலை.32) என்பவையல்லது ஒருங்கு வினையாக் குறித்துச் செய்தாலும் ஒருவாற்றான் உய்தல் கூடும்; நல்லார் தொடர் கைவிட்டால் ஒருவாற்றானும் உய்தல் கூடாமையின், இது செய்தல் அதனினும் தீது என்பதாம். **இவை மூன்று பாட்டானும் அது செய்யாத வழிப்படும் குற்றம் கூறப்பட்டது.**

04. சிற்றினம் சேராமை

அ.ாவது, சிறிய இனத்தைப் பொருந்தாமை. சிறிய இனமாவது ''நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல் என்போரும்'' (புறம்.29) விடரும், தூர்த்தரும், நடரும் உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்தின் பெரியாரைத் துணைக் கோடல் பயன் இன்று என்பது உணர்த்தற்கு இ.ாது அதன்பின் வைக்கப்பட்டது.

1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

சிற்றினம் அஞ்சும் பெருமை, சிறுமைதான்
சுற்றாமாச் சூழ்ந்து விடும்.

பெருமை சிற்றினம் அஞ்சும் - பெரியோர் இயல்பு சிறிய இனத்தை அஞ்சா நிற்கும்; சிறுமை தான் சுற்றமாச் சூழ்ந்து விடும் - ஏனைச்சிறியோர் இயல்பு அது சேர்ந்தபொழுதே அதனைத் தனக்குச் சுற்றமாக எண்ணித் துணியும்.

தத்தம் அறிவு திரியுமாறும் அதனால் தமக்கு வரும் துன்பமும் நோக்கலின் 'அறிவுடையார் அஞ்சுவர்' என்றும், அறிவு ஒற்றுமையான் பிறிது நோக்காமையின், அறிவிலாதார் தமக்குச் சுற்றமாகத் துணிவர் என்றும் கூறினார். பொருளின் தொழில்கள் பண்பின்மேல் நின்றன. **இதனான் சிறிய இனம் பெரியார்க்கு ஆகாது என்பது கூறப்பட்டது.**

2. நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு.

நிலத்து இயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்து இயல்பது ஆகும் அறிவு.

நிலத்து இயல்பான் நீர் திரிந்து அற்றாகும் - தான் சேர்ந்த நிலத்தினது இயல்பானே நீர் தன் தன்மை திரிந்து அந் நிலத்தின் தன்மைத்தாம்; மாந்தர்க்கு இனத்து இயல்பு அறிவு (திரிந்து) அது ஆகும் - அதுபோல மாந்தர்க்குத் தாம் சேர்ந்த இனத்தின் இயல்பானே அறிவும் தன் தன்மை திரிந்து அவ் இனத்தின் தன்மைத்தாம்.

எடுத்துக்காட்டு உவமை, விசும்பின்கண் தன் தன்மைத்தாய நீர் நிலத்தோடு சேர்ந்த வழி, நிறம், சுவை முதலிய பண்புகள் திரிந்தாற்போல, தனிநிலைக்கண் தன் தன்மைத்தாய அறிவு பிற இனத்தோடு சேர்ந்த வழிக் காட்சி முதலிய தொழில்கள் திரியும் என இதனான் அதனது காரணங் கூறப்பட்டது.

3. மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னா னெனப்படுஞ் சொல்.

மனத்தான் ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி, இனத்தான் ஆம்
இன்னான் எனப்படும் சொல்.

மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம் - மாந்தர்க்குப் பொது உணர்வு தம் மனம் காரணமாக உண்டாம்; இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம் - இவன் இத் தன்மையன் என்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல் இனம் காரணமாக உண்டாம்.

இயற்கையான புலன்உணர்வு மாத்திரத்திற்கு இனம் வேண்டாமையின், அதனை மனத்தான் ஆம் என்றும், செயற்கையாய விசேட உணர்வு பற்றி நல்லவன் என்றாகத் தீயன் என்றாக நிகழும் சொற்கு இனம் வேண்டுதலின் அதனை இனத்தான் ஆம் என்றும் கூறினார். உவமையளவை கொள்ளாது, அத்திரிபும் 'மனத்தான்ஆம்' என்பாரை நோக்கி இதனான் அது மறுத்துக் கூறப்பட்டது.

4. மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்
கினத்துள தாகும் அறிவு.

மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்து உளது ஆகும் அறிவு.

அறிவு - அவ் விசேட உணர்வு; ஒருவற்கு மனத்து உளது போலக் காட்டி - ஒருவற்கு மனத்தின் கண்ணே உளதாவது போலத் தன்னைப் புலப்படுத்தி; இனத்து உளதாகும் - அவன் சேர்ந்த இனத்தின் கண்ணே உளதாம்.

மெய்ம்மை நோக்காமுன் மனத்துளது போன்று காட்டியும், பின் நோக்கியவழிப் பயின்ற இனத்துளதாயும் இருத்தலின் 'காட்டி' என இறந்தகாலத்தால் கூறினார். விசேட உணர்வு தானும் மனத்தின் கண்ணே அன்றேயுளதாவது என்பாரை நோக்கி, ஆண்டுப் புலப்படும் துணையே உள்ளது. அதற்கு மூலம் இனம் என்பது இதனான் கூறப்பட்டது.

5. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம் தூய்மை தூவா வரும்.

மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் - அவ்விசேட உணர்வு புலப்படுதற்கு இடனாய மனம் தூயனாதல் தன்மையும் செய்யும் வினை தூயனாதல் தன்மையும் ஆகிய இரண்டும்; இனம் தூய்மை தூவா வரும் - ஒருவற்கு இனம் தூயனாதல் தன்மை பற்றுக் கோடாக உளவாம்.

மனம் தூயனாதல் ஆவது: விசேட உணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையின் நீங்குதல். செய்வினை தூயனாதல் ஆவது மொழி மெய்களால் செய்யும் நல்வினை உடையனாதல். தூவென்பது அப் பொருட்டாதல் 'தூவறத் துறந்தரை' (கலி.நெய்.1) என்பதனானும் அறிக. ஒருவன் இனம் தூயனாகவே அதனோடு பயிற்சி வயத்தான் மனந்தூயனாய் அதன்கண் விசேட உணர்வு புலப்பட்டு அதனால் சொல்லும் செயலும் தூயனாம் என இதனால், இனத்து உள்ளவாம் ஆறு கூறப்பட்டது.

6. மனத்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும், இனம் தூயர்க்கு
இல்லை நன்று ஆகா வினை.

மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும் - மனம் தூயராயினார்க்கு மக்கட்பேறு நன்று ஆகும்; இனம் தூயார்க்கு நன்று ஆகாவினை இல்லை - இனம் தூயராயினர்க்கு நன்றாகாத வினை யாதும் இல்லை.

காரியம் காரணத்தின் வேறுபடாமையின் ‘எச்சம் நன்று ஆகும்’ என்றும் நல்லினத்தோடு எண்ணிச் செய்யப்படுதலின் எல்லாவினையும் நல்லவாம் என்றும் கூறினார்.

7. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும்.

மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம், இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

மன் உயிர்க்கு மனநலம் ஆக்கம் (தரும்) - நிலைபெற்ற உயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும்; இன நலம் எல்லாப் புகழும் தரும் - இனத்தது நன்மை அதனோடு எல்லாப் புகழையும் கொடுக்கும்.

‘மன் உயிர்’ என்றதுஈண்டு உயர்திணை மேல் நின்றது. ‘தரும்’ என்னும் இடவழுவமைதிச் சொல் முன்னும் கூட்டப்பட்டது. உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை. மனம் நன்றாதல் தானே அறம் ஆகலின் அதனை ‘ஆக்கம் தரும்’ என்றும், புகழ் கொடுத்தற்கு உரிய நல்லோர் தாமே இனமாகலின் ‘இனநலம் எல்லாப் புகழுந் தரும்’ என்றும் கூறினார். மேல் மனநன்மை இனநன்மை பற்றி வரும் என்பதனை உட்கொண்டு, அ.ஃது இயல்பாகவே உடையார்க்கு அவ் இன நன்மை வேண்டா என்பாரை நோக்கி ‘அதுவேயன்றி அத்தன்மைய பலவற்றையும் தரும்’ என அவர்க்கும் அதுவேண்டும் என்பது இவ் இரண்டு பாட்டானும் கூறப்பட்டது.

8. மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து.

மனநலம் நன்கு உடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.

மனநலம் நன்கு உடையர் ஆயினும் - மனநன்மையை முன்னை நல்வினையால் தாமே உடையராயினும்; சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து - அமைந்தார்க்கு இனநன்மை அதற்கு வலியாதலையுடைத்து.

நன்கால் என்னும் மூன்றன் உருபு விகாரத்தால் தொக்கது. அந் நல்வினை உள்வழியும் மனநலத்தை வளர்த்து வருதலின், அதற்கு ஏமாப்புடைத்தாயிற்று.

9. மனநலத்தி னாகும் மறுமைமற் ற.ஃதும்
இனநலத்தி னேமாப் புடைத்து.

மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அ.ஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.

மனநலத்தின் மறுமை ஆகும். - ஒருவற்கு மன நன்மையானே மறுமை இன்பம் உண்டாம்; மற்று அ.ஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து - அதற்கு அச்சிறப்புத்தானும் இன நன்மையான் வலி பெறுதலை உடைத்து.

‘மனநலத்தின் ஆகும் மறுமை’ என்றது, மறுமை பயப்பது மன நன்மைதானே; பிறிதொன்று அன்று, என்னும் மதத்தை உடம்பட்டுக் கூறியவாறு. மற்று, வினைமாற்று. உம்மை, இறந்தது தழீஇய எச்ச உம்மை. ஓரோவழித் தாமத குணத்தான் மனநலம் திரியினும், நல்லினம் ஒப்ப நிறுத்தி மறுமை பயப்பிக்கும் என நிலைபெறச் செய்யுமாறு கூறப்பட்டது. **இவை ஐந்து பாட்டாலும் சிற்றினம் சேராமையது சிறப்பு நல்லினம் சேர்தலாகிய எதிர்மறை முகத்தால் கூறியவாறு அறிக.**

10. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் மில்.

நல்லினத்தின் ஊங்கும் துணை இல்லை, தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

நல்லினத்தின் ஊங்கு துணை இல்லை - ஒருவற்கு நல்லினத்தின் மிக்க துணையும் இல்லை; தீயினத்தின் (ஊங்கு) அல்லல் படுப்பதூஉம் இல் - தீய இனத்தின் மிக்க பகையும் இல்லை.

ஐந்தன் உருபுகள் உறழ்பொருளின்கண் வந்தன. 'ஊங்கு' என்பது பின்னும் கூட்டி உம்மை மாற்றி உரைக்கப்பட்டது. நல்லினம் அறியாமையின் நீக்கித் துயர் உறாமல் காத்தலின் அதனைத் 'துணை' என்றும், தீயினம் அறிவின் நீக்கித் துயர் உறுவித்தலின் அதனைப் 'பகை' என்றும் கூறினார். 'அல்லற்படுப்பது' என்பது ஏதுப்பெயர். இதனான்விதி எதிர்மறைகள் உடன் கூறப்பட்டன.

05. தெரிந்து செயல்வகை

அ.ஃதாவது, அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் திறம். அச் செயல் பெரியாரைத் துணைக் கோடல் பயனுடைத்தாய வழி அவரோடும் செய்யப்படுவது ஆகலின், இது சிற்றினம் சேராமையின் பின் வைக்கப்பட்டது.

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

அழிவதூஉம் - வினைசெய்யுங்கால் அப்பொழுது அதனால் அழிவதனையும், ஆவதூஉம் - அழிந்தால் பின் ஆவதனையும்; ஆகி வழி பயக்கும் ஊதியமும் - ஆய் நின்று பிற்பொழுது தரும் ஊதியத்தையும்; சூழ்ந்து செயல் - சீர்தூக்கி உறுவதாயின் செய்க.

உறுவதாவது: நிகழ்வின்கண் அழிவதனில் ஆவது மிக்கு - எதிர்வினும் அது வளர்ந்து வருதல். அழிவது இன்மையின், எதிர்வின்கண் வரும் ஆக்கத்தை 'ஊதியம்' என்றார்; எனவே அவ் ஊதியம் பெறின் நிகழ்வின்கண் அழிவதும் ஆவதும் தம்முன் ஒத்தாலும் ஒழிதற்பாற்று அன்று என்பது பெற்றாம். இரண்டு காலத்தும் பயன் உடைமை தெரிந்து செய்க என்பதாம்.

2. தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

தெரிந்த இனத்தோடு தேர்ந்துஎண்ணிச் செய்வாரக்கு
அரும் பொருள் யாதொன்றும் இல்.

தெரிந்த இனத்தோடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு - தாம் தெரிந்துகொண்ட இனத்துடனே செய்யத்தகும் வினையை ஆராய்ந்து பின் தாமேயும் எண்ணிச் செய்து முடிக்கவல்ல அரசர்க்கு; அரும் பொருள் யாதொன்றும் இல் - எய்துதற்கரிய பொருள் யாதொன்றும் இல்லை.
ஆராயப்படுவன எல்லாம் ஆராய்ந்து போந்த இனம் என்றுமாம். செய்வாருக்கு என்றதனால் 'வினை' என்னும் செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது. வினையாவது: மேற்சேறல் முதல் வேறல் ஈறாய தொழில். பொருள்கட்கு ஏதுவாய அதனில் தவறாமையின், அரிய பொருள்கள் எல்லாம் எளிதின் எய்துவர் என்பதாம். **இவை இரண்டு பாட்டானும் செய்யத்தகும் வினையும் அது செய்யுமாறும் கூறப்பட்டன.**

3. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்.

ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடையார்.

ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை - மேல் எய்தக் கடவ ஊதியத்தினை நோக்கி, முன் எய்தி நின்ற முதல் தன்னையும் இழத்தற்கு ஏதுவாய செய்வினையை; அறிவுடையார் ஊக்கார் - அறிவுடையார் மேற்கொள்ளார்.

'கருதி' என்னும் வினையெச்சம் 'இழக்கும்' என்னும் பெயரெச்சவினை கொண்டது. எச்ச உம்மை விகாரத்தால் தொக்காது. ஆக்கமே அன்றி முதலையும் இழக்கும் வினைகளாவன: வலியும் காலமும் இடனும் அறியாது பிறர் மண் கொள்வான் சென்று தம் மண்ணும் இழத்தல் போல்வன. முன் செய்து போந்த வினையாயினும் என்பார் 'செய்வினை' என்றார்.

4. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர்.

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவு என்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

தெளிவு இலதனைத் தொடங்கார் - இனத்தோடும் தனித்தும் ஆராய்ந்து துணிதல் இல்லாத வினையைத் தொடங்கார்; இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் - தமக்கு இளிவரவு என்னும் குற்றம் உண்டாதலை அஞ்சுபவர்.

தொடங்கின் இடையின் மடங்கலாகாமையின் 'தொடங்கார்' என்றார். இளிவரவு: அவ்வினையால் பின் அழிவு எய்தியவழி, அதன் மேலும் அறிவும் மானமும் இலர் என்று உலகத்தார் இகழும் இகழ்ச்சி; அ.ஃது உண்டாதல் ஒருதலையாகலின், தெளிவுள் வழித் தொடங்குக என்பதாம்.

5. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

வகை அறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.

வகை அறச் சூழாது எழுதல் - சென்றால் நிகழும் திறங்களை எல்லாம் முற்ற எண்ணாது சில எண்ணிய துணையானே அரசன் பகைவர் மேல் செல்லுதல்; பகைவரைப் பாத்திப் படுப்பது ஓர் ஆறு - அவரை வளரும் நிலத்திலே நிலைபெறச் செய்வது ஒரு நெறி ஆம்.

அத் திறங்களாவன: வலி, காலம், இடன் என்று இவற்றால் தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினை தொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனால் பெறும் பயனும் முதலாயின. அவற்றுள் சில எஞ்சினும் பகைவர்க்கு இடனாம் ஆகலான், முற்றுப் பெற எண்ண வேண்டும் என்பதாம். **இவை மூன்று பாட்டானும் ஒழியத்தகும் வினையும், ஒழியாவழிப்படும் இழுக்கும் கூறப்பட்டன.**

6. செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

செய்தக்க அல்ல அசயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

செய்தக்க அல்ல செயக் கெடும் - அரசன் தன் வினைகளுள் செய்யத் தக்கன அல்லவற்றைச் செய்தலால் கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும் - இனி அதனானே அன்றிச் செய்யத் தக்கனவற்றைச் செய்யாமை தன்னானும் கெடும்.

செய்தக்கன அல்லவாவன: பெரிய முயற்சியினவும், செய்தால் பயனில்லனவும் அது சிறிதாயினவும்,ஐயமாயினவும், பின் துயர் விளைப்பனவும் என இவை. செய்யத்தக்கனவாவன: அவற்றின் மறுதலையாயின. இச் செய்தல் செய்யாமைகளான் அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகை ஆற்றலுள் பொருள், படை என இருவகைத்தாய பெருமை சுருங்கிப் பகைவர்க்கு எளியனாம் ஆகலான், இரண்டும் கேட்டிற்கு ஏதுவாயின. இதனான் செய்வன செய்து, ஒழிவன ஒழிக என இருவகையனவும் உடன் கூறப்பட்டன.

7. எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு.

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

கருமம் எண்ணித் துணிக - செய்யத்தக்க கருமமும் முடிக்கும் உபாயத்தை எண்ணித் தொடங்குக; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு - தொடங்கி வைத்துப் பின் எண்ணக் கடவோம் என்று ஒழிதல் குற்றம் ஆதலான்.

துணிவுபற்றி நிகழ்தலின் 'துணிவு' எனப்பட்டது. சிறப்பு உம்மை விகாரத்தால் தொக்காது. 'உபாயம்' என்பது அவாய் நிலையான் வந்தது. அது கொடுத்தல், இன்சொல் சொல்லல்,வேறுபடுத்தல், ஒறுத்தல் என நால்வகைப்படும். அவற்றை வட நூலார் தான. சாம, பேத, தண்டம் என்ப. அவற்றுள் முன்னைய இரண்டும் ஐவகைய; ஏனைய மூவகைய. அவ்வகைகளெல்லாம் ஈண்டு உரைப்பின் பெருகும். இவ் உபாயமெல்லாம் எண்ணாது தொடங்கின் அவ் வினை மாற்றானால் விலக்கப்பட்டு முடியாமையாயினும், இடையில் ஒழிதல் ஆகாமையானும், அரசன் துயருறுதலின், அவ் எண்ணாமையை 'இழுக்கு' என்றார். செய்வனவற்றையும் உபாயம் அறிந்தே தொடங்குக என்பதாம்.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

ஆற்றின் வருந்தா வருத்தம் - முடியும் உபாயத்தால் கருமத்தை முயலாத முயற்சி; பலர் நின்று போற்றினும் பொத்துப் படும் - துணைவர் பலர் நின்று புரைபடாமல் காப்பினும் புரைபடும்.

முடியும் உபாயத்தான் முயறலாவது: கொடுத்தலைப் பொருள் நசையாளன் கண்ணும்; இன்சொல்லைச் செப்பம் உடையான், மடியாளன், முன்னே பிறரோடு பொருது நொந்தவன் என இவர் கண்ணும்; வேறுபடுத்தலைத் துணைப்படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதான் என இவர் கண்ணும்; ஒறுத்தலை இவற்றின் வாராதவழி இவர் கண்ணும் தேறப்படாத கீழ் மக்கள் கண்ணும் செய்து, வெல்லுமாற்றான் முயறல்; புரைபடுதல்: கருதிய நன்மையன்றிக் கருதாத தீமை பயத்தல். உபாயத்து சிறப்புக் கூறியவாறு.

9. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

நன்று ஆற்றல் உள்ளும் தவறு உண்டு அவரவர்
பண்பு அறிந்து ஆற்றாக்கடை.

நன்று ஆற்றல் உள்ளும் தவறு உண்டு - வேற்று வேந்தர் மாட்டு நன்றான உபாயம் செய்தற்கண்ணும் குற்றம் உண்டாம்; அவரவர் பண்பு அறிந்து ஆற்றாக்கடை - அவரவர் குணங்களை ஆராய்ந்து அறிந்து அவற்றிற்கு இயையச் செய்யாவிடின்.

நன்றான உபாயமாவது: கொடுத்தலும் இன்சொல் சொல்லுதலுமாம். அவை யாவர் கண்ணும் இனியவாதல் சிறப்புடைமையின், உம்மை சிறப்பு உம்மை. அவற்றை அவரவர் பண்பு அறிந்து ஆற்றாமையாவது அவற்றிற்கு உரியர் அல்லாதார் கண்ணேசெய்தல். தவறு: அவ் வினை முடியாமை.

10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

தம்மொடு கொள்ளா உலகு கொள்ளாது - அரசர் வினை முடித்தற் பொருட்டுத் தம் நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்வராயின் உலகம் தம்மை இகழா நிற்கும்; எள்ளாத எண்ணிச் செயல் வேண்டும் - ஆகலின் அ.ஃது இகழா உபாயங்களை நாடிச் செய்க.

‘தம்’ என்பது ஆகுபெயர். தம் நிலையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய் வைத்து மெலியார்க்கு உரிய கொடுத்தல் முதலிய மூன்றினைச் செய்தலும், மெலியராய் வைத்து வலியார்க்கு உரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். இவை இரண்டும் அறிவிலார் செய்வன ஆகலின் ‘உலகம் கொள்ளாது’ என்றார். அ.ஃது எள்ளாதன செய்தலாவது: அவற்றைத் தத்தம் வன்மை மென்மைகட்கு ஏற்பச் செய்தல். மேல் இடவகையான் உரிமை கூறிய உபாயங்கட்கு வினைமுதல் வகையான் உரிமை கூறியவாறு. இவை நான்கு பாட்டானும் செய்வனவற்றிற்கு உபாயமும் அதனது உரிமையும் கூறப்பட்டன.

06. வலி அறிதல்

அ.ஃதாவது, அவ் உபாயங்களுள் ஒறுத்தல் குறித்த அரசன் நால்வகை வலியையும் அளந்தறிதல்.

1. வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

வினை வலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

வினை வலியும் - தான் செய்யக் கருதிய வினைவலியையும்; தன் வலியும் - அதனைச் செய்து முடிக்கும் தன் வலியையும்; மாற்றான் வலியும் - அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும்; துணை வலியும் - இருவர்க்குத் துணையாவார் வலியையும்; தூக்கிச் செயல் - சீர்த்தூக்கித் தன்வலி மிகுமாயின் அவ்வினையைச் செய்க.

இந்நால்வகை வலியுள் வினைவலி அரண் முற்றலும் கோடலும் முதலிய தொழிலானும், ஏனைய மூவகை ஆற்றலானும் கூற்படுத்துத் தூக்கப்படும். தன்வலி மிகவின்கண் செய்க என்ற விதியால், தோற்றல் ஒருதலையாய குறைவின் கண்ணும், வேறல் ஐயமாய ஒப்பின் கண்ணும் ஒழிக என்பது பெற்றாம்.

2. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வாக்குச் செல்லாத தில்.

ஒல்வது அறிவது அறிந்து அதன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

ஒல்வது அறிவது அறிந்து - தமக்கியலும் வினையையும் அதற்கு அறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து; அதன்கண் தங்கிச் செல்வார்க்கு - எப்பொழுதும் மன, மொழி, மெய்களை அதன்கண் வைத்துப் பகைமேல் செல்லும் அரசர்க்கு; செல்லாதது இல் - முடியாத பொருள் இல்லை.

‘ஒல்வது’ எனவே வினைவலி முதலாய மூன்றும் அடங்குதலின்,ஈண்டு ‘அறிவது’ என்றது துணைவலியே ஆயிற்று. எல்லாப் பொருளும் எய்துவர் என்பதாம். இவை இரண்டு பாட்டானும் வலியின் பகுதியும் அ.ஃது அறிந்து மேற்செல்வார் எய்தும் பயனும் கூறப்பட்டன.

3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

உடைத்தம் வலி அறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

உடைத் தம் வலி அறியார் - கருத்தா ஆதலையுடைய தம் வலியின் அளவறியாதே; ஊக்கத்தின் ஊக்கி - மன எழுச்சியால் தம்மின் வலியாரோடு வினைசெய்தலைத் தொடங்கி; இடைக்கண் முரிந்தார் பலர் - அவர் அடர்த்தலான் அது செய்து முடிக்கப் பெறாது இடையே கெட்ட அரசர் உலகத்துப் பலர்.

‘உடைய’ என்பது அவாய் நின்றமையின், செயப்படு பொருள் வருவிக்கப்பட்டது, மூவகை ஆற்றலுள்ளும் சிறப்புடைய அறிவு உடையார் சிலராதலின் ‘முரிந்தார் பலர்’ என்றார். அதனால் தம் வலியறிந்தே தொடங்குக என்பது எஞ்சி நின்றது.

4. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை வியந்தான் விரைந்து கெடும்.

அமைந்து ஆங்கு ஒழுகான் அளவு அறியான் தன்னை வியந்தான் விரைந்து கெடும்.

ஆங்கு அமைந்து ஒழுகான் - அயல்வேந்தரோடு பொருந்தி ஒழுகுவதும் செய்யாது, அளவு அறியான் - தன் வலியளவு அறிவதும் செய்யாது; தன்னை வியந்தான் - தன்னை வியந்து அவரோடு பகைத்த அரசன்; விரைந்து கெடும் - விரையக் கெடும்.

காரியத்தைக் காரணமாக உபசரித்து 'வியந்தான்' என்றார். 'விரைய' என்பது திரிந்து நின்றது. நட்பாய் ஒழுகுதல், வலியறிந்து பகைத்தல் என்னும் இரண்டனுன் ஒன்றன்றே அயல்வேந்தரோடு செயற்பாலது. இவையன்றித் தான் மெலியனாய் வைத்து அவரோடு பகைகொண்டானுக்கு ஒருபொழுதும் நிலையின்மையின், 'விரைந்து கெடும்' என்றார். இவை இரண்டு பாட்டானும் தன் வலி அறியா வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

5. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ் சால மிகுத்துப் பெயின்.

பீவிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்.

பீலி பெய் சாகாடும் அச்சு இறும் - பீலியேற்றிய சகடமும் அச்சு முறியும்; அப்பண்டம் சால மிகுத்துப் பெயின் - இப்பீலியை அது பொறுக்கும் அளவின்றி மிகுத்து எற்றின்.

உம்மை சாகாட்டது வலிச்சிறப்பே அன்றிப் பீலியது நொய்மைச் சிறப்பும் தோன்ற நின்றது. 'இறும்' என்னுஞ் சினைவினை முதல்மேல் நின்றது. 'எளியர் என்று பலரோடு பகை கொள்ளுவான் தான் வலியனே ஆயினும் அவா தொக்கவழி வலியழியும்' என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இது பிறிது மொழிதல் என்னும் அலங்காரம். இதனை 'நுவலா நுவற்சி' என்பாரும். 'ஒட்டு' என்பாரும் உளர். ஒருவன் தொகுவார் பலரோடு பகை கொள்ளற்க என்றமையின், இதனான் மாற்றான் வலியும் அவன் துணை வலியும் அறியா வழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

6. நுனிக்கொம்பர் ஏறினார் அ.ஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதி ஆகி விடும்.

நுனிக்கொம்பர் ஏறினார் அ.ஃது இறந்து ஊக்கின உயிர்க்கு இறுதி ஆகி விடும்.

கொம்பர் நுனி ஏறினார் அ.ஃது இறந்து ஊக்கின் - ஒரு மரக்கோட்டினது நுனிக்கண்ணே ஏறிநின்றார் தம் ஊக்கத்தால் அவ் அளவினைக் கடந்து மேலும் ஏற ஊக்குவராயின்; உயிர்க்கு இறுதி ஆகிவிடும் - அவ் ஊக்கம் அவர் உயிர்க்கு இறுதியாய் முடியும்.

'நுனிக்கொம்பர்' என்பது 'கடைக்கண்' என்பது போலப் பின்முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை. பன்மை அறிவின்மை பற்றி இழித்தற்கண் வந்தது. இறுதிக்கு ஏது ஆவதனை 'இறுதி' என்றார். பகைமேற் செல்வான் தொடங்கித் தன்னால் செல்லாமளவும் சென்று நின்றான். பின் அவ்வளவின் நில்லாது மன எழுச்சியான் மேலே செல்லுமாயின், அவ் எழுச்சி வினை முடிவிற்கு ஏதுவாகாது, அவன் உயிர் முடிவிற்கு ஏதுவாம்' என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இதுவும் மேலை அலங்காரம். அளவு அறிந்து நிற்றல் வேண்டும் என்றமையின், இதனான், வினைவலி அறியாவழிப்படும் இழுக்குக் கூறப்பட்டது.

7. ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள் போற்றி வழங்கு நெறி.

ஆற்றின் அளவு அறிந்து ஈக அதுபொருள் போற்றி வழங்கும் நெறி.

ஆற்றின் அளவு அறிந்து ஈக - ஈயும் நெறியானே தமக்கு உள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு ஏற்ப ஈக; அது பொருள் போற்றி வழங்கும் நெறி - அங்ஙனம் ஈதல் பொருளைப் பேணிக் கொண்டொழுகும் நெறியாம்.

ஈயும்நெறி மேல் இறைமாட்சியுள் 'வகுத்தலும் வல்லதரசு' (குறள். 385) என்புழி உரைத்தாம். எல்லைக்கு ஏற்ப ஈதலாவது, ஒன்றான எல்லையை நான்கு கூறாக்கி, அவற்றுள் இரண்டனைத் தன் செலவாக்கி, ஒன்றனை மேல் இடர் வந்துழி அது நீக்குதற் பொருட்டு வைப்பாக்கி, நின்ற ஒன்றனை ஈதல்; பிறரும் ''வருவாயுள் கால்வழங்கி வாழ்தல்'' (திரிகடுகம்.21) என்றார். பேணிக் கொண்டு ஒழுகுதல்: ஒருவரோடு நட்பில்லாத அதனைத் தம்மோடு நட்புண்டாக்கிக் கொண்டு ஒழுகுதல். முதலில் செலவு சுருங்கின் பொருள் ஒருகாலும் நீங்காது என்பதாம்.

8. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

ஆகாறு அளவு இட்டி ஆயினும் கேடு இல்லை
போகாறு அகலாக் கடை.

ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும் கேடு இல்லை - அரசர்க்குப் பொருள் வருகின்ற நெறியளவு சிறிதாயிற்றாயினும் அதனால் கேடு இல்லையாம்; போகு ஆறு அகலாக் கடை - போகின்ற நெறி அளவு அதனில் பெருகாதாயின்.

'இட்டிது' எனவும் 'அகலாது' எனவும் வந்த பண்பின் தொழில்கள் பொருள்மேல் நின்றன. 'பொருள்' என்பது அதிகாரத்தான் வருவித்து, 'அளவு' என்பது பின்னும் கூட்டி உரைக்கப்பட்டன. முதலும் செலவும் தம்முள் ஒப்பினும் கேடு இல்லை என்பதாம்.

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை - தனக்குள்ள பொருளின் எல்லையை அறிந்து அதற்கு ஏற்ப வாழமாட்டாதான் வாழ்க்கைகள்; உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும் - உள்ளனபோலத் தோன்றி மெய்ம்மையான் இல்லையாய்ப் பின்பு அத் தோற்றமும் இன்றிக் கெட்டுவிடும்.

அவ் எல்லைக்கு ஏற்ப வாழ்தலாவது; அதனின் சுருக்கக் கூடாதாயினுன் ஒப்பாயின் ஈத்தும் துய்த்தும் வாழ்தால் தொடக்கத்தில் கேடு வெளிப்பாடாமையின், 'உளபோலத் தோன்றி' என்றார். முதலில் செலவு மிக்கால் வரும் ஏதம் கூறியவாறு.

10. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும்.

உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை - தனக்குள்ள அளவு தூக்காமைக்கு ஏதுவாய ஒப்புரவாண்மையால்; வளவரை வல்லைக் கெடும் - ஒருவன் செல்வத்தின் எல்லை விரையக் கெடும்.

ஒப்புரவே ஆயினும் மிகலாகாது என்றமையான், இதுவும் அது. இவை நான்கு பாட்டானும் மூவகை ஆற்றுலுள் பெருமையின் பகுதியாய் வலியறிதல் சிறப்பு நோக்கி வகுத்துக் கூறப்பட்டது.

03. சிலப்பதிகாரம்

ஊர்காண் காதை (15 - 61)

ஆசிரியர் : இளங்கோவடிகள்

அறிமுகம்

சங்கமருவிய காலத்தில் எழுந்ததாகக் கருதப்படும் சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. தொடர் நிலைச் செய்யுளாக அமைந்த சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகும். கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோரைப் பிரதான பாத்திரங்களாகக் கொண்டு எழுதப்பட்டதே சிலப்பதிகாரம் எனும் காப்பியமாகும். இக்காப்பியத்தில் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற பெரும் பிரிவுகளுக்குள் முப்பது காதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் மதுரைக் காண்டத்தில் உள்ள ஒரு பகுதியே ஊர்காண் காதையாகும்.

கதைத்தொடர்

கண்ணகியுடன் மதுரை சென்றடைந்த கோவலன், புறஞ்சிறை மூதூரிலே (மதுரையின் புற நகரில்) கவுந்தியடிகளையும் கண்ணகியையும் இருக்கவைத்துவிட்டு, தனது துன்பத்தையும் மதுரை நகருக்குள் செல்லும் எண்ணத்தையும் கவுந்தியடிகளிடம் வெளிப்படுத்தியபோது, கண்ணகியை அவருடன் விட்டுச் செல்வதில் துன்பமேது முண்டோ? என வினவுகின்றான். கவுந்தியடிகளும் ‘‘அனைவரினதும் துன்பத்திற்குக் காரணம் அவரவர் தீவினைப் பயனே’’ என ஆறுதல் கூறி, மதுரை நகர் சென்றுவருமாறு விடையளிக்கின்றார்.

கோவலன் சென்று, கொள்கையின் இருந்த 15
கவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி,
‘நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி,
நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த,
அறியாத் தேயத்து ஆரிடை யுழந்து,
சிறுமை யுற்றேன், செய்தவத் தீர் யான்: 20
தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
என்னிலை உணர்த்தி, யான்வருங் காறும்,
பாதக் காப்பினள் பைந்தொடி; ஆகலின்,
ஏதம் உண்டோ, அடிகள்! ஈங்கு?’ என்றலும் -

கவுந்தி கூறும்: ‘‘காதலி - தன்னொடு 25
தவந்தீர் மருங்கின் தனித்துயர் உழந்தோய்!
‘மறத்துறை நீங்குமின்; வல்வினை ஊட்டும்’ என்று,
அறத்துறை மாக்கள் திறத்தின் சாற்றி,
நாக்கடிப்பு ஆக வாய்ப்பறை அறையினும்,
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்; 30
தீதுடை வெவ்வினை யுருத்த காலை,
பேதைமை கந்தாப் பெரும்பேது உறுவர்;
ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலை,
கையாறு கொள்ளார் கற்றுஅறி மாக்கள்;
பிரிதல் துன்பமும், புணர்தல் துன்பமும், 35
உருவி லாளன் ஒறுக்கும் துன்பமும்,
புரிகுழன் மாதர்ப் புணர்ந்தோர்க்கு அல்லது,
ஒருதனி வாழ்க்கை உறவோர்க்கு இல்லை
பெண்டிரும் உண்டியும் இன்பம்என்று உலகில்
கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம் 40

கண்டனர் ஆகிக் கடவுளர் வரைந்த
காமஞ் சார்பாக் காதலின் உழந்து, ஆங்கு;
ஏமஞ் சாரா இடும்பை எய்தினர்
இன்றே அல்லால், இறந்தோர் பலரால்;
தொன்றுபட வருஉம் தொன்மைத்து, ஆதலின்; 45
தாதை ஏவலின் மாதுடன் போகி,
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேதமுதல்வற் பயந்தோன் என்பது
நீஅறிந் திலையோ? நெடுமொழி அன்றோ?
வல்லாடு ஆயத்து, மண், அரசு, இழந்து; 50
மெல்லியல் - தன்னுடன் வெங்கான் அடைந்தோன்
காதலிற் பிரிந்தோன் அல்லன்; காதலி
தீதொடு படுஉம் சிறுமையள் அல்லள்;
அடவிக் கானகத்து ஆய் இழை - தன்னை
இடை இருள் யாமத்து இட்டு நீங்கியது 55
வல்வினை அன்றோ? மடந்தை - தன் பிழையெனச்
சொல்லலும் உண்டேல், சொல்லா யோ? நீ
அனையையும் அல்லை; ஆய் - இழை - தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே?
வருந்தாது ஏகி, மன்னவன் கூடல்; 60
பொருந்து உழி அறிந்து போது ஈங்கு'' என்றலும்.

பொருள்:

தியானத்திலிருந்த கவுந்தியடிகளிடம் கோவலன் சென்று, கைதொழுது வணங்கி, ''வாழ்வுப் பாதையைவிட்டுத் தவறியவர்களின் தன்மையுடையவனாய், மிகுந்த வாசனை பொருந்திய மலர் போன்ற மேனியை உடையவளான கண்ணகி நடுங்கும் அளவு பெருந்துன்பம் அடைய, முன்னர் ஒருபோதும் அறிந்திராத நாட்டிலே துன்பமான பாதையிலே திரிந்து, யான் சிறுமை அடைந்தேன். தவம் செய்கின்றவரே, பழமை பொருந்திய இம்மதுரை நகரத்திலுள்ள வணிகர்களுக்கு என் நிலையினைக் கூறி, நான் மீண்டும் இங்கு வரும்வரையிலும் மென்மையான வளையல்களை அணிந்தவளான கண்ணகி உங்கள் பாதமாகிய காவலில் இருக்கட்டும். இதனால் தங்களுக்கு ஏதாவது இடைஞ்சல் உண்டோ?''என்று (கோவலன்) கேட்டதும், (அதனைக் கேட்ட) கவுந்தியடிகள் கூறுகிறார்: முன்னர் செய்த தவம் நீங்கிய நிலையில் காதலியோடு (கண்ணகி) பெருந்துன்பம் அடைந்தவனே! ''அதர்ம வழியிலிருந்து விலகுங்கள்; வலிமையுடையதான ஊழ்வினை அதன் பயனைத் தவறாது நமக்கு வழங்கும்'' என்று அறவழியில் வாழும் துறவியர் உறுதியாகச் வொல்லி, நாவையே குறுந்தடியாகக் கொண்டு வாயாகிய பறையை அறைந்தாலும் மன உறுதியற்றோர் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தீமையுடைய வெம்மையான வினையானது வந்து துன்புறுத்தும்போது, அறியாமை காரணமாகப் பெரிதும் மயங்கி வருந்துவார்கள். போக்க முடியாத வினையின் பயனை அனுபவிக்கும் காலத்திலும், கற்றவர்கள் செயலிழந்து வருந்தமாட்டார்கள். பிரிவுத்துயரமும் புணர்தல் சம்பந்தப்பட்ட துன்பமும் உருவமற்றவனாகிய மன்மதன் வந்து வருத்துகின்ற துயரமும் பெண்களைச் சேர்ந்து வாழ்பவர்க்கே உரித்தானவையன்றி, ஒப்பற்ற தனி வாழ்க்கை வாழும் உறுதியுடையோர்க்கு அவை ஒருபோதும் இல்லையாகும்.

'பெண்களும் உணவுமே இன்பம்' என்று நினைத்து இவ்வுலகிலே வாழ்வோர் முடிவில் அளவற்ற துன்பத்தையே காண்பார்கள். காமத்தையே பற்றுக்கோடாகக் கொண்டு காதலிலே உழன்று, அதன்பால் அமிழ்ந்து கரைகாண முடியாத துன்பத்தையே அவர்கள் அடைந்தனர். அன்று மட்டுமன்று; இதற்கு முன்பும் இந்நிலையிலிருந்தவர்கள் பலராவர். தொன்று தொட்டு வருகின்ற பழமையினையுடையது இந்த அவலநிலையாகும்.

தன் தந்தையின் கட்டளைப்படி, மனைவியோடு காட்டிற்குச் சென்று அவளைப் பிரிந்தமையினால் துன்பத்தை அடைந்தவன் இராமன். அவன் வேத முதல்வனாகிய பிரமனைத் தன்னிடத்திலிருந்து படைத்தவன் (இராமன், விஷ்ணுவின் அவதாரம்) என்பதை நீ அறியாயோ? இது உலகறிந்த நீண்டகால வரலாறு அல்லவோ? சூதாட்டத்தில் ஈடுபட்டு மண்ணையும் அரசாட்சியையும் இழந்து, தன் மனைவியாகிய தமயந்தியுடன் கானகம் சென்ற நளன் காதலை விட்டு நீங்கியவனல்ல; அவனது காதலி தமயந்தியும் குற்றமுடையவள் அல்ல. ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்தவளாகிய அவளை, அடர்ந்த காட்டிலே நடுச்சாமத்திலே விட்டு நீங்கியது வலிமை மிக்கதான ஊழ்வினையால் அல்லவோ? அதனை அவளது பிழை என்று சொல்ல முடியுமாயின் சொல்வாயாக.

இவ்வாறான துன்பங்களை மற்றவர்கள் அடைந்த போதிலும் அவர்களினின்று, நீ வேறுபட்டவனாய் நன்மையைப் பெற்றுள்ளாய். அது எதுவெனில், நீ உன் மனைவியை விட்டுப் பிரியாத வாழ்வைப் பெற்றுள்ளாய். அதனால் நீ வருந்தாதே. மதுரை நகருக்குச் சென்று இல்லறம் நடத்துவதற்கு ஏற்ற இடம் எது என அறிந்து, இங்கு வருவாயாக'' என்றார்.

இராமன்

தன் தந்தையாகிய தசரதன் 14 ஆண்டுகள் வனவாசம் செல்லும்படி கூறினார் என்ற செய்தி கேட்ட இராமன் காட்டிற்குச் செல்ல ஆயத்தமானபோது, அவனுடன் கூடவே அவன் மனைவி சீதையும் சென்றாள். சீதையானவள் காட்டில் வைத்து இராவணனால் கடத்திச் செல்லப்பட்டாள். அவ்வேளை இராமன் தன் மனைவியான சீதையைப் பிரிந்திருந்தான். இராமன், விஷ்ணுவின் அவதாரம் என்பதும் வேத முதல்வனாகிய பிரமனைத் தன்னிடத்திலிருந்தே படைத்தவன் என்பதும் கூறப்படுகிறது.

நளன்

நளனும் தமயந்தியும் இனிய இல்லற வாழ்க்கை நடத்தி வரும் காலத்தில் நளனானவன் புட்கரனோடு சூதாட்டத்தில் ஈடுபட்டு நாடு, அரசாட்சி என்பவற்றை இழக்கின்றான். நளன் தனது மனைவியாகிய தமயந்தியுடன் கானகம் செல்கின்றான். அங்கு அவளைத் தனியே விட்டு, நளன் நீங்கி விடுகின்றான். சிறிது காலம் அவர்கள் பிரிந்து வாழ்கின்றனர்.

அரும்பதங்கள் :

காறு	-	அளவு
ஏதம்	-	குற்றம்
கையாறு கொள்ளார்	-	செயலிழந்து வருந்தார்
யாப்பறை மாக்கள்	-	உறுதியற்றோர்
தாதை	-	தந்தை
ஆயம்	-	கூட்டம்
மறத்துறை	-	பாவநெறி
ஒய்யா	-	போக்க வொண்ணா
உரவோர்	-	பெரியோர் / அறிஞர்
யாமத்து	-	சாமத்து (நடுச்சாமம்)

****

04. கோயில் திருப்பதிகம்

- கோயில் திருப்பதிகம் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது.
- இது பதிக வடிவத்தில் அமைந்ததாகும். பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது.
- கோயில் திருப்பதிகம் தில்லைப்பதியிலிருந்து, திருப்பெருந்துறைச் சிவனை நினைந்து பாடப்பட்டது. தில்லையே சைவமரபில் கோயில் எனச் சிறப்பாகக் குறிப்பிடுவது. அந்த அடிப்படையிலேயே, ''கோயில் திருப்பதிகம்'' எனப்பட்டது.
- இறைவன் மீதான தீராத பக்தியையும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையினால் உண்டான பெருமிதத்தினையும் இப்பதிகம் நன்கு வெளிப்படுத்துகிறது.

1. மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவ பெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை அன்பே.

(பாடல் அடிகளைக் கொண்டுகூட்டுக.)

தேனின் தெளிவு போன்ற இனிமையானவனே, சிவ பெருமானே திருப்பெருந்துறையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானே, முடிவற்ற தெய்வப்பதவிகள் எல்லாவற்றையும் கடந்த ஆனந்தமானவனே, என்னுடைய அன்புக்குரியவனே, என்னைப் பகைத்து நின்று எனது அறிவை மயங்கச் செய்யும் கள்ள ஐம்புலன்களின் வாயில்களை அடைத்து, ஞான அமுதமே சுரந்து நிற்கும் படியாக என் உள்ளத்தின்கண்ணே தோன்றுகின்ற மேலான ஒளியே, உன் உண்மையான தன்மையை நான் காணும்படி வந்து அருள் செய்வாயாக.

2. அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையுறை சிவபெரு
மானே சீருடைச் சிவபுரத் தரசே.

எல்லாவற்றிலும் முன்பும் பின்பும் அவை முழுவதுமாய் வியாபித்துள்ளவனே, முடிவற்ற மலநீக்கம் பெற்றவனே, எல்லையில்லாத முதற்பொருளே, தெற்கேயுள்ள திருப்பெருந்துறையில் வீற்றிருப்பவனே, சிவபெருமானே, சிறப்புடைய சிவலோக மன்னனே, என் மீதான அன்பினாலே அடியேனுடைய உயிரும் உடம்பும் இன்பமயமாய்க் கசிந்துருகும்படியாக, எனது தகுதிக்குக் கிடைக்க முடியாத இனிய திருவருளை நீ தந்தாய். இதற்குக் கைம்மாறாக நான் உனக்குக் கொடுப்பதற்கு எதுவுமில்லை.

- ''யானிதற்கு இலன் ஓர் கைம்மாறு'' - ஒப்பற்ற பெரியோனாகிய இறைவனுக்குச் சிற்றுயிர்களால் என்ன செய்ய முடியும்? அதனால் என்னிடம் கைம்மாறு எதுவுமில்லை என்றார்.

3. அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்ந்தே.

அன்பர்களுக்கு மன்னனே, அடியவனுடைய தந்தையே, உயிரோடு உடம்பும் மயிர்க் கூச்செறியும் படியாக நெகிழ்ந்து உருகும்படியாக என்னுள்ளத்தினுள் புகுந்து நின்று உருக்கி பொய்மையாகிய அறியாமையைத் தொலைத்த உண்மையொளியே, அலை மோதுகின்றதும் நிலைபெற்றதுமான அமுதமயமான தெளிவான ஆனந்தக்கடலே, திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே, சொல்லையும் உணர்வையும் கடந்து நின்று ஞானத்தால் அறியக்கூடியதொரு பேரறிவானவனே, நான் உன்னை விளக்கி உரைக்கும் வழியை உணர்த்துவாயாக.

4. உணர்ந்த மா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

கற்றுணர்ந்த பெரிய முனிவர்கள், தேவர்கள் முதலானோரது உணர்வுக்கும் எட்டாத பொருளே, ஒப்பில்லாதவனே, உயிர்களெல்லாவற்றிற்கும் உயிரானவனே, எனது பிறவிப்பிணியை நீக்குகின்ற மருந்தே, செறிந்த இருளில் தெளிவாக விளங்கும் தூயஒளியே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே, குணங்கள் இல்லாத ஆனந்தமே, உன்னை அடைந்த எனக்கு இனி என்ன குறையுள்ளது?

5. குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே.

குறைவற்ற நிறைவே, குற்றமற்ற அமுதமே, முடிவில்லா ஒளி மலையே, வேதமாகவும் அதன் பொருளாகவும் எனது மனத்திலே நிலைபெற்ற தலைவனே, கட்டுக்கடங்காத வெள்ளம்போல எனது சிந்தையில் பாய்கின்ற திருப்பெருந்துறைச் சிவபெருமானே, இறைவனே, நீ என்னுடைய உடலையே இடமாகக் கொண்டாய். இனி நான் உன்னிடம் இரந்து கேட்பதற்கு என்ன உள்ளது?

6. இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆயவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

உனது திருவருளை இடைவிடாது வேண்டி எனது உள்ளம் உருகும் காலத்தே அங்கே தோன்றுகின்ற ஒளியே, தேவர்களின் தலைமீது விளங்குகின்ற தாமரை போன்ற திருவடியை உடையவனே, திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே, எங்கும் நிறைந்த ஆகாயம், நீர், நிலம், தீ, காற்று ஆகியவை ஆகியும் அவை அல்லாதவனவாய் அவ்விடத்திலே மறைந்த அருளுரு உடையவனே, இன்று நான் உன்னைக் கண்ணாரக் கண்டு களித்தேன்.

7. இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

இக்காலத்திலே எனக்குத் திருவருள் தந்து அறியாமையை நீக்கி, உள்ளத்தில் உதிக்கின்ற சூரியனைப் போலத் தோன்றி நின்ற உனது இயல்பினை அறிவினாலன்றி அருள்வழியிலே நின்று அறிந்தேன். உன்னையன்றி வேறொன்றும் இல்லையாகும்படி எல்லாவற்றிலுங் கலந்து, நுட்பமாய் நுணுகி நுணுகி எங்கும் ஒரு தன்மையாய் வியாபகமானதொரு பொருளாக விளங்கும் திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே, உலகில் காணப்படுகின்ற ஒரு பொருளும் நீ அன்று. உன்னையல்லாமல் ஒரு பொருளும் தொழிற்படுவதில்லை. யார் உன்னை அறிய வல்லவர்? (யாருமில்லை).

8. பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளார்
ஆனந்தம் ஆக்குமென் சோதீ.

பூமியும் மேலேயுள்ள பதங்களும் இவற்றை உள்ளடக்கிய அண்டங்களுமாகிய எல்லாப் பொருளுமாய்த் தோன்றி, எங்கும் வியாபித்த ஒளிப்பிழம்பே, நீரில் கலந்துள்ள நெருப்புப் போன்றவனே, நினைப்பதற்கு அருமையான தூய பொருளே, உனது திருவருளாகிய வெள்ளம் பாய்கின்ற சிறப்புப் பொருந்திய சித்தத்தில் உண்டாகியதாகிய ஒப்பற்ற தேனே, திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவபெருமானே, எனக்கு இன்பத்தினையும் பேரின்பத்தையும் விளைக்கின்ற ஒளியே. இவ்விடத்தில் உறவாயிருப்பவர் யார்? அயலாராய் இருப்பவர் யார்? (உறவினருமில்லை, அயலாருமில்லை, உனையன்றி யாருமில்லை என்றவாறு).

9. சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும்ஆ னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

ஒளியாய் விளங்குகின்ற மேனியை உடையவனே, உருவமில்லாத ஒப்பற்றவனே, சொற்களினால் கூறமுடியாத எப்பொருளுக்கும் முதலும் இடையும் கடையுமாயுள்ளவனே, பிறவித் தளையை ஒழிக்கின்ற பேரின்பப் பெருங்கடலே, தீது இல்லாத நன்மையேயுடைய திருவருள் மலையே, திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, குருவாய் எழுந்தருளி வந்து உன் இரு திருவடிகளையும் எனக்கு அருளிய பின் நீ என்னைவிட்டுப் போகின்ற முறை யாது? என்று சொல்லி அருள்வாயாக.

10. தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே.

என்னுள்ளத்தையே திருக்கோயிலாகக் கொண்டு வீற்றிருந்து அருளிய எமது தலைவனே, திருப்பெருந்துறையில் உறைகின்ற சிவனே, எம் தந்தையே, ஈசனே, எனது உடலினை இடமாகக் கொண்டவனே, எனக்கு நீ உன்னைக் கொடுத்தாய். அதற்கீடாக நீ என்னை ஏற்றுக்கொண்டாய். அதனால், நான் முடிவிலாத பேரானந்தத்தை அடைந்தேன். நீ என்னிடத்தில் அடைந்த பயன் என்ன? ஒன்றுமில்லை. நம்மிருவரில் திறமையுடையவர் யார்? (நானே திறமையுடையவன்) இவ்வுதவிக்கு நான் ஒரு பிரதியுபகாரமும் செய்ய முடியாதவனாயினேன்.

- ‘‘பதங்கள் யாவையும் கடந்த இன்பமே.....’’
  பதங்கள் என்பது தெய்வப்பதவி அல்லது வீடுபேற்று நிலைகளைக் குறிக்கும். அந்தத் தத்துவ நிலைகளைக் கடப்போரே சிவனாகிய நித்திய இன்ப நிலையைப் பெறலாம். வீடுபேற்று நிலைகளைக் கடத்தல் கடினமாகையால் ஈறிலாப் பதங்கள் எனப்பட்டது.

- ‘‘மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலன் ஐந்தின்.....’’
  இறையருளைப் பெறும் என்னுடைய நோக்கத்தில் என்னைப் பகைத்து, அறிவை மயக்கி உண்மைப் பொருளைக் காணவிடாது நின்று வேறு விடயங்களில் ஈடுபடுத்துகின்ற, ஈடுபடுவதனைத் தடுத்து ஞானத்தைத் தருபவன் சிவன்.

இறைவனது இயல்புகளாகக் கூறப்படுபவை:

- ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்ப வடிவானவன்
- முடிவிலா முதலாய் விளங்குபவன்
- எங்கும் நிறைந்த ஆகாயம், நீர், நிலம், தீ, காற்று ஆகவும் அவை அல்லாதும் கரந்துநிற்பவன்
- ஒன்றென்று சொல்ல முடியாதவன்
- தானன்றி வேறு இல்லை என்னும்படியானவன். அறிதற்கு அரியவன்
- பூமி, பதங்கள், அண்டங்கள் ஆகிய எல்லாப் பொருளுமாய்த் தோன்றி, விரிந்து படருகின்ற ஒளிப்பிளம்பானவன்
- ஆதியாயும் நடுவாயும் அந்தமாயும் திகழ்பவன்
- தீதிலா நன்மையைத் தரும் திருவருட் குன்றாய் விளங்குபவன்

திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடல்: (3 ஆம் பாடல்)

- இதில் இறைவனது இயல்பு கூறப்பட்டுள்ளது
- அலைமோதாது நிலைபெற்றது என்பதன் மூலம் இறைவனது நிலைபெயராத் தன்மை கூறப்பட்டுள்ளது
- அமுதத் தெண்கடல் என்பதன் மூலம் தெளிவானவனும் இனிமையானவனும் சாவா இன்பத்தைத் தரத்தக்கவனுமாகிய இறைவனது இயல்பு கூறப்பட்டுள்ளது

நீருறு தீயே நினைவதேல் அரிய நின்மலா: (8 ஆம் பாடல்)

- இறைவனது இயல்பு கூறப்பட்டுள்ளது
- நீருறு தீயே என்பதன் மூலம் இறைவனது வெளித் தெரியாது உள்ளுறையும் தன்மை கூறப்பட்டுள்ளது

- உவமை அணி கையாளப்பட்டுள்ளது
  உவமானம் - நீருறு தீ
  உவமேயம் - ஐம்பூதங்களுள்ளும் உறையும் இறைவன்
  பொதுத்தன்மை - வெளித் தெரியாது உள்ளுறையும் தன்மை
- ''நினைவதேல் அரிய நின்மலா'' என்பதன் மூலம் நினைந்து அறிவதற்கு அரியவனாகும் தன்மையும் தூயவனாகுந் தன்மையும் கூறப்பட்டுள்ளது

சங்கரா ஆர்கொலோ சதுரர்: (10 ஆம் பாடல்)

- இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையினால் ஏற்பட்ட பெருமித உணர்வு வெளிப்படுத்தப்பட்டது
- இறைவன் பெறுமதியான தன்னைத் தந்து, கைமாறாகப் பெறுமதியற்ற தன்னை (மாணிக்க வாசகரை) ஏற்றுக்கொண்டான் என்றும் இதனால் தான் எல்லையில்லா ஆனந்தம் பெற்றேன் எனக் கூறுவதனால் அப் பெருமிதம் வெளிப்பட்டது.

கோயில் திருப்பதிகத்தில், 'இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய் இனியுன்னை என்னிரக்கேனே' என்ற அடிகள் பெறும் முக்கியத்துவம்:

- கோயில் திருப்பதிகம், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையினால் ஏற்பட்ட பெருமித உணர்வினை வெளிப்படுத்துவதாகும்
- அதே பெருமிதத்தினையே 'இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய் இனியுன்னை என்னிரக்கேனே' என்ற அடிகளும் வெளிப்படுத்துகின்றன
- 'இறைவனே நீ எனது உடலையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளியுள்ளாயே' இது பெரும்பேறன்றோ எனும் பெருமிதத்தினை மேற்படி அடிகளில் காணலாம்
- இனி உன்னிடம் நான் எதனை வேண்டுவது என்பதனால், எனக்குத் தேவையானது எல்லாம் கிடைத்துவிட்டன என்ற பெருமிதம் வெளிப்படுகின்றது
- பதிகத்தின் ஊடாக வெளிப்படும் பிரதான உணர்வினை இவ்வடிகளும் பிரதிபலிப்பதனால் முக்கியத்துவம் பெறுகின்றன

இறைவனது அறியமுடியாத தன்மை இப்பதிகத்தில் வெளிப்படுத்தப்படுமாறு:

- கரந்ததோர் உருவே **(3 ஆம் பாடல்)** - எங்கும் நிறைந்தவன்
- நீருறு தீயே நினைவதேல் அரிய நின்மலா **(8 ஆம் பாடல்)**
- அருவாம் ஒருவனே **(9 ஆம் பாடல்)** - எ
- ஒன்று நீயல்லை அன்றி யொன்றில்லை **(7 ஆம் பாடல்)** - எ

மாணிக்கவாசகர் இறைவன் மீது கொண்டுள்ள பக்தி வெளிப்படும் விதம்:

- இறைவனது இயல்புகளையும் பெருமைகளையும் வியந்து கூறுதல்
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட நிலையை வெளிப்படுத்தல்
  - ''அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்''
  - ''களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டின்றே''
- இறைவன் தனக்குதவுந் தன்மையினைக் கூறல்
  - முன்னைப் பிறப்பறுக்கும் எம் மருந்தே
  - இன்னருள் தந்தாய்
- இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையால் உண்டான பெருமிதத்தினை வெளிப்படுத்தல்
  - இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய், இனியுன்னை என்னிரக்கேனே
  - ஆர்கொலோ சதுரர்

****

05. அமலனாதிபிரான்

பாடியவர் : திருப்பாணாழ்வார்

ஆசிரியர் பற்றிய குறிப்பு:

சோழநாட்டு உறையூரில் வாழ்ந்தவர். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். அரங்கநாதரைக் காண வேண்டும் என்ற தனது நெடுநாள் ஏக்கம் திடீரென நிறைவேறியவேளை, பரவசமுற்றுப் பாடியதே ''அமலனாதிபிரான்'' எனும் இப்பதிகம். திருப்பாணாழ்வார் பாடியதாகக் கிடைப்பது இப்பதிகம் ஒன்றே.

01. அமல னாதிபிரா னடியார்க் கென்னை யாட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதி வானவன் நீள்மதி ளரங்கத் தம்மான் திருக்
கமல பாதம் வந் தென்கண்ணி னுள்ளன வொக்கின்றதே!

பரிசுத்தனும் எல்லாவற்றுக்கும் தொடக்கமான பெரியவனும், தனது அடியார்களுக்கு அடியானாக ஆட்படும்படி என்னைச் செய்தவனும் தேவர் தலைவனும் வாசனைமிக்க சோலைகளையுடைய திருவேங்கடமலையிலே வீற்றிருப்பவனும் நியாயம் நிலைபெறும் இடமாகிய பரமபதத்திலே வீற்றிருப்பவனும் நீண்ட மதிள் சூழ்ந்த திருவரங்கத்திலே வீற்றிருப்பவனுமாகிய பெருமானுடைய தாமரைப் பூப் போன்ற அழகிய திருப்பாதம் என் கண்ணுக்குள்ளே இருப்பதுபோலத் தோன்றுகின்றதே!

02. உவந்த வுள்ளத்தனா யுலகமளந் தண்டமுற
நிவந்த நீள்முடியன் அன்று நேர்ந்த நிசாசரரை
கவர்ந்த வெங்கணைக் காகுந்தன் கடியார்பொழில் அரங்கத் தம்மான் அரைச்
சிவந்த ஆடையின் மேல்சென்ற தாமென சிந்தனையே!

ஆனந்தமயமான திருவுள்ளத்தை உடையவனாய், மூவுலகங்களையும் அளந்து அண்டமுகடடைக் கடந்து செல்லும்படியாக உயர்ந்த திருமுடியை உடையவனாள், முற்காலத்திலே தன்னை எதிர்த்துவந்த அசுரர்களது உயிரை வாங்கிய கொடிய அம்புகளை உடைய இராமனாய், வாசனை நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவரங்கத்திலே வீற்றிருக்கும் பெருமானுடைய திருவரையிலே உடுத்திருக்கின்ற சிவந்த பீதாம்பரத்தின்மேல் என்னுடைய சிந்தனை (வேறொரு நினைப்புமின்றிச்) சென்று பதிந்துவிட்டதே!

03. மந்தி பாய்வட வேங்கட மாமலை வானவர்கள்
சந்தி செய்ய நின்றா னரங்கத் தரவி னணையான்
அந்தி போல்நிறத் தாடையு மதன்மேல் அயனைப் படைத்த தோரெழில்
உந்தி மேலதன் றோஅடி யேனுள்ளத் தின்னுயிரே!

குரங்குகள் தாவிப்பாய்கின்றதும் வடதிசையில் உள்ளதுமாகிய திருவேங்கடமலையில் தேவர்களெல்லோரும் வந்து வணங்கும்படியாக நிற்பவனும் திருவரங்கத்திலே பாம்புப்படுக்கையிலே கிடப்பவனுமாகிய எம்பிரானுடைய செவ்வானம் போன்ற நிறத்தையுடைய ஆடையும் அதன் மேலாகத் தோற்றமளிக்கின்ற, பிரமனைத் தோற்றுவித்த ஒப்பற்ற அழகுவாய்ந்த நாபியுமாகிய அவற்றின் மேலல்லவா எனது அருமைவாய்ந்த உயிர் தங்கியிருக்கின்றது!

04. சதுரமா மதில்சூ ழிலங்கைக் கிறைவன் தலைபத்து
உதிர வோட்டி ஓர் வெங்கணை யுய்த்தவனோத வண்ணன்
மதுரமா வண்மு பாட மாமயி லாடரங்கத் தம்மான் திருவயிற்
றுதரபந்தம் என் னுள்ளத்துள்நின் றுலாகின்றதே!

சதுர வடிவமான மதிலால் சூழப்பெற்ற இலங்கைக்கு அரசனான இராவணனுடைய பத்துத் தலைகளும் சிதறும்படியாக ஒப்பற்ற இராமபாணத்தைச் செலுத்தியவனும் கடல் நிற்பவனும் இனிமையாக வண்டு பாட, அழகிய மயில்கள் ஆடுகின்ற திருவரங்கத்திலே வீற்றிருப்பவனுமாகிய பெருமானுடைய திருவயிற்றிலே கட்டப்பெற்றுள்ள உதரபந்தம் என் உள்ளத்துக்குள்ளே நின்று உலாவுகின்றது!

05. பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி யென்னுள் புகுந்தான்
கோர மாதவம் செய்தனன்கொ லறியே ளரங்கத் தம்மான் திரு
ஆர மார்வது அன்றோ! அடி யேனை யாட்கொண்டதே!

தாங்குதற்கரிய பழைய வினைக்கட்டுக்களை அறுத்து, என்னைத் தன்னிடத்தில் அன்புடையவனாக்கி வைத்தான்; அதுமட்டுமன்றி, என் உள்ளத்தினுள்ளே புகுந்து கொண்டான்; (இப்படிப்பட்ட பாக்கியத்தை அடைவதற்கு நான்) உக்கிரமான பெரிய தவத்தைச் செய்தேனோ என்னவோ? எனக்குத் தெரியவில்லை! திருவரங்கத்திலே வீற்றிருக்கின்ற பெருமானின், திருமகள் வீற்றிருப்பதும் மணிமாலை அணியப்பெற்றதுமான திருமார்பு அல்லவோ அடியவனான என்னை ஆட்படுத்திக் கொண்டது!

06. துண்ட வெண்பிறை யன்துயர் தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ் பொழில்சூ ழரங்கநகர் மேய வப்பன்
அண்ட ரண்டபகி ரண்டத்தொரு மாநிலம்
எழுமால்வரை முற்றும் உண்ட கண்டம் கண்டீ ரடியேனை யுய்யக்கொண்டதே.

(முழுமையற்றுத்) துண்டமாய் இருக்கின்ற வெண்ணிறமான பிறைச் சந்திரனைச் சூடியவனான சிவனின் (பிச்சை எடுத்தத் திரிவதாகிய) துன்பத்தைப் போக்கியவனும், அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் வாழ்கின்ற பொழிலாற் சூழப்பெற்ற திருவரங்கத்திலே வீற்றிருப்பவனுமாகிய அப்பனுடைய - அனைத்து அண்டங்களையும் உலகையும் ஏழு குல மலைகளையும் மற்றுமுள்ள அனைத்தையும் உண்ட - திருக்கழுத்தத்தான் என்னை உய்யும்படி செய்தது.

07. கையி னார்சுரி சங்கன லாழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளப விரையார் கமழ்நீள் முடியெம்
ஐயனார் அணியரங்கனா ரரவி னணைமிசை மேய மாயனார்
செய்யவாய் ஐயோ! என்னைச் சிந்தை கவர்ந்ததுவே!

திருக்கரத்திலே பொருந்தியிருக்கின்ற புரிகளையுடைய சங்கையும் அனல் கக்குகின்ற சக்கரத்தையும் உடையவரும் நீண்ட மலைபோன்ற திருமேனியை உடையவரும் துளசி மணம் வீசுகின்ற ஒளிபொருந்திய நீண்ட திருமுடியை உடையவரும் பாம்பணையிலே பள்ளி கொண்டவருமாகிய மாயவனாருடைய சிவந்த திருவாயானது என்னுடைய நெஞ்சைக் கொள்ளை கொண்டுவிட்டதே!

08. பரிய னாகி வந்த அவுண னுடல்கீண்ட அமரர்க்கு
அரிய ஆதிப்பிரா னரங்கத் தமலன் முகத்து
கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி யோடி நீண்டஅப்
பெரிய வாய கண்கள் என்னைப் பேதைமை செய்தனவே!

பருத்த உருவத்தோடு (பிரகலாதனைக் கொல்வதற்காக) வந்த அசுரனுடைய (இரணியனுடைய) உடலைக் கிழித்தவனும் தேவர்களால் அடைதற்கு அரியவனும் அனைத்துக்கும் மூல காரணனும் திருவரங்கத்திலே வீற்றிருப்பவனுமாகிய பரிசுத்தனுடைய திருமுகத்திலே கரிய நிறத்தோ: விசாலமாக செவ்வரி படர்ந்து நீண்டு விளங்குகின்ற அந்தப் பெரிய கண்கள் என்னை மயக்கம் செய்துவிட்டனவே!

09. ஆலமா மரத்தின் இலைமே லொருபாலகனாய்
ஞால மேழு முண்டா னரங்கத் தரலி னணையான்
கோல மாமணி யாரமும் முத்துத் தாமமும் முடிவில்ல தோரெழில்
நீல மேனி ஐயோ! நிறை கொண்டதென் நெஞ்சினையே!

பெரிய ஆலமரத்தின் இலையிலே ஒரு சிறு குழந்தையாகக் கிடந்தவனும் ஏழு உலகங்களையும் உண்டவனுமாய் திருவரங்கத்திலே கிடப்பவனுடைய அழகிய பெரிய மணிமாலையும் முத்து மாலையும் பூண்ட எல்லையற்ற எழில் கொண்ட நீல நிறமேனியானது என்னுடைய நெஞ்சின் அடக்கத்தை / உறுதியைத் தகர்த்துவிட்டதே! ஐயோ!

10. கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயன் என் னுள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி யரங்கன்என் னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே!

மழைமேகத்தை ஒத்த நிறத்தை உடையவனும் ஆயர் குலத்தனாய்ப் பிறந்து வெண்ணெய் உண்ட வாயை உடையவனுமாய் என் உள்ளத்தை ஈர்த்தவனை, தேவர் தலைவனும் அழகுமிக்க திருவரங்கத்திலே வீற்றிருப்பவனுமாகிய என் அமுதத்தைக் கண்ட கண்கள் வேறு எதனையும் காணமாட்டா!

அமல உவந்த மந்தி, சதுரம் பாரம் துண்ட, கை பரி ஆரம், கொண்டல் - கண்ணி.

1) அரங்கநாதனின் தோற்றப் பொலிவு

அரங்கநாதனின் தோற்றப் பொலிவினை, திருப்பாணாழ்வார் பாதாதி கேசமாக வர்ணித்துப் பாடி உள்ளார்.

- தாமரை மலர் போன்ற திருவடிகள்
- அரையும் அதன் மீதணிந்துள்ள சிவந்த ஆடையும்
- அந்தி வண்ண ஆடையும் அதன்மேல் எழில் உந்தியும்
- கடலலையின் வண்ணம் கொண்ட மேனியில் விளங்கித் தோன்றும் உதரபந்தனம்
- அழகிய ஆரமணிந்த திருமார்பு
- உலகம் ஏழையும் விழுங்கிய கண்டம்
- சிவந்த வாய்
- செவ்வரி ஓடிய பெரிய கண்கள்
- நீல மேனி
- வெண் வெண்ணெய் உண்ட வாய்

2) பெருமாள் பெருமைகள்

- மலங்களால் பீடிக்கப்படாதவன்
- விண்ணவர் தலைவன்
- மூவடியால் உலகளந்து, மாபலியை அடக்கியவன்
- பிரமனைப் படைத்தவன்
- பிறவிப் பிணிக்குக் காரணமான வினைகளை அறுத்தவன்
- இராவணனின் பத்துத் தலைகளும் சிதறடித்தவன்
- இரணியனை வதம் செய்தவன்
- துண்டவெண் பிறையான் துயர் தீர்த்தவன்

3) தலச் சிறப்பு

- நறுமணம்மிக்க மலர்ச் சோலைகள் நிறைந்த திருவேங்கட மலை
- குரங்குகள் தாவி விளையாடி மகிழும் வளமிக்க திருவேங்கட மலை

- நீண்ட மதில்களைக் கொண்ட திருவரங்கம்
- வண்டு பாட, மயிலாடும் திருவரங்கம்
- வண்டுகள் வாழும் சோலைகள் நிறைந்த திருவரங்கம்
- அழகுமிக்க திருவரங்கம்

4) பெருமாள்மீது திருப்பாணாழ்வார் கொண்ட பக்தி

- அரங்கனைத் தரிசிக்க வேண்டும் என்ற நெடுநாள் ஏக்கம் திடீரென்று நிறைவேறியமையால் அடைந்த பரவசம்.
- அவனுடைய திருமேனியினின்றும் கண்களை எடுக்க முடியாது நிற்றல்.
- அரங்கனின் பாதம் முதல் கேசம் வரை, ஒவ்வொன்றாகக் கண் அனுபவித்து உயிரும் உள்ளமும் ஒன்றிய பரவச நிலை.
- அவனது பெருமைகளையும் திருமேனி அழகையும் கண்டு உள்ளம் நிறைதல். ‘‘ஐயோ நிறை கொண்டது என் நெஞ்சினை.....’’
- திருமேனி அழகில் ஈடுபட்ட கண்ணால் வேறொன்றைக் காணவிரும்பாமை. ‘‘என்னமுதினைக் கண்ட கண்கள்.....’’
- பரவசத்தால் அறிவழிந்த நிலைமை.
  உ-ம் : ‘‘பெரியவாய் கண்கள் எனைப் பேதைமை.....’’

5) இடம் பெற்றுள்ள அணிகள்

<u>உவமை</u>

- கமல பாதம் (1)
- அந்தி போல் நிறத்தாடை (3)
- ஓதவண்ணன் (4)
- நீள் வரை போல் மெய்யனார் (7)
- கொண்டல் வண்ணன் (10)

****

06. கம்பராமாயணம் - குகப் படலம்

தசரதனிடம், கைகேயி பெற்றுக்கொண்ட வரத்தினால் முடிசூடாது அயோத்தி நகரை விட்டுநீங்கி காட்டுக்குப் புறப்பட்ட இராமன், குகனது உதவியுடன் கங்கையாற்றைக் கடந்து காடு புகுந்தான். இராமனை நாட்டுக்கு அரசனாக்க அழைத்துவரச் சென்ற பரதன், குகனைச் சந்தித்ததையும் அப்போது நிகழ்ந்தவற்றையும் கூறுவதாக இப்பகுதி அமைகிறது. (குகப் படலம் : பாடல் எண் : 2303 - 2344)

உள்ளடக்கம் :

1 - 13: பெருஞ்சேனையுடன் வந்த பரதனைக் கண்டு சினங்கொண்ட குகன், தன் படையைக் கூட்டியது.

14 - 23: சினங்கொண்ட குகனின் சூளுரை / வஞ்சினம்.

24 - 37: குகனைப் பற்றிச் சுமந்திரன் சொல்லக் கேட்ட பரதன், குகனைக் காண வருதலும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் எதிர்கொண்டவாறும்.

38 - 43: இராம, இலக்குவன் குறித்து குகனிடம் பரதன் விசாரித்தமையும் குகனின் விளக்கமும்.

இந்தப் பகுதியில் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் :

அ) பாத்திரப் படைப்பு (இயல்பு, பேச்சு, செயல் முதலானவை)
ஆ) சம்பவச் சித்திரிப்பு
இ) அணிகளின் கையாளுகை
ஈ) சந்தர்ப்பம் கூறல்

பரதன் சேனையோடு கங்கையின் கரையை அடைதல்

1) பூவிரி பொலன்கழற் பொருவி றானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினான்.

பூ விரி பொலன் கழல் பொரு இல் தானையான்
காவிரிநாடு அன்ன கழனி நாடு ஒரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்.

பூ விரி - அழகுமிக்க, **பொலன் கழல்** - பொன்னாலான வீரக்கழலையும், **பொரு இல் தானையான்** - ஒப்பில்லாத சேனையையுமுடைய பரதன், **காவிரிநாடு அன்ன** - காவேரி பாயுஞ் சோழ நாட்டை யொத்த, **கழனி நாடு** - கழனிகளையுடைய (தனது) கோசல தேசத்தை, **ஒரீஇத்** - விட்டுநீங்கி, **தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவைஉம்** - நிலையிற் பொருள், இயங்கும் பொருள் என இருவகைத் தோற்றமாகப் பகுக்கப்படும் தன்மையுடைய எல்லாவுயிர்களும், **இரங்கிட** - (தனது நிலைமையை நோக்கிப்) பரிதவிக்க, **கங்கை எய்தினான்** - கங்கையின் கரையை எய்தினான்.

பரதனுடன் சென்ற யானைச்சேனையின் வருணனை

2) எண்ணருஞ் சுரும்புதம் மினத்துக் கல்லது
கண்ணகன் பெரும்புனற் கங்கை யெங்கணு
மண்ணல்வெங் கரிமதத் தருவி பாய்தலா
லுண்ணவுங் குடையவு முரித்தன் றாயதே.

எண்ணரும் சுரும்புதம் இனத்துக்கு அல்லது
கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெம் கரி மதத்து அருவி பாய்தலால்
உண்ணவும் குடையவும் உரித்தன்று ஆயதே.

கண் அகல் - இடம் அகன்ற, **பெரு புனல்** - மிக்க நீரையுடைய, **கங்கை** - கங்கா நதியில், **எங்கண்உம்** - எல்லா இடங்களிலும், **அண்ணல் வெம்கரி** - பெருமையையுடைய வெவ்விய யானையினது, **மதத்து அருவி** - மதநீர்ப்பெருக்கு, **பாய்தலால்** - பெருகுவதால், (அவ்வாற்று நீர்) **எண்ண அருஞ் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது** - எண்ணி அளவிடுவற்கு அரிய (மிகப் பலவான) வண்டுகளின் கூட்டத்துக்கு அன்றி (மற்ற மனிதர் முதலியோர்க்கு), **உண்ணஉம்** - குடிக்கஉம், **குடையஉம்** - நீராட்டஞ் செய்யவும், **உரித்து அன்று ஆயது** - உரிமையுடைய தல்லாததாயிற்று.

குதிரைச் சேனைகளின் வருணனை

3) அடிமிசைத் தூளிபுக் கடைந்த தேவர்தம்
முடிமிசைப் படர்வதோர் முறைமை தேர்ந்திலேம்
நெடிதுயிர்த் துண்டவு நீந்தி நின்றவும்
பொடிமிசைப் புரண்டவும் புரவி யீட்டமே.

அடி மிசைத் தூளி, புக்கு, அடைந்த தேவர்தம்
முடி மிசைப் படர்வது ஓர் முறைமை தேர்ந்திலேம்;
நெடிது உயிர்த்து உண்டவும் நீந்தி நின்றவும்
பொடி மிசைப் புரண்டவும், புரவி ஈட்டமே.

அடிமிசைத் தூளி - (குதிரைகளின்) கால்களினாலெழுப்பப்பட்ட தூளிகள், **புக்கு அடைந்த** - (வானிற்) போய்ச் சேரப்பெற்றவை, **தேவர்தம் முடிமிசைப் படர்வது** - தேவர்களின் சிரசின்மீது சென்று சேர்ந்ததாகிய, **ஓர் முறைமை** - ஒப்பற்ற முறைமையை, **தேர்ந்திலேன்** - (மானுடராகிய நாம்) அறிந்தோமில்லை, **நெடிது உயிர்த்து** - பெருமூச்சு விட்டுக்கொண்டு, **உண்டஉம்** - (நீரைப்) பருகியனவும், **நீந்தி நின்றஉம்** - (நீரில்) நீந்தியபடி நின்றனவும், **பொடிமிசைப் புரண்டஉம்** - பூமியின் மீது புரண்டவைகளும், **புரவி ஈட்டம்ஏ** - குதிரைக்கூட்டமேயாகும்.

பரதனது சேனை கங்கையில் வியாபித்தல்

4) பாலையேய் நிறத்தொடு பண்டு தான்பட
ரோலையேய் நெடுங்கட லோடிற் றில்லையான்
மாலையேய் நெடுமுடி மன்னன் சேனையாம்
வேலையே மடுத்ததக் கங்கை வெள்ளமே.

பாலை ஏய் நிறத்தொடு பண்டு தான் படர்,
ஓலை ஏய் நெடுங்கடல் ஓடிற்றில்லையால்,
மாலை ஏய் நெடுமுடி மன்னன் சேனையாம்
வேலையே மடுத்தது அக் கங்கை வெள்ளமே.

அக் கங்கை வெள்ளம் - அந்தக் கங்காநதியின் பெருக்கானது, **பாலை ஏய் நிறத்தொடு** - பாலையொத்த (வெள்ளிய) நிறத்துடனே, **தான் பண்டு படர்** - தான் முன்னே சென்றடைந்து வந்த, **ஓலை ஏய் நெடுங் கடல்** - ஆரவாரத்தைக் கொண்ட பெரிய கடலில், **ஓடிற்று இல்லை** - விரைந்து சென்றடையவில்லை, **மாலை ஏய் நெடு முடி மன்னன் சேனைஆம்** - பூமாலையைச் சூடிய நீண்ட கிரீடத்தை யணிந்த பரதனது சேனையாகிய, **வேலைஏ** - சமுத்திரமே, **மடுத்தது** - (அந்தக் கங்கையின் பெருக்கை) உண்டுவிட்டது.

பரதனைத் தொடர்ந்து சென்ற சேனை அளவு

5) கான்றலை நண்ணிய காளைபின் பின்படர்
தோன்றலை யவ்வழி தொடர்ந்து சென்றன
வான்றவ ருணர்த்திய வக்கு ரோணிகண்
மூன்றுபத் தாயிரத் திரட்டி முற்றுமே.

கான்தலை நண்ணிய காளை பின் படர்
தோன்றலை, அவ்வழித் தொடர்ந்து சென்றன
ஆன்றவர் உணர்த்திய அக்குரோணிகள்
மூன்று பத்தாயிரத்து இரட்டி முற்றுமே.

கான் தலை நண்ணிய - காட்டிற் சென்ற, **காளை பின்** - இராமபிரான் பின்னே (இராமபிரானை நாடி என்றபடி), **படர்** - புறப்பட்ட, **தோன்றலை** - பரதனை, **அவ்வழி** - அப்பொழுது அல்லது அவ்விடத்தில், **தொடர்ந்து சென்றன** - பின் தொடர்ந்து சென்ற சேனைகள், **முற்றும்** - முழுவதும், **ஆன்றவர் உணர்த்திய** - பெரியோர்களால் தொகை கூறப்பட்ட, **மூன்று பத்து ஆயிரத்து இரட்டி அக்குரோணிகள்** - அறுபதினாயிரம் அக்குரோணிகளாம்.

பரதன் சேனையோடு வருதலைக் கண்டு ஐயுற்று, குகன் தன் சேனையோடு கங்கையின் தென்கரையை அடைதல் (06 - 11)

6) அப்படை கங்கையை யடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
யொப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலா
மிப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான்.

அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
துப்பு உடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்பு உடை அண்ணலோடு உடற்றவேகொலாம்
இப்படை எடுத்தது என்று எடுத்த சீற்றத்தான்.

அப் படை - அந்தச் சேனை, **கங்கையை அடைந்த** - கங்கையைச் சேர்ந்த, **ஆயிடை** - அச்சமயத்தில் (அதனைக் கண்டு), **துப்பு உடை கடலின்** - வலிமையுடைய கடலினது, **நீர்** - நீரை, **சுமந்த** - (பருகி மிகுதியாகத் தரித்து) சூல் கொண்ட, **மேகத்தை** - காளமேகத்தை, **ஒப்பு உடை** - உவமையாகவுடைய (ஒத்த என்றபடி), **அண்ணலோடு** - ராமனுடனே, **உடற்றஏ கொல்ஆம்** - போர் செய்தற்காகவேயோ, **இப் படை எடுத்தது** - இந்தச் சேனை எழுந்தது, **என்று** - என்று எண்ணி, **எடுத்த சீற்றத்தான்** - மிகுதியாகக் கொண்ட கோபமுடையவனாய். - ‘‘குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்’’(7) ‘‘மருங்கு அடை தென் கரை வந்து தோன்றினான்’’ (11) என இயையும்.

7) குகனெனும் பெயரிய கூற்றி னாற்றலான்
றொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவா
னகைமிகக் கண்கடீ நாற நாசியிற்
புகை யுறக் குனிப்புறும் புருவப் போர்விலான்.

குகன் எனும் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்.
நகை மிகக் கண்கள் தீ நாற நாசியில்
புகை உறக் குனிப்புறும் புருவப் போர்விலான்.

குகன் எனும் பெயரிய - குகனென்ற பெயரையுடைய, **கூற்றின் ஆற்றலான்** - யமன் போலும் வலிமையையுடைய வேடர்கோன், **தொகை முரண் சேனையை** - தொகுதியாகவுள்ள வலிமையையுடைய அச்சேனையை, **துகளின் நோக்குவான்** - (அதனால் மேலெழுப்பப்பட்ட) புழுதியாற் பார்த்தறிந்தவனாய், **நகை மிக** - சிரிப்பு அதிகப்படவும், **கண்கள் தீ நாற** - கண்களினின்று தீப்பொறி பறக்கவும், **நாசியில் புகை உற** - மூக்கினின்றும் புகை மிக்குக் கிளம்பவும், **குனிப்புறும் புருவப் போர்விலான்** - வளைந்த புருவமாகிய போர் செய்யும் வில்லையுடையவனும்.

8) மையுற வுயிரெலா மிறுதி வாங்குவான்
கையுறு கவரயில் பிடித்த காலன்றா
னையைநூ றாயிர முருவ மாயின
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான்.

மை உறவு உயிர் எலாம் இறுதி வாங்குவான்
கை உறு கவர் அயில் பிடித்த காலன்தான்
ஐ ஐநூறாயிரம் உருவம் ஆயின
மெய் உறு தானையான், வில்லின் கல்வியான்.

மைஉற - குற்றமுண்டாக, **உயிர் எலாம் இறுதி வாங்குவான்** - உயிரையெல்லாம் முடிவுண்டாக்கும்படி (உடலினின்று) நீங்குவதற்கு, **கை** - கையிலே, **உறு** - பொருந்திய, **கவர் அயில் பிடித்த** - முத்தலை வேலைப்பிடித்த, **காலன்தான்** - யமனே, **ஐ ஐந் நூறு ஆயிரம் உருவம் ஆயின** - அழகிய ஐந்து லட்சம் வடிவையெடுத்தாலொத்த, **மெய் உறு தானையான்** - மெய் வலிமையையுடைய சேனையை உடையவனும், **வில்லின் கல்வியான்** - வில்வித்தையில் வல்லவனும்.

9) கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்குந் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளருந் தோளினான்.

கட்டிய சுரிகையன், கடித்த வாயினன்,
வெட்டிய மொழியினன், விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன், குறிக்கும் கொம்பினன்
'கிட்டியது அமர்' எனக் கிளரும் தோளினான்.

கட்டிய - (அரைப்பட்டிகையிற்) கட்டிய, **சுரிகையன்** - உடைவாளையுடையவனும், **கடித்த வாயினன்** - கடித்த உதட்டையுடையவனும், **வெட்டிய மொழியினன்** - கடிந்து பேசுகின்ற சொற்களையுடையவனும், **விழிக்கும் தீயினன்** - விழித்துப் பார்த்தலையுடைய கண்களில் தீப்பொறி கொண்டவனும், **கொட்டிய துடியினன்** - அடித்த உடுக்கையெனும் பறையையுடையவனும், **குறிக்கும் கொம்பினன்** - ஒலிக்கின்ற ஊதுகொம்பை உடையவனும், **அமர் கிட்டியது எனக் கிளரும் தோளினான்** - போர் சமீபித்தது என்று மகிழ்ச்சியாற் பூரித்த தோள்களை உடையவனும்.

10) எலியெலா மிப்படை யரவம் யானென
வொலியுலாஞ் சேனையை யுவந்து கூவினான்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்த போலவே.

'எலி எலாம் இப்படை; அரவம் யான்' என,
ஒலி உலாம் சேனையை உவந்து கூவினான்,
வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போலவே.

இப்படை எலாம் எலி - இந்தச் சேனை முழுவதும் எலிகளாம், **யான் அரவம்** - (இவற்றையழிப்பதற்கு) யான் பாம்பாவேன், **என** - என்று வீரவாதங் கூறி, **உலகினில் வாழும் வள்உகிர் புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போல** - உலகத்தில் வாழ்கின்ற வலிமைமிக்க கூரிய நகங்களையுடைய புலிகளெல்லாம் ஓரிடத்தில் திரண்டனபோல(த் தன்) பக்கத்தில் ஒருங்கு கூடும்படி, **ஒலி உலாம் சேனையை உவந்து கூவினான்** - ஆரவாரமிக்க தன் சேனையை மகிழ்ந்து கூவியழைத்தவனுமாய். மருங்கிடை தென்கரை வந்து தோன்றினான் என முடிக்க.

11) மருங்கடை தென்கரை வந்து தோன்றினா
னொருங்கடை நெடும்படை ஒல்லெ னார்ப்பினோ
டருங்கடை யுகந்தனி லசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே.

மருங்கு அடை தென் கரை வந்து தோன்றினான்;
ஒருங்கு அடை நெடும் படை ஒல் என் ஆர்ப்பினோடு
அருங் கடையுகம் தனில், அசனி மா மழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே.

ஒருங்கு அடை நெடும் படை - ஒருமிக்கக் கூடிநின்ற பெரிய (தன்) சேனைகள், **ஒல்லென் ஆர்ப்பினோடு** - ஒல்லென ஒலிக்கின்ற ஆரவாரத்துடனே, **அரு கடை யுகந்தனில்** - (பிராணிகள் பிழைத்தற்கு) அரிய கல்பாந்த காலத்தில், **அசனி மாமழை** - இடியையுடைய பெரிய மேகங்களும், **கரு கடல்** - பெரிய கடல்களும், **கிளர்ந்து என** - மிக்கெழுந்தாற்போல, **கலந்து சூழ** - (தம்மில்) திரண்டு (தன்னைச்) சுற்றிவர, **மருங்கு அடை தென்கரை வந்து தோன்றினான்** - அருகிலுள்ள கங்கையின் தென்கரையில் வந்து சேர்ந்தான்.

குகன் தன் படைத்துணைவரான வேடருக்கு இட்ட கட்டளை (12, 13)

12) தோன்றிய புளிஞரை நோக்கிச் சூழ்ச்சியி
னூன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேன்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவா
னான்றபே ரரசுநீ ரமைதிரா மென்றான்.

தோன்றிய புளிஞரை நோக்கிச் 'சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு
ஏன்றனென்; என் உயிர்த்துணைவற்கு ஈகுவான்
ஆன்ற பேர் அரசு; நீர் அமைதிர் ஆம்' என்றான்.

(இங்ஙனம் வந்து தோன்றிய) **தோன்றிய புளிஞரை நோக்கிச்** - (தன்னைச் சுற்றிலும் வந்து) தோன்றிய வேடர்களைப் பார்த்து, **சூழ்ச்சியின் ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு** - (இராமனை வெல்லும் ஆலோசனையோடு எதிரில் நிலைநின்ற (பரதர்) சேனையை (க் கொன்று) வீரசுவர்க்க மேறச் செய்தற்கும், **ஆன்ற பேர் அரசு** - சிறந்த பெரிய இராச்சியத்தை, என் உயிர்த் துணைவற்கு ஈகுவான் எனது உயிர் நண்பனான இராமனுக்குக் கொடுத்தற்கும், **ஏன்றனென்** - தொடங்கியுள்ளேன், **நீர் அமைதிர்** - நீங்களும் சம்மதிப்பீர்களாக, **என்றான்** - என்று கூறினான். **ஆம்** - அசை

13) துடியெறி நெறிகளுந் துறையுஞ் சுற்றுற
வொடியெறி யம்பிகள் யாது மோட்டலிர்
கடியெறி கங்கையின் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனாப் பெயர்த்துங் கூறுவான்.

"துடி எறி; நெறிகளும் துறையும் சுற்றுற
ஒடி எறி; அம்பிகள் யாதும் ஓட்டலிர்;
கடி எறி; கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி; எறி பட" எனாப் பெயர்த்தும் கூறுவான்.

(என்று கூறிய குகன்) **துடி எறி** - பறைகளையடி, **நெறிகள் உம்** - வழிகளையும், **துறை உம்** - நீரிலிறங்கு துறைகளையும், **சுற்றுஉற** - எல்லாப் பக்கங்களிலும் (முழுவதும் என்ற படி), **ஓடி** - அழித்துவிடு, **கடி எறி** - காவலாக வை, **கங்கையின் கரை வந்தோர்களை** - கங்கையாற்றின் கரையில் வருமவர்களை, **பிடி** - பற்று, **பட** - அழியும்படி, **எறி** - வெட்டு, **அம்பிகள் யாதும் ஓட்டலிர்** - தோணிகளுள் ஒன்றையும் (அவர்கள் ஆறு கடத்தற்கு நீரில் விட்டு) ஓட்டாதிருங்கள், **எனா** - என்று சொல்லி, **பெயர்த்துஉம் கூறுவான்** - மீண்டும் சொல்பவனானான். அதனை அடுத்த 10 செய்யுள்களிற் காண்க.

தன்னினத்தவரான வேடர் முன் கூறியவற்றைத் தெரிவிப்பன (14 - 23)

14) அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே,
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
வுஞ்சிவர் போய்விடி னாய்குக னென்றெனை யோதாரோ.

அஞ்சன வண்ணன், என் ஆர் உயிர் நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன, செல்லாவோ?
உஞ்சு இவர் போய்விடின், ''நாய் குகன்'' என்று எனை ஓதாரோ?

என் ஆர் உயிர் நாயகன் - எனது அருமையான உயிருக்குத் தலைவனாகிய, **அஞ்சன வண்ணன்** - மை போலுங் கரிய திரு நிறத்தையுடைய ஸ்ரீ ராமன், **ஆளாமே** - ஆட்சி செய்யாமலிருக்கும்படி, **வஞ்சனையால் அரசு எய்திய** - வஞ்சனையினால் இராச்சியத்தை யடைந்த, **மன்னர்உம்** - அரசரும் (பரதரும்), **வந்தார்ஏ** - (அருகில்) வந்தனரன்றோ? **தீ உமிழ்கின்ற** - நெருப்பை வெளிச் சொரியும் தன்மையனவான, **செஞ்சரம் என்பன** - (எனது) சிவந்த அம்பெனப்படுபவை, **செல்லாஓ** - (இவர் மேற்) செல்லமாட்டாவே?, **இவர் உஞ்சு போய்விடின்** - (எனது அம்புக்குத்) தப்பிப் பிழைத்துப் போய்விட்டால், **நாய் குகன் என்று எனை ஓதார்ஓ** - நாய் போன்ற (எளிய தன்மையுடைய) குகனென்று என்னை (உலகத்தார் இகழ்ந்து) பேசமாட்டார்களோ?

15) ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
வேழைமை வேடனி றந்தில னென்றெனை யேசாரோ.

ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
'ஏழைமை வேடன் இறந்திலன்' என்று, எனை ஏசாரோ?

இவர் - பரதன், **ஆழம்** - ஆழத்தையும், **நெடு** - நீட்சியையும், **திரை** - அலைகளையுமுடைய, **ஆறு** - இக்கங்கையாற்றை, **கடந்து போவார்ஓ** - (எனது உதவியில்லாமல்) தாண்டிப் போகமாட்டுவரோ?, **வேழ நெடு படை** - யானைகளையுடைய பெரிய சேனையை, **கண்டு** - பார்த்து, **விலங்கிடும்** - (அஞ்சி) ஒதுங்கிப் போகிற, **வில்ஆள்ஓ** - வில் வீரனோ (நான்), **தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றுஓ** - (உனக்கும் எனக்கும்) சினேகம் (இருக்கட்டும்) என்று (என்னை நோக்கி) அவ்விராமபிரான் சொல்லிய வார்த்தை (நன்கு மதிக்கத்தக்க) ஒரு வார்த்தை யன்றோ? (அந்த நட்புக்கு ஏற்ப யான் நடவாவிட்டால்), **ஏழைமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசார்ஓ** - எளிமையுடைய இவ்வேடன் (இங்ஙனம் மானங்கெட வாழ்தலினும்) இறந்திருக்கலாகாதா? என்று என்னை (உலகத்தார்) பழிக்கமாட்டாரோ?

16) முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்
பின்னவ னின்றன னென்றில னன்னவை பேசானே
லென்னிவ னென்னை யிகழ்ந்ததிவ் வெல்லை கடந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ.

முன்னவன் என்று நினைந்திலன்; மொய் புலி அன்னான், ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்; அன்னவை பேசானேல்,
என் இவன் என்னை இகழ்ந்தது? இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர் விடும் சரம் வாயாவோ?

இவன் - இப்பரதன், **முன்னவன் என்று நினைந்திலன்** - (இராமபிரானைக் குறித்துத் தனது) தமையனென்று எண்ணினானில்லை; **மொய்புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன் என்றிலன்** - (இலக்குமணனைக் குறித்து) வலிமைகொண்ட புலியையொத்தவன் ஒரு தம்பி உடனுள்ளானென்று நினைத்தானுமில்லை; **அன்னவை பேசான்ஏல்** - அவற்றைக் குறித்த எண்ணானாயினும், **என்னை இகழ்ந்தது என்** - (நடுவில் நின்ற) என்னையும் (ஒரு பொருளாக மதியாமல்) இகழ்ச்சியாக நினைத்தது யாது காரணத்தால்?, **இவ் எல்லை கடந்து அன்றோ** - (இவன் வல்லமையெல்லாம்) இந்த (எனது) எல்லையைக் கடந்தாலன்றோ (நிலை நிற்கும்)?, **வேடர் விடும் சரம்** - வேடர் எய்யும் அம்புகள், **மன்னவர் நெஞ்சினில் வாயாஓ** - அரசர் மார்பில் தைத்துப் பொருதமாட்டாவோ?

17) பாவமு நின்ற பெரும்பழி யும்பகை நண்போடு
மேவமு மென்பவை மண்ணுல காள்பவ ரெண்ணாரோ
வாவது போகவென் னாருயிர்த் தோழமை தந்தான்மேற்
போவது சேனையு மாருயி ருங்கொடு போயன்றோ?

பாவமும் நின்ற பெரும்பழியும் பகை நண்போடும்,
ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ?
ஆ! அது போக! என் ஆர் உயிர்த் தோழமை தந்தான்மேல்
போவது, சேனையும் ஆர் உயிரும் கொடுபோயன்றோ?

பாவம்உம் - தீவினையும், **நின்ற** - நிலைபெற்ற, **பெரும்பழி உம்** - பெரிய பழிப்புச் சொல்லும், **பகை நண்போடுஉம் ஏவம்உம்** - (இன்னார்) பகைவரென்பதும் (இன்னார்) நண்பரென்பதும் (இன்னது) பிறர்க்குத் துன்பத்தை விளைவிப்பது என்பதும், **என்பவை** - என்னும் இவற்றை, **மண் உலகு ஆள்பவர் எண்ணார் ஓ** - நிலவுலகத்தையாளும் அரசர் நினைக்கமாட்டாரோ?, **ஆவது போக** - ஆகக்கடவது ஆகுக என, **என் ஆர் உயிர்த் தோழமை தந்தான்மேல் போவது** - எனக்கு அரிய உயிரோடொத்த சினேகத்தைச் செய்தளித்த ஸ்ரீராமன்மேல் (இவர் போர் செய்து அழிக்கச்) செய்வது, **சேனைஉம் ஆருயிரும் கொடு போய் அன்று ஓ** - தம்சேனையும் தமது அருமையான உயிரையும் (என் அம்புக்குத் தப்பி) உடன் கொண்டு போன பின்பு அன்றோ?

18) அருந்தவ மென்றுணை யாள விவன்புவி யாள்வானோ
மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனோ
பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
யிருந்தது நன்று கழிக்குவெ னென்கட னின்றோடே.

அருந்தவம் என் துணை ஆள, இவன் புவி ஆள்வானோ?
மருந்து எனின் அன்று உயிர்; வண் புகழ் கொண்டு பின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதே
இருந்ததும் நன்று கழிக்குவென் என் கடன் இன்றோடே.

என் துணை - எனது நண்பனான இராமபிரான், **அருந்தவம் ஆள** - (வனத்திற் சென்று) செயற்கரிய தவத்தைச் செய்து கொண்டிருக்க, **இவன்** - இந்தப் பரதன், **புவி ஆள்வான்ஓ** - பூமியை அரசாள்வானோ!, **உயிர்** - (எனது) உயிர், **மருந்து எனின்** - (கிடைத்தற்கரிய) தேவாமிருதமோ வென்றால், **அன்று வண்புகழ் கொண்டு** - (இராமனுக்கு உதவியாளனாய்ப் பரதனை எதிர்த்து அதனால் சிறந்த கீர்த்தியைப் பெற்று, **பின் மாயேன்ஓ** - பின்பு இறக்கமாட்டேனோ, **பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாது இருந்தது ஏ நன்று** - (என்னோடு) பொருந்தின சினேகத்தை விரும்பியருளிய இராமபிரானுடன் (நான்) செல்லாமல் (இங்கு) இருந்ததுவே நல்லதாயிற்று, **என் கடன்** - எனது கடமையை, **இன்றோடு ஏ கழிக்குவென்** - இன்றைக்கே செய்து தீர்ப்பேன்.

19) தும்பியு மாவு மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பிய றாரிவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ
வெம்பிய வேட ருளீர்துறை யோடம் விலக்கீரோ
நம்பிமுன் னேயினி நம்முயிர் மாய்வது நன்றன்றோ?

தும்பியும் மாவும் மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பு இயல் தார் இவர் வாள் வலி கங்கை கடந்தன்றோ?
வெம்பிய வேடர் உளீர்! துறை ஓடம் விலக்கீரோ?
நம்பி முன்னே இனி நம் உயிர் மாய்வது நன்று அன்றோ?

தும்பிஉம் - யானைகளும், **மாஉம்** - குதிரைகளும், **மிடைந்த** - நெருங்கிய, **பெரு படை** - பெரிய சேனையினால், **சூழ்வுஅரும்** - சூழப்படுதல் பொருந்திய, **வம்பு இயல் தார் இவர்** - வாசனை பொரந்திய பூமாலையையுடைய இப்பரதனது, **வாள் வலி** - ஆயுதபலம், **கங்கை கடந்து அன்றோ** - இக்கங்கையாற்றைத் தாண்டிய பின்பு அல்லவோ? (உதவும்), **வெம்பிய வேடர் உளீர்** - உக்கிரமான வேடர்களாக உள்ளவர்களே!, **துறை ஓடம் விலக்கீர்ஓ** - நீர்த்துறையிலே (இவர்களுக்கு) ஓடம் விடுதலை ஒழிவீராக (பரதனும் பரதன் சேனையும் நம்மினும் வலியராயினும்), இனி நம்பி முன் ஏ நம் உயிர் மாய்வதுஉம் நன்று அன்றுஓ - இனிமேல் முன்ஏ நம் உயிர் (போரில்) அழிந்து போவதும் நல்லதன்றோ?

20) போன படைத்தலை வீரர் தமக்கிரை போதாவிச்
சேனை கிடக்கிடு தேவர் வரிற்சிலை மாமேகஞ்
சோனை படக்குடர் சூறை படச்சுடர் வாளோடுந்
தானை படத்தனி யானை படத்திரள் சாயேனோ.

போன படைத் தலைவீரர் தமக்கு இரை போதா இச்
சேனை கிடக்கிடு; தேவர் வரின், சிலை மா மேகம்
சோனை படக் குடர் சூறைபடச் சுடர் வாளோடும்
தானை படத் தனி யானை படத் திரள் சாயேனோ?

போன - (நம்முடன்) வந்த, **தலை படைவீரர் தமக்கு** - சிறந்த சேனைவீரர்களுக்கு, **இரை போதா** - ஒருவேளைப் போருக்காயினும் பற்றாத, **இ சேனை** - இந்தப் பரதன் சேனை, **கிடக்கிடு** - இருக்கட்டும், **தேவர் வரின்** - தேவர்களே (திரண்டு எதிர்த்து) வந்தாலும், **சிலை மா மேகம் சோனை பட** - (என்) கை வில்லாகிய காளமேகம் இடைவிடாது அம்பு மழையைப் பொழியவும், **குடர் சூறைபட** - (எதிர்த்த அவர்களது) குடல் அலைபடவும், **சுடர் வாளோடுஉம்** - விளங்குகின்ற ஆயுதங்களுடனே, **தானை பட** - (மற்றைச்) சேனைகள் அழியவும், **தனி யானை பட** - ஒப்பற்ற யானைச்சேனை அழியவும், **திரள் சாயேன்ஓ** - அக்கூட்டத்தை நிலைகுலைக்காமல் இருப்பேனோ?

21) நின்ற கொடைக்கையென் னன்ப னுடுக்க நெடுஞ்சீரை
யன்று கொடுத்தவண் மைந்தர் பலத்தையென் னம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்திடை தூராதோ.

நின்ற கொடைக் கை என் அன்பன் உடுக்க, நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தை, என் அம்பாலே
கொன்று குவித்த நிணம் கொள் பிணக் குவை கொண்டு ஓடித்
துன்று திரைக் கடல், கங்கை மடுத்து இடை தூராதோ?

அன்று - (பட்டாபிஷேகம் செய்ய முயன்ற) அந்நாளில், **நின்ற** - (விரதம் முதலியன முடித்து முடிசூட) நின்ற, **கொடை கை என் அன்பன்** - ஈகைக்குணம் நிறைந்த கையையுடைய என் அன்பிற்குரிய இராமன், **உடுக்க** - (அரையில்) தரிக்கும்படி, **நெடு சீரம்** - பெரிய மரவுரியை, **கொடுத்தவள்** - (அவனுக்குக்) கொடுத்தவளாகிய கைகையியின், **மைந்தர்** - புத்திரரான பரதரது, **பலத்தை** - சேனையை, **என் அம்பால் கொன்று குவித்த** - எனது பாணங்களால் கொன்று (தொகுதியாகக்) குவித்த, **நிணம் கொள் பிணக்குவை** - கொழுப்பு (வெளிப்படுதலை)க் கொண்ட பிணங்களின் குவியலை, **கங்கை** - இந்தக் கங்காநதி, **கொண்டு** - இழுத்துக்கொண்டு, **ஓடி** - விரைந்து சென்று, **துன்று திரைக் கடல் மடுத்து** - செருங்கிய அலைகளையுடைய கடலில் (அவற்றைச்) சேர்த்து நிறைத்து, **இடை தூராதுஓ** - அதனிடத்தைத் தூர்த்துவிடாதோ? (தூர்க்கும் என்றபடி).

22) ஆடு கொடிப்படை சாடி யறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தவென் னாயக னுக்கிவர் நாமாளுங்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ.

"ஆடு கொடிப் படை சாடி, அறத்தவரே ஆள
வேடு கொடுத்தது, பார்" எனும் இப் புகழ் மேவீரோ?
நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர், நாம் ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி, எடுத்தது காணீரோ?

ஆட - அசைகின்ற, **கொடி** - துவசங்களையுடைய, **படை** - (பரதன்) சேனையை, **சாடி** - மோதியழித்து, **அறத்தவர்ஏ ஆள** - தருமசொரூபியான இராமபிரானே அரசாளும்படி, **வேடு பார் கொடுத்தது** - (அப்பிரானுக்கு) வேடர் கூட்டம் இராச்சியத்தைக் கொடுத்தது, **எனும்** - என்ற, **இ புகழ்** - இந்தக் கீர்த்தியை, **மேவீர் ஓ** - அடையமாட்டீர்களோ? (அடைய வேண்டும் என்றபடி), **நாடு** - முறைப்படி (தன்னுடையதான) இராச்சியத்தை, **கொடுத்த** - (மனமகிழ்ந்து) கொடுத்துவிட்ட, **என் நாயகனுக்கு** - எனது தலைவனாகிய ஸ்ரீராமனுக்கு, **இவர்** - இப்பரதர், **நாம் ஆளும் காடு கொடுக்கிலர் ஆகி** - நாம் வசிக்கின்ற காட்டையுங் கொடுக்கச் சம்மதப்படாதவராய், **எடுத்தது** - (போர்க்குப்) படையெடுத்து வந்ததை, **காணீர் ஓ** - பார்த்தீர்களா?

23) மாமுனி வர்க்குற வாகி வனத்திடை யேவாழுங்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாதே
யேமுனை யுற்றிடி லேழு கடற்படை யென்றாலு
மாமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ.

மா முனிவர்க்கு உறவு ஆகி, வனத்திடையே வாழும்
கோ முனியத் தகும் என்று, மனத்து இறை கொள்ளாதே,
ஏ முனை உற்றிடில், ஏழு கடல் படை என்றாலும்,
ஆ முனையின் சிறு கூழ் என இப்பொழுது ஆகாதோ?

மா முனிவர்க்கு - சிறந்த முனிவர்களுக்கு, **உறவு ஆகி** - சுற்றத்தவனாகி, **வனத்திடை ஏ வாழும்** - காட்டிலேயே வசிக்கின்ற, **கோ** - (என்) தலைவனான இராமன், **முனியத் தகும்** - (தன் தம்பியான பரதனை) நான் எதிர்த்தால் என்னைக் கோபிக்கக்கூடும், **என்று மனத்து இறை கொள்ளாது** - என்று மனத்தில் சிறிதும் எண்ணாமல், **முனை உற்று** - போர் செய்தலையடைந்து, **ஏஇடில்** - நான் அம்புகளை எய்தால், **ஏழு கடல் படை என்றால்உம்** - (எதிர்த்து நிற்பது) ஏழுகடல் போன்ற பெருஞ்சேனையேயானாலும் (அது), **இப்பொழுது** - இந்தக்கணம், **ஆ முனையின் சிறு கூழ் என** - பசு (மேய) முனைந்தால் அதன்முன் சிறிய இளம்பயிர் (அழிதல்) போல, **ஆகாதுஓ** - அழிவடையாதோ?

சுமந்திரன் பரதனிடம் குகன் சொல்லல் (24 - 26)

24) என்பன சொல்லி யிரும்பன மேனிய ரேனோர்முன்
வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்
கன்பனு நின்றன னின்றது கண்டரி யேறன்ன
முன்பனில் வந்து மொழிந்தனன் மூரிய தேர்வல்லான்.

என்பன சொல்லி, இரும்பு அன மேனியர் ஏனோர் முன்
வன் பணை வில்லினன், மல் உயர் தோளினன், வாள் வீரற்கு
அன்பனும், நின்றனன்; நின்றது கண்டு, அரியேறு அன்ன
முன்பனில் வந்து, மொழிந்தனன் மூரிய தேர்வல்லான்.

வன் பணை வில்லினன் - வலிய பெரிய வில்லையுடையவனும், **மல் உயர் தோளினன்** - மற்போரிற் சிறந்த தோள்களையுடையவனும், **வாள் வீரற்கு அன்பன்உம்** - வாட்போரிற் சிறந்த வீரனான இராமனுக்கு அன்பு பூண்டவனுமாகிய குகனும், **இரும்பு அன மேனியர்**

ஏனோர் முன் - இரும்பையொத்த (மிக வலிய) உடம்பையுடையவரான மற்றை வேடர்களின் முன்னிலையில், **என்பன சொல்லி** - என்ற இவ்வார்த்தைகளைச் சொல்லி, **நின்றனன்** - (கங்கையின் தென்கரையில்) நின்றான், **நின்றது கண்டு** - (அவன்) நின்றதனைப் பார்த்து, **மூரிய தேர்வல்லான்** - வலிமையுடைய தேரைச் செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன், **அரியேறு அன்ன முன்பனில் வந்து** - ஆண் சிங்கத்தையொத்த வலிமையுடைய பரதனிடத்தில் வந்து, **மொழிந்தனன்** - சில சொல்பவனானான். - அதனை மேல் இரண்டு கவிதைகளிற் காண்க.

குகனைப் பற்றிப் பரதனுக்குச் சுமந்திரன் விளக்குதல்

25) கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயா
னுங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்.

''கங்கை இரு கரை உடையான், கணக்கு இறந்த நாவாயான்,
உங்கள் குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன், உயர் தோளான்;
வெம் கரியின் ஏறு அனையான், வில் பிடித்த வேலையினான்
கொங்கு அலரும் நறும் தண் தார்க் குகன் என்னும் குறி உடையான்''

கங்கை இரு கரை உடையான் - கங்காநதியின் இரண்டு கரைகளையும் (தனக்குச் சொந்தமாக) உடையவனும், **கணக்கு இறந்த நாவாயான்** - அளவில்லாத படகுகளையுடையவனும், **உங்கள் குலத்தனி நாதற்கு உயிர்த் துணைவன்** - உங்கள் குலத்தில் திருவவதரித்த ஒப்பற்ற தலைவனான இராமபிரானுக்குப் பிராண சினேகிதனும், **உயர் தோளான்** - உயர்ந்த தேள்களையுடையவனும், **வெம் கரியின் ஏறு அனையான்** - (மதத்தால்) வெவ்விய ஆண் யானையை ஒத்தவனும், **வில் பிடித்த வேலையினான்** - வில்லைத் தரித்த (சேனா) சமுத்திரத்தையுடையவனும், **கொங்கு அலரும்** - தேன் சொரிகின்ற, **நறு** - பரிமளம் வீசுகின்ற, **தண்** - குளிர்ந்த, **தார்** - மாலையையுடைய, **குகன் என்னும் குறி உடையான்** - குகன் என்னும் பெயரையுடையவனுமாகிய வேடன், - நிற்காணுமுள்ளத்தான் .....நின்றனன் என அடுத்த கவியுடன் முடிபு காண்க.

26) கற்காணுந் திண்மையான் கரைகாணாக் காதலா
னற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்.

''கல் காணும் திண்மையான், கரை காணாக் காதலான்,
அல் காணில் கண்டனைய அழகு அமைந்த மேனியான்,
மல் காணும் திரு நெடுந்தோள் மழை காணும் மணி நிறத்தாய்!
நின் காணும் உள்ளத்தான், நெறி எதிர் நின்றனன்'' என்றான்.

மல் காணும் - வலிமையை எல்லை கண்ட (மிக வலிய), **திரு நெடு தோள்** - அழகிய பெரிய புயங்களையும், **மழை காணும்** - நீலமேகத்தைக் கண்டாலொத்த, **மணி நிறத்தாய்** - அழகிய நிறத்தையுமுடையவனே! **கல் காணும் திண்மையான்** - மலையைக் கண்டாலொத்த வலிமையையுடையவனும், **கரை காணாக் காதலான்** - (இராமன் பக்கல்) எல்லை காணாத அன்புடையவனும், **காணில்** - (வடிவத்தை) நோக்குமிடத்து, **அல் கண்டு அனைய** - இரவைக் கண்டாற் போன்ற (மிகக் கரிய), **அழகு அமைந்த மேனியான்** - அழகு பொருந்திய உடம்பையுடையவனுமாகிய அவன், **நெறி எதிர் நின்றனன்** - வழியெதிரே வந்து நின்றுள்ளான், **நின் காணும் உள்ளத்தான்** - உன்னைப் பார்க்கவேண்டும் என்னும் மனக்கருத்துடையான் (போலும்), **என்றான்** - என்று சொன்னான் (சுமந்திரன்).

குகனைக் காண வடகரைக்கு பரதன் விரைதல்

27) தன்முன்னே யவன்றன்மை தன்றுணைவன் முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனே
லென்முன்னே யவற்காண்பென் யானேசென் றெனவெழுந்தான்.

தன் முன்னே, அவன் தன்மை தன் துணைவன் முந்து உரைத்த
சொல் முன்னே உவக்கின்ற துரிசு இலாத் திரு மனத்தான்,
'மன் முன்னே தழீஇக் கொண்ட மனக்கு இனிய துணைவனேல்,
என் முன்னே; அவற் காண்பென் யானே சென்று' என எழுந்தான்.

தன் முன்னே - எதிரில், **அவன் தன்மை** - அந்தக் குகனது தன்மையை, **தந்தை துணை** - (தன்) தந்தை நண்பனான சுமந்திரன், **முந்துஉரைத்த** - முன்பு சொன்ன, **சொல்முன்னே** - சொல்லைக் கேட்டலிலும் விரைவாக (சொல்லைக் கேட்டவுடனே என்றபடி), **உவக்கின்ற** - மகிழ்கின்ற, **துரிசு இலா திருமனத்தான்** - களங்கமில்லாத சிறந்த மனத்தையுடைய பரதன், **மன்** - (நமது தலைவனான) இராமன், **முன்னே தழீஇக் கொண்ட** - முன்னமே சினேகிதனானால், **என் மன்னே** - என்னை (அக்குகன் வந்து) காண்பதற்கு முன்னமே, **யான் ஏ சென்று அவன் காண்பென்** - நானே போய் அவனைப் பார்ப்பேன், **என்** - என்று சொல்லி, **எழுந்தான்** - புறப்பட்டான்.

பரதன் நிலை கண்ட குகன் திடுக்கிடுதல்

28) என்றெழுந்து தம்பியொடு மெழுகின்ற காதலொடுங்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினான் றிருமேனி நிலையுணர்ந்தான்
றுன்றுகரு நறுங்குஞ்சி யெயினர்கோன் றுண்ணென்றான்.

என்று எழுந்து தம்பியொடும் எழுகின்ற காதலொடும்
குன்று எழுந்து சென்றது எனக் குளிர் கங்கைக்கரை குறுகி
நின்றவனை நோக்கினான், திருமேனி நிலை உணர்ந்தான்,
துன்று கரு நறுங்குஞ்சி எயினர்கோன் துண்ணென்றான்.

என்று எழுந்து தம்பியொடுஉம் - சத்துருக்கனனோடும், **எழுகின்ற காதலொடுஉம்** - மேன்மேலுண்டாகின்ற அன்பினோடும், **குன்று** - மலையானது, **எழுந்து சென்றது என** - எழுந்து நடந்தாற்போல, **குளிர் கங்கைக் கரை குறுகி** - குளிர்ச்சி பொருந்திய கங்கா தீரத்தையடைந்து, **நின்றவனை** - வந்து நின்ற பரதனை, **துன்று** - செருங்கிய, **கரு** - கருமையாகிய, **நறு குஞ்சி** - நறுமணமுள்ள தலைமயிரையுடைய, **எயினர்கோன்** - குகப்பெருமான், **நோக்கினான்** - பார்த்து, **திருமேனி நிலை உணர்ந்தான்** - (அவனது) உடம்பினிலையையும் நோக்கி, **துண்ணென்றான்** - திடுக்கிட்டான்.

29) வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை
நல் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை
கல் கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்,
வில் கையினின்று இடைவீழ, விம்முற்று நின்றொழிந்தான்.

வற்கலையின் உடையானை - மரவுரியை ஆடையாக உடுத்தவனும், **மாசு அடைந்த மெய்யானை** - புழுதிபடிந்த உடம்பையுடையவனும், **நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை** - அழகிய கலைகளில்லாத சந்திரன்போல ஒளியிழந்த முகத்தை

உடையவனும், **கல் கனியக் கனிகின்ற துயரானை** - (காண்கின்ற) கல்லும் குழைந்துருகும்படி மிகுந்த துன்பத்தையுடையவனுமாகிய பரதனை, **கண்ணுற்றான்** - பார்த்து (குகன்), **கையினின்று வில் இடைவீழ** - (தன்) கையினின்று வில் (நழுவிக்) கீழே விழும்படி, **விம்முற்று நின்று ஒழிந்தான்** - கலங்கிச் செயலற்று நின்றிட்டான்.

குகனது மனத்தெளிவும் இராமன் மீது கொண்ட பற்றும்

30) நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
றம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
றுன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றா
னெம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்.

''நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்; அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்; தவவேடம் தலைநின்றான்;
துன்பம் ஒரு முடிவு இல்லை; திசைநோக்கித் தொழுகின்றான்;
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?'' என்றான்.

நம்பி உம் - ஆடவரிற் சிறந்த இப்பரதனும், **என் நாயகனை ஒக்கின்றான்** - எனது தலைவனாகிய இராமபிரானை ஒத்திருக்கின்றான், **அயல் நின்றான்உம்** - அருகில் நின்றவனும் (சத்துருக்கனனும்), **தம்பியையும் ஒக்கின்றான்** - (இராமன்) தம்பியான இலக்குமணனை ஒத்திருக்கின்றான; **தவம் வேடம் தலைநின்றான்** - (இந்தப்பரதன்) தவத்துக்குரிய வேடத்தை மேற்கொண்டுள்ளான், **துன்பம் ஒரு முடிவு இல்லை** - (இவன் படுகிற) துன்பத்துக்கோ ஓரெல்லையில்லை, **திசை நோக்கித் தொழுகின்றான்** - (இராமன் சென்ற தென்) திசையை நோக்கி வணங்குகின்றான், **எம்பெருமான் பின் பிறந்தார் பிழைப்பு இழைப்பர் ஓ** - இராமன் தம்பியர் பிழை செய்வாரோ? (செய்யார்), என்றான் - என்று கருதினான் (குகன்).

குகனும் தனியே வடகரை அடைதல்

31) உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாங்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ணெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான்.

''உண்டு இடுக்கண் ஒன்று; உடையான், உலையாத அன்புடையான்
கொண்ட தவவேடமே கொண்டிருந்தான்; குறிப்பெல்லாம்
கண்டு உணர்ந்து பெயர்கின்றேன்; காமின்கள் நெறி'' என்னாத்
தண் துறை ஓர் நாவாயில் ஒருதனியே தான் வந்தான்.

உண்டு இடுக்கண் ஒன்று உடையான் - உளதாகிய ஒரு துன்பத்தையுடையவனும், **உலையாத அன்பு உடையான்** - (இராமபிரானிடத்து) நீங்காத அன்புடையவனும், **கொண்ட தவ வேடம்ஏ கொண்டிருந்தான்** - (அவ்விராமபிரான் தரித்துக் கொண்டுள்ள தவவேஷத்தையே (தானுங்) கொண்டுள்ளவனுமாகிய இப்பரதனது, **குறிப்பு எல்லாம்** - மனக்கருத்து முழுவதையும், **கண்டு உணர்ந்து பெயர்கின்றேன்** - (அருகிற் சென்று அவனைப்) பார்த்து அறிந்து மீண்டு வருகின்றேன், **நெறி காமின்கள்** - (நீங்கள் அது வரையில்) வழியைப் பாதுகாத்திருங்கள், **என்னா** - என்று (தன் சேனை வீரரை நோக்கிச்) சொல்லி, **தண்துறை** - குளிர்நத கங்கைத் துறையில், **ஓர் நாவாயில் ஒரு தனியே தான் வந்தான்** - ஒரு தோணியில் (ஏறிக்கொண்டு) வேறு துணையில்லாமல் தன்னந் தனியனாய்க் குகன் (பரதனிடம்) வந்தான்.

பரதனும் குகனும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவுதல்

32) வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
வந்தணனுந் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
றந்தையினுங் களிகூரத் தழுவினான் தகவுடையோர்
சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான்.

வந்து, எதிரே தொழுதானை வணங்கினான்; மலர் இருந்த
அந்தணனும் தனை வணங்குமவனும், அவனடி வீழ்ந்தான்;
தந்தையினும் களி கூரத் தழுவினான், தகவுடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.

(தனியனாய் ஓடத்தின் மூலமாகக் கங்கையின் வடகரை சேர்ந்த குகன்) **எதிர் வந்து** - எதிர் நின்று, **தொழுதானை** - (இராமனைத் திசைநோக்கித்) தொழுதவண்ணமாக இருக்கின்ற பரதனை, **வணங்கினான்** - நமஸ்கரித்தான் (அவ்வளவில்), **தகவு உடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்** - பெருமைக் குணத்தையுடையவர்களது மனத்திலும், தலையின் மேலுஞ் சிறப்பாகத் தங்குகின்ற பெரும் புகழையுடையவனாகிய, **மலர் இருந்த அந்தணன்உம் தலைவணங்குமவன்உம்** - (திருமாலின் நாபித்) தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற அழகிய அருளையுடைய பிரமனுந் தன்னை வணங்கத்தக்க பரதனும், **அவன் அடி வீழ்ந்தான்** - அவனது (தனது) பாதங்களில் விழுந்து நமஸ்கரித்த குகனை, **தந்தையினும் களிகூரத் தழுவினான்** - (மைந்தனைக் கண்டபொழுது) தந்தைக்கு உள்ள களிப்பிலும் தன் களிப்பு மிக அணைத்துக் கொண்டான்.

குகனின் வினாவும் பரதனின் விடையும்

33) தழுவின புளிஞர் வேந்தன் றாமரைச் செங்க ணானை
யெழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுல களித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வா னென்றான்.

தழுவின புளிஞர் வேந்தன் தாமரைச் செங்கணானை
'எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியது என்னை?' என்ன,
'முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர் முறையில் நின்றும்
வழுவினன், அதனை நீக்க மன்னனைக் கொணர்வான்' என்றான்.

தழுவின - (அங்ஙனம் பரதனால்) தழுவப்பட்ட, **புளிஞர் வேந்தன்** - வேடர்க்கரசனான குகன், **தாமரைச் செம் கணானை** - செந்தாமரைமலர்போலும் திருக்கண்களையுடைய பரதனை (நோக்கி), **எழுவினும் உயர்ந்த தோளாய்** - (திரண்ட) கல்தூணிலுஞ் சிறந்த தோள்களையுடையவனே! **எய்தியது என்னை** - (இங்கு நீ) வந்தது யாது காரணத்தால்? **என்ன** - என்று கேட்க, (அதற்குப் பரதன்) **முழுது உலகு அளித்த தந்தை** - உலக முழுவதையும் அரசாண்ட (எங்கள்) தந்தையாகிய தசரதச் சக்கரவர்த்தி, **முந்தையோர் முறையினின்றும் வழுவினன்** - முன்புள்ள அரசரது நீதியினின்றும் தவறிவிட்டான், **அதனை நீக்க** - அவ்வநீதியை நீக்கும் பொருட்டு, **மன்னனைக் கொணர்வான்** - இராமபிரானை அழைத்துக்கொண்டு போவதற்கு (வந்தேன்), **என்றான்** - என்று சொன்னான்.

குகன் பரதனை வணங்கிப் பாராட்டுதல்

34) கேட்டனன் கிராதர் வேந்தன் கிளர்ந்தெழு முயிரனாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான் விம்மின னுவகை வீங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தன் புகல லுற்றான்.

கேட்டனன் கிராதர் வேந்தன்; கிளர்ந்து எழும் உயிரன் ஆகி,
மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்; விம்மினன், உவகை வீங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய் இல் உள்ளத்தன் புகலலுற்றான்.

பொய் இல் உள்ளத்தன் - பொய்மையில்லாத கருத்தையுடையவனாகிய, **கிராதர் வேந்தன்** - வேடர் தலைவனாகிய குகன், **கேட்டனன்** - (அவ்வார்த்தையைக்) கேட்டு, **கிளர்ந்து எழும் உயிரன் ஆகி** - மிகுதியாகத் தோன்றுகின்ற பெருமூச்சையுடையவனாய், **உவகை வீங்க** - களிப்பு மிக, **விம்மினன்** - உடம்பு பூரித்து, **மீட்டுஉம் மண் அதனில் வீழ்ந்தான்** - மறுபடியும்

தரையில் வீழ்ந்து, **தீட்டு அரு மேனி மைந்தன் சே அடிக் கமலப் பூவில் பூட்டிய கையன்** - சித்திரத்தி லெழுதுதற்கும் அருமையான (மிக அழகிய) திருமேனியையுடைய பரதனது சிவந்த திருவடித் தாமரை மலர்களிற் சேர்த்தின கைகளையுடையவனாய் (பரதனைச் சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு), **புகலலுற்றான்** - (சில) கூறத் தொடங்கினான். அவற்றை மேலிரண்டு கவிகளிற் காண்க.

பரதன் பற்றிய குகனின் வியப்பு

35) தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து, புகழினோய் தன்மை கண்டா
லாயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா.

தாய் உரை கொண்டு, தாதை உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ? தெரியின் அம்மா.

புகழினோய் - கீர்த்தியுடையவனே! **தாய் உரைகொண்டு** - உனது தாயாகிய கைகேயியின் வார்த்தையைக் கேட்டு, **தாதை உதவிய** - (உனது) தந்தையாகிய தசரதன் (உனக்குக்) கொடுத்த, **தரணிதன்னை** - இராச்சியத்தை, **தீவினை என்ன நீத்து** - கொடுந் தொழிலை வடுவதுபோல விட்டு, **சிந்தனை முகத்தில் தேக்கி** - கவலையை முகத்தில் நிறைத்து, **போயினை** - (இங்கு) வந்தாய், **என்ற போழ்து** - என்ற பொழுதில் (என்ற காரணத்தால் என்றபடி), **தன்மை கண்டால்** - (உனது) தன்மையைப் பார்த்தால், **தெரியின்** - ஆலோசிக்குமிடத்து, **ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ** - ஆயிரம் ஸ்ரீ ராமர் உளரானாலும் உன்னொருத்தனுக்கு ஒப்பாவரோ? **அம்மா** - வியப்பிடைச் சொல்.

36) என்புகழ் கின்ற தேழை யெயினனே னிரவி யென்பான்
றன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோன்
மன்புகழ் பெருமை நுங்கண் மரபினோர் புகழ்க ளெல்லா
முன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்.

என் புகழ்கின்றது ஏழை எயினனேன்? இரவியென்பான்
தன் புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்,
மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்களெல்லாம்
உன் புகழ் ஆக்கிக்கொண்டாய் உயர்குணத்து உரவுத்தோளாய்!

உயர் குணத்து உரவுத் தோளாய் - உத்தமமான குணங்களையும் வலிமையுடைய தோள்களையுமுடையவனே! **ஏழை எயினனேன்** - அறிவில்லாத வேடனாகிய யான், **புகழ்கின்றது என்** - (உன்னைப்) புகழ்வது எவ்வாறு? **இரவி என்பான்** - சூரியனென்று சிறப்பித்துக் கூறப்படுபவன், **தன் புகழ்க்கற்றை** - தனது கிரகண சமூகத்தால், **மற்றை ஒளிகளைத் தவிர்க்கும்ஆபோல்** - மற்றை (ச் சந்திரன் முதலியோரது) ஒளிகளை அடக்கும் விதம்போல, **மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்** - அரசர்கள் கொண்டாடும் மகிமையையுடைய உங்கள் குலத்தாரது கீர்த்திகளையெல்லாம், **உன் புகழ் ஆக்கிக்கொண்டாய்** - உனது கீர்த்திக்குள் அடங்குமாறு செய்துகொண்டாய்.

பரதனிடம் குகன் கொண்ட பேரன்பு

37) எனவிவை யன்ன மாற்ற மியைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவு வேற்கைப் புளிஞர்கோன் பொருவில் காத
லனையவற் கமைவிற் செய்தா னாரவற கன்பி லாதார்
நினைவருங் குணங்கொ டன்றோ விராமன்மே னிமிர்ந்த காதல்.

என இவை அன்ன மாற்றம் இயைவன பலவும் கூறிப்
புனை கழல் புலவு வேல் கைப் புளிஞர்கோன் பொரு இல் காதல்
அனையவற்கு அமைவில் செய்தான்; ஆர் அவற்கு அன்பு இலாதார்?
நினைவு அரும் குணம் கொடு அன்றோ இராமன்மேல் நிமிர்ந்த காதல்.

புனை கழல் - அணிந்த வீரக்கழலையும், **புலவுவேல் கை** - புலால் நாற்றம் நாறுகின்ற வேலாயுதத்தைத் தரித்த கையையுமுடைய, **புளிஞர்கோன்** - வேடர் தலைவனான குகன், **என இவை அன்ன** - என்ற இவ்வார்த்தைகள் போன்ற, **இயைவன மாற்றம் பலஉம்** - பொருத்தமுள்ள வார்த்தைகள் பலவற்றையும், **கூறி** - சொல்லி, **அனையவற்கு** - அப்பரதனிடத்தில், **பொருவு இல் காதல்** - ஒப்பில்லாத அன்பினை, **அமைவில் செய்தான்** - தகுதியாகச் செய்தான், **அவற்கு அன்பு இலாதார் ஆர்** - அப்பரதனிடத்தில் அன்பு வைக்காதவர் யார் உளர்? (எவருமில்லை யென்றபடி) **நினைவு அருங் குணம்கொடு அன்றோ** - மனத்தினாற் சிந்தித்தற்கும் முடியாத நற்குணங்கள் காரணமாகவன்றோ, **இராமன்மேல் காதல் நிமிர்ந்த(து)** - இராமபிரானிடத்து (முன்பு அக்குகனுக்கு) அன்புமிக்கது.

இராமன் தங்கிய இடம் பற்றி பரதன் குகனிடம் வினாவுதல்

38) அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ண றென்றிசைச் செங்கை கூப்பி
யெவ்வழி யுறைந்தா னம்மு னென்றலு மெயினர் வேந்த
னிவ்வழி வீர யானே காட்டுவ லெழுக வென்றான்.

அவ்வழி அவனை நோக்கி, அருள்தரு வாரி அன்ன
செவ்வழி உள்ளத்து அண்ணல் தென்திசைச் செங்கை கூப்பி,
'எவ்வழி உறைந்தான் நம் முன்?' என்றலும், எயினர் வேந்தன்,
'இவ்வழி, வீர! யானே காட்டுவல்; எழுக!' என்றான்.

அருள்தரு வாரி அன்ன - கருணையைத் தருகின்ற கடல் போன்ற, **செவ் வழி உள்ளத்து அண்ணல்** - நல்வழியிற் செல்லும் மனத்தையுடைய பரதன், **அ வழி** - அப்பொழுது (அவ்விடத்து), **அவனை நோக்கி** - அக்குகனைப் பார்த்து, **தென் திசைச் செம் கை கூப்பி** - தெற்குத் திக்கை நோக்கி(த் தன்) சிவந்த கைகளைக் கூப்பி (அஞ்சலி செய்து), **நம்முன்** - நமது தமையனான ஸ்ரீ ராமன், **எ வழி உறைந்தான்** - எவ்விடத்தில் (இங்கு முன்பு) தங்கியிருந்தான்? **என்றலும்** - என்று வினாவியவுடன், **எயினர் வேந்தன்** - வேடர் தலைவனான குகன், **வீர** - வீரனே! **யான் ஏ காட்டுவல்** - நானே (அவ்விடத்தைக்) காண்பிப்பேன், **எழுக** - (என்னுடன்) புறப்பட்டு வருவாயாக, **இ வழி** - (அவன் தங்கினது) இந்த இடமாகும், **என்றான்** - என்று சொல்லிச் சுட்டிக் காட்டினான்.

இராமன் தங்கிய இடத்தைக் கண்ட பரதனின் நிலை

39) காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை மண்ணுநீ ராட்டுங் கண்ணான்.

கார் எனக் கடிது சென்றான்; கல்லிடைப் படுத்த புல்லின்,
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்;
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான்; பருவரல் பரவை புக்கான்
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்.

(என்றவுடனே பரதன்), **கார் என கடிது சென்றான்** - மேகம் போல விரைவாக (க் குகனுடன்) சென்று (அவனாற் சுட்டிக் காட்டப்பட்ட), **வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய** - நீண்ட வில்லையேந்திய பெரிய கையையுடைய வரையாதருளுந் தன்மையைக் கொண்ட ஸ்ரீ ராமபிரான்

(முன்பு) தங்கிய, **கல்லிடைப் படுத்த புல்லின் பள்ளி** - கல்லினிடையே பரப்பிய புல்லினாலாகிய படுக்கையை, **கண்டான்** - பார்த்து (வருத்தம் பொறுக்கமாட்டாமல்), **பதைத்து பார் மிசை வீழ்ந்தான்** - துடித்துத் தரையிலே விழுந்து, **வார் மணிப் புனலால் மண்ணை மண்ணும் நீர் ஆட்டும் கண்ணான்** - பெருகுகிற முத்துப் போன்ற கண்ணீரினால் தரையைச் சுத்த ஜலஸ்நானஞ் செய்விக்கின்ற கண்களையுடையவனாய், **பருவரற் பரவை புக்கான்** - சோகக் கடலில் மூழ்கினான்.

40) இயன்றதென் பொருட்டி னாலிவ் விடருனக் கென்ற போழ்து
மயின்றனை கிழங்குங் காயு மமுதென வரிய புல்லிற்
றுயின்றனை யெனவு மாவி துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ் செல்வமுங் கொள்வென் யானே!

இயன்றது என்பொருட்டினால் இவ் இடர் உனக்கு என்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும் அமுது என, அரிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி துறந்திலென்; சுடரும் காசு
குயின்று உயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வென் யானே.

என் பொருட்டினால் - (கைகேயியின் மகனான) எனது நிமித்தமாக, **உனக்கு இவ் இடர்** - உனக்கு இத்தன்மையான துன்பம் (வனவாசம்), **இயன்றது** - நேர்ந்தது, **என்ற போழ்துஉம்** - என்று (முன் கைகேயியினால்) அறிகின்ற அப்பொழுதும், **கிழங்குஉம் காய்உம்** - கிழங்குகளையும் காய்களையும், **அமிர்து என அயின்றனை** - அமிர்தம் போலக் கருதிப் புசித்தாய், **வலிய புல்லில்** - உறுத்துந் தன்மையுள்ள புல்லிலே, **துயின்றனை** - நித்திரை செய்தாய், **என உம்** - என்று அறிந்த இப்பொழுதும், **ஆவி துறந்திலென்** - உயிர் நீங்கினேனில்லை (ஆதலால்), **சுடரும் காசு குயின்று** - ஒளிர்கின்ற இரத்தினங்கள் பதித்து, **உயர்** - விலையுயர்ந்த, **மகுடம்** - கிரீடத்தை, **சூடும்** - தரித்தலாகிய, **செல்வம் உம்** - சிறப்பையும், **கொள்வென்** - (ஏற்றுக்கொள்ள) அமைவேன் போலும், (என்று கூறி), - பின்னருஞ் சொல்லுவான் என அடுத்த கவியோடு தொடரும்.

இலக்குவனின் செயல்கள் பற்றி குகனிடம் பரதன் வினாவுதல்

41) தூண்டர நிவந்த தோளான் பின்னருஞ் சொல்லுவானந்
நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்த
தியாண்டென வினிது கேட்டா னெயினர்கோ னிதனைச் சொன்னான்.

தூண் தர நிவந்த தோளான் பின்னரும் சொல்லுவான், 'அந்
நீண்டவன் துயின்ற சூழல் இது எனில், நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே போந்தவன், பொழுது நீத்தது
யாண்டு?' என, இனிது கேட்டான்; எயினர்கோன் இதனைச் சொன்னான்.

தூண்தர - தூணையொப்ப, **நிவந்த** - சிறந்துள்ள, **தோளான்** - தோள்களையுடைய பரதன், **பின்னர்உம் சொல்லுவான்** - மீண்டும் (குகனை நோக்கிக்) கூறுவான், **அ நீண்டவன் துயின்ற சூழல்** - பெரியவனாகிய அவ்விராமன் நித்திரை செய்த இடம், **இது எனின்** - இதுவானால், **நிமிர்ந்த நேயம் பூண்டவன்** - (அவனிடத்து) மிக்க அன்பைக் கொண்டவனாய், **பின்னே தொடர்ந்து போந்தவன்** - (அவனை வனவாசத்திலும்) பின் தொடர்ந்து வந்தவனான இலக்குமணன், **பொழுது நீத்தது** - இராப்பொழுதைக் கழித்தது, **யாண்டு** - எவ்விடத்தில், **என** - என்று, **இனிது கேட்டான்** - இனிமையாக (அன்போடு இன்சொற்களால்) வினவினான், (அதற்கு) **எயினர்கோன் இதனைச் சொன்னான்** - வேடர் தலைவனான குகன் இவ்வுத்தரத்தைக் கூறினான். அதனை மேற்கவியிற் கூறுகின்றார்.

இலக்குவன் பற்றிய விபரிப்பு

42) அல்லையாண் டமைந்த மேனி யழகனும் மவளுஞ் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சொரியக் கங்கு
லெல்லைகாண் பளவு நின்றா னிமைப்பில னயன மென்றான்.

'அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் வீரன்,
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பளவும் நின்றான்; இமைப்பு இலன் நயனம்' என்றான்.

கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய் - மலையையொத்து உயர்ந்துள்ள தோள்களை உடையவனே! **அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன் உம்** - இருளையொத்துப் பொருந்திய (கரிய திருமேனியையுடைய) அழகு நிறைந்த இராமபிரானும், **அவள் உம்** - அவன் மனைவியான சீதாதேவியும், **துஞ்ச** - நித்திரை செய்ய, **வீரன்** - இலக்குமணன், **வில்லை ஊன்றிய கையோடு உம்** - வில்லைத் தரித்த கையுடனும், **வெய்து உயிர்ப்போடுஉம்** - வெம்மையுடையதான பெருமூச்சுடனும், **கண்கள் நீர் சொரியக்** - கண்கள் கண்ணீரைச் சொரிய, **கங்குல் எல்லை காண்பு அளவுஉம்** - இராப்பொழுதின் முடிவெல்லையைக் காண்கின்ற வரையிலும (பொழுது விடியுமளவும்), **நயனம் இமைப்பிலன்** - கண்மூடாதவனாய் (சிறிதும் துயில் கொள்ளாமல்), **நின்றான்** - (காவல் செய்து) நின்றான், **என்றான்** - என்று (பரதனுக்குக்) கூறினான்.

பரதனின் துயர் உரை

43) என்பதைக் கேட்ட மைந்த னிராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில் யானென்று முடிவிலாத
துன்பத்துக் கேது வானே னவனது துடைக்க நின்றா
னன்பத்துக் கெல்லை யுண்டோ வழகிதென் னடிமை என்றான்.

என்பதைக் கேட்ட மைந்தன், "'இராமனுக்கு இளையார்' என்று
முன்பு ஒத்த தோற்றத்தேமில், யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்; அவன் அது துடைக்க நின்றான்;
அன்பத்துக்கு எல்லை உண்டோ? அழகிது என் அடிமை" என்றான்.

என்பதை - என்று (குகன்) சொன்னதை, **கேட்ட மைந்தன்** - வீரனான பரதன், **இராமனுக்கு இளையார் என்று** - இராமனுக்குத் தம்பிமாரென்று, **முன்பு ஒத்த** - முன்னம் (பிறப்பில்) ஒத்துள்ள, **தோற்றத்தேமில்** - உற்பத்தியையுடைய எங்களுள், **யான்** - நான், **என்றுஉம் முடிவு இலாத துன்பத்துக்கு** - எப்பொழுதும் முடிதலில்லாத (இராமனது) துன்பத்துக்கு, **ஏது ஆனேன்** - காரணமாயினேன், **அவன்** - அவ்விலக்குமணன், **அது துடைக்க நின்றான்** - அத்துன்பத்தை நீக்கத் துணை நின்றான், **அன்பத்துக்கு எல்லை உண்டுஏ** - அன்புக்கு ஒரு வரையறை உள்ளதோ? (இல்லையென்றபடி), **என் அடிமை அழகிது** - என் அடிமைத்திறன் அழகுள்ளதாயிருந்தது! **என்றான்** - என்று கூறினான்.

****

07. தேம்பாவணி

காட்சிப்படலம் (1 - 34 செய்யுள்கள்)

தேம்பாவணி, வீரமாமுனிவரால் (1680 - 1742) இயற்றப்பட்ட தமிழ்க்காவியமாகும். இது மூன்று காண்டங்களையும் ஒரு காண்டத்திற்கு 12 படலங்கள் வீதம் 36 படலங்களையும் மொத்தமாக 3615 விருத்தப் பாக்களையும் கொண்டுள்ளது. 1726இல் இயற்றப்பட்ட இக்காப்பியம், சூசை (வளன்) யின் வரலாற்றைக் கூறுகின்றது. முதலாவது காண்டத்தின் பதினொராவது படலமாக, காட்சிப் படலம் உள்ளது. இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பினை அறிந்த இடையர்களும், வானநூல் வல்லுநர்களான மூவரசர்களும் அத்திருக்குழந்தையை நேரில் கண்டு வணங்கிய செய்திகள் இப்படலத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

இப்படலத்தில் குறிக்கப்பட்டுள்ள 1 - 34 வரையிலான செய்யுள்கள் மட்டுமே பாடப்பரப்பில் உள்ளடக்கப் பட்டுள்ளன. இவை திருக்குழந்தையை நேரில் கண்டு வணங்கிய செய்தியைக் கூறுவன.

இடையர் வந்து குழந்தையை வணங்குதல்

01) இன்ன வாயில் இன்ன தன்மை இன்ன யாவும் ஆகையில்
பொன்ன நாடு துன்னும் உம்பீர் பொன்னு ருக்கொடு ஆங்குபோல்
மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேத நாத னைத்தொழ,
உன்ன லாத கோவர் இன்பம் உண்ண உற்று அழைத்தனர்.

குகையாகிய இந்த இடத்தில் இந்த விதமாக இலையெல்லாம் நடக்கும்போது, விண்ணுலகத்தில் வாழும் விண்ணவர்கள் பொன்தன்மையான வடிவம்கொண்டு அந்த இடத்தைச் சென்று சேர்ந்து, இடையர் எண்ணுவதற்கு அருமையான மகிழ்ச்சி அடையுமாறு மின்னல் போன்ற கன்னித்தாய் பெற்ற மறைமுதல்வனாகிய குழந்தையைத் தொழுமாறு அழைத்தனர்.

இன்ன வாயில் - குகையாகிய இந்த இடத்தில், **பொன்ன நாடு** - விண்ணுலகம், **துன்னும்** - வாழும், **உம்பர்** - விண்ணவர், **நேரும்** - ஒப்பாகும், **உள்ளலாத** - நினைத்தற்கு அரிய, **கோவர்** - இடையர்.

02) கொழுந்து உறும்கு ளிர்ந்த முல்லை கொண்ட கோவர் கூட்டமும்
எழுந்து உறும்கு டத்தி யாரும் ஏகி, ஆய காட்சியால்
விழுந்து உறும்க ளிப்பு விஞ்சி வேத நாதன் மேல்பதம்
தொழுந்தொ றும்தொ ழுந்தொ றும்து ளங்கு கின்ற தோற்றமே.

தளிரையுடைய குளிர்ந்த முல்லை நிலத்தைக் குடியிருப்பாகக் கொண்ட இடையர் கூட்டமும், அவர்களுடன் மிகுந்து வரும் இடைச்சியருமாகச் சேர்ந்து சென்று அங்கே கண்ட காட்சியால் உண்டாகும் மகிழ்ச்சி மிகுந்து, திருமறையின் தலைவனாகிய அக்குழந்தையின் கால்மீது விழுந்து வணங்குந்தோறும் வணங்குந்தோறும் விளங்குகின்ற காட்சிகொண்டனர்.

கொழுந்து - தளிர், **குடத்தியார்** - இடைச்சியார், **ஏகி** - சென்று, **களிப்பு** - மகிழ்ச்சி, **விஞ்சி** - மிகுந்து, **பதம்** - கால், **துளங்கு** - விளங்கும், **தோற்றம்** - காட்சி.

03) மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாது எனமன
மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாது எனமன
மாலை ஆக வீங்கு வந்து வாசம் ஆரும் முல்லையார்
மாலை ஆக ஈங்கு வந்து வாசம் ஆரும் முல்லையார்.

வண்டு மாலையில் மலரும் வேங்கை மலரை நெருங்கித் தேனை உண்ணாத தன்மைபோல, மனமயக்கத்தை அடைவதற்குக் காரணமான பொன்னின்மீது ஆர்வம்கொண்டு குற்றத்தைக் கொள்ளாதது என்று சொல்லத்தகுந்த மன இயல்பு கொண்டு மிகவும் மகிழ்ந்து, மணம் பொருந்திய முல்லை மலர்களால் தொடுத்த மாலையும் கையுமாக வந்து, அந்த இடையர் குடிகொண்டவராக நிறைந்து நிற்பார்கள்.

மாலை - மாலைக் காலம், **மாலை** - மனமயக்கம், **வேங்கை** - வேங்கைமலர், **வேங்கை** - மலை, **வீங்கு வந்து** - மிகவும் மகிழ்ந்து, **ஈங்கு வந்து** - இவ்விடம் வந்து, **வாசம்** - மணம், **வாசம்** - குடிகொண்டு, **ஆரும்** - மிகும், **ஆரும்** - நிறையும். இச்செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் வந்து வேறு பொருளைத் தருகின்றது. இது **மடக்கணி**யாகும்.

04) பஞ்ச அரங்கில் இன்பு அரங்கு பான்மை யால டைவரத்து
அஞ்ச லம்கு ழித்து உவந்து அமிழ்ந்த மிழ்ந்து உளம்தனில்
விஞ்ச இன்பம் நெஞ்சு அடங்கில் மேவல் ஆர்ந்த தம்முயிர்
ஊஞ்சல் ஆடி வாயின் வாயில் உற்று உரைத்தல் உற்றனர்.

ஐம்பொறிகளாகிய மண்டபத்தில் இன்பம் நுகின்வர்ந்த தன்மையால் அடைந்த வரம் என்னும் அழகான கடலைத் தோண்டி, அதனுள் மகிழ்ந்து மூழ்கி, மனதில் பேரின்பம் மிகுதியாக அடைந்து, அப்பேரின்பம் மனதிற்குள் அடங்காமல் மேலோங்குமாறு நுகர்ந்த தம் உயிர் ஊஞ்சலாட, வாயின் வழியாக அப்பேரின்பம் வெளிப்பட பின்வருமாறு கூறினர்.

பஞ்ச - ஐந்து, **அரங்கு** - மண்டபம், **பான்மை** - தன்மை, **அம்** - அழகிய, **சலம்** - கடல், **குழித்து** - தோண்டி, **விஞ்ச** - மிக, **ஆர்ந்த** - நுகர்ந்த, **வாயில்** - வழியாக.

05) எண்ணு ளேய டங்க லின்றி ஏந்து மாட்சி பூண்டுவான்
விண்ணுளேபொ லிந்து வந்த விண்ண வர்க்கு வேந்தனே
புண்ணு ளேம ருந்து நீவிப் போன ஆட்டை மீட்கவோ
மண்ணு ளேயெ ழுந்து வந்து மண்ணன் என்று உதித்தனை.

எமது எண்ணத்தினுள்ளே அடங்குதல் இல்லாமல் உயர்ந்த மாண்பை அணிந்து, மேலான விண்ணுலகில் செழிப்புடன் மகிழ்ந்து இருந்த வானவர்க்கு மன்னனே! உன்னைவிட்டுப் பிரிந்து சென்ற ஆட்டை அதன் புண்ணுக்கு மருந்து தடவி, மீட்டுக் காப்பதற்காகவே இம்மண் உலகிற்கு வந்து மனிதனாகப் பிறந்துள்ளாய்.

ஏந்து - உயர்ந்த, **பூண்டு** - அணிந்து, **பொலிந்து** - செழித்து, **நீவி** - தடவி, **மண்ணன்** - மனிதன், **உதித்தனை** - பிறந்தாய்.

06) ஒண்த லங்கள் அண்ட உம்ப ரும்தொ ழும்ப ராபரா
விண்த லம்க லந்தி லங்கு வெண்க ளங்கன் ஒப்பெனா
மண்த வங்கள் எங்கும் யாரும் வாழ ஈர வெண்குடை
கொண்டு அவங்கல் கொண்ட தேறல் கொண்ட அன்பு கொற்றவா.

ஒளிமயமான இடங்களையுடைய விண்ணுலகில் வாழும் விண்ணவரும் வணங்கும் இறைவனே! விண்ணுலகமும் கலந்து விளங்கும் மண்ணுலகின் இடங்களெங்கும் யாவரும் நல்வாழ்வு அடைவதற்காக, வான மண்டலத்தில் தங்கி விளங்கும் வெண்ணிலவிற்கு ஒப்பு என்று சொல்லத்தக்க குளிர்ச்சி தரும் வெண்கொற்றக் குடையும் கொண்டு மலர்மாலையில் பொருந்திய தேனைப் போன்ற இனிமையான அன்பினையுடைய மன்னவனே!

ஒண் - ஒளி, **உம்பர்** - தேவர், **இலங்கு** - விளங்கும், **வெண்களங்கன்** - வெண்ணிலவு, **ஈர** - குளிர்ச்சியான, **அவங்கல்** - மாலை, **தேறல்** - தேன், **கொற்றவா** - மன்னவா!

07) மணிக்க லத்து அகத்து அமைத்த வான மிர்த மார்பினோய்!
பிணிக்கு லத்து அகத்து உதித்த பெற்றி ஆய்ந்து வாழ்ந்திடப்
பணிக்கு லத்து அகத்து அடங்கு இலால்ப ணித்த நின்பணி
அணிக்கு லத்து அகத்து அணிந்த அன்பு போகில் ஆகுமே.

மாணிக்கப் பாத்திரத்தில் இட்டு வைத்த வானுலக அமிழ்தம் போன்ற மார்பினை உடையவனே! நோய் கொண்ட மனித குலத்தில் நீ வந்து பிறந்த தன்மையை ஆராய்ந்து வாழ்த்துவது என்பது, சொற்களின் கூட்டத்துள் அடங்காமையால், கட்டளையிட்ட உமது பணியினை அணி வகைகளாகக் கொண்டு, மனத்துள் அணிந்து நிற்கும் எங்கள் அன்பு எப்பொழுதும் நீங்காமல் நிலைபெறுவதாகும்.

மணி - மாணிக்கம், **கலம்** - பாத்திரம், **பிணி** - நோய், **பெற்றி** - தன்மை, **பணி** - சொல், **பணித்த** - கட்டளையிட்ட, **அணி** - அணிகலன், **போகு** - நீங்குதல்.

08) இரவி வேய்ந்த கஞ்சம் ஈன்ற இலகு முத்தம் ஏய்ந்துவெல்
புரவில் வேய்ந்த சேயை ஈன்ற பொருவில் அன்னை வாழுதி
சுருதி வேய்ந்த மாட்சி பூண்ட துணைவன் ஆய மாதவத்து
உருவில் வேய்ந்த வேந்த வாழி உறுதி என்று வாழ்த்தினார்.

''கதிரவனை அணிந்து, தாமரைமலர் பெற்ற ஒளியினையுடைய முத்துப் போன்று, எவரையும் வெற்றிகொள்ளும் கொடையில் சிறந்த மகனைப் பெற்றெடுத்த ஒப்பு இல்லாத அன்னையே! நீ வாழ்க! திருமறையை அணிந்த மாண்பினையுடைய துணைவனாகிய பெருந்தவத்து வடிவமாகத் தோன்றிய மன்னனே! நீ நன்கு வாழ்க!''என்று அந்த இடையர் வாழ்த்தினர்.

இரவி - கதிரவன், **கஞ்சம்** - தாமரை, **ஈன்ற** - பெற்ற, **இலகு** - விளங்கும், **ஏய்ந்து** - ஒத்து, **சேய்** - மகன், **பொருவில்** - ஒப்பு இல்லாத, **சுருதி** - திருமறை, **மா** - சிறந்த.

09) இடத்து இடத்து அடர்த்தி உற்ற இக்கு உடைத்த இன்பு சொல்
குடத்தி யர்க்கு அமைத்த பற்றல் கூர்ந்து தோன்றல் தாள்மிசை
தடத்து ணர்க்கு அமைத்த தேறல் தாங்கு மாலை சாத்தலும்
முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் துற்றல் ஒத்ததே.

இடங்கள் தோறும் நெருக்கமாக நின்ற கரும்பை வென்ற இனிய சொல்லையுடைய இடைச்சியர்க்கு உண்டான ஆசை அதிகமாகி, பெரிய மலரிதழ்களிடையே பொருந்திய தேனைத் தாங்கிநின்ற மாலைகளைத் திருமைந்ததனின் திருவடிகளில் அணிந்தனர். அது நிறைநிலவைச் சூழ்ந்து விண்மீன்கள் நெருங்கி இருத்தலை ஒத்திருந்தது.

அடர்த்தி - நெருங்கி, **இக்கு** - கரும்பு, **பற்றல்** - ஆசை, **கூர்ந்து** - மிகுந்து, **தோன்றல்** - திருமைந்தன், **தாள்** - திருவடி, **மிசை** - மேல், **தடத்து** - பெரிய, **துணர்** - இதழ், **சாத்தல்** - அணிவித்தல், **உடுக்கள்** - விண்மீன்கள், **துற்றல்** - நெருங்கி.

10) ஏதம் இன்றி மாலி ஈன்ற காந்தி என்று தோன்றலைக்
கோது அகன்று உயிர்த்த கோதை தாள்முன் அன்ன கோவலர்
சீத இன்ப மோடு இரங்கு தேன மிழ்தம் ஈகலும்,
பாதம் ஒன்று சோமன் ஈன்ற பால்நி லாவை மானுமே.

குற்றம் இல்லாமல் கதிரவன் தந்த ஒளிக்கதிரைப் போல, தன் கன்னிமைக்குக் குற்றம் இல்லாமல் திருமைந்தனைப் பெற்றெடுத்த மலர்மாலை போன்ற மரியாளின் அடிகளில், குளிர்ந்த மகிழ்ச்சியுடன் இனிய பாலை அந்த இடையர் காணிக்கையாகத் தந்தனர். அது மரியாளின் பாதங்களில் பொருந்தியுள்ள நிலவு தந்த பால் ஒளியை ஒத்து இருந்தது.

ஏதம் - குற்றம், **மாலி** - கதிரவன், **காந்தி** - ஒளிக்கதிர், **கோது** - குற்றம், **கோதை** - மாலை போன்ற மரியாள், **தாள்** - திருவடி, **கோவலர்** - இடையர், **சீதம்** - குளிர்ச்சி, **ஈகல்** - தருதல், **சோமன்** - நிலவு, **மானும்** - ஒத்திருக்கும்.

11) பானி லத்து அமைத்த அன்பு பதுமம் நேரு கண்செயத்
தேனி லத்தி னாரை நோக்கு சிறுவன் இன்பு காட்டலால்
மேனி லத்தி னாரின் ஒத்த விரியு காட்சி உற்றுளம்
வானி லத்தின் ஆர்ந்த இன்பு மலிய வாழ மாந்தினார்.

தேன் மிகுந்த முல்லை நிலத்து இடையரை நோக்கி, குழந்தை நாதன், மரியாளின் காலடியில் நிலத்தில் காணிக்கையாகப் பாலை இட்டு வைத்த அந்த அன்பைத் தாமரை மலர் போன்ற தன் கண்களால் பார்த்து, இன்பத்தைக் காட்டியதால் அந்த இடையர், விண்ணவருக்குச் சமமான விரிந்த அறிவைப் பெற்று, தம் மனம் விண்ணுலகிலுள்ள மிகுதியான இன்பத்தைப் பெற்று வாழுமாறு அருந்தினர். (அனுபவம் பெற்றனர்.)

பதுமம் - தாமரை, **நேரு** - ஒத்த, **மேல் நிலத்தினார்** - விண்ணவர், **காட்சி உற்று** - அறிவைப் பெற்று, **ஆர்ந்த** - நிறைந்த, **மலிய** - மிகுதியாக, **மாந்தினார்** - அருந்தினார்.

12) கன்னி ஆய தாயும், ஓங்கு காவ லானும் அன்புற
இன்னி றாலி னும்க னிந்த இன்ப அம்சொல் ஓதலால்
உன்னம் மேவும் ஈர அன்பு முன்னம் உள்ளு றாமையால்
மின்ன மாரி தூவல் ஒத்த வீழும் நாட்ட மாரியே.

கன்னியாகிய தாய் மரியாளும், அக்கன்னிகைக்குச் சிறந்த காவலனாகிய சூசையும் இனமையான தேன் அடையினும் இளகிய மனதுடன் மகிழ்ச்சி தரும் அழகிய சொற்களை அன்புடன் கூறியமையால், அந்த இடையர் தம் சிந்தனையில் பொருந்திய குளிர்ச்சியான அன்புள்ளத்தினுள் அடங்காமையால் அவர்களின் கண்களிலிருந்து விழும் மகிழ்ச்சிக் கண்ணீர் மழை, மின்னலுடனான மழைநீர்த் துளிகளோடு ஒத்திருந்தது.

ஓங்கு - உயர்ந்த, **இறால்** - தேன் அடை, **கனிந்த** - இளகிய மனம், அம் - அழகிய, **ஓதலால்** - கூறுவதால், உன்னம் - சிந்தனை, **ஈரம்** - குளிர்ச்சி, **மாரி** - மழை.

13) ஏவ லாகி மூவ ரையிறைஞ்சி ஏங்கி ஏகினர்
ஆவல் ஆகி ஆங்கு வைத்த ஆவி அல்லது இல்லதால்
மேவல் ஆகி ஆவி யாக வேய்ந்த அன்பு இலாதெனில்
ஓவல் ஆகி வெற்று உடல்கள் ஊரை உற்றல் ஒத்ததே.

பிரிந்து செல்லுமாறு கட்டளை ஆனதால், மூவரையும் வணங்கி அந்த இடையர் ஏக்கத்தோடு சென்றனர். ஆர்வம் கொண்டு அங்கு இட்டுவைத்த உயிரேயல்லாமல் வேறு உயிர் தங்களுக்கு இல்லாமையால், அதற்கு இசைந்து, தங்களுக்கு உயிராக அந்த மூவர்மீது கொண்ட அன்பு மட்டும் இல்லாமல் போயிருந்தால் வெறும் உடல்கள் மட்டுமே நீங்கி ஊரை அடைவதற்கு ஒப்பாக இருந்திருக்கும்.

ஏவல் - கட்டளை, **ஆவி** - உயிர், **மேவல்** - சென்றடைதல், **ஓவல்** - நீங்குதல், **உற்றல்** - அடைதல்.

14) ஏக ஆணை ஏக எங்கும் ஏகன் ஆகி ஆள்பவன்
மாகம் மேவு மாடம்நீக்கி மாடு மேவுஉழைக்குறைந்து
ஆகம் ஆடை வேந்தர் நீக்கி ஆய ரைத்தெ ரிந்ததென்று
ஓகை யாக ஓக னோடும் ஓங்கு தாயும் வாழ்த்தினாள்.

தன் ஒரே ஆணை எல்லா இடங்களுக்கும் செல்ல ஒருவனாக இருந்து ஆட்சி செய்யும் இறைவன், வானத்தைத் தொடும் மாளிகையை விலக்கி, மாடுகள் தங்கும் இடத்தில் தங்கி, உடலில் பொன் அணிகலன்கள் அணிந்த மன்னரை நீக்கி இடையரைத் தெரிந்து கொண்டதால் உவகை கொண்டு மகிழ்ச்சி அடைந்த சூசையோடு சிறந்த தாயும் திருமைந்தனை வாழ்த்தினாள்.

ஏக - ஒரு, **ஏகன்** - ஒருவன், **மாகன்** - வானம், **உழை** - இடம், **ஆகம்** - உடல், **ஆயர்** - இடையர், **ஓகை** - உவகை, **ஓகன்** - மகிழ்ச்சியுடைய சூசை.

சாந்தி ஐயமும் கன்னித் தாய் பதிலும்

15) முன்ன ருந்திய தீஞ்சுவை முல்லையார்
பின்ன ருந்திடப் பெட்புறீஇ நாடொறும்
மின்ன ருந்திய மெல்லடி யாள்கரத்து
அன்ன ருந்திருச் சேய்தொழ அண்ணுவார்.

இனிய சுவையை முன் அருந்திக் கண்ட இடையர், பின்னும் அதனை நுகர்வதற்கு ஆர்வங்கொண்டு, மின்னல் ஒளியை உட்கொண்டு விளங்கிய மென்மையான அடிகளையுடைய மரியாளின் கைகளில் அந்த அருமையான திருமைந்தனைக் கண்டு தொழுவதற்காக ஒவ்வொரு நாளும் நெருங்குவர்.

அருந்திய - நுகர்ந்த, **தீம்** - இனிமை, **பெட்பு** - ஆர்வம், **கரத்து** - கையில், **அரும்** - அருமையான, **திருச்சேய்** - இறைமைந்தன், **அண்ணுவார்** - நெருங்குவார். இனிவரும் செய்யுள்கள் (அந்தம் ஆதியாக) அந்தாதியாகக் காண்க.

16) அண்ணி நீர்தவழ் தீயென அம்புயக்
கண்ணி தாள்மிசை பெய்துழி, காதலன்
விண்ணின் நீர்முகில் மின்னென நோக்கலோடு
உண்ணி வாவொழன்பு ஓர்மழை தூவினான்.

இடையர் நெருங்கி, நீரில் தவழும் நெருப்பு போன்ற தாமரை மலர்களால் ஆன மாலையைத் தன் அடியில் வைத்தபோது, அன்பு கொண்ட இறைமைந்தன், வானத்தில் நீரைக்கொண்ட மேகம் மின்னுவதுபோல அவர்களைப் பார்த்த பார்வையால் இடையர் உள்ளத்தில் மெய்யறிவு ஒளியைத் தந்ததோடு மகிழ்ச்சியையும் ஒரு மழை போலத் தூவினான்.

அண்ணி - நெருங்கி, **அம்புயம்** - தாமரைமலர், **கண்ணி** - மாலை, **தாள் + மிசை** - அடியின் மேல், **முகில்** - மேகம்.

17) தூவி ஓடிய வாரிது வற்றொடு
காவில் ஓடிய முத்தெனக் காதலால்
நாவில் ஓடிய நல்புகழ் சிந்துவார்
ஏவி ஓடிய கோல்விழி ஏந்தினார்.

மகிழ்ச்சி மழை பொழிந்து ஓடிய வெள்ளம் மிகுவதால் காட்டில் ஓடி, கரையில் ஒதுங்கிய முத்துப்போல, வில்லிலிருந்து ஏவப்பெற்று விரைந்து சென்ற அம்பு போன்ற கூர்மையான கண்களைத் தாங்கிய அந்த இடைச்சியர், அன்பினால் தம் நாவில் பொருந்திய நல்ல புகழுரைகளைப் பொழிந்து நிற்பர்.

தூவி - நீர்த்துளி, **காவில்** - மலர்ச்சோலையில், **காதலால்** - முதிர்ந்த அன்பினால், **கோல்விழி** - அம்புபோலக் கூர்மையான கண்கள்.

18) ஏந்தி ஓங்குளத்து இன்பநெ டுங்கடல்
நீந்தி நீந்திநி லைக்கரை காண்கிலா
காந்தி வேய்ந்தன ளைக்கனிந்து ஓதுவாள்
சாந்தி நாமம்த ரித்தகு டத்தியே.

சாந்தி என்னும் பெயரைப் பெற்ற ஓர் இடைச்சி, உயர்ந்தோங்கிய தன் மனதில் கொண்ட மகிழ்ச்சி என்னும் நீண்ட கடலை நீந்தி நீந்தி நிலையான கரையைக் காணமுடியாமல், சூரியனின் ஒளியை ஆடையாக அணிந்துள்ள மரியாளைப் பார்த்து, கனிவுடன் பின்வருமாறு கூறுவாள்.

நெடுங்கடல் - நீண்ட கடல், **காந்தி** - ஒளியினையுடைய சூரியன், **ஓதுவாள்** - கூறுவாள், **நாமம்** - பெயர், **தரித்த** - பெற்ற, **குடத்தி** - இடைச்சி.

19) குடத்தி வாய்மொழிக் கோதெனக் கோதையாய்
உடத்தி நீயொரு வாதருள் ஓர்ந்துகேள்
மடத்து யாதெனும் கிள்ளைவ குத்தன
இடத்து யாவரும் கேட்பதுஇல் ஆவதோ?

மலர்மாலை போன்றவளே! இடைச்சியின் வாய்ச்சொல் குற்றமுள்ளதென்று வெகுண்டு நீ விலகாமல் அருளை நினைந்து கேள். கிளி அறியாமையால் சொல்லிய எதையேனும் இவ்வுலகத்தில் எவராவது கேட்பது இல்லை என்பது உண்டா?

குடத்தி - இடைச்சி, **கோது** - குற்றம், **கோதையாய்** - மலர்மாலை போன்றவளே! **ஒருவாது** - விலக்காமல், **ஓர்ந்து** - நினைந்து, **மடத்து** - அறியாமை, **கிள்ளை** - கிளி.

20) ஆவ தேமுனர் ஆயது போலறிந்து
ஈவ தேநசை பின்றவ ளித்திடும்
கோல தேமிசை ஆள்தனிக் கோலினான்
நோவ தேயினிது என்றுதித் தான்கொலோ?

நடக்க இருப்பதனை முன்னர் நடந்தது போல் அறிந்து மக்களுக்குக் கொடுப்பதென்றால் அவருடைய ஆசை பின்னடையுமாறு மிகுதியாகக் கொடுப்பவனாய் விண்ணிலிருந்து தனியரசு செலுத்தும் ஒப்பற்ற செங்கோலையுடைய இறைவன், துன்புறுத்துவதே தனக்கு இனிமை என்று நினைந்து இந்த எளிமையான கோலத்தில் பிறந்தானோ?

முனர் - முன்னர், **ஆயது** - நடந்தது, **ஈவது** - கொடுப்பது, **நசை** - ஆசை, **பின்ற** - பின்னடைய, **கோ** - இறைவனாகிய மன்னன், **தனிக்கோல்** - ஒப்பற்ற செங்கோல், **நோவது** - துன்புறுவது, **கொல்** - அசைநிலை.

21) கொல்லும் வேலொடும் கூர்நெடும் வாளொடும்
வில்லும் வாளியும் ஆழியும் வில்செய
ஒல்லும் ஆழியு ருட்டிடக் கோன்துணை
செல்லும் வீரவெஞ் சேனையில் ஆயதேன்.

பகைவரைக் கொல்லுகின்ற வேலோடும் கூர்மையான நீண்ட வாளோடும் வில்லும் அம்பும் சக்கரமும் ஆகிய படைக்கலன்கள் ஒளிவிட, தனக்கு உரிமையான ஆணைச்சக்கரத்தைச் செலுத்தி ஆட்சி செய்ய ஒரு மன்னனுக்குத் துணையாகச் செல்லக்கூடிய வீரமுள்ள கொடிய சேனை இவனுக்கு இல்லாமல் போனது ஏன்?

கூர் - கூர்மையான, **நெடும்** - நீண்ட, **வாளி** - அம்பு, **ஆழி** - ஆணைச்சக்கரம், **உருட்டி** - செலுத்தி, **கோன்** - மன்னன், **வெம்** - கொடிய.

22) ஆய வான்மணி ஆர்ந்தணி உச்சியால்
காய நெற்றிக டந்துயர் மாடமும்
தூய பொன்னொடு சூழ்சுடர் பூணுமித்
தேய வேந்தர்தம் செல்வமொன்று இல்லதேன்?

ஆராய்ந்தெடுத்த அழகிய சிறந்த மணிகளை மிகுதியாக அணிந்த கோபுர உச்சியால் ஆகாயத்தின் நெற்றியையும் கடந்து உயர்ந்து நிற்கும் மாளிகையையும் தூய்மையான பொன்னால் செய்து சுற்றிலும் பதித்த மணிகள் ஒளிதரும் அணிகலன்களும் இங்குள்ள நாடுகளை ஆளும் மன்னர்களுக்கு உரிய மற்றச் செல்வங்களும் என ஒன்றும் இவருக்கு இல்லாது போனது ஏன்?

ஆய - அமைந்த, **வான்** - சிறந்த, **ஆர்ந்து** - மிகுந்து, **காயம்** - ஆகாயம், **சூழ்** - சுற்றிலும், **சுடர்** - ஒளி, **பூண்** - அணிகலன்.

23) இல்ல தேயில இவ்வழி வந்ததேன்
செல்ல வான்வழி செய்யவந் தானெனில்
வல்ல வேடம ணிந்தும றைவற
வெல்ல வானுரு வேய்ந்தின்றநன்று அல்லதோ!

தான் குடியிருக்க வீடும் இல்லாமல், இந்தக் குகை இடத்தைத் தேடி வந்து பிறந்தது ஏன்? மக்கள் வானுலகம் செல்ல வழியைக் காட்ட வந்தார் என்றால் அதற்குரிய வல்லமையான கோலம் கொண்டு வெற்றி பெறுவதற்குரிய தன்னுடைய விண்ணுலக வடிவத்தை மறைவு இல்லாமல் வெளிப்படையாக வந்து தோன்றினால் அது நல்லது ஆகாதோ?

இல் - குடியிருக்கும் வீடு, **இவ்வழி** - இந்தக் குகை வழி, **வான்வழி** - விண்ணுலக வழி, **வல்ல** - வல்லமையுள்ள, **மறைவு அறி** - மறைவு இல்லாமல், **வான் உரு** - விண்ணுலக வடிவம்.

24) ஓவுண்டு ஆயவு ருக்கொடு என்னுளத்து
ஆவுண்டு ஆயின ஐயமி தேயினித்
தூவுண் தாதுவ தூய்மலர் வாய்திறந்து
ஏவுண்டு ஓதுதி ஆயிழை யாய்என்றாள்.

"அழகிய மெய்யறிவு அணிகளை உடையவளே! துன்பத்தை உட்கொண்டு அமைந்த இக்குழந்தை இறை மைந்தனின் வடிவத்தை நினைத்ததால் என் உள்ளத்தில் உண்டான ஆர்வம் காரணமாக எழுந்த ஐயம் இதுவே. இனி தெளிக்கின்ற உண்ணத் தகுந்த தேனைக் கொண்ட உன் மலர்வாய் திறந்து, எனக்குத் தகுந்த கட்டளையையும் மனதில் கொண்டு இதற்கு மறுமொழி கூறுவாயாக" என்று சாந்தி கூறி முடித்தாள்.

ஓவு - துன்பம், **உரு** - வடிவம், **ஆவு** - ஆர்வம், **தூவுதல்** - தெளித்தல், **தாது** - தேன், **ஏவு** - கட்டளை, **ஓதுதி** - கூறுவாயாக.

25) என்ற வாசகம் எந்தைம னுக்குலம்
சென்ற வாயருள் காட்டிய சீருணர்
ஒன்றல் ஆகியு ருகிய தாய்புனல்
மின்த வாவிழி தூவிவி ளம்பினாள்.

என்று சாந்தி கூறிய வார்த்தையும் நம் தந்தையாகிய இறைவன் மனித இனத்தில் தானும் ஒருவனாய் வந்து பிறந்தபோது, அருள் காட்டிய சிறப்பும் தன் உணர்வில் பொருந்துமாறு ஏற்றுக்கொண்டு உருகிய தாயாகிய மரியாள், மின் ஒளி நீங்காத தன் கண்களிலிருந்து நீரைப் பொழிந்தவாறு பின்வருமாறு கூறினாள்.

வாசகம் - வார்த்தை, **மனுக்குலம்** - மனித இனம், **சீர்** - சிறப்பு, **ஒன்றல்** - பொருந்துதல், **புனல்** - கண்ணீர், **தூவி** - பொழிந்து, **விளம்பினாள்** - கூறினாள்.

26) அம்பி னாலப யர்செயும் அத்துணை
நம்பி னார்தனி நற்செய்கை ஈடிலார்
கொம்பில் ஏறுமி டைத்துவ ளும்கொடி
எம்பி ரான்வலிக்கு இத்துணை வேண்டுமோ?

"அம்பினால் விரர் தமக்கு அடைக்கலம் தரும் அந்தத் துணையை நம்பி இருப்பவர், தனியாக நல்ல வீரச் செயலைச் செய்யும் வலிமை இல்லாதவர் ஆவார். இடையே துவண்டு விழக்கூடிய மென்மையான படரும் கொடியே கொம்பைத் துணையாகக் கொண்ட ஏறிப்படரும். எம்பெருமானின் வலிமைக்கு இவ்விதமான துணையெல்லாம் வேண்டுமோ?"

அபயர் - அடைக்கலம் பெறுவோர், **ஏறும்** - படரும், **துவளும்** - அசையும், **வலிக்கு** - வலிமைக்கு.

27) வேண்டும் ஓர்வினை வேண்டுமென் றால்முடித்து
ஆண்டும் ஓர்தனிக் கோலர சான்எரி
தூண்டும் ஓர்சினம் தோன்றுழி அப்பகை
தாண்டும் ஓர்வலி தாங்குவர் யாவரோ?

“தான் செய்ய வேண்டிய ஒரு செயலைச் செய்ய வேண்டுமென்றால் நினைத்து அதை முடித்து ஓர் ஒப்பற்ற செம்மையான ஆட்சியால் உலகங்களையெல்லாம் ஆளும் அரசனாகிய இறைவனிடம் நெருப்பைத் தூண்டிவிட்டது பொன்ற ஒரு சினம் தோன்றும் போது, அப்பகையைக் கடந்து செல்லத்தக்க ஒரு வலிமை கொண்டவர் யாரோ?

வினை - செயல், **தனி** - ஒப்பற்ற, **கோல்** - செங்கோல், **எரி** - நெருப்பு, **தோன்றுழி** - தோன்றும் போது, **தாண்டும்** - கடந்து செல்லும், **வலி** - வலிமை.

28) யாவ ரும்கடிது அஞ்சலொடு எஞ்சுவான்
மீவ ரும்துளி மேதினி மொய்த்ததும்
தீவ ரும்துளி ஐம்புரம் தீந்ததும்
தூவ ரும்பல வும்தொகை சொற்றவோ?

மக்கள் யாவரும் மிகுதியான அச்சத்தோடு இறந்து ஒழியுமாறு வானத்திலிருந்து பொழியும் மழைவெள்ளம், உலகத்தின் மேல் பரவி மூடிக்கொண்டதும், நெருப்பாக இறங்கி வரும் மழையால் சோதோம் கொமாரா முதலிய ஐந்து நகரங்கள் எரிந்ததும் ஆகிய இந்த இறைவனின் தூய்மையினால் வரும் வல்லமையான செயல்களைக் கணக்கிட்டுச் சொல்ல வேண்டுமோ?

கடிது - மிகுதி, **எஞ்சுவான்** - இறந்து ஒழிவதற்காக, **மீவரும்** - வானத்திலிருந்து வரும், **மேதினி** - உலகம், **மொய்த்ததும்** - மூடிக்கொண்டதும், **ஐம்புரம்** - ஐந்து நகரங்கள், **தூவரும்** - தூய்மையினால் வரும், **சொற்றவோ** - சொல்லவோ?

29) சொற்த விர்ந்தவ ருள்தொழில் காலிதென்று
உற்று அவிர்ந்தவு டுமுடி யாளுரைத்து
இற்று அவிர்ந்தவி டைச்சியு ணர்ந்தபின்
பற்று அவிர்ந்தவு ரைப்பயன் கூறுவாள்.

மேலும் சொல்லுக்கு அடங்காத அருட்செயலைக் கடவுளு செய்யும் காலம் இது என்று, மிகுதியாக ஒளி வீசிய விண்மீன்களை முடியாக அணிந்த மரியாள் கூறவும், ஒளியுள்ள இடைச்சியாகிய சாந்தி இதனை அறிந்த பின்னும், தன் ஆர்வம் விளங்க வார்த்தைகளைக் கூறத் தொடங்குவாள்.

சொல்தவிர்ந்த - சொல்லில் அடங்காத, **கால்** - காலம், **அவிர்ந்த** - ஒளி வீசிய, **உடு** - விண்மீன், **பற்று** - ஆர்வம்.

30) கூறு வாள்செயும் கொள்கையின் என்றுளம்
பீறு வாளெனப் பின்னையோர் ஐயமும்
தேறு வாய்மொழி கேட்டிடச் செப்புவேன்
ஈறு வாயில எந்தையின் அன்னையே.

முடிவு காலம் இல்லாத நம் தந்தையாகிய இறைவனின் தாயே! வாள் பிளவுபடுத்தும் தன்மை போல, என் உள்ளத்தைக் கிழிக்கும் வாள் போல் மேலும் எழுந்த ஓர் ஐயமும் உண்டு. தெளிவடைவதற்காக உன் வாய்ச் சொல்லைக் கேட்டு, அறிவதற்காக இதைக் கூறுவேன்.

கூறுவாள் - பிளவுபடுத்தும் வாள், **பீறு** - கிழிக்கும், **தேறு** - தெளிவான, **செப்புவேன்** - சொல்லுவேன், **ஈறுவாய்** - முடிவுக்காலம், **எந்தை** - எம் தந்தை.

31) அன்னை தந்தையி லானறை நூல்படி
என்னை இங்களித் தோன்வரும் எல்லையின்
மின்னை ஒன்றிய வேடமெ டுத்தவன்
தன்னை யாவரும் தாழவி றைஞ்சுவார்.

திருமறை நூலில் கூறியவாறு, தாயும் தந்தையும் இல்லாமல் தானாய் விளங்கும் இறைவன், என்னையும் என் போன்ற மனிதரையும் மீட்டுக் காப்பவனாய் இவ்வுலகில் வந்து தோன்றும் இறுதிக் காலத்தில் மின்னல் போன்ற வேடம் எடுத்து வர, அலரை யாவரும் தாழ்ந்து வணங்குவர்.

அறை - கூறும், **நூல்** - திருமறை, **அளித்தோன்** - காத்தோன், **எல்லை** - காலம், **தாழ** - தாழ்ந்து, **இறைஞ்சுவார்** - வணங்குவார்.

32) அஞ்சு வாரவன் முன்னுலகு ஆள்பவர்
எஞ்சு வாரவ னையிறைஞ் சாரேன
விஞ்சும் ஆரணம் ஆகவி ளம்பினார்
துஞ்சு மாதவ ரேயெனச் சொல்லினாள்.

"இவ்வுலகத்தை ஆட்சி செய்யும் மன்னர் யாவரும் அவன் முன் அஞ்சி நடுங்குவர் என்றும் அவனை வணங்காதவர் கெட்டு அழிவர் என்றும் மறைந்துவிட்ட பெருந்தவத்தோர் மேலான திருமறை வாக்காகச் சொல்லியுள்ளார்கள்"என்று கூறினாள்.

எஞ்சுவார் - அழிவார், **இறைஞ்சார்** - வணங்காதவர், **விஞ்சும்** - மேலான, **ஆரணம்** - திருமறை, **விளம்பினார்** - கூறினார், **துஞ்சு** - மறைந்த.

33) சொல்லக் கேட்டனள் தொன்மொழித் தன்மையும்
வெல்லக் கேட்பரும் வெஞ்சினத்து எல்லைநாள்
ஒல்லக் கேட்டனர் உட்குற ஆவதைப்
புல்லக் கேட்கில் யான்புகல் வேனென்றாள்.

"சாந்தி சொன்னதைக் கேட்ட மரியாள், உலக முடிவு நாள் வருவது பற்றிப் பழங்காலத்தில் சொல்லப்பட்ட செய்திகளை வெல்லும் வகையிலும், கேட்பதற்கரிய கொடிய வெகுளியோடும் கேட்டவர் அஞ்சி நடுங்குமாறும் நடக்க இருப்பதனைப் பொருத்திக் கேட்க நீங்கள் விரும்பினால் நான் சொல்வேன்" என்றாள்.

தொன்மொழி - பழங்கால மொழி, **கேட்பு அரும்** - கேட்பதற்கு அரிய, **வெஞ்சினம்** - கொடிய வெகுளி, **எல்லைநாள்** - உலக முடிவு நாள், **உட்குற** - அஞ்சி நடுங்க, **புல்ல** - பொருந்த, **புகல்வேனென்** - சொல்லுவேன்.

34) தாளெ ழும்கம லம்சுடர் தாவிய
கோளெ ழுங்கதிர் கொண்டெனக் கேட்டலும்
வாளெ ழுந்தகண் மாதொடு யாவரும்
சூளெ ழுந்துறச் சொல்லெனச் சொல்லுவாள்.

இவ்வாறு சொல்லக் கேட்டதும் வாள் போன்ற கூர்மையான கண்களையுடைய சாந்தியுடன் மற்ற இடையர் யாவரும் மலர்த்தண்டில் எழுந்து நின்ற தாமரையின் ஒளி பரந்த சூரியனின் ஒளியை உட்கொண்டு மலர்ந்தது போல, வஞ்சினம் கூறிய முறையில் எழுந்துநின்று நன்றாகச் சொல் என்று விரும்பிக் கேட்க மரியாள் பின்வருமாறு தொடர்ந்து சொல்லுவாள்.

தாள் - மலர்த்தண்டு, **கமலம்** - தாமரை, **சுடர்** - ஒளி, **தாவிய** - பரந்த, **கோள்** - சூரியன், **சூள்** - வஞ்சினம், **உற** - நன்றாக.

குறித்த பகுதியினூடாக வலியுறுத்தப்படும் கருத்துகள்:

அ) இயேசு கிறிஸ்துவின் மகிமை

- பாவத்தால் இறைவனை விட்டுப் பிரிந்த மக்களை இரட்சித்து, மீண்டும் இறைவனுடன் இணைக்கப் பிறந்த தேவகுமாரன் (5)
- விண்ணுலகும் மண்ணுலகும் வணங்கும் தெய்வம் (6)
- சொற்களால் வாழ்த்தப்பட முடியாதவர் (9)
- எளிமையான வாழ்வைத் தெரிந்து கொண்டவர் (14)
- தாய், தந்தை இல்லாத இறைவன் (31)
- திருமறையின் தலைவன் (வேத நாதன்) (1,2)

ஆ) மரியாளின் பெருமை

- கதிரவனை ஆடையாகக் கொண்டவள் (8, 18)
- நிலவைப் பாதங்களில் அணிந்தவள் (10)
- விண்மீன்களை முடியில் சூடியவள் (29)
- இறைவனுக்கு இவ்வுலகத் தாயாகும் சிறப்பைப் பெற்றவள் (30)
- இறைவனின் திட்டத்தை அறிவிக்கும் வல்லமையுடையவள் (26, 27)
- கன்னிமைக்குக் களங்கம் வராமல் மைந்தனைப் பெற்றவள் (10)

இ) சூசையின் பெருமை

- பெருந் தவத்தோன் (8) - மரியாளுக்கு சிறந்த கணவனாக வாய்த்தவன் (12)

ஈ) இடையர் பண்பும் சிறப்பும்

- இறைஅவதாரம் பற்றிய செய்தியை முதலில் அறிவிக்கப்பெறும் பேற்றினைப் பெற்றவர்கள்(1)
- திருக்குழந்தையை நேரில் கண்டு வணங்கும் வாய்ப்பினைப் பெற்றவர்கள்
- பணிவுடையவர்கள்
- மரியாள், சூசை, இயேசுக்கிறிஸ்து ஆகியோரைத் தம் உயிரெனப் போற்றியவர்கள் (13)
- தம்மால் இயன்ற காணிக்கைகளை (பால், மலர்மாலை) அவர்களுக்கு அளிப்பவர்கள் (9,10)
- தம் ஐயங்களை மரியாளிடம் வினவி (சாந்தி) தெளிவுறுபவர்கள் (19 - 28)

கையாளப்பட்டுள்ள அணிகள்:

(அ) உவமைகள்

- 'மின்னல் நேரும் அன்னை' (1)
- 'வானமிர்த மார்பினன்' (7)
- 'கஞ்சம் ஈன்ற இலகு முத்தம் ஏய்ந்துவெல் புரவில் வேய்ந்த சேயை' (8)
- முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் துற்றல் (9)
- 'ஏதம் இன்றி மாலி ஈன்ற காந்தி என்று தோன்றலைக் கோது அகன்று உயிர்த்த கோதை' (10)
- பாதம் ஒன்று சோமன் ஈன்ற பால் நிலவு (10)
- 'பதுமம் நேரு கண்' (11)
- 'விண்ணின் நீர்முகில் மின்னென நோக்கல்' (16)
- 'காவில் ஓடிய முத்தெனக் காதலால் நாவில் ஓடிய நல்புகழ்' (17)
- 'கோல்விழி' (17)

(ஆ) உருவக அணி

- 'பஞ்ச அரங்கு' (2) - 'இன்ப நெடுங்கடல்' (18)

(இ) மடக்கணி

- மாலை என்னும் சொல் செய்யுளில் வெவ்வேறு பொருளைத் தரும் வகையில் அமைந்துள்ளது (03)

(ஈ) அந்தாதி அமைப்பு

- செய்யுள் இலக்கம் 15 தொடக்கம் 25 வரை அந்தாதி அமைப்பு உள்ளமை

****

08. பாரதியார் கவிதைகள்

ஆசிரியர் பற்றிய குறிப்புக்கள் :

தமிழின் மஹாகவிகளில் ஒருவராக, நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியாகப் போற்றப்பட்டவர். தேச விடுதலை, பெண் விடுதலை, மொழி எளிமை முதலான விடயங்களில் உணர்வு பூர்வமாக ஈடுபட்டவர். சிறுவர் இலக்கியம், வசன கவிதை முதலான விடயங்களில் முன்னோடியாக விளங்குபவர்.

படைப்புக்கள் :

பாரதி பக்திப் பாடல்கள், தேச விடுதலைப் பாடல்கள், சமூகவிடுதலைப் பாடல்கள், குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், வசன கவிதைகள், வேதாந்தக் கவிதைகள் முதலிய பல படைப்புக்களை அளித்துள்ளார்.

(அ) குயிற்பாட்டு

கானப் பறவை கலகலெனு மோசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்,
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே யுதிக்கு மிசையினிலும்,
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்
சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,
வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்.

இலக்கியம் பற்றிய அறிமுகம்

குயிற்பாட்டு, பாரதி பாடிய குறுங்காவியங்களுள் ஒன்று. அது மானுடரையும் விலங்குகளையும் வைத்து, புனையப்பட்ட வேடிக்கையான கற்பனைக் கதை. மாஞ்சோலை ஒன்றிலிருந்த குயிலொன்று பாடிய இன்னிசை கீதத்தில், தன் மனதைப் பறிகொடுத்த கவிஞர், அது கூறிய காதற்கதையினை செவிமடுக்கிறார். அச்சந்தர்ப்பத்தில் குயில் இயற்கையின் கீதங்களிலும், நாட்டார் பாடலிசையிலும் கருவிகளின் இன்னோசையிலும் மனதைப் பறிகொடுத்தமை பற்றி எடுத்துரைக்கும் பகுதியே இங்கு இடம்பெற்றுள்ளது. எனினும் பாரதி அதனுள்ளே பல விடயங்களைக் கூற முனைந்துள்ளார். இக்குறுங்காவியத்தை முடிக்கும்போது,

"ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையேயானாலும்
வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதேனுஞ் சற்றே இடமிருந்தால் கூறீரோ"

எனக்கேட்டு, சிந்தனையைத் தூண்டி விடுகின்றார். அத்தகைய குயிற்பாட்டு எனும் குறுங்காவியத்தில் பிரதானமான பாத்திரமான குயில், இசைமேலான தன் ஈடுபாடு பற்றி கதை சொல்லியை நோக்கிக் கூறும் பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

இசை நாட்டம்

பறவைகளின் ஒலி, ஆறு, கடல்களின் அலையொலி, பெண்கள் பாடும் பாட்டொலி, பல்வேறு இசைக்கருவிகளின் ஒலி முதலிய பல்வேறு ஒலிகளையும் இசையாகக் காணுகிறார் பாரதி.

வாழ்வியல் அம்சங்கள்

- ஏற்றம் இறைத்தல்
- நெல்லிடித்தல்
- சுண்ணமிடித்தல்
- கும்மி கொட்டுதல்
- வயற்றொழில்
- இசைக் கருவிகள் பயன்படுத்தல்

(ஆ) கண்ணம்மா என் காதலி

1. மாலைப் பொழுதிலொரு மேடைமிசையே
    வானையும் கடலையும் நோக்கியிருந்தேன்;
மூலைக் கடலினையவ் வானவளையம்
    முத்தமிட் டேதழுவி முகிழ்தல்கண்டேன்;
நீல நெருக்கிடையில் நெஞ்சுசெலுத்தி,
    நேரங் கழிவதிலும் நினைப்பின்றியே
சாலப் பலபலநற் பகற்கனவில்
    தன்னை மறந்தலயந் தன்னிலிருந்தேன்.

2. ஆங்கப் பொழுதிலென் பின்புறத்திலே,
    ஆள்வந்து நின்றெனது கண்மறைக்கவே,
பாங்கினிற் கையிரண்டுந் தீண்டியறிந்தேன்;
    பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்;
ஓங்கி வரு முவகை யூற்றி லறிந்தேன்;
    ஒட்டு மிரண்டுள்ளத்தின் தட்டி லறிந்தேன்;
'வாங்கி விடடி கையை யேடி கண்ணம்மா,
    மாய மெவரிடத்தில்?' என்று மொழிந்தேன்.

3. சிரித்த ஒலியி லவள் கை விலக்கியே,
    திருமித் தழுவி, 'என்ன செய்தி சொல்' லென்றேன்,
'நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்டாய்?
    நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்டாய்?
    சின்னக் குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?
பிரித்துப் பிரித்துநித மேக மளந்தே,
    பெற்ற நலங்க ளென்ன? பேசுதி' என்றாள்.

4. 'நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்;
    நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்;
    சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்;
பிரித்துப் பிரித்துநித மேக மளந்தே,
    பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை;
சிரித்த ஒலியினிலுன் கை விலக்கியே,
    திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன்.

இலக்கியம் பற்றிய அறிமுகம் :

கண்ணனைப் பல நிலைகளில் பாவனை செய்து பாரதியால் பாடப்பட்ட பல பாடல்கள் காணப்படுகின்றன. அவை கண்ணன் பாடல்கள் எனப் பெயர் சூட்டப் பெறுகின்றன. கண்ணனை காதலியாகப் பாவனைசெய்து பாடிய பாடல்களுள் ஒன்றாக, 'கண்ணம்மா என் காதலி' அமைகிறது.

பாடுபொருள் :

இயற்கை முழுவதிலும் இறைவனைக் கண்ட அனுபவத்தின் வெளிப்பாடாக இக்கவிதை அமைகிறது. பாரதி மாலை நேரமொன்றில் கடற்கரையில் வானத்தினதும் கடலினதும் அழகை இரசித்து தன்னை மறந்திருந்த நிலையில் காதலியாகிய கண்ணம்மா பின்புறமாக வந்து அவரது கண்ணைத் தனது கைகளால் மூடியவுடன், மூடியவர் யாரென இனங்கண்ட பாரதி கையை விலக்கி அவளோடு உரையாடும் வேளையில் கண்ணம்மா இயற்கைக் கூறுகளில் நீ என்ன கண்டாய்? என வினவுவதாகவும் அதற்குப் பாரதி, அனைத்தினும் உன் முகமே கண்டேன் என விடையளிப்பதாகவும் இக்கவிதை அமைந்துள்ளது.

காதல் வெளிப்படும் விதம்:

- காதலி வந்து நின்று காதலனின் கண்மறைத்தல்.
- காதலன் அவளை இன்னாரென அடையாளம் காணல்.
- காதலியின் உடையின் வாசனை மூலம் அவளையறிதல்.
- இயல்பாகவே உவகை எழுவதன் மூலம் வந்தது தன் காதலியே என முடிவுசெய்தல்.
- இருவர் உள்ளமும் ஒன்றுபட்டு விளங்குதல்.
- இயற்கை அனைத்திலும் காதலியின் முகத்தையே காணுதல்.

(தான் இயற்கையில் லயித்திருந்தபோது தன் காதலி வந்து தழுவியதாகவும் அப்போது அவர்களிடையே உரையாடல் நிகழ்வதாகவும் அவ்வுரையாடலில் அவள் பாரதியைப் பார்த்துக் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறுவதாகவும் கவிதையை அமைத்துக் கொண்டதில் பாரதியின் கற்பனைத்திறன் புலப்படுகிறது.)

(இ) பாஞ்சாலி சபதம்

சூது மீட்டும் தொடங்குதல்

காயு ருட்ட லானார் - சூதுக்
களிதொ டங்க லானார்
மாய முள்ள சகுனி - பின்னும்
வார்த்தை சொல்லு கின்றான்;
‘‘நீய ழித்த தெல்லாம் - பின்னும்
நின்னி டத்து மீளும்,
ஓய்வ டைந்தி டாதே, - தருமா!
ஊக்க மெய்து’’ கென்றான்.

கோயிற் பூசை செய்வோர் - சிலையைக்
கொண்டு விற்றல் போலும்,
வாயில் காத்து நிற்போன் - வீட்டை
வைத்தி ழத்தல் போலும்,
ஆயி ரங்க ளான - நீதி
யவையு ணர்ந்த தருமன்
தேயம் வைத்தி ழந்தான்; - சீச்சீ
சிறியர் செய்கை செய்தான்.

‘நாட்டு மாந்த ரெல்லாம் - தம்போல்
நரர்க ளென்று கருதார்;
ஆட்டு மந்தை யாமென் - றுலகை
அரச ரெண்ணி விட்டார்.
காட்டு முண்மை நூல்கள் - பலதாங்
காட்டி னார்க ளேனும்
நாட்டு ராஜ நீதி - மனிதர்
நன்கு செய்ய வில்லை.

ஓரஞ் செய்தி டாமே, - தருமத்
துறுதி கொன்றி டாமே,
சோரஞ் டிசய்திடாமே, -பிறரைத்
துயரில் வீழ்த்தி டாமே,
ஊரை யாளு முறைமை - உலகில்
ஓர்பு றத்து மில்லை.
சார மற்ற வார்த்தை! - மேலே
சரிதை சொல்லு கின்றோம்.

அறிமுகம் :

மகாபாரதத்தில் தருமன், கௌரவர்களுடன் சூதாடி நாடுநகர் எல்லாம் இழந்து, இறுதியில் பாஞ்சாலியையும் பணயம் வைத்து இழக்கிறான். பாஞ்சாலி துரியோதனன் சபையிலே அவனால் மானபங்கப்படுத்தப்படுகிறாள். அந்நிலையில் பாஞ்சாலி தர்மாவேசத்தோடு துரியோதனை அழித்தே தன் குழல் முடிப்பதாகச் சபதம் செய்கிறாள். அச்சபத நிகழ்ச்சியை மையமாகக்கொண்டு மகாபாரதக் கதைப்பகுதியை பாரதி, புதுமைகளோடு குறுங்காவியமாக, 'பாஞ்சாலி சபதம்' என்ற பெயரில் படைத்துள்ளார்.

துரியோதனனோடு சூதாடிய தருமன், தேசத்தைப் பணயப் பொருளாக வைத்தது கண்டு கொதித்தெழுந்து கூறுவதாக அமைவது இப்பகுதி.

சூதின் இழிவு :

- வஞ்சகரின் மாயவலையில் வீழ்த்தும்
- அறிவிழக்கச் செய்யும்
- பழியை ஏற்படுத்தும்
- தன்னையும் தன்னைச் சார்ந்தவரையும் துன்பத்திலாழ்த்தும்

தருமன் அடைந்த இழிவு:

- ஆயிரம் நீதி நூல்களைக் கற்றிருந்தும் தேசத்தைப் பணயம் வைத்து இழந்ததாலே, ''சீச்சீ'' எனத் தூற்றுமளவுக்கு தருமன் கீழ்நிலை அடைதல்.
- தருமன் சிறியாருள் ஒருவனாகக் கணிக்கப் பெறல்.
- நாட்டு மக்களை மந்தைகளாய் மன்னர்கள் கருதுகிறார்கள் எனக் கூறும் நிலை ஏற்படல்.

தருமனின் செயலைப் பாரதி கூறும் விதம்:

- பூசகர் கோயிற்சிலையை விற்றல் போல
- வாயிற்காவலன் வீட்டை விற்பது போல
- சிறியார் செய்கை செய்தான் தருமன்

சிறந்த ஆட்சித்தலைவனுடைய இலட்சணங்கள்:

- நாட்டு மக்களை மதித்துப் போற்றல்.
- நூல்களைக் கற்பது மட்டுமன்றி அவற்றை மக்கள் நலனுக்காய் பின்பற்றுதல்.
- வஞ்சனை புரியாது நடத்தல்.
- அறத்தினின்றும் மனவுறுதி தளராது இருத்தல்.
- கீழ்நிலை அடையக்கூடிய செயல் புரியாமை.
- பிறரைத் துயரில் வீழ்த்தாமை.

சகுனியின் வஞ்சனை:

- சூழ்ச்சிகள் நிறைந்தவனாகக் காணப்படல்.
- 'நீ இழந்தவற்றையெல்லாம் மீளப் பெறுவாய்' என தருமனை வஞ்சித்து ஊக்குவித்தல்.

கவிதை வலியுறுத்தும் விடயங்கள்:

- முறை தவறும் அரசின் மீதான வெறுப்பு.
- மக்களை மதித்து மக்களது நலன் நாடும் தன்னலமற்ற அரசின் மீதான அவா.
- தன்னலமற்ற மக்கள் நலனைக் கருத்திற் கொண்ட அரசுகள் உலகில் எங்கும் இல்லையே என்ற ஆதங்கம்.

(ஈ) பெண் விடுதலை

1. விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்; வெல்லுவ மென்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடைய வள் சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;
இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்,
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

2. திறமையா லிங்கு மேனிலை சேர்வோம்;
தீய பண்டை யிகழ்ச்சிகள் தேய்ப்போம்;
குறைவி லாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனில வரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதிற் சேர்ந்திங் குழைப்போம்;
அறவி ழுந்தது பண்டை வழக்கம்;
ஆணுக் குப்பெண் விலங்கெனு ம.ஃதே.

3. விடியு நல்லொளி காணுதி நின்றே,
மேவு நாக ரிகம்புதி தொன்றே
கொடியர் நம்மை யடிமைக ளென்றே
கொண்டு தாம்முத லென்றன ரன்றே.
அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர், நந் தேசத்து வீரக்
காரி கைக்கணத் தீர், துணி வுற்றே.

அறிமுகம் :

தேசிய விடுதலை, பெண் சமத்துவம் என்பவற்றில் தீவிர ஈடுபாடுகாட்டிய பாரதி சீனமொழியில் ''சீயூசன்'' என்பவர் பாடிய கவிதையை மொழிபெயர்த்துப் பாடியதே பெண் விடுதலை எனும் இக்கவிதை.

பாடுபொருள் :

ஆணும் பெண்ணும் சமமானவர்கள். பெண்களை ஆண்கள் அடக்கி ஆள்வது பொருத்தமற்றது. பெண்கள் தம் பெருமை உணர்ந்து ஒன்றுபட்டு விடுதலை பெற முயல வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் இக்கவிதை அமைந்துள்ளது. பெண்கள் விடுதலை பெற்று தேசத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது.

- ஆணும் பெண்ணும் சமமானவர்களாகவே படைக்கப்பட்டார்கள்
- பெண் ஆணுக்குச் சரிநிகர் உரிமை பெற்றவள். இடைக்காலத்திலேயே ஆண் உயர்ந்தவன், பெண் தாழ்ந்தவள் என்ற கீழ்நிலை உண்டானது
- பெண் தனக்கு நேர்ந்த இழிநிலையைப் போக்க போராடும் வல்லமை உள்ளவள்
- பெண்ணின் இழிநிலையைப் போக்க உறுதிகொண்டு உழைப்போம்
- ஆண்கள், பெண்களைச் சமமாக நடத்துவார்களாயின் அவர்களோடு தேசத்தின் விடுதலைக்காக ஒன்றுபட்டு உழைப்போம்
- இழிநிலையைப் போக்க உறுதிகொண்டு உழைப்போம்

09. ஈழ நாட்டுக் குறம்

ஆசிரியர் : ப.கு.சரவணபவன்
இவர் நயினாதீவினைச் சேர்ந்தவர். வித்துவ சிரோமணி கணேசையர் வேலணை தம்பு உபாத்தியாயர் ஆகியோர் இவரது ஆசிரியர்களாவர். தமிழ் புலமைமிக்கவரான இவர் நூலறிவும் இயல்பாகவே கவிபாடும் வல்லமையும் வாய்க்கப்பெற்றவர்.

இலக்கியம் பற்றிய அறிமுகம்

குறம் என்பது ஒருவகை இலக்கிய வடிவம். இதில் குறவர்கள் தங்கள் நாட்டுவளம், மலைவளம் முதலானவற்றைச் சிறப்பித்துப் பாடுவதான பகுதிகள் அமையப்பெறும். அதே பாங்கில் இலங்கை நாட்டின் வளத்தைச் சிறப்பித்துப் பாடுவதாய் அமைபவை இப்பாடல்கள்.

01. தேவரெல்லாங் கொலுவிருக்கும் ஈழமெங்கள் தேயஞ்
செப்பிடுவே னதன்பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோணமலை நாட்டில்
முத்தொதுக்கிக் கத்துகடல் சூழுமெங்கள் தேயம். (தேவர்)

02. எத்திசையும் போற்றுங்கதிர் காமமலை நாட்டில்
எங்கள்வள்ளி குடியிருக்கும் ஈழமெங்கள் தேயம்
புத்தபிரான் பொன்னடியாம் பொற்கமல பீடம்
பொலியுமலை எங்கள்மலை ஈழமெங்கள் தேயம். (தேவர்)

03. மாவலிகங் கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெல் லாம்மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் கண்மருட்டுங் கன்னிஎங்கள் தேயம்.
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை. (தேவர்)

04. செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை
வந்தனையல் லாதெமக்குச் சிந்தனைவே றில்லை. (தேவர்)

05. பொற்புதையல் கண்டெடுப்பார் போலச்சில மந்தி
பூமியுள்வெ டித்தபலாப் பொற்சுளையைக் கீண்டும்
நற்குணங்கொள் மங்கையரும் மைந்தர்களும் போல
நாலுகின்ற பூங்கொடியில் ஊசல்சில வாடும். (தேவர்)

06. மானின்கவைக் கொம்பெடுத்துக் கால்களென நாட்டி
வளமான பன்றிமுள்ளுக் கைம்மரங்கள் பாய்ச்சி
கானிலுதிர் மாமயிலின் தோகைகொண்டு வேய்ந்து
கட்டியத னுள்ளிருந்து சிற்றில்சில வாடும். (தேவர்)

07. கனிபெறவென் றொருகுறத்தி காதணியை வீசக்
கடுவனதைக் கைப்பிடித்துக் காதலிதன் காதில்
நனியழுத்தக் கண்ணினின்று நீர்வடியும் வாயில்
நகைவருமக் குரங்கிருக்கும் ஈழமெங்கள் தேயம். (தேவர்)

குறித்த பகுதியினூடாக வலியுறுத்தப்படும் கருத்துக்கள்:

1. நாட்டுவளம்

- முத்து விளையும் கடலால் சூழப்பட்டது.
- மகாவலி கங்கை நீரின் வளம் நிறைந்தது.
- பலாக்கனிகள் விளைவது.
- காட்டு மரங்களும் பூங்கொடிகளும் கொண்டது.
- மான், பன்றி, மயில், குரங்கு முதலான விலங்குள் கொண்டது.
- கனி பெற கல்லுக்குப் பதிலாக, காதணியை வீசும் மக்களைக் கொண்டது.

2. நாட்டின் பெருமைக்குரிய அம்சங்கள்

- தேவர்கள் வந்து வாசம் செய்தல்.
- பாடல் பெற்ற தலங்களைக் கொண்டிருத்தல்.
- முருகனும் வள்ளியும் உறையும் கதிர்காமம் அமைந்திருத்தல்.
- புத்தரின் திருவடித்தடம் பதிந்த மலை காணப்படுதல்.
- தனக்கு ஈடிணையற்று விளங்குதல்.

3. கவிஞர் கையாண்டுள்ள உத்தி

- ஈழநாட்டை ஒரு கன்னிப் பெண்ணாக உருவகித்தல்.
- அப்பெண்ணின் தாவணியாக மகாவலி கங்கையை உருவகித்தல்.
- ஈழநாடாகிய கன்னிக்குச் சேவை புரியும் தோழியராக தமிழ், சிங்களம் ஆகியவற்றை உருவகித்தல்.
- உவமையணியைக் கையாள்தல்.
- அதீத கற்பனைகளைக் கையாள்தல்.

4. அணிகள்

- பொன்னடியாம் பொற்கமல பீடம் (உருவகம்)
- மகாவலி கங்கைப்புனலாம் தாவணி (உருவகம்)
- பொற்புதையல் கண்டெடுப்பார் போல.....(உவமை)
- மங்கையரும் மைந்தர்களும் போல நாடுகின்ற.....(உவமை)

5. நாட்டின் ஒருமைப்பாடடைப் பேணுதல்

- சமயங்களின் நல்லிணக்கம்
- சிங்களத்தையும் தமிழையும் தோழிகளாகக் குறிபிடல்
- இந்தியரை அக்கை மக்களாகக் குறிப்பிடல்

****

10. பாரதியார்

ஆசிரியர்: முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி (1896 - 1951)

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் பிறந்தவர். பயிற்றப்பட்ட தமிழாசிரியர். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர். ஓய்வு பெற்றபின் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சில காலம் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். சுவைமிகுந்த கவிதைகள் பலவற்றையும் சிறுவர்க்கான பாடநூல்கள் சிலவற்றையும் வெளியிட்டுள்ளார். 1950 இல் மரதன் ஓட்டக் கவிதைப் போட்டியில் ''மணித்தாய் நாடும் மரதனோட்டமும்'' என்ற கவிதைக்காக முதற்பரிசு பெற்றவர். திருநெல்வேலித் தமிழ்ச்சங்கம் ''முதுதமிழ்ப்புலவர்'' என்ற விருது வழங்கிக் கௌரவித்தது.

பாரதியாரின் கவிதைகளைப் படித்து திளைத்தமையினால் ஏற்பட்ட பரவச நிலையின் வெளிப்பாடு இக்கவிதை.

01. பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே - அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே.

02. இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ - உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ. (பாரதி)

03. சந்தமிகுந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே - தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல். (பாரதி)

04. தாமரைக் காடிது நித்தலுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார். (பாரதி)

05. புத்தப் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை - மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம்பிறக்குது நேரினிலே. (பாரதி)

06. முல்லை குறுஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய். (பாரதி)

07. மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே. (பாரதி)

அரும்பதங்கள் :

கூம்பிடுமோ	-	கெட்டிடுமோ, உணர்வழிந்திடுமோ
காமரு	-	(கா + மரு) சோலையை நாடும்
கானல்	-	வெப்பம்

1) பாரதியாரது கவிதைகள்
- உலகிற்கு ஒளி தருவன.
- வாடாதன; இன்பங் குறையாதன.
- செம்மை பெருக்குவன.
- புத்தம் புதிய சுவை தருவன.
- கல்லையுருக்கும் சுவைமிக்க பண்புகளைக் கொண்டவை.
- உயிரினங்களை மயக்குவன; துன்பம் நீக்குவன.

2) • 'பாரதியென்றொரு தாமரை பூத்தது பாரத நாடெனும் வாவியிலே' பாரத நாட்டை வாவியாகவும் அந்த வாவியில் பூத்த தாமரையாக பாரதியையும் உருவகித்துக் கூறியுள்ளார்.
- பாரதியின் கவிதைகள் ஆகிய சீரிதழ்கள் பூமிக்கு ஒளியை வழங்குகிறது அதாவது உலகிற்கு வழிகாட்டுகின்றது எனக் கூறப்பட்டுள்ளது.
- குன்றா இன்பந்தருவன அழிந்திடா இன்பத்தைத் தரக்கூடிய சிந்தனை ஆகிய வானுலகு ஏறவைப்பன. சிந்தனையாமெனும் வானுலகு - உருவகம்.
- சாரலருவிகள் போல சந்தமிகுந்த சிந்துகள் வீழ்ந்து (உவமையணி) உள்ளத்தை உருக்குவன.
- புத்தம் புதிய சுவையுடையன; காதலையும் வீரத்தையும் தருவன.
- விலங்குகளையும் மயக்குவன.

3) • உருவக அணி - பாரதி என்றொரு தாமரை
- பாரத நாடு எனும் வாவி
- சிந்தனையாம் எனும் வானுலகு

• உவமை அணி - சாரலருவிகள் போல் சந்தமிகுந்திடுசிந்தென
- புத்துயிர் போல் சத்திரங் காட்டுவது

4)• வியப்பு

பாரதியாரின் பாடல்களைப் படிப்பதன் மூலமாக உயர்ந்த சிந்தனைகளை எட்டி, அழிந்திடாத உணர்வின்பத்தைப் பெறலாம் என வியக்கின்றார்.

****

11. கட்டுரைகள்

(அ) தமிழ்த்தொண்டு
- சுவாமி விபுலாநந்தர்

தமிழ் வளர்த்த முடிமன்னராகிய சேர, சோழ, பாண்டியருங் கழிந்து போயினர். அகத்தியனாரை முதலாகக் கொண்ட புலவர் பெருமக்கள் குழுமியிருந்து தமிழாராய்ந்த முச்சங்கங்களும் அழிந்துபோயின. செல்வத்தில் வளர்ந்த சீமாட்டி அல்லலுற் றலைகின்ற தன்மைபோலத் தமிழ்மாது பொலிவிழந்து தோன்றுகின்றாள். இவளுக்குத் தொண்டுபுரிய முன்வருவார் யாவருளர்? இப்பூமண்டலத்தில் இப்பொழுது வழங்குகின்ற மொழிகள் தோற்று முன்தோன்றிய தமிழ்மொழியானது இன்றும் நிலைபெற்று நின்று இரண்டுகோடி மக்களுடைய வழக்குமொழியாக விளங்குகின்றது. தமிழர் உலகத்தின் பல பாகங்களிலும் வசித்து வருகின்றார்கள். வாணிகத்திலும் தொழிற்றுறைகளிலும் ஈடுபட்டவர்களாய்த் தென்னாபிரிக்கா, மத்திய அமெரிக்கா, மலாயா, சிங்கப்பூர் முதலிய பிற தேசங்களிலும் பலவகை இயற்கை வனப்புவாய்ந்த நமது தாய்நாடாகிய இவ்விலங்கைத்தீவிலும்; திருவேங்கடந் தென் குமரி யெல்லையாகவுடைய பழந்தமிழ் நாட்டிலும் தமிழர் வசித்து வருகின்றனர். இரண்டுகோடி மக்களால் வழங்கப்பட்டு வருகின்ற இம்மொழி உயிருடைய மொழியென்பதை மறுக்கவல்லார் யாவர்? தமிழ் அழிந்துபோவில்லை; உயிருடனிருக்கிறது. அரசியல் மாற்றங்களினாலும் பிற மொழியாட்சியினாலும் தன்னியல்பிற் குன்றிச் சோர்வினா லயர்ச்சியடைந்த தமிழ்மாது மீண்டும் விழித்தெழுந்துவிட்டாள். அன்னையாகிய தமிழ்மாது விழித்தெழுந்த சிறப்பினைக் கண்ட பாவலரும், நாவலரும் இவளுக்குத் திருப்பள்ளியெழுச்சி கூறுகின்றனர். காரிருட்காலங் கழிந்துவிட்டது. புதிய ஊக்கத்தோடு எழுந்த நம் அன்னையினுடைய அடியிணை மலருக்கு வணக்கஞ் செலுத்துவோமாக.

வாழ்க்கையினது மர்மத்தையறிந்து கொள்ளுவதற்கு உபயோகமான கல்வியே கல்வி யெனப்படுவது. வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்குமாற்றல் உத்தம கவிகளுக்கு இருப்பதுபோலப் பிறருக்கில்லை. புறநானூறென்னும் சங்கத் தொகை நூலிலும், சீவகன் சரிதையிலும், கம்பராமாயணத்திலும் அழகுபெற வகுத்துச் சொல்லப்பட்டிருக்கின்ற தெள்ளிய உண்மைகளை மனத்தினெண்ணி மாசறத் தெரிந்து கொண்டு அவற்றின் வழிநின்று வாழ்க்கையை நடத்துபவன் உயர்நிலையடைவான் என்பதற்கு ஐயப்பாடில்லை. கலைமகளுடைய அருளினைப்பெற்ற கவிவாணர் நான்முகத்தேவனைப்போலப் புத்துருவங்களை யாக்க வல்லவர்கள். கலைநூல்களை யோதியுணர்ந்த கல்விமான் இப்புத்துருவங்களைத் தெளிவாக நோக்கி மனத்துக்கணதை யமைத்துக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை அவற்றுக்கு நேராகச் சீர்படுத்துகின்றான். நோக்கம் உயர்வடையச் செய்கை உயர்வடையும். செய்கை உயர்வடைய வாழ்க்கை உயர்வடையும்.

வாரீர் சகோதர்களே! நாமிவ்வுலகத்தில் ஏனைய தேசத்தாரோடு ஒத்த பான்மையினராய்ச் சிறப்புறவேண்டுமாயின், நாம் நமது தாய்மொழிக்குத் தொண்டுபுரிதலை மேற்கொள்ளல் வேண்டும் .

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியி லியற்றவேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லைத்
திறமான புலமையெனிற் பிறநாட்டோ
ரதை வணக்கஞ் செய்யவேண்டும்.

என ஆற்றல்சான்ற கவியரசராகிய சுப்ரமணிய பாரதியார் வற்புறுத்திக் கூறுகின்றனர். தமிழ் பழமை வாய்ந்தது, தொண்டர்நாதனைத் தூதிடைப் போக்கியது என்றின்னன பழங்கதைகளை நமக்குள்ளே பேசிக்கொள்வதில் எய்துதற்குரிய பிரயோசனம் யாதுமில்லை. நாற்றிசை மக்களும் நமது நாகரிகத்துக்கு ஏற்றமுரைக்கவேண்டுமென நாமெண்ணுவோமாயின் தமிழ் நூல் பொதிந்த கருவூலத்தினுள்ளே யமைந்துகிடக்கும் நன்மணிகளையெடுத்து அவற்றினது மதிப்பை யாம் பிறருக்கு உணர்த்துதல்வேண்டும். பிறநாட்டிரிடத்திலுள்ள அரிய பெரிய விஞ்ஞான நூல்களையும் பிறவற்றையும் மொழிபெயர்த்துத் தமிழுக்கு உரிமையாக்கவேண்டும். அனைவருமெளிதிலுணர்ந்துகொள்ளத்தக்க இலகுவாகிய தமிழ்நடையில் உயிர்க்குறுதி பயக்கும் உயர்ந்த சாத்திரங்களை எழுதுவித்தல்வேண்டும். தேகத்துக்கு வலிமையும் மனத்துக்கு உறுதியுந் தரத்தக்க எண்ணங்கள் தமிழ்நாடெங்கும் பரவுதற்கு முயற்சித்தல்வேண்டும்.

ஒரு தேசத்தில் வாழுகின்ற மக்கள் தமது அரசியல் நிலை, பொருளாதார நிலை, சமூகவாழ்க்கை நிலை என்பவற்றைச் சீர்ப்படுத்திக்கொள்ள முயல்வாராயின் முதலிலே தாமெய்த வேண்டுமென்றெண்ணுகிற நிலையை அவர் தம் மனத்திடையே தெளிவுற உருவகப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இது உத்தமக் கவிகளுனுடைய கருத்தினை நுனித்துநோக்கி அமைக்குந்தரத்தது. இந்நாளில் நடந்து வருகின்ற நாகரிக வழக்கங்களுக்கும், பல தேசத் தொடர்பினுக்கும் இயைபாகும்படி நித்தியமான உண்மைகளை மக்களுடைய உள்ளத்திற் படியும்படியாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுடையவனே தன்னுடைய நாட்டுக்குப் புத்துயிரளிக்கவல்ல உண்மைக் கவியாவான். இத்தகைய ஒரு கவியைத் தமிழ்நாடு பெற்றது இந்நாடு செய்த பெருந்தவப்பயனேயாகும். கவியரசராகிய சுப்ரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வை நீத்துப் பல வருடங்களாகவில்லை. இதற்கிடையில் அவருடைய கவி தேசமெங்கும் செறிந்து நாட்டிலுள்ள மக்களுக்குப் புத்துயிரளித்து வருகின்றது. இத்தகைய கவி சிரேட்டர்கள் இன்னும் பலரை இந்நாட்டில் உதிக்கச் செய்யுமாறு உலகமாதாவாகிய பராசக்தியை வேண்டிக்கொள்வோமாக.

வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய நூல்கள் மிகப் பலவிருக்கின்றன. நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்கின்ற வேறுவகைப்பட்ட தத்துவ விசாரணை நூல்களை மேல்நாட்டாசிரியர்கள் தம்மொழியிற் பெயர்த்தெழுதித் தமக்கு உரிமையாக்கிக்கொண்டனர். வேத வேதாந்தங்களுக்கு மொழிபெயர்ப்பும், உரையும் ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழிகளிலுண்டு. தமிழிலோவென்றால் சூத்திரருக்கும் பெண்களுக்குந் தகவுடையனவெனக் கூறப்பட்ட சில புராணக் கதைகள் மாத்திரமே மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. சிற்பம், ரசாயனம், ஆயுர்வேதம், அர்த்தவேதம், தநுர்வேதம், காந்தருவவேதம், கணிதம், தருக்கம் என்றின்னன பலவாய துறைகளிலே கடல்போல விரிந்து கிடக்கின்ற சாத்திரங்களைத் தமிழிலே மொழிபெயர்த்தெழுதினால் அதனால் விளையக்கூடிய நலத்துக்கு எல்லை கூறமுடியுமா? வடமொழியிலுள்ள நூல்களைத் தமிழிற் பெயர்த்தெழுத முயல்வது சிறந்த தமிழ்த்தொண்டாகும்.

ஆசிரியர் : சுவாமி விபுலாநந்தர் (1892 - 1947)

இயற்பெயர் மயில்வாகனன். கிழக்கிலங்கையிலுள்ள காரைதீவு இவரது பிறப்பிடம். அறிவியல், இலக்கியம், சமயம், தத்துவம், இசை ஆகிய துறைகளிலே தேர்ச்சி பெற்றவர். மதங்கசூளாமணி, யாழ்நூல் முதலிய நூல்களுடன், தனிப்பாடல்கள் பலவற்றையும் எழுதிய இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இராமகிருஷ்ண மடம் வெளியிட்ட **'பிரபுத்த பாரத'** என்ற சஞ்சிகையின் ஆசிரியராகத் திகழ்ந்தவர். உலகின் முதலாவது தமிழ்ப் பேராசிரியர்.

கட்டுரையின் முதன்மை நோக்கம்

தமிழின் பெருமையை உணர்த்தி, காலத்திற்கேற்ற வகையில் அம்மொழியை வளர்த்ததற்கான தொண்டுகளைப் பணிகளைப் புரியத்தூண்டுவது.

1) **தமிழின் பெருமைகள்**

- மூவேந்தரால் போற்றப்பட்டமை.
- அகத்தியர் தொடக்கம் பல புலவர்களால் ஆராயப்பட்டமை.
- முன் தோன்றிய மொழியாக விளங்குகின்றமை.
- இரண்டு கோடி மக்களுடைய பேச்சுமொழியாக உயிருள்ள மொழியாக விளங்குகின்றமை. (அவரது காலத்தில்)
- உலகின் பல நாடுகளில் வழங்கி வருகின்றமை.

2) **பழந்தமிழ் இலக்கியங்கள் பற்றிய செய்திகள்**

- வாழ்க்கையின் இரகசியங்களை ஊடுருவி நோக்கியுள்ள சங்க நூலாகிய புறநானூறு பின்னெழுந்த சீவகன் சரிதை, கம்பராமாயணம் முதலியன வாழ்க்கைக்கு வழிகாட்டுவன
- தமிழ் நூற்கருத்துக்களை உணர்ந்தவன் சிறப்பாக வாழ்வான்
- இலக்கியங்கள் காலத்துக்குக்காலம் புதிதாக எழுவதால் அவை வாழ்வைச் செம்மைப்படுத்த உதவும்

3) **விபுலாநந்தர் கூறும் தமிழ்த்தொண்டு**

- தமிழுக்குத் தொண்டு புரியும் வகையில் மக்களைத் தூண்டுதல்.
- தமிழன்னையின் திருவடிகளுக்கு வணக்கம் செலுத்துதல்.
- தமிழிலக்கியங்களை ஓதி உணர்த்துதல்.
- பிறநாட்டு அறிஞர்களின் நூல்களை தமிழ்ப்படுத்துவதன் மூலம் அவற்றிலே கூறப்பட்டுள்ள கருத்துக்களைப் பின்பற்றுதல்.
- நியாயம், வைசேடியம், சாங்கியம், யோகம், உத்தரமீமாம்சை, பூர்வ மீமாம்சை எனும் தரிசனங்களை மொழிபெயர்த்துப் பயன்பெறுதல்.
- இலகு தமிழில் இலக்கியம் படைத்தல்.

4) **வலியுறுத்தப்படும் செய்தி**

தமிழை மதித்துப் போற்றியும் பண்டைய தமிழிலக்கியங்களை வாசித்தும் பிறமொழிகளிலுள்ள தத்துவ சாத்திரங்களை மொழிபெயர்த்தும் புதிய கவிஞர்கள் தோன்றி வாழ்வைச் செம்மைப் படுத்தும் இலக்கியங்களைப் படைத்தும் தமிழுக்குத் தொண்டுபுரிய வேண்டும் என்பதாகும்.

5) **ஆசிரியர் கையாண்டுள்ள உத்தி**

- தமிழின் பழஞ்சிறப்பைக் கூறி, தொண்டுபுரியத் தூண்டுதல்.
- புகழ் வாய்ந்த தமிழ் இலக்கியங்களின் சிறப்பை எடுத்துரைத்தல்.
- பாரதியாரின் கவிதையை மேற்கோள்காட்டல்.
- வாசகரை, 'சகோதரர்களே' என விளித்தல்.

6) **மொழிநடைச் சிறப்பு**

- தமிழ்மொழியின் பழங்காலச் சிறப்பையும் தற்கால நிலையையும் ஒப்பிட்டு விளக்கல்.
- வாசகரை முன்னிலைப்படுத்தி விளித்தல்.
  உ - ம்: வாரீர் சகோதரர்களே!
- எடுத்துக்காட்டுக்களைக் கையாண்டு நியாயித்து விளக்குதல்.
- வினாக்களை வினாவி, தம் கருத்தை வலியுறுத்துதல்.

(ஆ) தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை
- புதுமைப்பித்தன்

நாகரிகம் என்பது என்ன? பிராதஸ்னானம், திருநீற்றுச் சம்புடம் ஆகியவற்றை வைத்துச் சிலர் நாகரிகத்தை அளக்கின்றார்கள். வேறு சிலர் ஒரு வெடிகுண்டுக்கு இருக்கும் நாச சக்தியையும் மின்சார விளக்கின் வெளிச்ச உக்கிரத்தையும் கொண்டு கணிக்கிறார்கள். இன்னும் சிலருக்கு ஏன் ..... இப்படியே எத்தனை விதமானாலும் அடுக்கிக் கொண்டே போகலாம். நாகரிகம் என்ற கருத்து ஓரளவு மேற்சொன்னவற்றின் களையுடன் சோபிக்கும் ஒரு தன்மை என்பதுடன் அதற்கு அதீதமானதுமாகும். நாகரிகம் என்பது, சமுதாயம் இற்றுப் போகாமல் எடுத்துக்காட்டிய ஞாபகச் சரடு; நினைவுப் பாதை; சமுதாயம், எறும்புச் சாரை போல் ஊர்ந்து ஊர்ந்து, பழக்கப்பட்டுப் போன பாதை; அது இருந்து வருவதற்கு உயிர் கொடுத்து வருவது. இந்த ரீதியில் கவனித்தால், நாகரிகம் என்பது வெறும் பிழைப்புக்கும், பிறகு சுகானுபவத்துக்கும், அதன் பிறகு உள்ளத்தில் உடைந்து மசியும் நினைவுக் கோயில்களுக்கும் ஆதாரபீடமாக அமைந்திருப்பதாகும். நாகரிகத்தை அமைக்கிறதற்குக் கிராமம் என்ன செய்கிறது?

கிராம வாழ்க்கை என்பது கிராமியமான ஒரு காரியம் அல்ல. ஏதோ வன போஜனத்துக்காகப் போகிறவர்கள், வழக்கமாக உட்காரும் ஸோபாவை இழப்பதால். தமக்குக் கிடைப்பதாகக் கருதிக் கொள்ளும் சுகானுபவம் போன்றதல்ல. 'கிராமத்துக்குப் போங்கள்' என்று உருக்கமான பிரசங்கங்கள் பட்டணத்துக்காரர்களை நெட்டி நெட்டித் தள்ளுகின்றன. சார்,''நான் ரிட்டயரானதும் ஏதாவது சுகமா ஒரு கிராமத்திலே போய்க் கழிக்கலாம்னு ப்ளான் போட்டிருக்கேன். நீங்க என்ன நினைக்கிறியள்?'' என்கிறார் ஒருவர். இருபத்தியைந்து வருஷ உழைப்பால் உடலைக் கெடுத்துக் கொண்டதுடன், நேர்ச்சைக் கடனுக்காகக் கையைக் கும்பிட்டபடி உயரத் தூக்கி சூம்பவைத்துக்கொண்ட பைராகி மாதிரிக் காலை பத்து மணி முதல் மாலை 5 மணி வரை மூளையை ஒரே திசையில் விரட்டி விரட்டி இற்றுப்போக வைத்துக்கொண்ட ஒருவருக்குத் தாம் எரிந்து சாம்பலாக வேண்டிய சுடுகாட்டுக்கும், தம்முடைய மிச்ச வாழ்வுக்கும் இடையில் கிடக்கும் ரேழியாக கிராமம் தென்படுவதில் ஆச்சரியமில்லை. அது அவர் பண்ணின புண்ணியம். டில்லி சர்க்கார் காரியாலயத்தில் ஒரு மகன், என்ஜினியரின் கம்பெனியில் ஒரு மகன், ஒரு அட்வகேட் ஜெனரலின் மகனுக்கு சக தர்மிணியாக ஒரு மகள், காலேஜுக்கு ஐம்பது மைல் வேகத்தில் மோட்டார் சைக்கிலில் போவதுதான் மோட்ச சாம்ராஜ்யம் என்று நினைக்கும் சுந்தா, இவ்வாறு ஒருபடியாகத் தமது வாரிஸ் வர்க்கத்தைப் பங்கீடு செய்துவிட்டு, தம்முடைய அஜீரணம், 1936 வருஷ மோட்டார் கார், தொய்ந்துபோன காதில் வைத்து ஊசலாடும் வைரக்கம்மல் மனைவி, விட்டமின் விசாரம், திருக்குறள் உபாசனை ஆகியவற்றுடன் இவர் போய் ஒரு கிராமத்தில் குடியேறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். பத்திரிகையும், பழக்கூடையும் பட்டணத்திலிருந்து வந்து கொண்டே இருக்கும். ஆறு நிறையத் தண்ணீர் போனாலும் வென்னீரில்தான் குளிப்பார். உடம்புக்குள் உயிர் பெய்வதுபோல தென்றல் இழைந்தாலும் பிளானல் சட்டை போட்டுக்கொண்டு, வெள்ளிப் பூண் தடியோடு உலாவ, அதாவது வாக்கிங் போவார். எதிரே உட்காந்திருக்கும் வெட்டியான் கைகட்டி வாய் புதைத்து, ''எசமான் புத்தி'' என்று சொல்லிக் கொண்டு எழுந்திருப்பான். அவ்வளவுதான் அவர் கிராமத்தில் அனுபவிக்கப் போகிறதும், அனுபவிக்கிறதும். ராவணன், மண்ணோடு பெயர்த்துச் சீதையைத் தூக்கிக்கொண்டு போய், அசோக வனத்தில் சிறை வைத்தானாம். அது நிஜமோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் சொன்னேனே, இந்த மாஜி உத்தியோக வர்க்கம், அது பட்டணத்தில் கொஞ்சம் பெயர்த்துக்கொண்டு போய், கிராமத்தில் போட்டு, அதன்மேல் உட்கார்ந்துகொண்டுதான் கிராமத்தைப் பார்க்கிறார்கள்; கிராமத்தை அனுபவிக்கிறார்கள். இவர்களுக்குக் கிராமம் தென்படாது; அனுபவத்துக்கும் கிட்டாது. இவர்களது இந்த ராவண கைங்கரியத்துக்குக்குள் அகப்படாத கிராமம் என்பது என்ன என்று கேட்கிறீர்களா? அப்படிக் கேளுங்கள்.

நீங்கள் நெல்லுக் காய்ச்சி மரம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? உணவு வகைகளில் ஒன்றைக் கொடுக்கும் புல் வகையில் ஒன்றல்லவா என்று தாவர நிபுணர் உறுமுகிறார். ஆமாம். நெல்லுக் காய்ச்சி மரம் என்றால், பட்டணத்துக்காரனைப் பற்றிக் கிராமவாசி செய்யும் கிண்டல்

என்று அர்த்தம். உங்கள் மோட்டார் காரை அவன் உன்னிப்பாகப் பார்த்தால், நீர் அவனை உதாசீனமாகப் பார்க்கிறீர் அல்லவா? அதற்கு அவனுடைய பதில் அது.

கிராமத்தில் சினிமா இருக்காது; ஷேவிங் ஸோப் கிடையாது; சிகரட் அகப்படாது; ஆனால் சுகம் உண்டு; அதாவது வாழத் தெரிந்தவர்களுக்கு.

எனக்குத் தெரிந்த கிராமத்தைக் கொஞ்சம் வர்ணிக்கிறேன். அதற்கு ஒரே ஒரு தெரு தான் உண்டு. அக்கிரஹாரம் இல்லை. தெருவின் ஒரு கோடியில் கிராம முனிஸீபும் மறு கோடியில் கணக்கப்பிள்ளையும் இருக்கிறார்கள். இருவர் கோபத்துக்கும் ஆளாகாமல் பிழைத்துக்கொள்ளத் தெரிந்த தலையாரி, இந்தத் தெருவுக்குக் கூப்பிடு தூரத்தில் உள்ள மறவர் தெருவில் இருக்கிறான். இன்னும் பத்துப் பதினைந்து வீடுகள், இந்த வீர மறக் குலத்துக்கு நிழல் தருகிறது. இவர்கள் வாளையும் வேல்கம்பையும் விட்டெறிந்து ரொம்ப காலமாச்சு. ‘‘சாதியிலே மறவனாக்கும்’’ என்று அதட்டிக் கொண்டு, ஏர் பிடித்து உழுகிறார்கள். இவர்களுக்கும் எட்டாத் தொலைவில் பள்ளர்கள் சேரி. நாம் நினைவை விட்டு விரட்ட முயலும் கெட்ட நினைப்பைப்போல, அவர்கள் அங்கு அக்ஞாதவாசம் பண்ணுகிறார்கள். ஊருக்கு ஒரு மைதானம் உண்டு. சாதாரணமாக மாடு படுத்திருக்கும்; ஊர்த் தேவதை திருவிழாவில், வானத்தையே கூரையாகக் கொண்ட கலைமண்டபமாகும். சாணி தட்டவும், நெல் உலர்த்தவும் ஏற்றவையானது. இந்த ஊரிலே சைவ சாப்பாட்டைச் சமயா சமயத்தில் நிவேதனமாகவும் பொதுவாக அந்தக் கிராமத்தான் வணக்கத்தையும் பார்த்துப் பசியாறும் பிள்ளையாருடைய கோவில் உண்டு.

ஊர் எல்லையிலே ஊரின் காவல் தேவதை பேராய்ச்சி கோவில் உண்டு. கோவில் - கோவில் என்றதும் பிரமாதமான கற்கனவுகள் என்று நினைத்து விடவேண்டாம். கிராம முனிசீபு பிள்ளையவர்கள் வீட்டைப்போல அடக்கமானதுதான்; அவரது மன இருட்டைப்போல இங்கே கர்ப்பக்கிரகமும் இருட்டிக் கிடக்கும். கலசம் மட்டும் பேராய்ச்சி கோவிலை, கோவிலென்று வேறுபடுத்திக் காட்டும்; மற்றப்படி ஒன்றுதான். இந்த தேவதை அசைவம். வருஷத்துக்கு ஒரு தடவையாவது ரத்தம் காணவேணும். இல்லாவிட்டால், குடியே முழுகிப் போச்சு.

பட்டப் பகலானாலும் கர்ப்பக்கிரகத்தில் கும்மிருட்டு. கூர்மையாகக் கவனித்தால், வெள்ளையும் அதற்கப்புறம் அதன் மையத்தில் ஒரு கறுப்பு. இன்னும் பார்த்தால், விரைத்துப் பார்க்கும் கண்கள். பிறகு இருட்டு திரண்டு திரண்டு பத்தாயிரம் கைகளில் வேலும் சூலமும் தாங்கி, எல்லையையே இமை கொட்டாமல் காத்து நிற்பது தெரியவரும். பட்டப் பகலானாலும் அதைக் கண்டு பயப்படுவோரைக் கண்டால், நாம் அவர்களைக் கேலி செய்யக்கூடாது. நாகரிகம் பட்டுப்போன பிறகு மனித வர்க்கம், ஏதோ எப்போதோ ஒரு காலத்தில், எது பயத்துக்கு வித்தாக இருந்ததோ, அதைப் பயம் போக்க மருந்தாக வசக்கிக்கொள்ள முற்பட்ட ஒரு சாதனத்தைக் கண்டு மிரளாமலிருப்பது பிசகு. இருட்டிலே, காட்டிலே மின்னுகிற புலிக் கண்ணைப் பார்த்து அதில் அன்பு பெய்து வைத்துக் கற்பனை பண்ணின காரியம் இந்தப் பேராய்ச்சி. இந்தத் தாயின் மகத்துவத்தைப் பற்றிக் கிராமத்துப் புலவர் பாடுவதைக் கேட்டால், ஆஸ்பத்திரி எதற்கு, மலேரியா, மகமாரி எதிர்ப்பு மருந்து வகை, ஊசிகுத்து முறை எல்லாம் எதற்கு என்றெல்லாம் படும். அந்தவூரில் நிஜமான ஆட்சி பேராய்ச்சியின் ஆட்சிதான். அந்த ஊர்க்காரர்கள் பயப்படுகிறதுபோல, அவ்வளவு கொடுமைக்காரி அல்ல அவள். மகா கண்டிப்புக்காரி.

அந்தவூர்க்காரர்கள் மனப்பண்பாடு நீங்கள் எதிர்பார்க்கிற மாதிரி அவ்வளவு நாஸூக்காக இருக்காது. மிஞ்சி மிஞ்சிப் போனாலும் அவர்கள் கற்பனை எல்லாம்,

சோளப் பொரி மத்தியிலே
சுட்டு வச்ச தோசையைப் போல்
சுட்டு வச்ச தோசையைப் போல்
தோணுமிந்தச் சோதி நிலா.

என்றுதான் அவர்கள் பாடுவார்கள்.

அருந்த அமரர் கலக்கிய நாள்
அமுதம் நிறைந்த பாற்கலசம்
இருந்த திடைவந்து எழுந்ததென
எழுந்த தாழி வெண்திங்கள்.

என்று ஒரு சந்திரோதயத்தில் இதிகாச நாடகத்தைப் பார்க்கும் மனப்பண்பு அவர்களிடம் தென்படாது. நெஞ்சிலும் தோளிலும் உரம் உண்டு. உள்ளத்தில் பரிவு உண்டு.

மேழி பிடிக்கும்கை,
வேல் வேந்தர் நோக்கும்கை
ஆழி பிடித்தே அருளும்கை.

என்று அவ்வைக் கிழவி சொன்னதுபோல, ரொம்பவும் பின்னிப் பிணைந்த கைத்தொழில் நாகரிகமாக இருந்தாலும், சமுதாயத்தின் ஸ்திரத் தன்மைக்கு அவசியமும் ஆதாரமுமானது விவசாயம்; பலர் எண்ணுகிறது போல மட்டம் அல்ல.

தமிழ் இலக்கியத்திலே ஒரு கிழவி திரிந்து வருகிறாள். அவளுக்குப் பட்டணத்து நாகரிகத்தின் நெடி பிடிக்காது. எடுத்தெறிந்து பேசி உதறியடித்து விடுவாள். கிராமவாசிகள் உள்ளப் பண்பைக் காண்பதற்கு செய்து வைத்ததுபோல இருக்கிறது அவளுடைய பாட்டு.

அண்டி நெருக்குண்டேன்,
தள்ளுண்டேன் நீள் பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்.

என்று சுருக்கமாகச் சொல்லுகிறாள். இது எங்கே என்று கேட்டால் அதைவிட வினோதமாக இருக்கும்.

''வண் தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்தில்
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள்''

என்று பொக்கை வாயைக் காட்டிக் கேலி செய்கிறாள் கிழவி. அவள் பார்த்தது எல்லாம், ''நான்மாடக் கூடல் வலிது'' என்பதுதான்.

''வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம் பசந்து - பொய்யாய்
அடகென்று சொல்லி அமுதத்தை ஈந்தாள்
கடகம் செறிந்த கையாள்''

என்று பெண்ணின் வளைபோட்ட கை இலக்கியத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அவள் கண்ட கைகள்தான் அது.

இன்னொருவன் அவன் பேர் பூதன். பெயர்தான் ஆளை மிரட்டுகிற மாதிரி.

வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முறமுறெனவே புளித்த மோரும்,

அவ்வைக் கிழவியின் பசியை ஆற்றுகிறது.

கிராமங்கள், இந்த மாதிரி திசைமாறித் திரிவோருக்கு மட்டும் அன்ன சத்திரமல்ல; நாகரிகத்தின் முதற்படி அன்னவிசாரம். பசிப்பகையை விரட்டும் முதல் மதில் கிராமங்கள். சமுதாயத்தின் சித்தம் அல்லது விவேகம் மாதிரி நகரங்கள் இருக்கலாம்; இருக்கவேண்டும். ஆனால் அவற்றின் உயிர்ப்புக்கும் தென்புக்கும் தெளிவுக்கும் அவசியமான ரத்தத்தைத் தருபவை

கிராமங்களேயாகும். கிராமம் தூர்ந்துவிட்டால், நகரம் பாழ். இது பொது நியதி. மிகவும் பின்னிப் போன யந்திர நாகரிகம் வந்துவிட்டாலும் அந்த அடிப்படைக்கு வாய்ப்பான கிராமங்கள் இருந்துதான் தீரும். எல்லாம் பட்டணங்களாகிவிட முடியாது. பட்டணங்கள் என்றால், சிந்தனையின் பயனால் இயற்கையின் கை பார்க்காமல் வாழ மனிதன் வகுத்துக்கொள்ளும் ஏற்பாடு என்பதுதான் பொருள்.

கன்னலென்ற சிறு குருவி ககனமழைக் காற்றாமல்
மின்னலென்னும் புழுவெடுத்து விளக்கேற்றும் கார்காலம்

என்று பட்டணத்துக் கவிராயர் சமத்காரமாகப் பாடி விடுவார்கள்; ஆனால், உடை முள்ளையும் இண்டஞ் செடியையும், சுள்ளென்று அடிக்கும் வெயிலையும், ஆற்று வெள்ளத்தையும் கொடுங்காற்றையும் சகாக்களாகப் பாவித்து, அவற்றுடன் சேர்ந்து அவற்றையும் வசக்கி வயலில் வளத்தைப் பார்க்கிறவன் வாழுமிடந்தான் கிராமம்.

''வரப்பு உயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்''

இதுதான் சமுதாய வளர்ச்சியின் ஆதார சக்தி. பட்டணத்தில் பிழைக்கலாம், வாழமுடியாது. தனிமையாக நடமாடப் பட்டணம் வாக்கானது. ஆனால் கிராமத்தில் ஒதுங்கி வாழ உங்களை விடமாட்டார்கள். யாராவது புதிதாக வந்துவிட்டால் போதும். ''யாரைத் தேடுதிய? ஓ! அவுகளா; ஏலே காத்தான், நாவன்னா வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போ'' என்று வீட்டு வரைக்கும் கொண்டு போய்விட்டுத் திரும்புவார்கள். மறுநாள் விடியற்காலம் பார்த்துவிட்டால் நீங்கள் ஒதுங்கி ஒதுங்கிப் போனாலும் உங்களை வாயைத் திறந்து நாலு வார்த்தையாவது பேச வைத்து விடுவார்கள். அவர்களுக்கு நேரம், அவகாசம் பார்க்காமல் வந்து உட்கார்ந்து பேசுவதற்குத் தெரியும். கிராமத்துக்காரன் ஒவ்வொருவனும், அந்த ஊர் சரித்திர ஆசிரியன். அந்த ஊர்ப் பிள்ளையார் பிரதிஷ்டை பண்ணினது, ஆலடி வயலில் வெள்ளம் மண்ணடித்து விட்டது. மூக்கன் மதகைத் திறக்காது போயிருந்தால். கரையே உடைத்துக்கொண்டு ஊர் அழிந்து போயிருக்கக்கூடிய ஆபத்து, நல்ல பாம்மை மண்வெட்டியினால் ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்கிப் போட்ட செம்பிலி, நடுச்சாமத்தில் பேராய்ச்சி ஊர் பார்த்து வருவதைப் பார்த்து ரத்தம் கக்கிச் செத்துப்போன தொப்ளான் ஆகிய எல்லோரையும் நீங்கள் வெகு சீக்கிரத்தில் பரிச்சயம் செய்துகொள்ள முடியும். அச்சடித்த புத்தகங்களைப்போல இவர்களுடைய சரித்திரங்களும் கொஞ்சம் அமிதமான புளுகுகள் நிறைந்திருக்கும். சமூக நலத்துக்காக அங்கீகரிக்கப்பட வேண்டிய சில பொய்களை சரித்திர சித்தாந்தம் அமைக்கிற மாதிரி இந்தக் கிராமத்து மனிதக் கும்பலும் தன்னுடைய வம்ச பரம்பரை இற்றுப் போகாமல் இருக்கக் கட்டிவைக்கும் ஞாபகக் கோவைதான் இவையும். சிறிது மட்டரகமான பொய்களாக இருந்தாலும் சரித்திரமென்றே மதிப்போம்.

''ஆற்றங்கரை மரமும், அரசவையில்
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே''

என்று பயப்படுகின்றான் கிராமத்துக்காரன். கிராமத்துக்காரனுக்குத் தன்னிச்சையாக நடமாடித் திரிவதற்கு இடவசதி வேண்டும். அவன் சிந்தனை சொற்பமாக இருந்தாலும், அது பறந்து திரிந்துவர விசாலமான இடம் வேண்டும் என்று ஆசைப்படுகிறான். பட்டணத்திலே தென்படும், குறிப்பிட்ட ஒழுங்குமுறை, ஜன நெருக்கத்தினால் எடுத்துக் கூட்டி அமைத்துக் கொண்ட ஏற்பாடுகள் எல்லாம் அவனுக்குக் கட்டோடு பிடிக்காது. அவன் பசி வந்தபோதுதான் சாப்பிட ஆசைப்படுவான்; ஆனால், உங்கள் ஹோட்டல்களில் பத்து மணிக்குப் போனால் மோரும் சாதமும் கிடைத்தால் உங்கள் அதிஷ்டம். பட்டணத்துக்கு வந்தால், முங்கி முழுகிக் குளிக்க, அவனுக்குக் குழாத் தண்ணீர் போதாது. இரண்டாவது நாள், ''அய்யா நான் போய்விட்டு வருகிறேன்'' என்று மூட்டையைக் கட்டிவிடுவான். நீங்கள் அங்கே போன இரண்டாவது நாளே ''ரொம்ப டல்லா இருக்கு சார்'' என்று சொல்லிப் புறப்பட்ட விடவில்லையா?

ஆசிரியர்: புதுமைப்பித்தன் (1906 - 1948)

சொ. விருத்தாசலம் என்ற இயற்பெயர் கொண்ட இவர் தமிழ்ச் சிறுகதையின் முடிசூடாமன்னன் என்று போற்றப்படுபவர். இவரது முதல் சிறுகதைப் படைப்பான 'குலோப்ஜான் காதல்' 1933இல் காந்தி இதழில் வெளிவந்தது. 1934 தொடக்கம் மணிக்கொடி சஞ்சிகையிலும் ஏனைய சஞ்சிகைகளிலும் எழுதி வந்தார். நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள், நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகள், 15 கவிதைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்புக்கள், புத்தக விமர்சனங்கள் என்பவற்றை எழுதியுள்ளார். திரைப்படத்துறையிலும் ஊழியன், தினமணி, தினசரி ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றியுள்ளார். மணிக்கொடி, கலைமகள், ஜோதி, சுதந்திரச்சங்கு, தமிழ்மணி, ஊழியன் முதலிய பத்திரிகைகளில் இவரது படைப்புக்கள் வெளிவந்தன.

1) இக்கட்டுரை மூலம் ஆசிரியர் கூறவந்த விடயம்:
தமிழர் நாகரிகத்தில் கிராமப்புற மக்களின் தனித்துவமான வாழ்க்கை முறையும் அதன் சிறப்பும்.

2) நாகரிகம் என்பதற்கு ஆசிரியர் தரும் விளக்கம்:
- சமுதாயம் இற்றுப் போகாமல் இருக்க எடுத்துச் சேர்ந்த ஞாபகங்களின் தொகுப்பு.
- சமுதாயம் நடந்துவந்த பழக்கப்பட்ட பாதை.
- இதுவரை இருந்து வருவதற்கு உயிர் கொடுப்பது.
- நாம் வாழ்வதற்கும், சுக அனுபவங்களைப் பெறவும் உள்ளத்தில் எழும் நினைவுகளுக்கும் அடிநாதமாக இருப்பது.

3) நகரவாசிகள் தமது ஓய்வு காலத்தில் கிராமத்திற்குச் சென்றாலும் அவர்கள் கிராம வாழ்வை வாழமாட்டார்கள் என்பதற்கு ஆசிரியர் தரும் நியாயப்பாடுகள்:
1. தமது சமிப்பாட்டு பிரச்சினை, மோட்டார் கார், வைரக்கம்மல் அணிந்த மனைவி, விட்டமின் மாத்திரைகள், திருக்குறள் உபாசனை என்பவற்றுடன்தான் இவர்கள் கிராமத்தில் குடியேறுவார்கள்.
2. பத்திரிகையும் பழக்கூடையும் பட்டணத்தில் இருந்து வரும்.
3. ஆறு நிறையத் தண்ணீர் இருந்தாலும் இவர்கள் வெந்நீரில்தான் குளிப்பர்.
4. தென்றல்காற்று வீசினாலும் அதை அனுபவிக்காது பிளானல் சட்டை போட்டுக் கொண்டு வெள்ளிப்பூண் தடியோடுதான் உலாவப் போவர்.

ஆகவே, இவர்களுக்குக் கிராம வாழ்க்கையின் அனுபவம் கிட்டாதது.

4) கிராம மக்களின் சிறப்புக்களாகக் கட்டுரை ஆசிரியர் கூறுபவை:
1. நாசூக்காகச் சொல்லத் தெரியாத, வெளிப்படையாகச் சொல்லும் மனப்பாங்கு.
2. நெஞ்சிலும் தோளிலும் உரம் உண்டு; உள்ளத்தில் பரிவு உண்டு.
3. திசைமாறித் திரிவோர்க்கு அன்னசத்திரமாகும் - விருந்தோம்பல் பண்பு.
4. நகர மக்களின் உயிர்ப்பான வாழ்க்கைக்கும் தெளிவுக்கும் மூல காரணமாக இருப்பது கிராம மக்களின் உழைப்பு.
5. நகரத்தைப் போல தனிமையான வாழ்க்கை வாழவிடாமல் எல்லோரையும் தம்முடன் இணைத்துக் கொள்ளும் பண்பு.
6. பசி வந்த போதுதான் சாப்பிடும் விருப்பம்.
7. கிராமம் தொடர்பான வரலாற்று அறிவைக் கொண்டிருத்தல்
8. இயற்கை அனர்த்தங்களையும் நண்பர்களாகப் பாவித்து, அவற்றுடன் சேர்ந்து அவற்றையும் வசப்படுத்தி வயலில் வளத்தைப் பார்க்கும் பண்பு.

5) தனது கருத்துக்களைக் கூறக் கட்டுரை ஆசிரியர் பயன்படுத்திய உத்திகள்.
1. நகர்புற மக்களின் வாழ்க்கை முறையையும் கிராமப்புற மக்களின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு விளக்குதல்.
2. இலக்கியப் பாடல்களை ஆதாரம் காட்டுதல்.
3. வினாக்களைக் கேட்டுச் சிந்திக்க வைத்தல்.
உ - ம் : நீங்கள், நெல்லுக் காய்ச்சி மரம் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

4. தர்க்கரீதியாகக் கருத்துக்களை முன்வைத்தல்.
   உ - ம் : நகரவாசிகள் கிராமத்துக்கு வந்தாலும் அவர்கள் கிராம வாழ்க்கை வாழமாட்டார்கள் என்பதற்கு அவர் முன்வைக்கும் விளக்கங்கள்.
5. அணிகளைப் பயன்படுத்தி விளக்குதல்.
   உ - ம் : - எறும்புகளைப் போல ஊர்ந்து ஊர்ந்து பழக்கப்பட்டுப் போன பாதை - **உவமை**
   உள்ளத்தில் உடைந்து மசியும் நினைவுக் கோயில்களுக்கு ஆதாரபீடமாக அமைந்திருப்பது - **உருவகம்**
6. பேச்சு வழக்கில் உள்ள பிறமொழிச் சொற்களைத் தேவைக்கேற்ப பயன்படுத்துதல்.
   உ - ம் : ஸோபா, ஷேவிங், முன்ஸீப், என்ஜினியர்

அரும்பதங்களுக்கான விளக்கம்

1. பிராதஸ்னானம் - அதிகாலைக் குளிப்பு
2. திருநீற்றுச் சம்புடம் - திருநீறு வைக்கும் பாத்திரம்
3. அதீதம் - எட்டாதது
4. ஞாபகச்சரடு - ஞாபகங்களின் தொகுப்பு
5. ஆதாரபீடம் - கற்சிலையைத் தாங்கும் அடிக்கல்
6. வனபோஜனம் - சோலை முதலியவற்றில் நடத்தும் விருந்து
7. நெட்டி நெட்டி - நெருக்கித் தள்ளுதல்
8. நேர்ச்சைக் கடன் - நிவர்த்திக்கடன் / நேர்த்திக்கடன்
9. பைராகி - துறவி
10. ரேழி - இடை கழி / கட்டடப் பகுதி இரண்டை இணைத்து நிற்பது
11. சகதர்மினி - மனைவி
12. மாஜி - முன்னாள்
13. ராவண கைங்கரியம் - மண்ணோடு சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனின் செயல்
14. அக்கிரஹாரம் - பிராமணர் குடியிருப்பு
15. முன்சீபு - கிராம அதிகாரி
16. அஞ்ஞாதவாசம் - மறைந்து வாழுதல்
17. நிவேதனம் - கடவுளுக்கு படைக்கும் அமுது
18. வசக்குதல் - வசப்படுத்துதல்
19. நாஸூக்காக - சூட்சுமமாக, மென்மையாக, நயமாக
20. மேழி - கலப்பை
21. வினோதம் - புதுமை
22. வழுதி - பாண்டிய மன்னன்
23. முங்கி - நீருள் மூழ்கி
24. அஜீரணம் - உணவு செமியாமை
25. உபாசனை - ஆராதனை / வழிபாடு
26. பிளானல் சட்டை - தடித்த துணியினாலான சட்டை
27. விசாரம் - ஆராய்ச்சி
28. பிசகு - தவறு, தடை, ஒவ்வாமை
29. இற்றுப்பொதல் - அழிந்து போதல்
30. சமத்காரம் - பேச்சுத் திறன் / செய்யுள் நயம் / அழகு
31. தூர்ந்துபோதல் - அழிந்துபோதல்
32. அமிதம் - அளவுகடந்தது
33. வாக்கானது - ஏற்றது

(இ) மானுடம் தழுவிய கவிஞர்
- பேராசிரியர் க.கைலாசபதி

இவ்வாண்டு தமிழ் கூறும் நல்லுலகம் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. உலகின் பல பகுதிகளில் பாரதிக்கு அஞ்சலி செலுத்தப்படுகின்றது. சில மொழிகளில் பாரதியின் ஆக்கங்கள் பெயர்க்கப்படுகின்றன. தமிழ்க் கவியாகத் தோன்றிய பாரதி, நாளடைவில் அனைத்திந்தியக் கவியாகவும் உலகப் பெருங்கவிஞருள் ஒருவனாகவும் ஏற்றுக்கொள்ளப்படும் நிலை எழுந்துள்ளது. இப்பெருமை பாரதிக்கு எவ்வாறு கிட்டியது? அவனது உள்ளார்ந்த ஆற்றலையும் உலக நோக்கையும் பலரும் உணரத் தொடங்கியதும் அவன் ஒரு மகாகவி என்னும் உண்மை உறுதிப்படலாயிற்று. இலக்கிய கர்த்தாக்களின் புகழுக்கும் பரிணாம வளர்ச்சி உண்டு.

உலக இலக்கிய ஆசிரியர்களின் உன்னதமான வரிசையில் பாரதியாரை வைத்து நாம் எண்ணுவதைப் போலவே தமிழ் இலக்கியப்பரப்பிலும் காலத்துக்குக் காலம் உருவாகிய பெரும்புலவர்களின் வரிசையில் அவரை வைத்துப் பாராட்டுகின்றோம். வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி என்று வரிசைப்படுத்துவது இப்போது வழக்கமாகிவிட்டது. கால அடைவை ஒட்டியது இவ்வரிசை. சங்ககாலத்தில் வாழ்ந்த சான்றோரில் ஒருவரான பரணரிலிருந்து நமது காலத்தில் வாழ்ந்த பாரதிதாசனார் வரையில், தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் சிறப்புக்குரிய புலவர்கள் எத்தனையோ பேர் தோன்றியிருக்கின்றனர். ஆயினும் மகாகவிகள் என்று விதந்துரைக்கக் கூடியவர்கள் வெகு சிலரே.

ஆற்றல் வாய்ந்த கவிஞராக விளங்கிய பாரதியாரே தனக்கு முன் சென்ற கவிகுல திலகங்களை தமிழ்ப்பெருங் கவிஞரை நினைவு கூர்ந்த வேளைகளில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையுமே குறிப்பிட்டிருக்கின்றார். ஔவையார் முதல் இராமலிங்கர் வரை பல புலவர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் சிறப்பியல்புகளை விவரித்திருக்கிறாரெனினும் வேற்று மொழியாளரும் ஏற்றுப் போற்றக்கூடிய தமிழ்க் கவிஞர்களாக முற்கூறிய மூவரையுமே குறிப்பிட்டார். பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டிருப்பதைப் போலவே அவரின் அபிப்பிராயங்கள் பலவற்றையும் அடிப்படை உண்மைகளாக ஏற்றுக்கொண்டுள்ளது. வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும் பாரதிக்கு முன்னரே j kpo; , y f f pa c y f py ; ngUi k f F upa t uf s ha f ; f Uj ggl l t uf s ; "கல்வியிற் பெரியர் கம்பர்" என்ற முதுமொழி நன்கு பிரசித்தமாதே. வள்ளுவரின் குறளடிகளை எடுத்தாளாத தமிழ்ப்புலவர்கள் இல்லை என்றே கூறிவிடலாம். சிலம்பின் செல்வாக்கு நாட்டார் இலக்கியம் வரை படர்ந்திருப்பதை நாம் அறிவோம். ஆயினும் முப்பெரும் கவிஞர்களைப் பாரதியார் சிறப்பித்துக் கூறியபின் அதுவே நம்மவர்க்கு ஆதாரமான அளவு கோலாயிற்று. பாரதியார் பாராட்டியதாலும் முன்சென்ற மூவர்க்கும் பெருமை பெருகியிருக்கிறது.

இவ்விடத்தில் ஒன்று கவனிக்கத்தக்கது. தனக்கு முன்னிருந்த பெருங்கவிஞரை இனங்கண்டு வரிசையறிந்து பாரதியார் கூறும் பொழுது அறிந்தோ அறியாமலோ தனது இலக்கிய நோக்கினை அடிப்படையாகக் கொண்டே அவர்களை வரிசைப்படுத்தியிருப்பான் என்று கூறுவது தவறாகாது. பொதுவில் நாம் "இலக்கியம்" என்று கூறும்பொழுது நம் உள்ளத்தில் - சிந்தனையில் - பல எண்ணக்கூறுகள் ஏககாலத்தில் எழுகின்றன. ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலகநோக்கு இவற்றிற்கேற்ப இலக்கியம் பற்றிய 'வரைவிலக்கணம்' வேறுபடும். எனினும் சாதாரணமாக, சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலிய சிறப்புக்களும் உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக்குப் புதிய விளக்கத்தைத் தரவல்ல கருத்துமே கவிதைக்கு உயிர்நாடியாக இருப்பதைப் பலரும் ஏற்றுக்கொள்வர். இது ஒரு கவிஞனின் பொது இலக்கணம்.

எல்லாக் கவிஞர்களுக்கும் இச்சிறப்பியல்புகள் ஏதோ ஒரு அளவில் அமைந்திருத்தல் வேண்டும். இவர்களுள் பெருங்கவிஞராகப் பரிணமிப்பவர்கள் மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருக்கும் அதே வேளையில், தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை அறிந்து, அவற்றுக்குப் பரகாரம் காண முற்படுபவர்களாகவும் இருக்கின்றனர். தத்தம் அநுபவங்களின் துணைகொண்டு கவிபாடத் துவங்கும் பலர் அவ்வநுபவங்களின் மட்டத்திலேயே தங்கிவிடுகின்றனர். ஆனால் பெருங்கவிஞன் தன் சொந்த அநுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுகுலத்தின் நிலைமையினை உணர்ந்து அதனோடு தான் கலந்து எழுதுகின்றான். உதாரணமாக, பாரதி அடிமைப்பட்டுக் கிடந்த பாரத சமுதாயத்தில் வாழ்ந்தவன். தன்னளவிலும் தனது சமுதாயத்தைப் பொறுத்த அளவிலும் அடிமைத்தனத்தை அறிந்தவன். அடிமைத்தனத்தை உள்ளும் புறமும் கண்டவன். அது அவனது அடிப்படை அனுபவம். அவ்வனுபவத்துடன் உலகை நோக்கிய பொழுது வேறு பல சமுதாயங்களும் நாடுகளும் அடிமைத்தனத்தில் தாழ்வுற்று இழி நிலையிலும் அல்லற்படுவதைக் கண்டார். அங்கே பொதுமை உணர்வு எழுகிறது. 'மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக' என்று உலகளாவிய கண்ணோட்டத்தில் அவன் குரல் எழுப்பினான். இந்த உணர்வுடனேயே பழந் தமிழ்ப் பனுவல்களையும் நோக்கினான்.

வையத்தில் மானுடன் வாழ்வாங்கு வாழ வழிகாண முற்பட்ட வள்ளுவன், இராமராச்சியம் என்ற கற்பனைக்கு அடிப்படையான இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் உருவாக்கிய கம்பன் அறம், அரசியல், வாழ்க்கை இவற்றுக்கிடையே இருக்கக்கூடிய தொடர்பு எத்தகையது என்பதை குடிமக்கள் காப்பியம் ஒன்றின் மூலம் அலசி ஆராய்த இளங்கோ ஆகியோரைப் பாரதி கண்டான். இம்மூவருமே தனி ஒரு அரசனைப் பற்றியோ, தெய்வத்தைப் பற்றியோ, வள்ளலைப் பற்றியோ அல்லது குறிப்பிட்ட குலம், சாதி என்பவற்றையோ பாடினார் அல்லர். மனுகுலம் பற்றியே பாடினார். ''மானுடம் வென்றதம்மா'' என்றே கம்பனும் குறிப்பிட்டான். தாம் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிறுவனங்களும் நியதிகளும் குறைபாடுடையவை என்னும் நம்பிக்கையுணர்வின் உந்துதலினாலேயே இப்பெருங்கவிஞர்கள் மானுடம் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகுகளைப் படைக்க முற்பட்டனர். காலத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த அவர்கள், காலத்தைக் கடந்து சிந்தித்தனர்; செயலாற்றினர். அதனாலேயே காலத்தை வென்ற கவிஞராகினர். வள்ளுவன் வகுத்த அறம் அவன் காலத்து நடைமுறைகளின் திரட்சி அன்று. மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவன் விழைந்த சமுதாய நெறியை நூலில் வடித்தான். தனது காலத்தின் அவலங்களையும் பிரச்சனைகளையும் உணர்வு பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் தெளிந்து கொள்ளும் ஒருவனே கால உணர்வுடன் செயற்பட முடியும். அவன் கூறும் முடிவுகள் பூரணமானவையாக அமையாமற் போகலாம். ஆனால் இவ்வுலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றியவுடனேயே அவனது படைப்புகளுக்குத் தனியாற்றல் பொருந்தி விடுகின்றது. அத்தகைய ஆற்றலை அளவு கோலாகக் கொண்டே பெருங்கவிஞர்களை இனங்கண்டு கொள்கின்றோம். அந்த முறையிலேயே வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி முதலியோர் மகாகவிகள் என மதிக்கப்படுகின்றனர்.

சிறப்பு மலர் - திருக்குறள் மகாநாடு (1982)

ஆசிரியர்: பேராசிரியர் க.கைலாசபதி (1933 - 1982)

மலேசியாவில் கோலாலம்பூரில் பிறந்தவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டமும் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார். தினகரன் பத்திரிகையில் ஆசிரியராகவும் 1961 முதல் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் 1974 லிருந்து இலங்கைப் பல்கலைக்கழக - யாழ்ப்பாண வளாகத்தின் முதல்தலைவராகவும் திகழ்ந்தவர். அடியும் முடியும், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், தமிழ் நாவல் இலக்கியம், இலக்கியச் சிந்தனைகள், ஒப்பியல் இலக்கியம், ஈழத்து இலக்கிய முன்னோடிகள், இரு மகாகவிகள், இலக்கியமும் திறனாய்வும், பாரதி ஆய்வுகள், தமிழில் வீரநிலைக் கவிதைகள் முதலியன இவரது நூல்கள்.

கட்டுரையாசிரியர் கூற விழைந்த விடயம்

வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி முதலான பெருங்கவிஞர்கள் தம் சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுக்குலத்தின் நிலைமையினை உணர்ந்து அதனோடு கலந்து எழுதுகின்றனர் என்பதை இக்கட்டுரையினூடாக க.கைலாசபதி வெளிப்படுத்துகிறார்.
(1982 ஆம் ஆண்டு திருக்குறள் மாநாட்டு சிறப்பு மலரில் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது).

கட்டுரையின் பிரதான அம்சங்கள்

- வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி முதலான பெருங்கவிஞர்களை பாரதியார் அறிந்தோ அறியாமலோ இலக்கிய நோக்கினை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தினார்.
- ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலகநோக்கு இவற்றுக்கேற்ப இலக்கியம் பற்றிய வரைவிலக்கணம் மாறுபடும்.
- சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலிய குறிப்புக்களும் உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக்கு புதிய விளக்கத்தை தரவல்ல கருத்துமே கவிதைக்கு உயிர்நாடி.

பெருங்கவிஞரிடத்தில் இருக்க வேண்டியவை

- மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருத்தல்.
- தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து, அவற்றுக்குப் பரிகாரம் காண முற்படுதல்.
- தனது காலத்தின் அவலங்களை உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் தெளிந்து கொள்ளும் தன்மை.
- சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது, மனுக்குலத்தின் நிலைமையினை உணர்ந்து, அதனோடுதான் கலந்து எழுதல்.
- காலத்தைக் கடந்து, சிந்தித்துச் செயலாற்றுதல்.
- தன்னையும் தன்னுடைய சமூகத்தையும் போலவே, பிற நாடுகளும் பிற சமூகமும் அடிமைப்பட்டுக் கிடப்பதைக் கண்ட பாரதி, **"மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக"** எனப் பாடினான்.
- வையகத்தில் மானுடன் வாழ வழிகாட்ட முற்பட்டவர் வள்ளுவர்.
- இராமராச்சியம் என்ற இலட்சியமான அரசு ஒன்றை இலக்கியத்தில் உருவாக்க முற்பட்டவர் கம்பர்.
- அறம், அரசியல், வாழ்க்கை இவற்றுக்கிடையே இருக்கக்கூடிய தொடர்பு எத்தகையது என்பதைக் குடிமக்கள் காப்பியம் ஒன்றின் மூலம் அலசி ஆராய்ந்தவர் இளங்கோ.
- "மானுடம் வென்றதம்மா" என்று குறிப்பிட்டவர் கம்பர்.
- தாம் வாழ்ந்த காலத்து சமுதாய நிறுவனங்களும் நியதிகளும் குறைபாடுடையவை என்னும் நம்பிக்கையுணர்வின் உந்துதலினால், இப்பெருங்கவிஞர்கள் மானுடன் கேடின்றி வாழத்தக்க கற்பனை உலகைப் படைக்க முற்பட்டனர்.

காலத்துக்கு கட்டுப்பட்டு வாழ்ந்த பெருங்கவிஞர்கள் காலத்தைக் கடந்து சிந்தித்து, செயலாற்றிய மையால் காலத்தை வென்ற கவிஞர்களாகக் கருதப்பட்டனர். மனிதன் கடைப்பிடிக்க வேண்டும் என்று விழைந்த சமுதாய நெறியையே வள்ளுவன் தனது நூலில் வடித்தான். இதனையே வள்ளுவர் வகுத்த அறமாகக் கட்டுரையாசிரியர் கருதுகிறார்.

****

12. சிறுகதைகள்

அ. தேர்

முகத்தார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் துயிலெழுவது ஒரு திருக்காட்சி. தலையணையையும் போர்வையையும் உட்திணித்துப் பாயைப் பக்குவமாகச் சுருட்டி வைப்பது ஒரு கலை. கொட்டாவியை மறைபொருளெதுவுமின்றி ஊளையிட்டு, கைகளை நீட்டி மடக்கி, உடலை உலுப்பிச் சோம்பலை முறித்தால், துயிலெழு படலத்தின் ஓரம்சம் நிறைவுறும். தலைமாட்டில் நெருப்புப் பெட்டியும், தாவடிப் புகையிலைச் 'சுத்து'ம் எப்பொழுதும் தயாராக இருக்கும். 'சுத்தை' நேர்த்தியாகப் பற்ற வைத்தால், கால்கள் தம் இச்சையாகவே கொல்லைப் பக்கம் நடக்கத் தொடங்கும். எப்பொழுது தொடக்கம் வைகறை துயிலெழும் வழக்கத்தை வாலாயப்படுத்திக் கொண்டார் என்பது அவருக்கே ஞாபகமில்லாத சங்கதி.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவிட்டார். கடிகாரத்தைப் பார்க்காது, கடிகாரத்தின் விநாடி முள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக்கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லையிலே கழிவுக் கருமத்தை முடித்து, அடி கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பைப் பாதியிற் கிடக்கும் உமிக்கரியினாற் பற்களைச் சுத்தஞ்செய்து, திண்ணைக்கு மீளுவார். 'இறப்பில்' தொங்கும் வெண்சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலக்கை விரல்களுக்குள் எடுத்து, ''சிவ... சிவா...'' என்று உச்சரிக்கும் பொழுது, நல்லூர்க்கந்தனின் உதயகாலப் பூசை மணி கேட்கும்.

இன்றும் ''சிவ... சிவா...'' என்று விபூதி பூசும் பொழுது, உதய காலப் பூசை மணி கேட்கின்றது. கால ஓட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்தியக் கருமங்கள்.

'இன்று வருடப் பிறப்பு...' முதன்முதலில் இந்த எண்ணந்தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப்பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடிமறைந்துவிட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு; இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறுநாள் வந்த வருடப்பிறப்பு; சௌந்தரம் கல்யாணமாகி, மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு; தகப்பனுக்குத் தலைக்கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப்பிறப்பு; பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு - இப்படிப் பல. காலஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது. முன்னர்போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெய்யில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப் பெட்டி பிட்டுச் சாப்பிட்டும், நாலு மரவள்ளிக்கிழங்கைச் சுட்டுப் பச்சை மிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பன இளைஞப் பருவ நினைவுகள். பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக்காரராக்கியதினால் இரண்டு பாண் துண்டுகளைக் 'கொறி'க்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவிவிட்டது. படுத்தபடுக்கையாக வைக்கும்படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக்குணம் போன்ற எண்ணமும் மேலிடுகின்றது. திடீரெனக் குந்தி எழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாத வகையில் நடந்து கொள்ளுகின்றார். கடைக்குட்டி மகளைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை.

திண்ணையிற் குந்தி, கப்புடன் சாய்ந்து கொள்கின்றார்.

'அவள் பொடிச்சிதான் பாவம் தாயத்தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப் போட்டு, மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலை படிக்க வைக்கலாமெண்டு மூத்ததுகள் விரும்பினதுதான். வேணுமெண்டால், உதுகளின்ரை பொம்பிளைப் பிள்ளையள் படிச்சு, உத்தியோகம் பாக்கட்டும். இளையவனின்ரை பாடு பிழையில்லை. ஒரு மாதிரி ஒரு வேலையிலை கொழுவீட்டான். ஏதோ கொம்பனியிலைதான் வேலையாம். ஆனா, சம்பளம் புழையில்லை. மேலுக்கு நல்லா வரலாமெண்டு மூத்தவனும் மச்சான்மாரும் சொன்னாங்கள். அவன் கடைக்குட்டி எண்டு வீட்டோடை இருந்து சாப்பிட்டுப் பழகியவன். மூண்டு நாலு மாசம் அதுவுமில்லை.

கயிற்றப்பட்டு வாழ்ந்தால்தானே, பேந்து பின்னடிக்குத் தங்கடை பாடுகளைத் தாங்களே பாக்குங்கள். நல்லூரான்ரை புண்ணியத்திலை எல்லாம் தங்கடை சீவியப்பாடுகளைப் பாக்கக்கூடிய நிலைக்கு வந்துட்டுதுகள். என்ரை கெட்டித்தனம் என்ன இருக்கு? ஆண்டவன் அளந்தபடி நடக்குது - விடியப் புறக் கோச்சியிலே மூத்தவன் வருவான். அவன் மறந்தாலும் அலுத்தாலும் அவன்ரை மனுஷி கமலா இஞ்சை வராமலிருக்காள். என்னெட்டைக் கைவியளம் வாங்கிறதிலை அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை... ஓம்.... அதுகளின்ரை மூத்ததுக்கும் - உந்தப் புது நாணயப் பேர் சட்டெண்டு மனசிலை வாறேல்லை... அவள்தான் அம்ச தொனிக்குப் பத்துவயசுக்கு மேலை இருக்க வேணும்... என்ன பத்து? பதினொண்டுக்கு மேலை. கடுக்கண்ணுற பருவம்... ஓ, இவ போயே நேற்றெண்டாப் போலை இருக்குது... ஆனா, வருசம் அஞ்சாகுது. அவள் புண்ணியஞ் செய்தவள். எல்லாப் பாரத்தையும் என்ரை தலையிலே சுமத்திப் போட்டுப் போயிட்டாள்.'

இடைவெட்டில், மனோகரன் நேற்று எழுதியிருந்த கடிதம் முகத்தாருடைய ஞாபகத்துக்கு வருகின்றது. வருடப்பிறப்பன்றே கொழும்புக்குத் திரும்பிவிட வேண்டுமென்று எழுதியிருந்தான்.

'அதுவும் சரிதான். எங்கடை வாகடங்கள் நெடுகச் சரி வருமே? இப்பதான் போய் வேலையிலை சேந்திருக்கிறான். லீவு கீவு எடுத்துப் பழுதாக்கப்படாது.'

''அப்பனே முருகா.''

வீட்டின் சின்ன அறைக்கதவு திறக்கப்படுகின்றது. 'கடைக்குட்டி' பத்மாதான் வருகிறாள்.

'என்னதான் பேரளவிலை பெரியபிள்ளை எண்டாலும், வீட்டிலே சின்னப்பிள்ளைதானே? சரியா, இவ பார்வதிப்பிள்ளையை உரிச்சு வைச்ச மாதிரி இருக்கிறாள். இவளை ஒப்பேத்திப் போட்டனெண்டால், பேந்தென்ன? சிவனே எண்டு கண்ணை மூடலாம். இவன் மனோகரனை இவவின்ரை அண்ணரின்ரை பொடிச்சிக்குத்தான். பெடியங்களின்ரை காரியத்தை நிதானமாச் சொல்லேலா.'

முதற்காரியமாகப் பத்மா வீட்டு முற்றத்தைக் கூட்டி, சாணகத் தண்ணீர் தெளித்து முடிக்கின்றாள். வருடப் பிறப்பன்று விடியும் முன்னரே, அன்றைய வழமையான கடமைகளைச் செய்து முடிக்கும் வேட்கை. வருடப்பிறப்பன்று எல்லாக் காரியங்களையும் விக்கனமின்றி உரிய முறைப்படி நிறைவேற்றிவிட்டால், வருடம் முழுவதும் அவ்வாறே அமையுமென்னும் நம்பிக்கையில் ஊறித் திளைத்த மனம். வருடப்பிறப்பன்று பழங்கறிகளுக்கு மதிப்பில்லை. கறிச்சட்டிகளை அடுக்களைக்கு வெளியே, இடப்பக்கமாகவுள்ள செவ்விளநீர்க் கன்றடியிற் பரப்பி வைத்து, சாம்பல் தோய்த்தெடுக்கப்படும் 'பொச்சு' மட்டையாற் தேய்த்துக் கழுவத் தொடங்குகின்றாள். திண்ணையிலே குந்தியிருந்து சிந்தனையிலாழ்ந்திருக்கும் தந்தையை அவள் கண்கள் கவனிக்கின்றன. மரவள்ளிக்கிழங்கு காய்ச்சிய சட்டியில் அடிப்பிடித்திருந்த பாகத்தைப் பொச்சு மட்டையால் நன்றாகச் சுரண்டிக் கொண்டே பேச்சுக் கொடுக்கின்றாள்.

''என்ன அப்பு... இண்டைக்கு காலமைக் கோச்சியிலை மூத்தண்ணர் வருவாரல்லே?''

''ஓம் புள்ளை, சுப்பிரமணியம் வராமல் வருஷம் பிறக்குமே? என்னதான் இருந்தாலும் அவன் வருஷத்துக்கு வராமல் இருப்பானே?'' 'எப்படியும் அவன் வருவான். காதுப்பிடியிலை கமலா கூட்டியந்திடுவாள். கோச்சு இன்னும் நாவற்குழியைத் தாண்டியிருக்காது. இப்ப நடக்கத்துவங்கினாலும், நேரத்தோடை ஸ்ரேஷனுக்குப் போயிடலாம். ஆனா, அவனுக்கு உதொண்டும் புடிக்கிறேல்லை. ''நான் எங்கடை வீட்டுக்கு வாறதுக்கு ஆரும் வந்து வழி காட்டத் தேவையில்லை'' எண்டு எத்தினை கோசு கோவிச்சது எனக்கல்லோ தெரியும்?...'

''புள்ளை, தேத்தண்ணிக்கு உலை வைக்கல்லையே?''

''வைச்சிட்டன்.''

''கொக்கா பரிமளம் இன்னும் எழும்பல்லையே?... உங்கடை அத்தாரும் வலு நேரஞ்செண்டுதான் வந்தவர். சரியாச் சாப்பிட்டிருக்கவும் மாட்டார்.''

முகத்தாரின் இன்னொரு மகளான பரிமளத்தின் கணவனும் கொழும்பிலேதான் வேலை பார்க்கின்றான். பரிமளம் தைப்பொங்கலுக்குத் தந்தையின் வீட்டிற்கு வந்தவள், திரும்பிப் போகவில்லை. கணவன் சதாசிவம் நேற்றிரவு யாழ்தேவியிலேதான் திரும்பியிருக்கிறான்.

'பாவம். அதுகளுக்கு ஆண்டவன் ஒண்டும் குறை வைக்கேல்லை. இதுக்கிடையிலை முப்பதினாயிரம் கொட்டி புது மோடியிலை ஒரு வீடும் கட்டிப் போட்டுதுகள். கதைச் சாங்கத்திலை வைகாசி நாளுக்குத்தான் குடியேறுவினம் போலை கிடக்குது. பேந்தென்ன நெடுகிலும் குடியிருக்கப் போகினமோ? வாடகைக்குத்தான் விடுவினம். காரும் ஒண்டு வாங்கியிருக்கினமாம். அதை இன்னும் ஒருநாளும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரல்லே. அதுகளின்ரை அன்புக்கும் அந்நியோன்யத்துக்கும் ஒரு குழந்தையைத்தான் ஆண்டவன் குடுக்கேல்லை. சாதகத்திலை பின்னடிச் சந்ததி விருத்தி எண்டுதான் இருக்கு. ஏழு வருஷத்துக்குப் புறகுதான் சதாசிவமும் தலைச்சனாப் பிறந்தவனாம். கொழும்பிலை பேர்போன டாக்குத்தரிட்டை எல்லாம் காட்டினவை. அதுகளுக்கு ஒரு குறையுமில்லை எண்டுதான் சொன்னவையாம்...'

''கோப்பியை ஆர்றதுக்கிடையிலை குடியுங்கோ அப்பு'' என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள்.

''என்ன புள்ளை, முட்டைக்கோப்பி அடிச்சிருக்கிறாய். அத்தாரும் நிக்கிறார். இப்ப சுப்பிரமணியமும் வந்திடுவான்... அவன்ரை அசோகன் முட்டைக் கள்ளனல்லே?''

''இஞ்சை தாராளமா முட்டையள் இருக்குது. புட்டுக்கும் பொரிச்சும் வைக்கலாம்.''

முகத்தார் கோப்பியைக் குடிக்கின்றார்.

''மெய்ய புள்ளை... கொக்கா சௌந்தரம் இஞ்சை நேத்து வந்திட்டுப் போனவளல்லே? என்ன சொல்லிப் போட்டுப் போனவள்? மத்தியானச் சாப்பாட்டிற்கு வருவாளாமோ?''

''அத்தான் நேத்துத்தான் வந்தவராம். அவரின்ரை சகோதரி - அவைதான் பறங்கித் தெருவார் - மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டை வருவினமாம். பின்னேரம் போலைதான் வர வசதிப்படும் எண்டு சொன்னவ. எதுக்கும் கைவியளத்துக்கு முகுந்தனை அனுப்பி வைக்கிறாவாம்.''

'சௌந்தரம் பெரிய குடும்பக்காரிதான். இருந்தாலும் சீமாட்டி ஒரு சீதேவி. ஆறு பஞ்சானும் குஞ்சுகளையும் ஒரு குறையுமில்லாமல் படிப்பிக்கிறாள். ஏதோ ஆனைசேனையையே சீதனமாகக் குடுத்தனான்? புருஷன் தங்கராசா உண்மையிலை ஒரு தருமராசாதான். புள்ளையளின்ரை படிப்புக்காக குடும்பத்தை ஊரோடை விட்டிட்டுப் போயிட்டான். அங்கை கடைச் சாப்பாட்டோடை வயித்தை வாயை கட்டிச் சீவிக்கிறாள். அங்கையும் இங்கையுமாக ரெண்டு சிலவுகளைச் சமாளிக்கிறதுக்கு கந்தோர் விட்டாப் புறகு வேற வேலையளையும் பாக்கிறதாம். அந்தந்த வயசிலை ஓடியாடிப் பிரயாசைப்பட்டு உழைச்சு சம்பாரிக்கத்தான் வேணும். அதுக்கு ஏத்த சாப்பாடு வேண்டாமே? நல்லவேளை - பெட்டையள் கீழ்க்கண்டுகள்தான். அந்த அளவிலை ஒரு ஆறுதல்... வந்தவனுக்கு ரெண்டுவேளை தன்ரை கையாலை சமைச்சுக் குடுக்காமல் இஞ்சை ஓடியாறாளோ? பொம்பிளைப் புள்ளையள் கரை சேருமட்டுந்தான் எங்கடை...'

''என்ரை மடிசஞ்சையும் சால்வையையும் எடுத்துத்தா புள்ளை.''

''இவ்வளவு வெள்ளணத்தோடை கடைக்குப் போகப் போறியளே?''

''இல்லை, உந்த முச்சந்தி மட்டும் போயிட்டு வாறன். தச்சேலா ஏதேன் அரியது நரியது கிடைச்சால்...''

சாறணை உதறிக் கட்டிக்கொண்டு, 'மடிசஞ்சை' இடுப்பிலே சொருகி, ஏகாவடமிடச் சால்வையை எறிந்து படலையைக் கடக்கிறார்.

ரோஜா இதழ்ப் படுக்கையான மென்மைசேர் நினைவுகளில், ஏதோ ஒரு முள்ளின் உறுத்தல், கால்களின் இயக்கத்திலேயே படரும் நடை. சந்திக்கடைப் பசுபதியின் குரல் அவரைக் கடைப் பக்கம் ஆகர்ஷிக்கின்றது.

''எப்படி அண்ணர்? வருஷம் எத்தினை மணிக்குப் பிறக்குதாம்? கைவியளம், நாள் வேலைக்கு நேரம் எப்பிடிப் போட்டிருக்கு?'' பத்துப் பேரிடம் கேட்டும் பசுபதிக்குப் பொச்சந் தீரவில்லை.

''பத்து இருபத்தெட்டுக்குத்தான் வருஷம் பிறக்குது. கைவியளத்துக்கு இண்டைக்கு நான் போடேல்லை. ஆனா பொதுநாள். உடனையே குடுத்தாலும் பாதகமில்லை.''

முகத்தார் பஞ்சாங்கம் பார்த்து வைப்பதில் வெகு ஒழுங்கு. கடிகாரம் பார்க்கும் பழக்கமில்லாத அவர், எந்தச் சுபவேளையையும் விநாடி தப்பாமற் சொல்லுவார்.

''நான் ஒரு நாளும் இந்த நேரம் காலம் பாத்துக் கொண்டிருக்கிறேல்ல... வருஷப் பிறப்பண்டைக்கே துவங்கீட்டால் சரிதானே? இல்லாட்டில் இழுவல். ரெண்டு மூண்டு நாளைக்கும் நாள் போடமாட்டாங்கள்... அதுக்காகக் கடையைப் பூட்டி வைக்கிறதே?''

''ஓமோம்... எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்ததுதான் பசுபதி'' என்ற முகத்தார், ''கோச்சி இன்னும் வரேல்லைப் போலை'' என வேறு திசையிற் கதையைத் திருப்புகின்றார்.

''நேரமாயிட்டுது... வருஷத்துக்கு இஞ்சினை வாற சனக் கூட்டத்தோடை வாற ரயில் கொஞ்சம் முந்திப் பிந்தித்தான் வந்து சேரும். உங்கடை மற்ற மோன் குமாரசாமியும் இண்டைக்கு வாறார்போலை இருக்குது. தம்பியும் இஞ்சாலைப் பக்கம் வந்து வெகுகாலமாப் போச்சுது.''

நெஞ்சிற் குத்திக் கொண்டிருந்த முள், ரோஜா இதழ்ப் படுக்கைக்குள் இனிதாக மறைகின்றது.

குமாரசாமி வருவான் என்பது முகத்தாருக்குத் தெரியாது. அவனை எந்த விசேடத்திற்கும் வீட்டில் யாருமே எதிர்பார்ப்பதில்லை. அவனுடைய போக்கு அப்படி. இருப்பினும், குமாரசாமி வருவது தனக்குப் புதினம் என்பதை முகத்தார் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''இஞ்சை பாத்தியளே நோட்டீசை. முத்தமிழ்மன்றம் வருஷக் கொண்டாட்டம் நடத்துதாம். நாடகங்களும் நடத்துறாங்களாம். அதுகளுக்குத் தலைமை தாங்க குமாரசாமி வருகுதாம்.''

பசுபதி நோட்டீசைக் கொடுக்கின்றான்.

இப்பொழுது முகத்தாருக்குக் கண் கொஞ்சம் வெள்ளெழுத்து. ஆனாலும், கொட்டை எழுத்தில் அச்சடிக்கப்பட்டுள்ள மகனுடைய பெயரைக் கண்டுபிடிக்கின்றார். மனம் மலர்கின்றது. முகபாவம் மாறாமல் நோட்டீசைத் திருப்பிக் கொடுக்கின்றார்.

''கண்ணும் புகைச்சலாய்க் கிடக்குது.''

''நான் வாசிச்சுச் காட்டட்டே?''

' 'வேண்டாம் பசுபதி. நான் வாறன், மூத்தவன் போறான் போலை இருக்குது காரிலை.''

மூத்தவனைச் சொல்லி விடைபெற்றுக் கொண்டாலும் முகத்தாருக்குக் குமாரசாமியைப் பற்றிய எண்ணமே மேலோங்கியிருக்கின்றது. குமாரசாமி, முகத்தாரின் இரண்டாவது புத்திரன். சிறுவயதிலேயே படித்து முன்னுக்கு வந்துகொண்டிருந்தான்.

'அவன்ரை மூளைக்கு அவன் உப்படியே இருக்கவேணும்? சீமைப்படிப்பெல்லாம் முடிச்சு, ரெண்டு மூண்டு காரும் நாலைஞ்சு பங்களாவும் வைச்சல்லோ வாழவேணும்? அந்தக் காலத்திலை கண்ணூறுபட்டுப் போறாப்போலை சொல்லுவானுகள். சுப்பிரமணியனைச் சாட்டி சௌந்தரத்துக்கு மாப்பிள்ளை; குமாரசாமியைக் காட்டி பரிமளத்துக்கு மாப்பிள்ளை...'

அதே நாக்குகள் திசை திரும்பி, அவரை மல்லாத்திக் கிடத்திக் குறி சுட்டபொழுது...

'பிஞ்சிலே பழுத்தவன் தமையன் இருக்கக் கூடியதாக, ரெண்டு குமருகள் வீட்டுக்குள்ளை பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கக்கூடியதாக, இவனுக்குக் கலியாணப் பைத்தியம்... அதுவும் ஊர் பேர் தெரியாத வேதக்காரிச்சியாம்... தூ, இவன்ரை படிப்பு நாக்கு வழிக்கத்தான் உதவும். இவன் தன்ரை படிப்பைத் தூக்கி எறிஞ்சுப் போட்டு கக்கூசு வாளியைத் தூக்கித் திரியட்டும்...'

இத்தகைய வார்த்தைகள் மார்பு மயிரைப் பொசுக்கி, இதயக் குலையை வெதுப்பியெடுத்த பொழுது குறுக்கு இழைகளைத் தறி தலையிலே மின்சார வேகத்தில் இணைக்கின்றன. சின்னத் தலையிடிக்கும், காய்ச்சலுக்குங்கூட சீனிச்சுருளும், தேயிலைச் சரையும், வெற்றிலைப் பாக்குப் பெட்டியுங் 'காவி'க்கொண்டு வந்தவர்கள், குமாரசாமியின் அவசரக் கலியாணத்தின் பின்னர், முகத்தார் வீட்டுப்படலையைத் திறக்க முகஞ் சுழித்துக் கூசினார்கள். அப்பொழுது சுப்பிரமணியம் எல்லாவற்றிற்கும் ஆறுதலாக இருந்துங் கூட, முகத்தார் இந்தப் பென்னம்பெரிய உலகத்திலே தன்னந் தனியாக விடப்பட்ட உணர்வுகளுடன் தத்தளித்தார்.

'நானோ, அவனோ என்னத்தைச் செய்யிறது? எல்லாம் அளந்தபடி தான் நடக்கும். அவன்தான் ஒரு புத்தியிலை செய்திட்டான். இனி, விரலை வெட்டியே எறியிறது? வெட்கம் ரோஷத்தை விட்டிட்டு ஒருக்காப்போய் அதுகளைப் பாத்தன். அவள் பொடிச்சி புழையில்லை. குணவதி எண்டதை முகத்தைப் பார்த்தோடனை சொல்லுவினம். இவன்ரை குணத்துக்கு அவளிலை தான் பச்சம் வைக்கவேணும். வேதக்காரிச்சி எண்டாப் போலை என்ன? சாதி குலம் பாத்துக் கூழ்ப்பானைக்கை விழுந்தவை எத்தனைபேர் இருக்கினம்? இவன் எண்டாப் போலை ஒழுங்காகக் கோயில் குளம் போறவனே? விபூதி பூசுறவனே? அவள் பொடிச்சியையும் கோயிலுக்குப் போகாமல் மறிச்சுப் போட்டானாம். அவனுக்கு உடம்பு மட்டும் பயித்தங்காய் போலை... ஆனா, உடும்பைப் போலைத் தான் பிடிவாதம். இவ பார்வதிப்பிள்ளை எண்டாப்போல குறைஞ்ச பிடிவாதக்காரியோ?... அவன்ரை போக்கு ஒரு தனிப்போக்கு. இஞ்ச ஒருத்தருக்கும் விளங்கிறேல்லை, ''உங்கை யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலியளாலை சங்கையை மறைச்சுக்கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடித்துக் கொண்டே வாழ்பவருக்கு என்ரை போக்கு விளங்காது. என்ரை போக்கு எனக்கு விளங்கும்'' எண்டு ஒருநாள் உங்கினை சத்தம் போட்டான். இதுகளிலையும் புழையில்லை. ஒட்டி நடக்காதவனோடை என்ன சகவாசம் எண்டு விலகிக் கொண்டுதுகள். புறம்பு காட்டி நடக்கிற உவையளோடை எனக்கென்ன தொடர்சல் எண்டு அவனும் விலகிக் கொண்டான். அவன்ரை மூண்டு பிள்ளையளும் படிப்பிலை வலு விண்ணராம். எனக்கென்டா அதுகளைப் பார்க்க ஆசைதான். இவவின்ரை ஆண்டுத் திவசத்துக்குத்தான் ஒரு பொடியனைக் கூட்டியந்தான். 'அப்பப்பா' எண்டு அவன் வாழைப் பழத்தோடை என்ரை மடியைவிட்டு இறங்கவும் மாட்டான். பொங்கல் - புதுவருஷம் - தீபாவளி எண்டு மூண்டு கொண்டாட்டம் வருகுது. ஒண்டுக்கும் வாறேல்லே. எப்பவாவது, இருந்திட்டு ஒருநாள் தனியா வருவான். புள்ளையளின்ரை சுக பலனைப் பற்றிச் சளப்புவான். குசினிக்கை போய் தானே ஏதாவது போட்டுத் தின்னுவான். அங்கை கூட்டம் இஞ்சை கூட்டம் எண்டு சொல்லுவான். உடனையே போயிடுவான். பேந்து விசாரிச்சுப் பாத்தால் அண்டைய கோச்சியிலையே ஊருக்குத் திரும்பீட்டான் எண்டு தெரியவரும்... மெய்தான், அவன்ரை போக்கு இஞ்சை ஒருத்தருக்கும் விளங்கேல்லை. அதோடை அந்தப் போக்கிலை ஒருத்தருக்கும்

விருப்பமுமில்லை. ஒரு மாதிரியான கோபத்தணல் இவையளின்ரை மனங்களிலை இருக்குது. என்ன இருந்தாலும் சகோதரப்பாசம் எண்ட சாம்பல் அதுகளை மூடி வைச்சிருக்குது. வீட்டிலை எல்லாரும் அவனைக் குறையாத்தான் பேசுவினம். நான் மட்டுந்தான் அவன்ரை பக்கத்திலை பேசுறது. என்ன இருந்தாலும் அவனும் என்ரை மேன்தானே? இதுகள் இதுகளின்ரை போக்கு. அவன் அவன்ரை போக்கு. கையிலே இருக்கிற அஞ்சு விரலும் சமமே? ஒண்டுக்கொண்டு வித்தியாசமில்லையே? வீட்டுக்குள்ளேயும் உப்புடித்தான்... ஊருக்குள்ளை அவனுக்குத் தானே பேரும் நடப்பும்? அவன் இவ்வளவு உதவரங் கெட்டவனெண்டால் ஊரிலை உப்புடிப் பேர் இருக்குமே? இதுகளுக்குப் படிச்சும் புத்தியில்லை. இவங்களைக் குடும்பத்துக்காகப் பெத்தன். குடும்பம் தேர் போலை நடக்குது. அவனை ஊருக்காகப் பெத்தன். அவன் றோட்டளக்கிறான் எண்டு வைச்சுக் கொள்ளுவம். அதுக்காக அவனை நான் மெச்சிக் கதைக்கிறதும் இதுகளுக்குச் சில நேரம் புடிக்கிறேல்லை. ஓரவஞ்சக மனுஷன் எண்டுகூட நினைக்குதுகள். ''நீங்கள் என்னத்தைத்தான் சொன்னாலும், அவனும் என்ரை புள்ளைதான்'' எண்டு சொல்லுவன். இதுகளும் பேக் கூத்துத்தான் ஆடுகிறது. ஏதோ நான் அவன்தான் என்ரை புள்ளை எண்டு சொல்லிப்போட்டதைப் போலை. தாய்மனம் பித்துத்தான். இவவும் இப்ப இல்லை. என்ரை மனமும் பித்துத்தான். இது ஒண்டை மட்டும் நான் குமாரசாமியைப்பற்றி மறக்கமாட்டன். இவையள் ஆயிரத்தைச் சொல்லட்டும். சுப்பிரமணியமா இருக்கட்டும்; சவுந்தரம் பரிமளமாக இருக்கட்டும்; மனோகரன்- பத்மாவாக இருக்கட்டும்; - முகத்தார் ஆறுமுகத்தின்ரை புள்ளையளெண்டு தான் ஊர் தேசத்திலை தெரியும்... ஏன், சதாசிவம் தங்கராசா எண்டாப்போலை என்ன? என்ரை மருமக்கள் எண்டாத்தான் நல்ல விளப்பமாத் தெரியும். ஆனா, கடைத்தெருவிலை எத்தினை பேருக்கு என்னைக் குமாரசாமியின்ரை அப்பனெண்டுதான் தெரியுமெண்டு இவையளுக்குத் தெரியுமே? அண்டைக்குப் பஸ்ஸிலை நான் தெல்லிப்பழைக்குப் போகேக்கிள்ளை ஒரு பொடியன் ''நீங்கள் குமாரசாமியின்ரை தகப்பனல்லோ?'' எண்டு கேட்டுப்போட்டு, தான் குந்தியிருந்த இடத்தை எனக்குத் தாறான். அந்தப் பொடியனும் பெரிய படிப்புத் தானாக்கும்.''

''என்ன முகத்தார்? என்ன பொடியள் எல்லாம் வந்திட்டினமோ?'' ஐயம்பிள்ளை தன்னுடைய படலையில் நின்றபடி குரல் கொடுக்கிறார்.

''கோச்சி அப்பவே வந்திருக்கவேணும்.''

''சுப்பிரமணியம் வராமல் நிற்க மாட்டான். மனோகரனும் வாறானாமோ?''

''ஓம். கடுதாசி போட்டிருந்தான்.''

''படலையிலை நிண்டு கதைக்கிறியள்? கடைக்குப் போறதுக்கு முந்திக் கொஞ்சம் பாவிச்சிட்டுப் போகலாமெண்டால்... என்ரை மனுஷியைத் தெரியாதே? ஆற்றையேன் சாட்டிலை தான்... உள்ளுக்கை வாருங்கோவன்.''

''இப்ப வாதக்குணமாவும் இருக்குது. ஒத்துக்கொள்ளுதுமில்லை.''

''இது நித்தமே முகத்தார்? ஒரு வருஷம் பெருநாளுக்குத்தானே? உங்களைத் தூரத்திலை கண்டோடனையே, உங்களோடை தான் வருஷத்தைத் துவங்கவேணுமெண்டு ஆசை வந்திட்டுது.''

''ஏன்தான் உன்ரை ஆசையையும் கெடுப்பான்?''

முகத்தார் ஐயம்பிள்ளையுடன் கொஞ்சம் ''முஸ்பாத்தி'' பண்ணிவிட்டு, அவருடனேயே கடைக்குச் சென்று, மக்கள் - பேரப்பிள்ளைகள் ஆகிய சகலருக்கும் இதமாகக் கறி - காய்கறி - பழ வகைகள் வாங்கிக்கொண்டு வீடு திரும்பும்பொழுது பத்து மணியாகிவிட்டது.

வீடு கலகலப்பு நிறைந்து காணப்படுகின்றது. சுப்பிரமணியமும் குடும்பமும் வந்தால் சத்தத்திற்குக் குறைவில்லை. பிள்ளைகள் புத்தாடை புனைந்து காணப்படுகின்றார்கள்.

'ஐயம்பிள்ளையோடை மினக்கட்டு நான்தான் நேரம் பிந்தீட்டன் போலை கிடக்குது. சுப்பிரமணியம் எல்லாப் புள்ளைகளுக்கும் ஒரு நிறத்திலைதான் உடுப்புகள் வாங்கி யிருக்கிறான்... இஞ்சை பாருங்கோவன் இவன் கடைக்குட்டி தன்ரை சட்டை தான் திறமெண்டு சண்டை பிடிக்கிறதை... ஓ, பரிமளமும் சதாசிவமும் கூட முழுகீட்டினம். உந்த உடுப்புகள் சரியான விலையாம். வருஷப்பிறப்புக்கு நெடுகிலும் உலை உப்புடித் தான் எடுக்கிறவை. கோயிலுக்குப் போகப் புறப்பட்டு நிற்கினை போலை. நல்லூரானே இதுகளுக்கு ஒரு புள்ளைப்பாக்கியத்தைக் குடு... சே, கண்ணூறு பட்டிடப்பிடாது... பத்மாவுக்கு உந்தச் சீலை வடிவாத்தான் கிடக்குது. சாமத்திய வீட்டுக்குள்ளை சீலையோடு பாத்ததுக்கு இப்பதான் சந்தனக்கலர் நிறத்திலை தனக்கொரு சீலை வாங்கியர வேண்டும் எண்டு மனோகரனுக்கு எழுதினவள். அவன்தான் வாங்கியந்திருக்க வேணும்... இன்னும் சுப்பிரமணியமும் கமலாவும் முழுகி முடிக்கேல்லைப் போலை... உங்கை கிணத்தடியிலை நிக்கினம்.'

''புள்ளை பத்மா! இந்தக் கறி சாமான்களைக் கொண்டு போய் குசுனீக்கை வை.''

''அப்பு காலைச் சாப்பாடும் இல்லாமலே கடைக்குப் போனவர்? நீங்கள் வருவியளெண்டு முட்டையும் பொரிச்சுக் காத்திருந்ததுதான் மிச்சம்.''

''அவன் ஐயம்பிள்ளை விடேல்லை. அவனோடை அப்படியே கடைக்குப் போனதும் நல்லதாப் போச்சுது. சவ்வு கிவ்வு இல்லாத நல்ல இறைச்சி கிடைச்சுது. சின்னதுகள் உறைப்புத் தின்னாயினம். பால்கறி வைக்க ஈரல் கிடைச்சுது. கொத்தார் இறைச்சி வகை தின்னாதவர். நல்லொரு பாரை கிடைச்சுது. மிச்சம் பொரியலுக்கும் உதவும். கைவியளத்தை முடிச்சிட்டுப் போயிருந்தால் கடையிலை ஒரு மண்ணும் வாங்கியிருக்கேலாது.''

''அப்புவுக்கு இந்த வருஷப்பிறப்பு நல்ல முழுவியளத்தோடை துவங்கியிருக்குது'' என்று சொல்லிக்கொண்டே, பெரிய உமலைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு அடுக்களைப் பக்கம் பத்மா போகின்றாள்.

''இந்த வேட்டிதான் பெத்தப்பாவுக்கு'' என்று கூறிக்கொண்டே 'பீஸ்' வேட்டி ஒன்றை 'ரீப்போ'வில் அசோகன் வைக்கின்றான். ''சித்தப்பாவும் அப்பாவுக்குக் கரை போட்ட வேட்டி ஒண்டு வாங்கியந்தவர்'' என்பதையும் அறிவிக்கின்றான். எவ்வளவோ தடுத்தும் பரிமளம் கேட்கவில்லை. அவள் நேற்றே 'பரமாஸ்' சோடி ஒன்று எடுத்துக் கொடுத்து விட்டாள். தான் முன்னர் கொண்டு வந்த வேட்டியுடன் பெத்தப்பாவின் மற்றைய உடுப்புகளையுங் கொண்டுவந்து அடுக்கி ''டோய், பெத்தப்பாவுக்கு இந்த முறை நாலு புதுவேட்டி'' என்று உரக்கக் கத்தினான்.

''மூன்று வேட்டிதானே? ஒன்று சால்வையல்லோ?'' என்று மூலையில் நின்று மூத்தவள் ஹம்ஸதொனி திருத்துகின்றாள்.

'வீண் சிலவு. எவ்வளவு சொன்னாலும் கேக்கமாட்டுதுகள். அதுகளுக்கு ஏதோ செய்யவேணு மெண்ட ஆசை. வீட்டோடை நிக்கேக்கிள்ளை உதெல்லாத்தையும் மனோகரன்தான் உடுத்துக் கிழிப்பான். இப்ப அவருமல்லோ எடுத்துத் தரத் துவங்கியிருக்கிறார். இதுகளை இனி உடுத்துக் கிழிக்கிறதற்கு சௌந்தரத்தின்ரை மூத்தவன் முகுந்தன்தான் இருக்கிறான். அவனும் இந்த மார்கழியிலை சீனியர் சோதினை எடுக்கப் போறானாக்கும்.''

ஈரச் சீலையுடன் கமலா பெரிய அறைக்குள் ஓடுகிறாள். முற்றத்தில் கம்பிக்கொடிக்குப் பக்கத்தில் நின்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்த சுப்பிரமணியம், ''மருத்துநீர் அந்தா கிணத்துக்கட்டிலை இருக்குது. போய்க் குளிச்சிட்டு வாருங்கோ அப்பு'' என்கிறான்.

''என்ன அவசரம்? மனோகரனும் முழுகீட்டு விடட்டன். எங்கை அவனைக் காணேல்லை?''

''உதுகள் ஏதோ ஐஸ்கிறீம் வேணும் சீனிச் சித்தப்பா எண்டதுகள். அவன் வாங்கப் போயிட்டான் போலை கிடக்குது. அவன் ஆறுதலாகக் குளிக்கட்டும். நீங்கள் முதலிலை குளியுங்கோ; வருஷம் பிறக்கப்போகுது, கும்பம் வைக்கவல்லோ வேணும்?''

''ஓமோம்.'' முகத்தார் கிணற்றடிக்குப் போகின்றார். கட்டியிருக்குஞ் சாறத்துடன் குளிப்பது அவருடைய வழக்கம். 'சனி நீராடு' என்ற வாரத்திற்கு ஒரு முறை; மூன்று பெருநாள் நீராட்டம் பிரத்தியேகமாக வந்து சேரும். தலையிலே மருத்துநீரை வைத்து நன்றாகத் தப்புகின்றார்.

''சித்தப்பா, சித்தப்பா'' என்று அசோகன் ஆர்ப்பரிக்கிறான்.
'குமாரசாமி வந்திட்டானோ?'
ஆசையுடன் எட்டிப்பார்க்கிறார். தொட்டாச்சுருங்கி இலைகள் கூம்புகின்றன.

'இல்லை, அவன் மனோகரன்தான். மூண்டு நாலு மாசத்திலை கொஞ்சம் வளந்திருக்கிறான். சொந்தமாச் சம்பாரிக்க துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத்தானே? நல்ல தாராளமாச் சிலவழிக்கிறார். ஓம், போய்க் கொஞ்ச மாசந்தானே? இன்னும் கொழும்புப் பழக்கங்கள் நல்லாப் புடிபடேல்லைப் போலை... குமாரசாமியை இன்னும் காணேல்லை. சிலவேளை, நல்லநாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?'

இந்த எண்ணம் ஏற்பட, காலையில் இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது. வலி தாங்கமாட்டாது அவஸ்தைப்படுகின்றார். அவஸ்தைப் பரிகார எத்தனத்தில் பெரு மூச்சொன்று நீள்கின்றது... இயந்திர வேகத்தில் கைகள் துலாக்கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் தலையிலேயே கொட்டப்படுகின்றது.

''நானும் நல்ல வேளைக்குத்தான் வந்திருக்கிறன். எல்லாரும் மருத்து நீராட்டம் முடித்தா யிற்றுப் போலை... பத்மா இதைப் புள்ளையளுக்குப் பிரிச்சுக் குடு.''

'இது நிச்சயமாக் குமாரசாமியின்ரை குரல்தான். உந்த வெண்கலக் கடை யானையின்ரை குரல் அவன்ரைதான்.'

தண்ணீர் காதுக்குள் புகுந்து, தன் மனக்குகை நினைவுகளுக்கு உருவங்கொடுத்தது. மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ என்றுகூட ஒரு கணம் நினைக்கின்றார். இருந்தாலும் ஆசை இழுக்கின்றது.

''அப்பு எங்கை?''

அவர் குளிக்கிறார்... ''அப்பு! சின்னண்ணர் வந்திருக்கிறார்'' என்று பத்மா குரல் வைக்கின்றாள்.

துளிர்க்கும் நம்பிக்கை, பச்சையின் பசுமையை உறிஞ்ச, மறைப்புத் தட்டிக்கு மேலால் எட்டிப் பார்க்கின்றார்.

முற்றத்தில் குமாரசாமி சிரித்தபடி நிற்கிறான். அவன் பக்கத்தில் பத்மா நின்று, அவன் கொடுத்த 'சரை'யிலிருந்த இஞ்சு விஸ்கோத்துகளைப் பங்கிடுகின்றாள். சுப்பிரமணியத்தின் கடைக்குட்டி வேற்று முகத்தைக் கண்டு பயந்த மாதிரி, கதிரையின் பின்னால் மறைவதை அவன் கவனிக்கத் தவறவில்லை. அவனுடைய பயத்தைக் கவனித்த குமாரசாமி, ''நானுஞ் சித்தப்பா தான்... ஒருத்தரும் சொல்லித் தரேல்லையா?'' என்று சொல்லி மீண்டுஞ் சிரிக்கின்றான்.

‘அதே சிரிப்பு. இவன்ரை சிரிப்பு ஒரு நாளும் மாறாது... என்னைப் போலை அந்தச் சுருட்டை மயிர் முன் குடும்பி வைச்சது போலை நிக்கிறதும் மாறாது. என்னதான் மனக்கோவங்கள் இருந்தாலும், அவன்ரை அந்தச் சிரிப்பைக் கண்டோடனை ஒருத்தருக்கும் அவனை ஏசப் பேச மனம் வராது. ஆரையும் மருட்டும்.’

‘‘என்ன வாறனெண்டு அறிவிக்க ஒரு போஸ்டு கார்டு கிடைக்காமல் போச்சுது உனக்கு” என்று முகத்தார் கடிந்து கொள்ளுகிறார்.

‘‘எல்லாம் அவசரந்தான், அப்பு... போஸ்ட் கார்ட் என்னத்துக்கு? நான்தான் நேரிலை வந்திட்டனே... அது கிடக்க, பத்மா வருஷத்துக்குச் சீலை கட்டியிருக்கிறாள்...”குமாரசாமி பத்மாவை அந்தக் கோலத்தில் அப்பொழுதுதான் முதன்முறையாகப் பார்க்கின்றான்.

‘‘ஓம். இவன் மனோகரன் தன்ரை முதல் சம்பளத்திலை எடுத்துக் கொண்டந்து குடுத்திருக்கிறான்” - வாளிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே முகத்தார் சம்பாஷணையில் ஈடுபடுகின்றார்.

‘‘அத்தான் எங்கை பத்மா? காரிலையே வந்தவர்?”

‘‘இல்லை. ராத்திரி உத்தரதேவியிலை வந்து சேர்ந்தவர். இப்ப அக்காவோடை கோயிலுக்குப் போயிட்டார்” என்று கூறிக்கொண்டே பத்மா அடுக்களைப் பக்கம் போகின்றாள்.

‘‘புதுக் காரொண்டு எடுத்ததெண்டு கேள்விப்பட்டன். என்ன சாதிக் காராம்?”

‘‘எனக்கென்னடா தெரியும்?”

‘‘காரின்ரை விலையளும் இப்ப என்ன மாதிரி ஏறிக் கிடக்குத் தெரியுமே? உங்காலை வீட்டுப் பொடியன் - அவன்தான் ரத்தினகோபால் - காரை வித்துப் போட்டு ‘ஸ்கூட்டர்’ வாங்கியிருக்கிறானாம்...”

‘‘காரை விக்கேக்லையாம்... இசுக்கூட்டரும் வாங்கினவனாம்.”

‘‘இப்ப ஏதும் சாமான் கீமான் வாங்க முடியுமே? அதுதான் வித்துப் போட்டான். அவன்ரை காரை ராசாத்தோட்ட சங்கரப்பிள்ளைதான் வாங்கினதாம்... அவன்ரை கல்யாணப் பேச்சுக்கால் எப்பிடியாம்?”

‘அது குழம்பிப்போய்க் கிடக்குதாம்.”

‘‘நீங்கள் மானிப்பாய்ப் பகுதியிலை இருந்து வந்த சம்பந்தத்தையல்லோ சொல்லுறியள்? இது இங்காலை கோப்பாய்ப் பகுதியிலையாம்...”

‘‘அதைப்பற்றி நான் கேள்விப்படேல்லை.”

தூணுடன் சாய்ந்துகொண்டு நிற்கும் மனோகரனைப் பார்த்து ‘‘தம்பி, உங்கடை கொம்பனியை அரசாங்கம் கெதியா எடுக்கப் போகுது போலை, தென் யூ வில் ஓல்சோ பிக்கம் ஏ கவுண்மென்ட் சேவண்ட்...” என்கிறான்.

‘‘அப்பிடி நடக்காது...”

‘‘நீ இருந்து பாரன் தம்பி... அப்பு! தங்கராசா அத்தானுக்கு அடுத்தமாசம் உத்தியோக உயர்வு கிடைக்கப் போகுதாம். தெரியுமோ?”

''உதுகள் எனக்குத் தெரியுமே?''

''முந்தநாள் அவரை ஸ்டேசனிலை கொண்டாந்து விடேக்கிள்ளைதான் அப்பிடி ஒரு புரமோஷன் கிடைச்சாலும் கிடைக்கும் எண்டு அத்தான் சொன்னவர்.'' மனோகரன் தனக்குத் தெரிந்த சமாசாரத்தைச் சொல்லுகிறான்.

''இவன் ஊருக்கு வாறதோ அத்திபூத்தாப்போலை. ஆனா, ஊரிலை நடக்கிற ஒண்டையும் விடாமல் அறிஞ்சு வைச்சிருக்கிறான்.''

முகத்தார் அவசர அவசரமாக மூன்று நான்கு 'பட்டை'களை ஊற்றி, 'முழு'க்கைச் சுபத்துடன் முடிக்கிறார்.

வந்துகொண்டே, ''ஆனைக்கோட்டை வைத்தியரின்ரை பொடிச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டனீயே...'' என்கிறார்.

''ஓமோம், நான் கேள்விப்பட்டன். சாதி ஒரு மாதிரி எண்டுதான் இவை கூத்தாடினவை. அவன் நல்ல பொடியன். கெலகதரையிலை படிப்பிக்கிறான்.''

''ஓ... என்னவோ உப்பிடித்தான் ஒரு பேர் சொல்லுகினம்...''

தலையைத் துவட்டும்பொழுது, எந்தப் புத்தாடையை அணிவது என்னும் யோசனை அவரை ஆக்கிரமித்துக் கொள்கின்றது. சிறுபிள்ளைத்தனமன்று. பெரிய பிள்ளைகளுக்குள் தன்னுடைய செயலால் மனத்தாங்கல் ஏற்படக்கூடாது என்பதில் அக்கறை.

அதற்கிடையில், ''நீங்கள் ஏன் ஈரத்தோடை நிக்கிறியள்? இதைக் கட்டுங்கோ. நீங்கள் விரும்பிக் கட்டுவியளே, நீலக்கட்டம் போட்ட சாறன்'' என்றபடி கையில் வைத்திருந்த ஒரு பார்சலை நீட்டுகின்றான்.

குசேலனின் அவல் முடிச்சை அவிழ்த்து உண்ட கண்ணனின் உள்ளத்திலேகூட இவ்வளவு மகிழ்ச்சி தோன்றியிருக்க முடியாது.

விரித்து உடுக்கின்றார்.

சலனமெதுவுமின்றி மற்றவர்களைப் பார்க்கிறார்.

மௌனம்.

''அப்புவுக்கு நல்லாத்தான் இருக்குது...'' வெளியே வந்த பத்மா மௌனத்தைக் கலைக்கின்றாள்.

''நீ நிண்ட ஊராலை வந்தனீயே? இரன்; கும்பம் வைக்கப் போகிறன். பொது நாளா இருக்கிறதாலை உடனையே கைவியளம் குடுக்கலாமெண்டிருக்கிறன்.''

''இல்லை அப்பு. எனக்கு உதுகளிலை அவ்வளவு நம்பிக்கை இல்லை எண்டது தெரியுந்தானே? அதோடை விடியக் காலமையே கார்க்காரனிட்டைக் கைவியளம் வாங்கீட்டன்.''

முகத்தாரின் முகத்தில் மூட்டம்.

''இவன்தான் புது நாணயமாப் புறந்தவன். ஒண்டிலும் நம்பிக்கை இல்லாதவன் டேய்! புத்தகப் படிப்பும், நீ எழுதுற கதையளும் நாடகங்களும் படிப்பில்லை. ஆவது அறிவது அறிவல்ல; வீட்டிலை வேவது அறிவதுதான் அறிவு. ஊரோடை ஒத்து வாழுறதுதான் படிப்பு.'' - இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த சுப்பிரமணியம் சொல்லுகிறான்.

''அதுக்கில்லை அண்ணை. நான் அஞ்சாறு பேரோடை வந்திருக்கிறன். ஊராங்கடை காசிலை அவங்களை இவ்வளவு தூரம் கூட்டியந்தனான். இந்த ஊருக்கு அவங்கள் புதிசு. அவங்களை ஹோட்டலிலை விட்டிட்டு நான் இஞ்சை மினக்கடுறது அவ்வளவு வடிவில்லை எண்டுதான் சொல்ல வந்தனான்... அப்ப நான் வாறன்...'' - பதிலுக்குக் காத்திருக்காமல் திரும்புகிறான்.

'என்ன இருந்தாலும் மரியாதை தப்பாது. ஆர் சொன்னாலும் தலையைக் கவண்டுகொண்டு தான் கேப்பான். மரியாதைக்காகத் தான். ஆனா, தான் நினைச்சதைத்தான் செய்வான்.'

''சின்னண்ணை... இஞ்ச கோப்பி கொண்டந்துட்டன். குடியுங்கோவன்...'' என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள். பதிலொன்றும் பேசாமல் அதை வாங்கிக் குடித்துவிட்டு, கிளாஸைத் திருப்பிக் கொடுக்கின்றான்.

முற்றத்து மாங்கன்றில், கும்பத்துக்கு மாவிலைகள் ஒடித்துக் கொண்டே, ''அப்ப மத்தியானச் சாப்பாட்டுக் கெண்டாலும் வாறியோ?'' என்று முகத்தார் கேட்கின்றார். நப்பாசையின் உள்முடிச்சு அவ்வினாவிற் காளத்திரியாட்டமிடுகின்றது.

''அவன்தானே அப்பு சொல்லிப் போட்டான், கூட்டாளியளை விட்டுப்போட்டு வரேலாது எண்டு'' என்று சுப்பிரமணியம் சொல்லுகின்றான். வழக்கத்தில் மூத்தவன் அதிகம் பேசுவதில்லை.

''அப்ப வாறன்... எல்லாருக்கும் வாறன்'' என்று கூறி அவசரமாகப் படலையைத் திறக்கும் குமாரசாமி, ஒரு கணந் தரித்து, ''அப்பு, இண்டைக்கு எங்கடை நாடகம் பின்னேரம் முத்தவெளியிலை நடக்கும்... நல்லா இருக்கும்... நேரம் இருந்தா வாருங்கோவன்'' என்று குரல் கொடுத்துச் செல்லுகிறான்.

கும்பம் வைத்து கைவிசேடம் பரிமாறப்பட்டாகி விட்டது. விறாந்தையிலுள்ள 'செற்றி'க் கதிரைகளில் அமர்ந்து சுப்பிரமணியமும் சதாசிவமும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய பேச்சு சதாசிவம் புதிதாக வாங்கியுள்ள காரைச் சுற்றிச் சுழல்கின்றது. அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில், தூணிலே சாய்ந்தவாறு சௌந்தரத்தின் சார்பாகக் கைவிசேட வைபவத்திற் கலந்து கொண்ட முகுந்தன் நிற்கிறான்.

'அவன் மூத்த மாமனுக்கு நல்ல மரியாதை.'

கமலா, பரிமளம், பத்மா ஆகிய மூவரும் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள். ஹம்ஸதொனியும் பெரிய மனுஷி மாதிரிக் கூடமாட வேலை செய்கின்றாள். 'குத்தி'ப் பலகையில் இருந்துகொண்டு, அவர்களுக்கு மனோகரன் தன்னுடைய கொழும்பு அநுபவங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

கறித்தேங்காய்களையெல்லாம் 'போர்'த் தேங்காய்களாக்கி முற்றத்திலே, போர்த் தேங்காயடி நடைபெறுகின்றது. யாருடன் என்ன விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும், அசோகன் 'குழப்' பாமல் இருக்கமாட்டான். கல்லிலே பட்டுத்தான் தன்னுடைய 'கையான்' உடைந்ததாக அவன் சண்டை பிடிக்கிறான்.

புதுவருடத்துக்கு ஏனைய மக்களின் அன்பளிப்பாகக் கிடைத்த புத்தாடைகள் 'ரீப்போ'யில் இருக்கின்றன. அவற்றை முகத்தாரின் கண்கள் மேய்கின்றன.

''புள்ளை பத்மா!''

அவள் கைவேலைகளை விட்டுவிட்டு வருகின்றாள்.

''உந்த உடுப்புகளை எடுத்து வை புள்ளை. பின்னேரம் ஒருக்கா முத்தவெளிக்குப் போகவேணும் நாடகம் பார்க்க. போகேக்கை மூத்தண்ணர் வாங்கித் தந்த வேட்டியையும், கொத்தார் வாங்கித் தந்த சால்வையையுந்தான் போட்டுக் கொண்டு போகவேணும்.''

''ஐயோ, இளையண்ணர்தான் பாவம்.''

''ஓம் தங்கச்சி. எளியவனாப் பிறந்தாலும், இளையவனாப் பிறக்கக்கூடாது'' என்று மனோகரன் அடுக்களையிலிருந்த படியே சொல்லுகின்றான்.

இதிலே என்ன நகைச்சுவையைக் கண்டார்களோ? அண்ணரும் அத்தானும் விழுந்து விழுந்து சிரிக்கின்றார்கள். மனோகரன் கையில் ஒரு நெருப்புக்கொள்ளியைத் தூக்கிக் கொண்டு, அடுக்களையின் மறைவான மூலையைப் பார்த்து நகருகின்றான்.

''இப்ப தம்பியும் பெரியாக்களைப் போலை'' என்று பரிமளம் குரல் எழுப்புகின்றாள்.

''சும்மா சத்தம் போடாதை பரிமளம். இளையவன் எண்டாப்போலை நெடுகிலும் சின்னப் பொடியன் எண்ட நினைப்பே? அவனும் உழைக்கிறான்; சம்பாரிக்கிறான்'' என்று மச்சான் சார்பில் கமலா பேசுகின்றாள்.

'மனோகரன் சிகரெட் குடிக்கத் துவங்கீட்டான் போலை. ஓ, உங்கை கிறாதியாலை புகை வருகுது. வளந்தாப் பிறகு, அது அது, அதுகளின்ரை விருப்பம்.''

''என்ன மருமகன்? சயன்ஸ் பாடங்கள்தானே? பேத்தனமா இங்கிலீசை நெக்லட் பண்ணாதை.''

''ஹி இஸ் குட் இன் இங்லிஸ். கிறடிற் எடுப்பான்'' என்று சதாசிவம் முகுந்தனின் சார்பாக உத்தரவாதமளிக்கின்றான்.

''தூண் விழுந்திடப் போகுது. அந்தக் கதிரையிலை இரன்.''

''அத்தான், உந்தத் தூணடியிலை நிண்டு பாத்தால் ஹம்ஸ தொனி அடுப்படியிலை இருந்து வேலை செய்யிறது தெரியுதாக்கும்.''

''சதாசிவம்... வானதிக்குக் கூடப் பிந்தீட்டியள்... அசோகனுக்கெண்டாலும் முந்தலாம்.''

சதாசிவத்தின் கண்கள் பரிமளத்தைத் தேடுகின்றன.

வாயைப் பொத்தும்படி சுப்பிரமணியத்திற்குக் கமலா சைகை காட்டுகின்றாள்.

விறாந்தை ஓரத்தில் விழுந்து கிடந்த ஓர் இஞ்சி விசுக்கோத்தை எட்டியெடுத்த முகத்தார், குழந்தையின் சுபாவத்துடன் ஒருவருக்குந் தெரியாமல் தன்னுடைய தளர்ந்து போன பற்களுக்கிடையில் நசுக்குகின்றார்.

****

ஆசிரியர்: எஸ்.பொ.: (1932 - 2015)

எஸ். பொன்னுத்துரை யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரில் பிறந்து, மட்டக்களப்பை வாழிடமாகக் கொண்டவர். யாழ் / புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ் / பரமேஸ்வராக் கல்லூரிகளில் கல்வி கற்ற இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி என்பவற்றில் உயர்க்கல்வி பயின்றார். 1947இல் வீரகேசரியில் முதற்கவிதை எழுதி, எழுத்துலகத்தில் பிரவேசித்த எஸ். பொன்னுத்துரை தொடர்ந்து சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை, ஆய்வு, திறனாய்வு, மொழிபெயர்ப்பு எனப் பல்துறைகளில் இயங்கினார்.

- **நாவல்கள்**

  - தீ (1961)
  - சடங்கு (1966)
  - தேடல் (1966)
  - மாயினி (2007)

- **சிறுகதைத் தொகுப்பு**

  - வீ (1966)
  - அவா
  - ஆண்மை
  - பூ
  - எஸ்.பொ. சிறுகதைகள்
  - தேடல் சில உண்மைகள்

முன்னோட்டம்

முகத்தார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் அறுபது வயதைக் கடந்தவர்; மனைவியை இழந்தவர். அவருக்கு மனோகரன், சுப்பிரமணியம், பத்மா, பரிமளம், சௌந்தரம், குமாரசாமி எனப் பிள்ளைகள் பலர். அதில் குமாரசாமி வேதக்காரபிள்ளையை திருமணம் முடித்தமையால் வீட்டாராலும் சமூகத்தாராலும் ஒதுக்கப்படுகின்றான். பிறக்கப்போகும் வருடப்பிறப்புக்காக முகத்தாரின் வீட்டில் அனைவரும் ஒன்று கூடுகின்றனர். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆரவாரமும் நிலவுகின்றன. ஆனால், முகத்தாருக்கு குமாரசாமிமேல் ஈர்ப்பு. முகத்தாரின் மனமோ குமாரசாமியின் வரவுக்காக ஏங்குகின்றது. முகத்தார் விரும்பிய பிரகாரம் குமாரசாமியும் வருகிறான். ஆனாலும் அவன் அக்குடும்பத்தாருடன் தங்கி வருடப்பிறப்பைக் கொண்டாடவில்லை. வேறு வேலை காரணமாக அவன் குடும்பத்தாரிடமும் தந்தையாரிடமும் விடைபெற்றுக்கொண்டு செல்கின்றான். அவரவர் விருப்பப்படி வாழ்வதே வாழ்க்கை' என முகத்தார் உணர்கின்றார்.

யாழ்ப்பாணக் குடும்பம் ஒன்றின் உறவுகளின் இயங்குநிலையை, புதுவருடப் பிறப்பை மையமாகக் கொண்டு அதன் தொடர்நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி உறவுகள், சம்பிரதாயங்கள், முரண்பாடுகள், பாசம் முதலியவற்றை இணைத்து, இக்கதை பின்னப்பட்டுள்ளது.

களம்

முகத்தாரின் வீட்டினையும் ஊரின் முச்சந்தியையும் கதைக்களமாகக் கொண்டு, இச்சிறுகதை இயங்குகின்றது. வீடு, வீட்டின் கொல்லை, கிணற்றடி, திண்ணை, வீட்டின் சின்னறை, முற்றம் எனக் கதைக்களம் வீட்டின் பல பாகங்களுடன் இணைத்துப் பின்னப்பட்டுள்ளது.

பாத்திர வார்ப்புக்கள்

முகத்தார், முகத்தாரின் மூத்தமகன் சுப்பிரமணியம் அவனது மனைவி கமலா, மகள் ஹம்சத்வனி, முகத்தாரின் இன்னொரு மகள் பரிமளம், கணவன் சதாசிவம், பிறிதொரு மகள் சௌந்தரம் அவள் கணவன் தங்கராசா பிள்ளைகள், குமாரசாமி அவன் மனைவி, இளையமகன் மனோகரன், இளையமகள் பத்மா மற்றும் பசுபதி எனப் பாத்திரங்கள் பலவற்றை உள்ளடக்கி இச்சிறுகதை பின்னப்பட்டுள்ளது. முகத்தாரே முக்கியமான பாத்திரமாகின்றார்.

கதைப்பின்னல்

- புதுவருடப்பிறப்பன்று இடம்பெறும் நிகழ்வுகளோடு ஆரம்பித்தல்.
- முகத்தாரின் நினைவோட்டங்களில் நகர்தல்.
- தாயை இழந்த பத்மா, குடும்ப உறவுகளைப் பற்றிப் பேசுதல்.
- மதம் மாறித் திருமணம் செய்த குமாரசாமியால் எதிர்கொண்ட நெருக்கீடுகளை வெளிப்படுத்தல்.
- குமாரசாமியின் வருகைக்காகக் காத்திருந்து, அவன் வந்தபோது மனம்மகிழ்தல்.
- புதுவருடப்பிறப்பன்று ஒன்றுசேரும் குடும்பமொன்றின் குதூகலத்தை இனங்காட்டல்.
- முகத்தார் புத்தாடையைத் தெரிவுசெய்வதில் பிள்ளைப்பாசத்தை உணர்த்தல்.

மொழிநடை

- யாழ்ப்பாண மக்களின் கிராமிய மொழியைச் செவ்வனே கையாண்டுள்ளார்.
  உ- ம் : கொக்கா பரிமளம் இன்னும் எழும்பல்லையே.
- விபரணத் தன்மையான மொழிநடை
  புறக்காட்சிகளையும் பாத்திரங்களின் இயல்பையும் விளக்க, விபரணத்தன்மையான மொழிநடையை ஆசிரியர் கையாள்கிறார்.
  உ- ம்: இறப்பில் தொங்கும் வெண்சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலக்கை விரல்களுக்குள் எடுத்து, ‘‘சிவ.....சிவா’’ என்று உச்சரிக்கும்பொழுது நல்லூர்க் கந்தனின் உதயகாலப் பூசை மணி கேட்கும்.
- கவித்துவம் செறிந்த மொழிநடை
  வார்த்தைகள் மார்ப்பு மயிரைப் பொசுக்கி இதயக்குலையை வெதுப்பியெடுத்த பொழுது..... குறுக்கு இழைகளைத் தறித்தலையிலே மின்சார வேகத்தில் இணைகின்றன.
- அங்கதப்பாங்கிலான மொழிநடை
  ஏதோ ஆனைசேனையை சீதனமாகக் குடுத்தனான்.

- அணிப் பயன்பாடு
  - ரோஜா இதழ்ப்படுக்கையான மென்மை சேர் நினைவுகள் - **உவமை அணி**
  - உடுப்பைப் போலத்தான் பிடிவாதம் - **உவமை அணி**
  - தண்ணீர் காதுக்குள் புகுந்து மனக்குகை நினைவுகளுக்கு உருவங்கொடுத்தது - **உருவக அணி**

- அருகிய வழக்கில் உள்ள சொற்களின் பயன்பாடு
  உ - ம் : மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ?

- விரிந்த பொருளைச் சுருக்கமாகவும் தாக்கத்தோடும் வெளிப்படுத்தும் உணர்ச்சி செறிவான மொழிநடை.
  உ - ம் : அதே நாக்குகள் திசை திரும்பி, அவரை மல்லாத்திக் கிடத்திக் குறிசுட்டபோது.....

அரும்பதங்களுக்கான விளக்கம்

புகையிலைச் சுத்து	-	சுருட்டு
கொல்லை	-	வீட்டின் பின்புற வளவு
வாலாயம்	-	வழக்கமாக்கிக் கொள்ளல்
குரும்மை	-	இளந்தேங்காய், கோம்பை
இறப்பு	-	தாழ்வாரக் கூரையின் உட்பகுதி
நித்திய கருமம்	-	அன்றாடக் கருமங்கள்
கோடி	-	புத்தாடை
கொறித்தல்	-	சிறிய அளவில் உண்ணுதல்
தாயத்தின்னி	-	பிறக்கும்போது தாயை இழந்த குழந்தை
சீவியப்பாடு	-	வாழ்க்கையை / சீவியத்தைக் கொண்டு நடத்தல்
புதுநாணயப் பேர்	-	புதுமையான பெயர்
கடுக்கண்ணுற பருவம்	-	விடலைப் பருவம்
வாகடங்கள்	-	சம்பிரதாயங்கள் / மரபுகள்
உரிச்சு வைச்ச மாதிரி	-	அச்சொட்டாக
ஒப்பேத்துதல்	-	முயன்று நிறைவேற்றுதல்
விக்கினம்	-	துன்பம்
காதுப்பிடி	-	வற்புறுத்தி அழைத்துவரல்
கோசு	-	தரம் / தடவை
புதுமோடி	-	புதுப்பாணி (Fashion)
கதைச் சாங்கத்தில்	-	கதைப்பராக்கில்
தலைச்சன்	-	தலைப்பிள்ளை / முதற்பிள்ளை / சிரேஷ்ட புத்திரன்
கைவியளம்	-	கைவிசேடம்
பஞ்சானும் குஞ்சுகளும்	-	கஷ்டத்தின் மத்தியில் வளர்க்கும் குழந்தைகள்
சம்பாரித்தல்	-	உழைத்தல் / சம்பாதித்தல்
மடிசஞ்சை	-	பணப்பை
தச்சேலா	-	தற்செயலாக
அரியது நரியது	-	கிடைத்தற்கரிய
ஏகாவடமிடல்	-	ஒற்றை வடமிடல்

ஆகர்ஷித்தல்	-	கவர்தல்
பொச்சம் தீரவில்லை	-	திருப்தி இன்மை
புதினம்	-	வியப்பு
சீமை	-	மேலைநாடு
நாக்கு வழிக்க	-	பெறுமதியற்றது / பிரயோசனமற்றது
படலை	-	தட்டிக் கதவு (Gate)
சகவாசம்	-	உறவு
தொடர்சல்	-	உறவு
சளப்புதல்	-	சமாளித்தல் / குழப்புதல்
உதவரங் கெட்டவன்	-	பெறுமதியில்லாதவன் / உதவாக்கரை
றோட்டளத்தல்	-	வீணாக அலைதல் / வெறுமனே அலைதல்
விளப்பமாக	-	பிரசித்தமாக
முஸ்பாத்தி	-	பகிடி
சாமத்தியம்	-	கெட்டித்தனம்
பெத்தப்பா	-	பாட்டன்
மருத்துநீர்	-	இந்துக்கள் புதுவருடப்பிறப்பின்போது, நீராடுவதற்காகத் தலையில் வைகும் மூலிகைகளால் காய்ச்சப்பட்ட நீர்
சீனிச் சித்தப்பா	-	உறவுமுறை / தந்தையின் இளைய சகோதரன்
ஏசப்பேச	-	ஏச
மருட்டும்	-	மயக்கும்
கலியாணப்பேச்சுக்கால்	-	திருமணப்பேச்சு
மூட்டம்	-	கவலைப்படுதல்
கிறாதி	-	மரத்தினால் செய்யப்பட்ட தடுப்பு
காளத்திரியாட்டமிடல்	-	அங்கலாய்த்தல்
புதுநாணயம்	-	புதுவழக்கம்

****

ஆ. தியாகம்

கோவில்பட்டி மளிகைக் கடை கதிரேசன் செட்டியார் காலையில் பலகாரம் சாப்பிட மணி பத்து ஆகும். அப்புறம் ஒரு பத்து நிமிஷம் உட்கார்ந்து, சாப்பிட்ட சிரமத்தைப் போக்கிக் கெள்ளவேண்டும். அதன் பின் கடையை நோக்கிப் புறப்படுவார். சரியாகப் பதினைந்து நிமிஷி நடை. பத்து இருபத்தைந்துக்குக் கடையில் வந்து உக்காருவார். கையில் கடிகாரம் கட்டாமலே நிமிஷக் கணக்கு தவறாமல் வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாளும் ஒரே மாதிரியாக அவர் கடைக்கு வருவதும் வீடு திரும்புவதும் இந்தக் காலத்துக் கடைச் சிப்பந்திகளுக்கு ஓர் அதிசயமாக இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவர் அந்தக் காலத்து மனுஷர். அவர் பழகிய உலகம் அவரை விட்டாலும் அவர் அதை விடத் தயாராக இல்லை.

அன்றும் காலை 10.25 க்குக் கடைக்கு வந்தார். கடைக்குள் நுழையும்போது முகத்தை எப்படி வைத்துக் கொள்ளவேண்டுமோ - ஒரு குறிப்பிட்ட முறையில் வைத்துக் கொள்ள வேண்டும் - அப்படி வைத்துக் கொண்டார். இந்த முகபாவத்தின் பிரதான அம்சம், கடுகடுப்பு, பிரதானமில்லாத அம்சம், ஒரு மாதிரியான விறைப்பு. இந்த முகபாவத்தைக் கடையில் உட்கார்ந்திருக்கும் வரையில் எக்காரணத்தைக் கொண்டும் மாற்றமாட்டார். நண்பர்களோ, அந்தஸ்துமிக்க வாடிக்கைக்காரர்களோ வரும்போது அவர் சிரிக்கவோ, புன்னகை செய்யவோ வேண்டிய அவசியம் ஏற்படும். அதையும் இந்த முகபாவத்தை மாற்றாமலே நிறைவேற்றி விடுவார்....

கடையில் வந்து உட்கார்ந்த செட்டியார், கணக்கு எழுதும் சோமசுந்தரம் பிள்ளையை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தார். பிள்ளையும் அவ்வண்ணமே செய்தார். பிறகு செட்டியார் முகத்தைத் திருப்பி, பெட்டியைத் திறந்து அங்கே கிடக்கும் சில்லறைக் காசுகளைக் கையால் துழாவிட்டு, கடைச் சிப்பந்திகளை - அந்த நான்கு பேரையும் - மொத்தமாகவும் தனித்தனியாகவும் பார்த்தார். இனி வசை புராணத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான்! எதைச் சாக்காக வைத்துக் கொண்டு ஆரம்பிக்கலாம் என்று ஒரு கணம் யோசித்தார். ஓரே ஒரு கணம்தான்.. சாக்குக் கிடைத்து விட்டது.....

"ஏண்டா, தடிப் பயகளா! நீங்க என்ன பரதேசிகளா? சந்யாசிகளாடா? எருமை மாட்டுப் பயல்கள்! விடிஞ்சதும் நாலு வீட்டுக்கு யாசகத்துக்குப் போற பிச்சைக்காரப் பயல்கூட இப்பிடிச் சாம்பலை அள்ளிப் பூச மாட்டானேடா? தரித்திரம் பிடிச்ச பயகளா! நீங்க வந்து கடையிலே நொளைஞ்சீங்களோ இல்லையோ, யாவாரம் ஒண்ணுக்குப் பாதியாப் படுத்துப் போச்சு. இன்னும் மிச்சம் மீதியையும் படுக்க வச்சிட்டுப் போகவாடா, இப்படி நெத்தியிலே அள்ளிப் பூசிக்கிட்டுப் வந்திருக்கீங்க, சாம்பலை?...."

கடையில் புதிதாகச் சோர்ந்திருந்த ஒரு சிப்பந்தி, "நீங்களும் விபூதி பூசியிருக்கீங்களே, மொதலாளி?" என்று கேட்டுவிட்டான்.

"அடி செருப்பாலே! நாயே! வாயைத் தொறக்கிறியா நீ? (கணக்கு பிள்ளையைப் பார்த்து) பார்த்தீரா சோமசுந்தரம்பிள்ளை? பயல் எதுத்தில்லே வெவகாரம் பண்றான்? ஜோட்டாலே அடிச்சு வெளியே பத்தும் இவனை! நமக்குச் சரிப்படாது. கஞ்சிக்கில்லாமே செத்த பயல்களை எரக்கப்பட்டுக் கடையிலே வச்சது என்முட்டாள்தான். சோமசுந்தரம் பிள்ளை....." என்று செட்டியார் பொரிந்து கொண்டிருக்கும்போது, கணக்குப் பிள்ளை அந்தப் புதுப் பையனைப் பார்த்து, வேலையைப் போய்ப் பாரேண்டா, மொதலாளிகிட்ட எப்பிடிப் பேசணும்கிறதுகூட தெரியல்லையே, ஒனக்கு! உம் ... போ! போய் வேலையைப் பாரு" என்றார்.

அந்தப் பையனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. போதாக்குறைக்கு மற்ற மூன்று பையன்களும் திரும்பிக் கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்தார்கள்.

செட்டியார் அதோடு அவனை விட்டு விட்டார். மற்றொரு பையனைப் பார்த்து அஸ்திரத்தைத் தொடுத்தார். "ஏ கழுதே! ஒன்னைத்தானே! பருப்புலே ஒரே கல்லாக் கெடக்குன்னு சொன்னேனே, பொடைச்சி வச்சயா, கழுதை?"

"பொடைச்சிட்டேன், முதலாளி, கல்லு ஒண்ணும் இல்லையே?"

“என்னடா! இல்லையா? அப்போ நான் பொய்யா சொல்றேன்? டேய்! இந்த மாதிரி நீ பேசிக்கிட்டே இருந்தா, செருப்படி வாங்கிக்கிட்டுத்தான் இந்தக் கடையை விட்டுப் போகப் போறே. ஆமா, நல்லா யாவுகத்திலே வச்சுக்கோ. வேலையை ஒழுங்காச் செய். சோமசுந்தரம் பிள்ளை, பயபேச்சைப் பார்த்தீரா? பார்த்துக்கிட்டீரான்னேன்? கடைக்கு வர்றவனெல்லாம் ஒருத்தன் பாக்கியில்லாமே, ‘என்ன செட்டியாரே, இப்பிடிக் கல்லைப் போட்டிருக்கிறீரே பருப்புலே’ன்னு கேக்கறான். இவன் ‘என்னடான்னா ‘பொடைச்சிட்டேன்; கல்லில்லே’ங்கிறானே! உம்... ஏ கழுதை! நீ பொடைச்சது நெசந்தானா? கேட்டதுக்குப் பதில் செல்லு! இல்லே. இப்பிடியே கடையை விட்டுக் கீழே எறங்கு....’

சோமசுந்தரம் பிள்ளை அந்தப் பையனைப் பார்த்து, “பொடைச்சேன், கல்லைச் சுத்தமாப் பொறக்கிட்டேன், மொதலாளின்னு சொன்னா என்னப்பா? நெசத்தைச் சொல்றதுக் கென்ன?” என்றார்.

அந்தப் பையன் பதில் சொல்லாமல் நின்றான்.

செட்டியார் கடைப்பையன்கள் அத்தனை பேரையும் மொத்தமாகப் பார்த்து, போங்கலே, எம் மூஞ்சியிலே முளிக்காதீங்க. ஒங்களைக் கட்டிக்கிட்டு மாரடிக்கிறமுக்கு ஒரு குத்துக்கல்லைக் கட்டிக்கிட்டு மாரடிக்கலாம்....தொலைஞ்சி போங்கடா” என்று விரட்டினார்.

கடைப்பையன்கள் நால்வரும் உள்ளே போய்விட்டார்கள். உள்ளே போனதும் பழைய மூவரும் சிரித்தார்கள்.

மறுநிமிஷமே செட்டியார் அவர்களை அழைத்தார். “ஏண்டா, எங்கடா கூண்டோட கைலாசம் போயிட்டிங்க? உள்ளே சமுக்காளத்தை விரிச்சிப் படுத்துத் தூங்குங்கடா; நல்லாத் தூங்குங்க! இங்கே வர்றவங்களுக்குப் புளியும் கடுகும் நான் நிறுத்துப் போடுறேன்.”

புதுப் பையன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, “நீங்கதானே மொதலாளி, உள்ளே போகச் சொன்னீங்க? நாங்க எது செஞ்சாலும் குத்தமாச் சொல்றீங்களே.....” என்று இரண்டு வாரங்களாக அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கக்கியே விட்டான்.

அவன் பேசியதைக் கேட்டு மற்றப் பையன்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு சிரிக்க, செட்டியார் தம் முகத்தை இன்னும் கடுப்பாக வைத்துக் கொண்டு சோமசுந்தரம் பிள்ளையை ஏறிட்டுப் பார்க்க, பிள்ளை அந்தப் பையனைப் பார்த்து, “ஏண்டா, ‘பேசாதே பேசாதே’ன்னு ஒனக்கு எத்தனை தரம் சொல்றது? என்ன பயல்டா நீ? போய் அந்த ஈரங்காயத்தை மூட்டையிலேருந்து எடுத்துக்கிட்டு வா.....இங்கே பெட்டியிலே ஈரங்காயமில்லே” என்றார்.

அதெல்லாம் எங்கே தெரியுது? எல்லாம் சொல்லித்தான் நடக்க வேண்டியிருக்கு. ஏண்டா, சோறு திங்கிறீங்களே, அதையும் சொன்னாத்தான் திம்பீங்களோ? இல்லை, கேக்கின்றேன். இப்படி அறிவுகெட்ட பயல்களா வந்து நமக்குன்னு சேந்திருக்காங்களே, அதைச் சொல்லும்...டேய், ஒன்னைத்தாண்டா! அந்த முத்தையாபிள்ளை பாக்கியைப் போய்க் கேட்டியா? அதையும் சொன்னாத்தான் செய்வியா?”

“கேட்டேன், மொதலாளி.”

“கேட்டியாக்கும்? கெட்டிக்காரன்தான்! கேட்டு வாங்கணும்னு தோணலியோ?”

“பாக்கியைக் குடுத்திட்டாரு” என்று பெருமிதத்தோடு சொன்னான் பையன்.

“அட! என்னமோ இவன் சாமர்த்தியத்திலே வாங்கின மாதிரியில்லே பேசுறான்! கடன் வாங்கினவர் குடுக்காமலா இருப்பாரு? முத்தையாபிள்ளை யோக்கியன். இவனைப் போல முடிச்சுமாறிப் பயலா இருப்பாருன்னு நெனைச்சான் போல இருக்கு. அதனாலேதான் ‘குடுத்திட்டாரு’ன்னு ரொம்பச் சவடாலாச் சொல்கிறான். ஏய் நீ எப்படிடா போய்க் கேட்டே? கண்டிப்பாகக் கேட்டியா?”

“கண்டிப்பாத்தான் கேட்டேன், மொதலாளி...”

“கண்டிப்பாக் கேட்டியா? உன்னை யாருடா அப்படிக் கேக்கச் சொன்னது? எதம்பதமாப் பேசணும்னு ஒனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்? கண்டிப்பாப் பேசினா நாளைக்கு எவண்டா கடைக்கு வருவான்?.....”

அப்போது சோமசுந்தரம் பிள்ளை குறுக்கிட்டு, சாவதானமாக, “முருகையா, அந்தப் பெரிய கணக்கு நோட்டை இப்பிடு எடு” என்றார்.

செட்டியார் முருகையாவை விட்டுவிட்டார். மற்றொரு பையனை ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் ஷண்முகம் பிள்ளை கடைக்கு வந்து சேர்ந்தார்.

“அண்ணாச்சி, வாங்க” என்று அவரை வரவேற்ற செட்டியார், அந்தப் பையனைப் பார்த்து, “ஏய் பரதேசி! நான் உனக்கு என்ன சொன்னேன்? என்னலே சொன்னேன்?....” என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே, ஷண்முகம் பிள்ளை பேச்சுக் கொடுத்தார். “செட்டியாரையா, நாளைக்கு மதுரைக்குப் போறேன்.....” என்று தாம் சொல்ல வந்த விஷயத்தை ஆரம்பித்தார். செட்டியாரும் கவனத்தை அவரிடம் திருப்பினார். அத்துடன் சாமான்கள் வாங்கவும் இரண்டொருவர் வந்தார்கள். பையன்கள் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டார்கள்.

கதிரேசன் செட்டியார் எப்பொழுது பார்த்தாலும் கடைச் சிப்பந்திகள் மீது இப்படிச் சீறி விழுவதைப் பல வருஷங்களாகப் பார்த்துக் கொண்டு வந்தவர் ஷண்முகம் பிள்ளை. ஒரு நாள்கூட செட்டியார் அன்பாக ஒரு பையனைப் பார்த்துப் பேசியதில்லை. மாதத்தில் பத்து நாட்களாவது அவர் செட்டியார் கடைக்கு வந்து சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவார். அவர் வந்துவிட்டால் கடைப் பையன்களுக்கு ஒரே கொண்டாட்டம். ஏனென்றால், அவரோடு பேசிக் கொண்டிருக்கும்போது செட்டியார் சஹஸ்ரநாம அர்ச்சனையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து விடுவார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

செட்டியாரும்கூட அர்ச்சனையை நிறுத்துவதற்கு அதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகக் கருதுவார்! சோமசுந்தரம் பிள்ளை குறுக்கிட்டுக் கடைப் பையன்களுக்குப் புத்தி சொல்லத் தொடங்கிவிட்டாலும் கொஞ்சம் மூச்சு விட்டு ஓய்வெடுத்துக் கொள்வார். பையன்களைத் தாம் திட்டும்போது தடுத்து நிறுத்துவதற்கு ஒரு ஆள் வேண்டும் என்பதற்காகவே சோமசுந்தரம் பிள்ளையை அந்த முப்பது வருஷ காலமும் தம் கடையில் கணக்குப் பிள்ளையாக வைத்துக் கொண்டிருக்கிறார் என்று சொன்னாலும் தவறில்லை.

செட்டியாரின் குணாதிசயங்களெல்லாம் கடைப் பையன்களுக்கு மனப்பாடம். இரண்டு வாரங்களுக்கு முன் வந்து சேர்ந்த புதுப் பையன் வெங்கடாசலத்துக்கு இன்னும் முதற்பாடம்கூடச் சரிவரப் புரியவில்லை. அதனால்தான் அவனுக்குச் செட்டியார் திட்டும்போது உள்ளூற மனம் குமுறியது. “பிச்சைக்காரன்”, “கஞ்சிக்கு இல்லாதவன்”, “நாயே, பேயே” என்று எத்தனையோ இழிசெற்களைச் சேற்றிலே தோய்த்து எடுத்துச் செட்டியார் வீசியிருக்கிறார். அவன் சொல்லாமல் கொள்ளாமல் கடையைவிட்டு ஓடிவிடலாம் என்று நினைத்தாலும், தன் தகப்பனாரின் கண்டிப்புக்குப் பயந்து இன்னும் அங்கேயே இருந்து கொண்டிருந்தான்.

அவனுடைய ரோஷத்தைக் கண்டும், செட்டியார் தங்களைத் திட்டுவதைக் கண்டும் மற்றப் பையன்கள் சிரித்ததற்குக் காரணம் அவர்களுக்கு மானமோ ரோஷமோ இல்லாததுதான் என்று யாராவது நினைத்தால், அதைவிடப் பெரிய தவறு வேறொன்றும் இருக்க முடியாது. அவர்கள் அங்கே இருந்து பழகியவர்கள். செட்டியாரின் வார்த்தைக்குப் பொருள் கிடையாது என்று மனப்பூர்வமாக அவர்கள் நம்பினார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு; ஒன்று வேறு எந்தக் கடையிலும் கடைச் சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் சம்பளத்தை விட இங்கே அதிக சம்பளம். தீபாவளிக்குப் புது வேஷ்டி சட்டைகளுடன் ஆளுக்குப் பத்து ரூபாய் ரொக்கமும் கொடுப்பார் செட்டியார். கடை வேலையைத் தவிர, தம்மை மறந்துகூட வீட்டு வேலை செய்யச் சொல்லமாட்டார். அவருடைய வீட்டுக்குக் கடைப் பையன்கள் போனால், முகத்தில் கடுகடுப்பில்லாமல் ‘ஐயா, ராசா’ என்று அன்போடு பேசுவார். ஏகதேசமாகச் சாப்பிடச் சொல்வதும் உண்டு. எல்லாவற்றையும் விட முக்கியமாக, யார் என்ன புகார் சொன்னாலும், எந்தப் பையன்கள் வாலிபர்களாகிக் கல்யாணம் செய்து கொள்ளும்போது, கல்யாணச் செலவுக்கு ஒரு கணிசமான தொகையும்

கொடுப்பது வழக்கம். அவர் கடையில் வேலை பார்த்த பையன் பெரியவனாகித் தனிக் கடை தொடங்க நினைத்தால், அதற்கும் உதவி செய்வார்.அப்படி அவர் கைதூக்கி விட்டு இன்று மூன்று பேர் அதே ஊரில் மளிகைக் கடைகளை லாபகரமாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த ரகசியங்களெல்லாம் கடைப் பையன்களுக்குத் தெரியும். அதனால்தான் அவருடைய வசைபுராணத்தை ஏதோ வழக்கொழிந்த ஓர் அந்நிய பாஷையில் இயற்றப்பட்ட காவியமாகக் கருதி ஒதுக்கித் தள்ளி விட்டார்கள்.

2

காலையில் பையன்கள் விபூதி பூசி வந்ததைக் கண்டு சீறி விழுந்ததைப் பார்த்த புதுப் பையன், மறுநாள் வெறும் நெற்றியோட வந்துவிட்டான். அவ்வளவுதான்: ‘‘நீ என்னடா சைவனா? இல்லை, வேதக்காரனா? (கிறிஸ்தவனா?) என்னலே முழிக்கிறே? ஒன் மூஞ்சியைப் பார்த்தா எவண்டா கடைக்கு வருவான்?... நெத்தியைச் சுடுகாடு மாதிரி வச்சிக்கிட்டு.....’’, ‘‘போய் விபூதியை எடுத்துப் பூசு’’ என்று கணக்குப் பிள்ளை அவனுக்குப் புத்தி சொன்னார். செட்டியார் திட்டுவதை உடனே நிறுத்தி விட்டார்.

அன்று செண்பகவல்லியம்மன் கோவிலில் கடைசி நாள் விழா. பெரிய மேளக் கச்சேரி, வாண வேடிக்கைகள் எல்லாம் ஏற்பாடாகியிருந்தன. வெளியூர்க் கூட்டம் தெருவெல்லாம் நிரம்பி வழிந்தது. அன்று ஒரு மணிநேரம் முன்னதாகவே - அதாவது, எட்டு மணிக்கே கடையை அடைத்து விட்டுத் தாமும் கோவிலுக்குப் போகலாம், மற்றவர்களையும் வீட்டுக்கு அனுப்பி விடலாம் என்று முடிவு கட்டியிருந்தார் செட்டியார். ஏழரை மணிக்கெல்லாம் ஷண்முகம் பிள்ளை வந்தார். செட்டியார் தம் ஓய்வொழிச்சலற்ற வசை புராணத்தை நிறுத்தி, ‘‘அண்ணாச்சி, வாங்க’’ என்று புன்னகையோடு அவரை வரவேற்றுவிட்டு, ‘‘மதுரைக்கு நேத்துத்தானே போனீங்க’’ என்று ஆச்சரியத்தோடு கேட்டார்.

‘‘அங்கே சோலி? போன காரியம் முடிஞ்சதும் திரும்ப வேண்டியதுதானே? இன்னிக்குக் காலையிலே முதல் வண்டிக்கே வந்துட்டேனே! குளிச்சுச் சாப்பிட்டேன். கொஞ்சம் அசந்து தூங்கினேன். தூங்கிப்பிட்டு வர்றேன்....’’

செட்டியார் கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஏழே முக்கால். இதுதான் சமயம் என்று ஆரம்பித்து விட்டார்.

‘‘ஏண்டா! தீவட்டித் தடியன்களா?’’

‘‘என்ன மொதலாளி’’ என்று இரண்டு பையன்கள் ஏக காலத்தில் கேட்டார்கள்.

‘‘என்ன மொதலாளியா? நானும் ஒரு மணி நேரமாப் பார்த்துக்கிட்டே இருக்கேன். இந்தப் பயக வாயைத் தொறந்து கேக்கட்டும்னு. நீங்க எங்கே கேப்பீங்க? ஒங்களுக்குச் சாமி ஏது, சாத்தான் ஏதுடா? அப்படித் தெய்வ பக்தி இருந்தா, ஒங்க மூஞ்சியிலே கொஞ்சமாச்சும் களை இருக்குமே! அறிவு கெட்ட பயகளா, இன்னைக்கு திருளா ஆச்சே, ஊர் பூராவும் கோயிலுக்குப் போய்ச் சாமி கும்பிடுதே, நாமளும் போகணும்னு ஏண்டா ஒங்களுக்குத் தோணல்லே?’’

அப்போது ஷண்முகம் பிள்ளை,‘‘மொதலாளி சொல்லாமே எப்படிக் கடையைப் போட்டுட்டுச் சாமி பார்க்கப் போவாங்க? நீங்க சொல்றது நியாயமில்லியே, செட்டியாரையா!’’ என்றார்.

‘‘ஆமா! அண்ணாச்சி, சாமி கும்பிடுறதுகூட மொதலாளியைக் கேட்டுத்தான் கும்பிடணும்! நீங்களும் அவங்க கட்சியிலே சேந்து பேசுங்க!’’ என்றார் செட்டியார்.

சோமசுந்தரம் பிள்ளை, பையன்களைப் பார்த்து, கடையை அடைப்பதற்கு எல்லாவற்றையும் எடுத்து உள்ளே வைக்கச் சொன்னார். அவர்களும் ஜரூராக வேலையில் இறங்கினார்கள்.

செட்டியார் மிகுந்த கவலையோடு ‘‘இந்தப் பயகளோட கத்திக் கத்தி என் தொண்டைத் தண்ணிதான் வத்துது அண்ணாச்சி, சேச்சேச்சே!’’ என்று சலித்துக் கொண்டார்.

ஷண்முகம் பிள்ளை சிரித்தார்.

சிறிது நேரத்தில் கடையை எடுத்து வைத்துப் பூட்டி முடித்ததும் பையன்கள் கோவிலுக்குப் போக உத்தரவுக்குக் காத்திருந்தார்கள்.

''என்னடா. கோயிலுக்குத்தானே?'' என்று கேட்டார் செட்டியார்.

''ஆமா! மொதலாளி''.

''கோயிலுக்கு வெறுங்கையை வீசிக்கிட்டுத்தான் போகப் போறீங்களா?''

பதில் இல்லை.

''என்னடா, நான் கேக்கிறேன், பேசாம நிக்கிறீங்களே? வாயிலே என்ன கொளக்கட்டையா இருக்கு?''

அதற்கும் பதில் இல்லை.

''பாருங்க அண்ணாச்சி, வாயைத் தொறக்கிறாங்களா, பாருங்க. கோயிலுக்குப் போறதுன்னா தேங்கா, பளம். சூடமெல்லாம் கொண்டு போகவேண்டாமா?''

''கொண்டுதான் போகவேணும்'' என்றார் ஷண்முகம் பிள்ளை.

''அது இந்தப் பயகளுக்குத் தெரியுதா, பாருங்க.....கடவுளே! கடவுளே!'' என்று தலையில் அடித்துக் கொண்டு, ''டேய்! இந்தாங்கடா, ஆளுக்கு ஒத்த ரூவா, போய், தேங்கா, பளம் வாங்கிட்டுப் போங்க. எங்க தலையிலே ஏன் களிமண்ணை வச்சே, சாமி? மூளையை வைக்கலேண்ணாலும் வெள்ளை மெளுகையாவது வச்சிருக்கக் கூடாதா?ன்னு சாமியைக் கேளுங்கடா'' என்று சொல்லிவிட்டு நான்கு பேருக்கும் நான்கு ரூபாய்களைக் கொடுத்தார். பையன்கள் போய் விட்டார்கள்.

செட்டியார் சாவிக் கொத்தோடு வீட்டை நோக்கி நடந்தார்.

சாப்பிட்டுவிட்டு அம்பாளின் நகர்வலத்தைப் பார்ப்பதாக உத்தேசம். அம்பாள் கடைத்தெருவுக்கு வர மணி பதினொன்றாகிவிடும் என்பது அவரக்குத் தெரியும். ஷண்முகம் பிள்ளையும் அவரும் பேசிக் கொண்டே போனார்கள். அப்போது ஷண்முகம் பிள்ளை தாம் வெகு நாட்களாகக் கேட்க நினைத்ததை அன்று அப்பட்டமாகக் கேட்டுவிடத் துணிந்தார்.

''என்ன செட்டியாரையா, நம்ம சிநேகிதத்தைப் பொறுத்துக் கேக்கிறேன். கோவிச்சுக்கிட மாட்டீங்களே?''

''என்ன அண்ணாச்சி, ஒங்களை எப்போ நான் கோவிச்சிருக்கேன்? என்ன இப்பிடிக் கேக்கிறீங்க? நமக்குள்ளே என்ன வேத்துமை?''

''இல்லே நீங்க ரொம்ப தயாள குணத்தோட இருக்கிறீங்க; ஊரிலேயும் ஒங்களைப் பத்திப் பெருமையாப் பேசிக்கிறாங்க. கடைப் பையன்களுக்கு உங்களைப் போலச் சம்பளம் குடுக்கிறவங்க இல்லேன்னும் எனக்குத் தெரியும். எல்லாம் நல்லாத்தான் இருக்கு. அனா, இப்பிடி இருபத்து நாலு மணி நேரமும் கடைப் பையன்களைத் திட்டிக்கிட்டே இருக்கிறீங்க? எப்போ வந்து பார்த்தாலும் எவனையாவது நிப்பாட்டி வச்சிக்கிட்டுப் பொரியிறீங்களே, எதுக்கு? கொஞ்சம் அன்பா ஆதரவா இருக்கலாமில்லே?''

''அண்ணாச்சி, அன்பா ஆதரவா இல்லேன்னா நான் திட்டுவனா? அதைக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்க. பயகளை நெசமா எனக்குப் பிடிக்கலேன்னா, ஒரே சொல்லில் கடையை விட்டு வெயியேத்திப்பிட்டு மறு சோலி பாக்க மாட்டனா? சொல்லுங்க. இந்த முப்பது வருசத்திலே. ஒருத்தனை நான் வேலையை விட்டப் போகச் சொல்லியிருக்கிறனா? பயக விருத்திக்கு வரணும்தானே தொண்டைத் தண்ணியை வத்த வச்சுக்கிட்டிருக்கேன்? கத்திக் கத்தி என் உசுரும் போகுது.

''ஏன் கத்தணும்? நல்லபடியா ஒரு சொல் சொன்னாப் பத்தாதா?''

“அப்படியா சொல்றீங்க அண்ணாச்சி? சரிதான்! நல்லபடியாகச் சொன்னா பயகளுக்கு திமிர் இல்லே ஏறிப் போகும்? ஒடம்பு வளையுமா? அந்தக் காலத்திலே நான் கடைப் பையனா இருந்தப்போ எங்க மொதலாளி பேசினதை நீங்க கேட்டிருக்கணும்..... ஹும், அதில பத்திலே ஒரு பங்குகூட நான் பேசியிருக்கமாட்டேன்; பேசவும் தெரியாது.”

“அப்பேர்ப்பட்ட மொதலாளியா அவரு!”

“என்னங்கிறீங்க? என்னப்பத்தி மட்டுமா? என் தாயி, தகப்பன், பாட்டன் அத்தனை பேரையும் சேர்த்துக் கேவலமாகப் பேசுவாரு. புளுத்த நாய் குறுக்கே போகாது. ஒரு நாள் என் மூஞ்சியிலே அஞ்சு பலப் படியையே தூக்கி வீசிட்டாரு. தலையைக் குனிஞ்சனோ, தப்பிச்சேனோ! அப்படியெல்லாம் வசக்கிவிடப் போய்த்தான் நானும் கடை வச்சு யாவாரம் பண்ணி, இவ்வளவு காலமும் ஒருத்தன் பாத்து ஒரு கொறை சொல்றதுக்கு இடமில்லாமே நிர்வாகம் பண்ணிக்கிட்ட வர்றேன்...”

ஷண்முகம் பிள்ளை, செட்டியாரின் வார்த்தைகளைக் கேட்டுச் சிரிக்க நினைத்தார். ஆனாலும் அப்புறம் சிரித்துக் கொள்ளலாம் என்று அதை அடக்கிக் கொண்டு, “செட்டியாரையா! ஒங்க மேலே தப்பில்லே, ஒங்க மொதலாளியைச் சொல்லணும். ஒங்களுக்கு நல்லாத்தான் பாடம் சொல்லிக் குடுத்திருக்காரு!....”

செட்டியாருக்கு அவர் சொன்னது விளங்கவில்லை. அதனால் “என்ன அண்ணாச்சி? என்ன சொல்றீங்க?“ என்று கேட்டார்.

“ஒங்களைப் பார்க்க எனக்கு உண்மையிலேயே பாவமா இருக்கு. இப்படிக் கத்தினா மொதல்லே ஒங்க ஒடம்புக்கு ஆகுமா?”

செட்டியாரும் தம் நிலையை எண்ணித் தாமே வருந்தினார். “என்ன செய்றது? நாம வாங்கின வரம் அப்படி. அந்தச் சோமசுந்தரம் பிள்ளை நடுவில ஏதாச்சும் செய்வாரு. அது தான் சாக்குன்னு கொஞ்சம் வாயை மூடுவேன். அவரு இல்லேன்னா நான் கத்திக் கத்தி மூச்சே போயிருக்கும். பயக நல்லாத் தலை எடுக்கணுமேன்னுதான் பார்க்கிறேன். அவங்க தாய், தகப்பன்மாரு என்னை நம்பி ஒப்படைச்சிருக்காங்களே..... என்னமோ அண்ணாச்சி, ராத்திரி வீட்டிலே வந்து படுத்துக்கிட்டே நானா நெனைச்சி வருத்தப்பட்டுக் கிடுவேன். ஒவ்வொரு சமயம் தொண்டை கட்டிக்கிடும். பாலிலே பனங்கல்கண்டும் மொளுகும் போட்டுக் குடிப்பேன். மொதலாளின்னு ஆயிட்டோம். செய்றதைச் செய்யத்தானே வேணும்? அந்தச் சம்புகவல்லி புண்ணியத்திலே இதுவரையிலும் ஒடம்புக்கு ஒண்ணு வந்து படுத்ததில்லை.”

“சரி சரி, எவ்வளவு காலம்தான் ஒடம்பு தாங்கும்? இனிமே ஒவ்வொண்ணையும் அப்படி இப்படி கொறைச்சிக்கிட்டு வரவேண்டியதுதான். நமக்குப் பகவான் தொண்டையை என்ன வெங்கலத்திலையா படைச்சிருக்கான்?”

ஷண்முகம் பிள்ளை சிரித்துக் கொண்டே சொன்ன புத்திமதி நியாயமானதாகவே செட்டியாருக்குப்பட்டது. ஆனாலும் அதை ஒப்புக்கொள்வது சுயநலம் என்று கருதினார்.

“அண்ணாச்சி? நீங்க என்னதான் சொல்லுங்க; பயக நல்லபடியாகத் தலையெடுக்கணும். இவ்வளவு காலமும் இப்பிடி இருந்துட்டு இனி எவன் எக்கேடு கெட்டா என்னண்ணு என்னாலே இருக்க முடியாது. இனிமே என்ன? வயசு அறுபதாச்சு. உசுரை வச்சிருந்து என்னத்தைச் சாதிக்கப் போறோம்?“ என்று தியாக உணர்ச்சியோடு பேசினார். பேச்சில் ஓர் உறுதி நிறைந்திருந்தது.

ஷண்முகம் பிள்ளை அதைப் பார்த்து, “அப்பிடின்னா, நித்தியப்படி அர்ச்சனை நடக்கும்னுதான் சொல்லுங்க” என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தார்.

செட்டியார் அவருடைய சிரிப்பைப் பார்த்து மிகவும் மனம் நொந்துகொண்டு, “என்னமோ அண்ணாச்சி, ஒங்களுக்குச் சிரிப்பா இருக்கு. பாருங்க. இப்போ சரியாக்கூடப் பேச முடியல்லே. தொண்டை வலிக்குது. நான் பொறந்த வேளை!“ என்று அழமாட்டாத குறையாகச் சொல்லியபடி நடந்தார்.

****

ஆசிரியர்: கு.அழகிரிசாமி (1923 - 1970)

இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இடைச்செவல் என்னும் சிற்றூரில் பிறந்தவர். இருபதாம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதையாசிரியர்களுள் ஒருவராக விளங்கியவர். சிறுகதைத் துறையில் மட்டுமன்றி, கட்டுரை, நாவல், நாடகம், கவிதை, சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, பத்திரிகை எனப் பல்துறைகளில் சாதனை புரிந்துள்ளார்.

இவரது 'அன்பளிப்பு' என்னும் சிறுகதைத்தொகுப்பு இந்திய அரசின் சாகித்திய அகடமி விருது பெற்றது. 'கவிச்சக்கரவர்த்தி' எனும் நாடகம் அவருக்குப் பெயரையும் புகழையும் பெற்றுக் கொடுத்தது.

பேசுபொருள்:

கதிரேசன் செட்டியார் வேலையாட்களோடு மிகவும் கண்டிப்பாக நடந்துகொள்பவராகத் தோன்றுகிறார். முடிவில் வேலையாட்களின் முன்னேற்றத்தில் அக்கறைமிக்க நல்லுள்ளங் கொண்டவர் அவர் என்பது புலனாகின்றது.

கதாபாத்திரங்கள்:

கதிரேசன் செட்டியார்	-	மளிகைக்கடை முதலாளி
சோமசுந்தரம்பிள்ளை	-	கணக்கு எழுதுபவர்
ஷண்முகம்பிள்ளை	-	கதிரேசன் செட்டியாரது நண்பர்
முருகையா வெங்கடாசலம்	} -	சிப்பந்திகள்

கதாசிரியரது உத்தி:

- பாத்திரங்களின் இயக்கத்தையும் உரையாடல்களையும் இயல்பு குன்றாமல் வாசகர்களை வசீகரிக்கும் வகையில் சித்திரிப்பதன் மூலம் பாத்திரங்களின் குணாதிசயங்களைப் புலப்படுத்தல்
- இலேசான நகைச்சுவையை இழையோடவிடல்
- உரையாடல் மூலம் கதையை வளர்த்துச் செல்லல்
- பாத்திர உரையாடல்களுக்குப் பொருத்தமான பேச்சுமொழிகளைக் கையாளல்

எடுத்துரைப்பு முறை:

- முதலாளியான கதிரேசன் செட்டியாரின் கண்டிப்பு சுபாவத்தை, அவரது ஏச்சுக்களினூடாக நுணுக்கமான முறையில் வெளிப்படுத்தல்.
- கதை முடியும் வரை அவரது மனக்கிடக்கை வெளிப்படாமை.
- அவர் செய்து வந்த தியாகம் இறுதியில் வெளிப்படுத்தப்படும் பாங்கு.

மாதிரி வினாக்கள் :

1) கதிரேசன் செட்டியாரின் தியாக மனப்பாங்கு நுட்பமான முறையில் வெளிப்படுத்தப்படு - மாற்றினை விளக்குக.
2) சோமசுந்தரம்பிள்ளை என்ற பாத்திரம் பற்றிய உங்கள் மனப்பதிவைத் தெளிவுபடுத்துக.
3) இச்சிறுகதையில் ஷண்முகம்பிள்ளை என்ற பாத்திரத்தின் பங்கு யாது?

****

13. நாவல்

ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது

ஆசிரியர் : வ.அ. இராசரத்தினம் (வயித்தி அந்தோனி இராசரத்தினம்) 1925 - 2001
இவர் திருகோணமலை மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பயிற்றப்பட்ட ஆசிரியர். சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, விமர்சனம், ஆய்வு முதலான பல துறைகளிலும் ஈடுபட்டவர். கொழுகொம்பு, துறைக்காரன், கிரௌஞ்சப் பறவைகள், மண்ணில் சமைந்த மனிதர்கள் முதலியன இவர் எழுதிய ஏனைய நாவல்களாகும். இலக்கிய ஆக்கங்களுக்காகப் பல பரிசில்களும் விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் 2006 இல் இவருக்குக் கௌரவ இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கியது.

பேசு பொருள்:
பின்தங்கிய அவல நிலையிலுள்ள கிராமம் ஒன்று முன்னேற்றம் காணவேண்டும் என்ற உந்துதலின் விளைவாக, அதற்குச் சாத்தியமான வழி கல்வியில் வளர்ச்சி காண்பதே என்பதை எடுத்துக் காட்டுவது இந்நாவலின் நோக்கமாகவுள்ளது.

முக்கியமான பாத்திரங்கள்:

தாமோதரம்
சௌந்தரம்
மயில்வாகனம்
தெய்வானை
சின்னத்தம்பி
கோணமலை
நாகேந்திரன்
செல்லையா
அபிராமி

நாவலாசிரியர் விபரிக்க விழைந்த விடயம்:

திருகோணமலைக்கு அருகிலுள்ள மூதூர் கிராமத்தில் நிகழ்ந்த விழிப்புணர்வைச் சித்திரிப்பதாக நாவல் அமைகின்றது. கல்வியின் முக்கியத்துவத்தைப் பல்வேறு பாத்திரங்கள் ஊடாக உணர்த்துகின்றார். பெண்களுக்கு கல்வி தேவை என வலியுறுத்தும் சில பாத்திரங்களையும் அதனை மறுக்கின்ற பாத்திரங்களையும் நகர்த்தி, கடைசியில் கல்வி, பெண்கல்வி பற்றிய விழிப்புணர்வினை வெளிப்படுத்துகின்றார்.

கிராம அபிவிருத்திக்கு கல்வி மட்டுமன்றி, சிறந்த உழைப்பாளிகளும் தேவை என்பதை வலியுறுத்துகிறார். உடலுழைப்பின் முக்கியத்துவம் பற்றி, நாவலில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது.

ஒருவரது மரணம் அவரோடு தொடர்புபட்டவர்களது வாழ்வில் எத்ததைய திருப்பத்தை ஏற்படுத்துகின்றது என்பதை இந்நாவல் நன்கு சித்திரிக்கிறது.

பால்ய வயது / இளமைத் திருமண ஒவ்வாமை, சமுதாய முன்னேற்றத்துக்குக் கல்வியின் முக்கியத்துவம், இல்லற வாழ்வின் சிறப்பு, சகோதர பாசம், விருந்தோம்பும் பண்பு, இறை நம்பிக்கை முதலானவை எடுத்துக்காட்டப்படுகின்றன.

மொழிநடை:

- இயல்பான நடையில் எழுதப்பட்டமையால் யாவரும் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.
- பிரதேசப் பேச்சு வழக்குச் சொற்களும் வேற்றுமொழிச் சொற்களும் பொருத்தமுறப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- பாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்கள் அளவுக்கு அதிகமாக இடம்பெறாமல், கதைக்கருவை வலியுறுத்துவதற்கு உதவும் வகையில் அமைந்துள்ளன.
- பாத்திரங்களது இயக்கம், கதைச் சம்பவங்களோடு இணைந்து செல்கிறது.

மாதிரி வினாக்கள் :

1) ''ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது'' என்ற நாவல் எழுதப்பட்டதன் நோக்கம் யாது?

2) ''ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது'' என்ற தலைப்பின் பொருத்தப்பாடு பற்றி விளக்குக.

3) ''ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது'' என்ற நாவலில்,

   (அ) உடலுழைப்பின் முக்கியத்துவம்

   (ஆ) கிராம அபிவிருத்தி பற்றிய இளைஞர் சிந்தனைகள்

   என்பன சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

4) ''மறைப்பிற்காகக் கட்டிய கிடுகு வேலிக்குள்ளாலதான் உலகத்தைப் பார்க்குது நம் பெண் சமூகம். எப்பத்தான் இவர்கள் நேரடியாக உலகத்தைப் பார்க்கப் போகிறார்களோ'' என்ற கூற்றினூடாக ஆசிரியர் வெளிப்படுத்த விளைந்த விடயங்களைத் தெளிவுபடுத்துக.

5) சௌந்தரம் என்ற பாத்திரத்தின் மூலம் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை நாவலாசிரியர் எவ்வாறு உணர்த்துகின்றார்?

6) ஆலங்கேணி கிராம மக்களின் வாழ்க்கை முறைகளையும் பழக்கவழக்கங்களையும் ''ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது'' என்ற நாவல் சித்திரிக்கின்றது - விளக்குக.

****

14. நாடகம்

இரு துயரங்கள்

I

மேடைத் திரை விலகுமுன்னர் மண்டபத்து ஒளி மங்கத் தொடங்குகிறது. அரை மங்கலில் இசைக்குழு இந்த நாடகத்துக்கான இசையை வாசிக்கத் தொடங்குகிறது. தொடக்கத்தில் இசை வேகமாக ஆரம்பித்து, சடுதியாக சோக இசையாக மாறுகிறது. சோக இசையை மீட்டத் தொடங்கும் போது மண்டபத்து ஒளி மங்கி மறைகிறது. திரை மெல்ல விலகுகிறது. மேடையிலே, சற்று மங்கிய ஒளி பாய்ச்சப்பட்டுள்ளது. மேடையின் இடது பாதையில், கீழ்மேடை இடம் பிற்பகுதியை அண்டி, சோ.ஃவா செற்றிகள், பூச்சாடியோடு கூடிய நீள மேசை என்பன உள்ளன. நடுமேடை இடம் பின் மூலையடியில், நிறுத்தியோடு கூடிய மின் விளக்கும், அதனை அண்டி மேல் மேடை இடத்தில், புத்தகங்களோடு கூடிய புத்தக இறாக்கையும் அதன்மேல் அலங்கோலமாகக் கிடக்கும் அலங்காரப் பொருள்களும் இரண்டு மூன்று பெரிய புத்தகங்களும் உள்ளன. மேல் மேடை வலத்தை அண்டி ஒரு கட்டில், அதன் தலைமாட்டில், குத்துவிளக்கோடு கூடிய சிறிய மேசையும், பின் புறத்துள்ள யன்னலை அண்டி, சற்று உயரமான மேசையும், அதன்மேல் மருந்துப் போத்தில் வகையறாக்களும், திறந்தபடியுள்ள ஒரு தடித்த புத்தகமும் காணப்படுகின்றன. நடிகர்கள் மேடைக்குட் பிரவேசிப்பதற்கு, கீழ்மேடை இடத்தின் பக்கச் சுவரிற் கதவொன்றும், நடுமேடை வலத்தின் பக்கச் சுவரில் இன்னுமொரு கதவும் உள்ளன.

இது இளைப்பாறிய டொ'க்ற்ற(ர்) கந்தப்புவின் இருக்கை அறையும் படுக்கை அறையும் சேர்ந்த பகுதியாகும். இவற்றின் பிரிப்பைக் காட்டுவதற்கு நடுமேடை மத்தியில், நிலை கதவைக் குறிக்கும் ஒரு சட்டப்படல் வைக்கப்படலாம். இவ்விரு பகுதிகளும் அவையோருக்கு நன்கு தெரிகின்றன. மேல்மேடை வலத்தை அண்டிய கட்டிலிலே கந்தப்புவினது குழந்தையின் பிணம் வைத்து மூடப்பட்டுள்ளது. கந்தப்பு நரை விழுந்த கிழவர். கட்டிலருகில், முழந்தாளில் குனிந்து நின்று முனகி முனகி விம்மிக்கொண்டிருக்கிறாள், கந்தப்புவின் மனைவி. அவளும் வயது போனவள் தான். மருந்துப் போத்தில் வகையறாக்கள் உள்ள மேசையில் கைகளை ஊன்றியபடி, பக்கவாட்டாக யன்னலினூடாக வெறித்துப் பார்த்தபடி நிற்கிறார் டொ'க்ற்ற(ர்). நெறியாளர் மேடையில் வந்து அவரது அறிமுகத்தை முடித்துப் போகும்வரை இருவரும் சோகச் சிலையாக நிற்கிறார்கள். இசை சோகமழை பொழிகிறது. நெறியாளர் பேசத் தொடங்கியதும் இசை மெல்லத் தேய்ந்து, அவர் சென்றதும் கூடி, பின் வசனங்களுக்கு இடங்கொடுக்கும் வகையிலே தேய்ந்து மறைகிறது.

நெறியாளர்: (மேடையில் உள்ள பொருள்கள், நடிகர்களைக் கவனித்தபடி கீழ் மேடைக்கு வந்து) இரு துயரங்கள். இந் நாடகத்தினுடைய மூலம் அன்ற்றன் ச்கெக்வோவ் எழுதின ஒரு சிறுகதை. அந்தச் சிறுகதையிலை நாடக அம்சங்கள் நிறைய இருக்கெண்டு தோன்றிச்சுது, எனக்கு. அதுதான், நாடகமாக்கித் தரச்சொல்லிக் கேட்டேன். முருகையன் தான் நாடகமாக்கித் தந்தவர். அங்கை நிற்கிறவர் தான் டொ'க்ற்ற(ர்) கந்தப்பு. இது அவருடைய மனைவி. அவைக்கு ஒரேயொரு பிள்ளை. அந்தப் பிள்ளை இப்ப கொஞ்சம் முந்தித்தான் போயிட்டுது. வயிற்றோட்டம் - படுவன் எண்டு தமிழிலை சொல்லுறது... வயசான காலத்திலை தான் அவைக்கு அந்தப் பிள்ளை பிறந்தது. அவையும் அந்தப் பிள்ளையை ஆசையாயும் கவனமாயும் தான் வளத்தவை. என்ன செய்யிறது? அந்தக் கவலையிலை தான் அவரும் அவற்றை பெண்சாதியும் நிக்கினம். இந்தத் துக்கமான செய்தியோடை தான் நாங்கள் நாடகத்தை ஆரம்பிக்கிறம். சரி. உங்கடை ரசனைக்குக் குறுக்கை நான் நிற்கிறது சரியில்லை. நீங்கள் நாடகத்தைப் பாருங்கோ.

(நெறியாளர் போகிறார். கந்தப்பு தலைமயிரை ஒதுக்கிக்கொண்டே வெளிப்புறமாகப் பார்க்கிறார். பின்னர் பெருமூச்சு விடுகிறார். சட்டைப்பையைத் துழாவி, இருபது முப்பது நொடிகளுக்குப் பிறகு ஒரு கைலேஞ்சியை எடுக்கிறார். பிறகும் காற்சட்டைப் பையில் எதையோ தேடுகிறார். ஒரு நெருப்புப் பெட்டி அகப்படுகிறது. சிறிது நேரம் அதை வருடிக் கொண்டிருந்துவிட்டு, பிணத்தின் தலைமாட்டில் உள்ள குத்துவிளக்கில் ஒரு திரியை இட்டு ஏற்றுகிறார். பிறகு சில ஊதுவத்திகளையும் பற்றவைத்துப் பிணத்தருகிலே வைக்கிறார். சிறிது நேரம் அதை வருடிக்கொண்டிருந்து விட்டு, பிணத்தின் தலைமாட்டில் உள்ள குத்துவிளக்கில் ஒரு திரியை இட்டு ஏற்றுகிறார். பிறகு சில ஊதுவத்திகளையும் பற்றவைத்துப் பிணத்தருகிலே வைக்கிறார். சிறிது நேரம் குனிந்து பார்த்துக் கொண்டு நிற்கிறார். கண்களை ஒரு தடவை மூடித் திறந்துவிட்டு வெளியே வருகிறார். கதவு மணி அலறுகிறது. டொ'க்ற்ற(ர்) சட்டைத் தெறியைக்கூடப் பூட்டாமல் வெளியே வந்து பார்க்கிறார். மனோகரன் விரைந்து நுழைகிறான்.

மனோகரன்: டொ'க்ற்ற(ர்) இருக்கிறாரா, வீட்டிலை?

கந்தப்பு: ஓ... நான்தான் டொ'க்ற்ற(ர்). என்ன வேணும்?

மனோகரன்: ஓ... சந்தோஷம், டொ'க்ற்ற(ர்). நல்ல காலம். நீங்கள் வீட்டிலை இருந்தது. (டொ'க்ற்ரரின் கைகளைப் பற்றியபடி) உங்களை எனக்குத் தெரியும். டொ'க்ற்ற(ர்) என்ற்றை பேர் மனோகரன். மிசிஸ் ஆறுமுகத்தின்ற்றை றிலேஷன். நீங்கள் ஓரிடமும் வெளியாலை போகாமல் இருந்ததே பெரிய காரியம். உடனை என்னோடை வரவேணும் டொ'க்ற்றர் என்ற்றை சம்சாரத்துக்குச் சுகமில்லை. கடும் வருத்தம். ஆபத்து. கார் கொண்டு வந்திருக்கிறன் டொ'க்ற்ற(ர்).

(படபடப்புடன் பதறிப் பதறிப் பேசுகிறான், மனோகரன். கந்தப்பு எதுவும் பேசவில்லை. குனிந்தபடி நிற்கிறார்.)

மனோகரன்: நீங்கள் வீட்டிலை இருப்பீங்களோ இல்லையோ எண்டு பயந்து கொண்டுதான் வந்தநான். வழி முழுவதும் இதே கவலைதான், எனக்கு. அப்பிடியே அந்தரிச்சுப் போனென் டொ'க்ற்ற(ர்). சட்டையைப் போட்டுக் கொண்டு வாருங்கோ. உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.

(கந்தப்பு முகத்தில் எந்தவித சலனமும் காட்டாமல், சோகத்தோடு பெருமூச்சு விட்டபடி மேலே பார்க்கிறார்.)

மனோகரன்: டொ'க்ற்ற(ர்), நடந்தது இதுதான். பஞ்சாட்சரம் வந்தவன். என்னைக் காணிறதுக்கெண்டு - எங்கடை வீட்டுக்கு. கொஞ்ச நேரம் பலதையும் பத்தையும் பேசிக்கொண்டு நாங்கள் இருந்தம். பிறகு எல்லாருமாய்த் தேத்தண்ணி குடிச்சம். பஞ்சாட்சரத்துக்கு வயலின் வாசிக்கிறது கே'க்க நல்ல விருப்பம். அவன் வயலின் வாசிக்கச் சொல்லிப் பாமாவைக் கேட்டான். அவள் உடனை வயலினை எடுத்து வாசித்தாள். திடீரெண்டு அவள் கையை நெஞ்சிலை வைச்சபடியே அலறினாள். அப்பிடியே பொத்தெண்டு விழுந்து போனாள். அவளைத் தூக்கி கட்டிலடிக்குக் கொண்டுபோய் ஆறுதலாய்ப் படுக்க வைச்சம். நெற்றியிலை 'ப'ாம் பூசி, முகமெங்கும் தண்ணி தெளிச்சுப் பாத்தம். ஆள் அசையவே இல்லை. மரக்கட்டை மாதிரிக் கிடக்கிறாள். இது அனூறிசிம் எண்டுதான் நான் நினைக்கிறன். அவவின்ற்றை தகப்பனார் கூட அனூறிசிம் வந்து தான் செத்தவராம். அதை நினைக்கத்தான் பயமாயிருக்கு.

(டொ'க்ற்ற(ர்) எதையும் காதில் வாங்கிக் கொள்ளாதவர் போல மவுனமாய் நிற்கிறார்.)

மனோகரன்: நீங்கள் உடனை வெளிக்கிடுங்கோ டொ'க்ற்ற(ர்). சட்டையைப் போட்டுக் கொண்டு வாருங்கோ.

(கந்தப்புவின் கைகளை இரு கைகளாலும் பற்றியபடியே அழைக்கிறான், மனோகரன். கைகளை விடுவித்துப் பின்வாங்கியபடியே ஒரு அசுமாத்தமும் இன்றிப் போகிறார்.)

கந்தப்பு: மன்னிக்க வேணும். ஐஞ்சு நிமிஷத்துக்கு முந்தித்தான் என்ற்றை பிள்ளை மோசம் போயிட்டுது.

மனோகரன்: ச்... ச்... ச்... (சிறிது நேரம் பொறுத்து) ஆ, கடவுளே! எப்படிப்பட்ட அசந்தர்ப்பமான வேளையிலே நான் வந்திருக்கிறென்! என்ன அதிட்டக் குறைவான நாள்... ஆனால், ஆர் தான் நினைச்சிருப்பினம், இப்பிடி நடக்கும் எண்டு. ச்... ச்... ச்...

(யோசனையில் ஆழ்ந்தபடியே போவதா, விடுவதா என்று தயங்குகிறான், மனோகரன். டொ'க்ற்றரின் கையை உரிமையுடன் நெருக்கமாகப் பற்றியபடி)

மனோகரன்: மன்னிச்சுக் கொள்ளுங்கோ டொ'க்ற்ற(ர்). தயவு செய்து கேளுங்கோ நான் சொல்லிறதை. உங்கடை நிலைமை எனக்கு விளங்குது. பரிபூரணமாய் விளங்குது. இந்த வேளையிலை உங்களை வரச்சொல்லிக் கே'க்கிறது எவளவு வெக்கக்கேடான காரியம். கடவுளுக்குத்தான் தெரியும். நான் படுற பாடு. ஆனால் என்ன செய்யிறது? வேறை வழியில்லை, டொ'க்ற்ற(ர்). நீங்களே யோசிச்சுப் பாருங்கோ... நான் வேறை ஆரிட்டைப் போறது? உங்களை விட வேறை டொ'க்ற்றரே இல்லை, இந்த ஊரிலை. வேறை ஊருக்குப் போய்த் தேடிப் பிடிச்சு வாறதுக்கிடையிலை... இது மிச்சம் ஆபத்தான வியாதி. பாமாவின்ற்றை தகப்பனும் அனுறிசிம் வந்து தான் செத்தவர். பொல்லாத நோய். அனுறிசிம் டொ'க்ற்ற(ர்). அவர் கன காலம் வருத்தமாயும் கிடக்கேல்லை. திடீரென்று ஒரு நாள்... டொ'க்ற்ற(ர்), நீங்கள் எனக்கு இப்ப கடவுள் போலை. தயவுசெய்து மறுக்காமல் வாருங்கோ. டொ'க்ற்ற(ர்), நான் எனக்காகாய்க் கே'க்கேல்லை. வேறை ஒரு உயிருக்காய்க் கே'க்கிறென். தயவு செய்து ... ப்லீஸ் ...

(சிறிது நேரம் மவுனம். கந்தப்பு திரும்புகிறார். மனோகரனுக்குப் பின்காட்டிய படி சில நொடி நிற்கிறார். பின்னர், இயந்திரம் போல உள்ளறைக்குப் போகிறார். அங்குள்ள குத்து விளக்கைத் தூண்டிவிட்ட பிறகு, எண்ணெய்க் போத்திலை எடுத்து எண்ணெய் விடுகிறார். கையை ஒரு துவாயாலே துடைத்த பிறகு, பிணத்தின் அருகில் நின்று ஒரு வெற்றுப் பார்வையைப் படிய விடுகிறார். தமது மூக்கினை விரல்களால் அர்த்தமின்றிப் பிடித்து விட்ட பிறகு, நாடியைத் தடவுகிறார். மேசையிலே விரிந்தபடி இருந்த ஒரு மொத்தமான புத்தகத்தை எடுத்து, நடுப்பக்கத்தைப் பார்க்கிறார். பின்னர் அப்புத்தகத்தின் பக்கங்களை விறுவிறு என்று முன்னும் பின்னும் புரட்டுகிறார். நெற்றியின் முகட்டை விறுவிறு என்று உரசி விட்டுக்கொண்ட கந்தப்பு வெளிக்கூடத்துக்கு வருகிறார்.)

மனோகரன்: (ஆறுதலாகப் பெருமூச்சு விட்டபடி) அப்பாடா - வாருங்கோ, டொ'க்ற்ற(ர்).
(மனோகரனைக் கண்ட பிறகு தான் அப்படி ஒருவன் தன் வீட்டில் வந்து நிற்கிறான்; தன் மனைவியின் நோய்க்கு வைத்தியம் பார்க்கும் பொருட்டுத் தன் வீட்டுக்கு வருமாறு தம்மை அழைத்தான் என்ற நினைவு டொ'க்ற்றருக்கு உண்டாகிறது.)

கந்தப்பு: ஓ... நான்... அப்பவே சொன்னெனே, வர ஏலாதெண்டு. தயவு செய்து என்னைக் கரைச்சல் செய்யாதையும்.

மனோகரன்: இல்லை டொ'க்ற்ற(ர்), உங்கடை நிலைமை எனக்கு நல்லாய் விளங்குது. நான் என்ன, கல்லுச் சிலையா, அல்லது மரக்குத்தியா... நல்லாய்த் தெரியும், நீங்கள் எப்படிப்பட்ட மனநிலையிலை இருக்கிறீங்கள் எண்டு. நானும் மனிசன் தான். ஒரே ஒரு பிள்ளையை, அதுகும் இந்த வயசிலை... பறிகுடுக்கிறதெண்டால், அது எவ்வளவு ஏமாற்றமாய் இருக்கும்... எவ்வளவு தூக்கமாய், கவலையாய் இருக்கும்... அதெல்லாம் எனக்குப் பூரணமாய் விளங்கும். ஆனால், நான்... கே'க்கிறது எனக்காகாக இல்லை, டொ'க்ற்ற(ர்). வேறை ஒரு உயிர் சீவத்தறுவாயிலை இருக்குது. சாகக் கிடக்கிறவள் என்ற்றை சம்சாரம். அந்தக் கிறீச்செண்ட குளறலைக் கேட்டிருந்தீங்கள் எண்டால், முகத்தைப் பாத்திருந்தீங்கள் எண்டால், என்ற்றை கிலேசம் உங்களுக்கு விளங்கும். கடவுளே, கடவுளே... சத்தியமாய் நான் நினைச்சென், நீங்கள் உடுப்புப் போடத்தான் உள்ளை போயிட்டீங்கள் எண்டு. டொ'க்ற்ற(ர்), ப்ளீஸ், வாருங்கோ. நேரம் பொன்னானது. மண்டாடிக் கே'க்கிறென். நீங்கள் வரத்தான் வேணும்... ப்ளீஸ்...

கந்தப்பு: (தெளிவாகவும் திடமாகவும்) மன்னிச்சுக் கொள்ளும் நான் இப்ப உம்மோடை வர ஏலாது.

(இவ்வாறு சொன்ன கந்தப்பு உள்ளே செல்லத் திரும்புகிறார். தொடர்ந்து சென்ற மனோகரன் கந்தப்புவின் கையைப் பிடித்துக் கொள்ளுகிறான்.)

மனோகரன்: டொ'க்ற்ற(ர்), நீங்கள் படுற சங்கடம் எனக்குத் தெரியும். அது எவ்வளவு கடுமையானது எண்டதும் எனக்கு விளங்கும். ஆனால், நான் வரச் சொல்லுறது ஒரு பல்லுக்கொதிக்குப் பரியாரம் செய்யிறதுக்கு இல்லை, டொ'க்ற்ற(ர்). தடிமன் காய்ச்சலுக்கு மருந்து எழுதிக் குடுக்கிறதுக்காக இல்லை, உங்களை நான் வரச்சொல்லி மண்டாடுறது. ஒரு உயிரைக் காப்பாற்றுறதுக்கு... ஒரு மனிச சீவனைக் காக்கிறதுக்காக ... (மன்றாட்டமாக) டொ'க்ற்ற(ர்), மனிச சீவன் தனிப்பட்ட துயரங்களை விட மேலானது. விலைமதிப்பில்லாதது. மனிசத் தன்மையின்ற்றை பேராவை கே'க்கிறென், டொ'க்ற்ற(ர்), உங்கடை மனத் தைரியத்தையும் தியாக சிந்தையையும் காட்டுங்கோ... தயவு...

கந்தப்பு: (பதற்றத்துடன்) தயவு செய்து என்னை இனித் தெண்டிக்க வேண்டாம். வைத்திய தர்ம விதி பதின்மூண்டாம் புத்தகம் முதலாம் பிரமாணப்படி, என்ற்றை கழுத்தைப் பிடிச்சு இழுத்துக் கொண்டு போக உமக்கு உரிமை இருக்கு. வைத்திய தருமப்படி உம்மடை வேண்டுகோளை மறுக்கிறதுக்கு எனக்கு உரிமை இல்லை. விருப்பமெண்டால் என்னை நீர் அப்பிடி இழுத்துக் கொண்டுபோம். ஆனால், எந்த வேலையையும் செய்யக்கூடிய நிலைமையிலை இப்ப நான் இல்லை. என்னை மன்னிச்சுக் கொள்ளும், மிஸ்ற்ற(ர்) மனோகரன்.

மனோகரன்: இல்லை, டொ'க்ற்ற(ர்), நீங்கள் அந்தத் தொனியிலை பேசக்குடாது. வைத்திய தருமத்தைப் பற்றியும் பதின்மூண்டாம் புத்தகத்தைப் பற்றியும் எனக்கு என்ன கவலை? உங்களைக் கட்டாயப் படுத்துறதுக்கு எனக்கு என்ன உரிமை இருக்கு? அப்பிடி நான் கனவிலையும் நினைக்க மாட்டென். இப்ப என்ற்றை சம்சாரத்தை நீங்கள் தான் காப்பாற்ற வேணும். நீங்கள் தான் தெய்வம். நீங்கள் தான் கடவுள். மனமிரங்கி, மனமிசைஞ்சு வாறதெண்டால் வாருங்கோ. இல்லையெண்டால், நான் என்ன செய்ய முடியும்? என்ற்றை தலைவிதி எண்டிட்டுப் போக வேண்டியது தான்... போறதா? நான் எங்கை போறது? டொ'க்ற்ற(ர்), உங்களைத் தவிர வேறை கதியே இல்லை. உங்கடை மகன் உங்களைவிட்டு, இப்பத்தான் பிரிஞ்சிட்டான் எண்டு சொன்னீங்கள். அப்பிடியெண்டால், என்ற்றை அந்தரம் உங்களைத் தவிர வேறை ஆருக்குத் தான்

விளங்கும்? என்னடா, அலம்பிக் கொண்டு நிக்கிறான், மடையன் எண்டு நினையாதையுங்கோ. என்ன பேசுறதெண்டு யோசிக்கிற மனநிலையே எனக்கு இல்லை. தயவு செய்து குறை நினைக்க வேண்டாம். உடனை வாருங்கோ. வைத்தியர் தானே கண்கண்ட தெய்வம்! நீங்கள் வாருங்கோ டொ'க்ற்ற(ர்). அனுறிசிம் எண்டால்... அய்யோ, கடவுளே! டொ'க்ற்ற(ர்), கன நேரம் நான் மிளைக்கெடுத்த மாட்டென். ஒரு அரை மணித்தியாலம்.

கந்தப்பு: கன தூரம் போக வேணுமா?

மனோகரன்: இல்லை. ஒரு நாலு நாலரைக் கட்டை தான் இருக்கும். கார் கொண்டு வந்திருக்கிறென். அரை மணித்தியாலம் எடுக்காது, போய்த் திரும்பி வர. மறுக்காமல் வாருங்கோ.

கந்தப்பு: (சிறிது நேரம் யோசித்துப் பெருமூச்சு விட்டபடி) ம்...

(கந்தப்பு உள்ளே சென்று மனைவியையும் குழந்தையையும் மாறி மாறிப் பார்த்தபடி நிற்கிறார். மனோகரன் நிலை கொள்ளாது தவிப்பவனாய் உள்ளான். சிறிது நேரத்தின்பின் கோ'ற்றை மாட்டிக் கொண்டு கைப்பெட்டி சகிதம் வருகிறார், கந்தப்பு. மனோகரன் அவரிடமிருந்து பெட்டியை வாங்கிக் கொண்டு, முன்னே அவரை அழைத்துச் செல்கிறான். நடந்து வெளியேறப் போன கந்தப்பு, ஒரு கணம் நின்று, உள்ளறைப் பக்கம் பார்க்கிறார். மனோகரன் அவர் கையைப் பிடிக்கவே, மெல்லத் திரும்பிப் போகிறார். சோககீதம் மெல்ல இசைத்துக் கூடுகிறது. ஒளி மெல்ல மெல்ல மங்க, திரை மெதுவாக மூடுகிறது.)

II

இரண்டாம் காட்சி மனோகரனின் வரவேற்பறையில் நடைபெறுகிறது. மனோகரன் வீடு வசதி உள்ள ஒருவரின் வீடாகக் காட்சி தருகிறது. மேடையின் இடப்பாதியின் பின் பகுதியில், மேல் வீட்டுக்குச் செல்வதற்கான படிக்கட்டுத் தென்படுகிறது. நடு மேடை இடத்தின் பிற்பகுதியிலும் படிக்கட்டு முன்பாகவும் ஒரு ஷோக்கேஸ் உள்ளது. ஷோக்கேசுக்கு மேல், தொலைக்காட்சி, டெக் போன்ற பொருட்கள் உள்ளன. இடப்பக்கச் சுவரின் நடுப்பகுதியில் ஒரு புத்தக இறாக்கை உள்ளது. மேடையின் வலப்பாதி நடுப்பகுதியில், சோ.ஃவா செற்றிகள் போடப்பட்டுள்ளன. நீள மேசை மீது ஆ(ய்)ஷ்ட்ரேயும் சில கவர்ச்சிப் பத்திரிகைகளும் உள்ளன. இவற்றோடு நிறுத்தியிற் பொருத்திய ஒரு பெண்ணின் ஒரு படமும் வைக்கப்பட்டுள்ளது. நடு மேடை வலத்தின் கீழ் வல மூலையில், நிறுத்தியோடு கூடிய ஒரு மின் விளக்கும் உண்டு. நீளமான செற்றியில் ஒரு தலையணையும் குழம்பிய கோலத்திற் கிடக்கும் ஒரு படுக்கை விரிப்பும் காணப்படுகின்றன.

முந்திய காட்சியைவிட இந்தக் காட்சியில் அதிகம் வெளிச்சம் உண்டு. இப்பொழுதுதான் கதாபாத்திரங்களைச் கலைஞர்கள் முழுமையாகப் பார்க்கிறார்கள். டொ'க்ற்றரின் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கதவைத் திறந்தபடி மனோகரன் உள்ளே நுழைகிறான். கந்தப்பு பின்னால் வருகிறார்.

மனோகரன்: (அறையைச் சுற்றும் முற்றும் நோட்டமிட்டு, நின்று) ஏதாவது அவக்கேடாய் நடந்திருந்தால்... கடவுளே!)

(திடீரென்று கந்தப்பு நிற்கும் பக்கம் பார்வையைத் திருப்புகிறான். அவர் இன்னும் இருப்புக் கொள்ளாமல் அவன் நிற்கும் திசையை நோக்கியபடி, ஆனால், சிந்தனை வேறெங்கோ அலைய வெறிப்புடன் நிற்கிறார். அவரை உரியபடி உபசரிக்க வேண்டும் என்னும் விழிப்பு வர...)

மனோகரன்: இருங்கோ, டொ'க்ற்ற(ர்), இருங்கோ. அவை மேலைதான் இருக்க வேணும். நீங்கள் வந்திருக்கிறீங்கள் எண்டு சொல்லிப் போட்டு வாறென்.

(டொ'க்ற்ற(ர்) ஏதோ முணுமுணுப்பது போல் வாயசைக்கிறார்.

மனோகரன்: உண்மையிலை, டொ'க்ற்ற(ர்), உங்கடை பெருந்தன்மையை நினைக்க நினைக்க... அதைப்பற்றி என்ன சொல்லிற தெண்டே எனக்குத் தெரியேல்லை. சத்தியமாய்ச் சொல்லிறென், டொ'க்ற்ற(ர்)... சரி, சரி... ... நீங்கள் இருந்து கொள்ளுங்கோ. நான் அவைக்குச் சொல்லிப்போட்டு வாறென்.

(கடகட வென்று மாடிப்படி ஏறிப் போகிறான், மனோகரன். டொ'க்ற்ற(ர்) இரண்டொரு தடவை தலைமயிரைக் கோதி விடுகிறார். மருந்துக் கறை படிந்த தம் கைகளை ஒருக்கால் மணந்து பார்த்துவிட்டு, பின்னர் அவற்றை உற்று நோக்குகிறார். ஒரே அமைதி சூழ்ந்திருக்கிறது. பின்னர் அறை மேல் மாடியில் ''ஆ!'' என்ற அலறல் கேட்கிறது. ஓர் அலுமாரியின் கண்ணாடி சடாரென அடிபட்டுச் சுக்கல் சுக்கலாக நொருங்கிய சத்தம் கேட்கிறது. பின்னர் சிறிதுநேர அமைதி. மனோகரன் மாடிக்குச் சென்ற படிக்கட்டுப் பக்கமாகக் கந்தப்பு நோக்குகிறார். மேற்படிக்கட்டில் மனோகரன் நிற்கிறான். அவன் தோற்றம் முற்றாக மாறிவிட்டது. படுபயங்கரமான எதுவோ நடந்து விட்டது போன்ற 'ப'ாவம் அவன் முகத்திலே தெரிகிறது. வருத்தமும், ஆத்திரமும், ஏமாற்றமும் மாறிமாறித் தோன்றுகின்றன. படிக்கட்டால் இறங்கிக் கைகளைப் பிசைந்தபடியே நடுமேடைக்கு வருகிறான். பற்களை நறநறவென்று நெருமிக் கொண்டு ... ...)

மனோகரன்: அவள் என்னை ஏமாத்திப்போட்டாள். ஏமாத்துக்காறி. விட்டிட்டு ஓடித் துலைஞ்சு போனாள். வருத்தமெண்டு சொல்லி என்னை டொ'க்ற்றரிட்டை அனுப்பினது என்னத்துக்கெண்டு எனக்கு அப்ப விளங்கேல்லை. இப்ப விளங்குது, எல்லாம் பஞ்சாட்சரத்தானோடை ஓடிப் போறதுக்காகத்தான். என்னை அனுப்பினவள், டொ'க்ற்றரிட்டை. (கந்தப்புவுக்குக் கிட்டப் போய் என்னைக் கைவிட்டிட்டாள். ஓடிப் போட்டாள். ஏமாத்திப் போட்டாள். ஏன் எடி உனக்கு இந்தப் பொய்? ஏன் இந்தப் பசப்பும் பாசாங்கும்? ஏன் இந்தச் சூதும் சதியும் கை....தனமும்? என்ன தீமையப்பா, நான் உனக்குச் செய்திருப்பென்? ஒரு துரோகம் நினைச்சிருப்பெனா? ஏனப்பா நீ... இந்த மாதிரிச் செய்தாய்? (கந்தப்புவிடம்) அவள் ஓடிப் போயிட்டாள் டொ'க்ற்ற(ர்). என்னை விட்டிட்டு ஓடியிட்டாள், டொ'க்ற்ற(ர்).

(கண்ணீர் முட்டுகிறது. மனோகரனுக்கு ஆத்திரமும் துயரமும் போட்டி போடுகின்றன.)

கந்தப்பு: அ ... அ ... வருத்தக்காறி எங்கை?

மனோகரன்: வருத்தக்காறி, வருத்தக்காறி. அவள் வருத்தக்காறி இல்லை. எங்கையோ கிடந்த மூதேசி. என்ன கேவலம். என்ன எளியதனம். கொடும்பாவி. இதைப்போலை ஒரு சூழ்ச்சி செய்யிற புத்தி பேய் பிசாசுக்குகூட வராது. என்னை உங்களிட்டை அனுப்பினவள் ... வருத்தமெண்டு சொல்லி, உண்மையான நோக்கம், அந்த நாய்ப்பயல் பஞ்சாட்சரத்தோடை, அவளின்ற்றை கள்ளப் புரியனோடை ஓடுறதுக்கு. அய்யோ, கடவுளே, இதிலும் பார்க்க, நான் செத்திருக்கலாம். இந்த அதிர்ச்சியிலையிருந்து எனக்கு மீட்சி இல்லை. ஒரு காலமும் இல்லை.

கந்தப்பு: மன்னிக்க வேணும், மிஸ்ற்ற(ர்) மனோகரன். இதெல்லாம் என்ன? என்ற்றை பிள்ளை செத்துப் போச்சு. என்ற்றை மனிசி வீட்டிலை துக்கமும் துன்பமுமாய் அழுதபடியே இருக்குது. எனக்கு... எனக்கு... நிக்கவே முடியாதபடி களைப்பாயும் சோர்வாயும் இருக்கு. மூண்டு நாளாய் இரவு பகலாய் எனக்கு நித்திரை இல்லை. இப்பிடி

எல்லாம் இருக்க, நீர்... நீர்... நீர் என்ன செய்யிறிர்? வேடிக்கை காட்டிறிர். ஏதோ ஒரு படுமோசமான உம்மடை கோமாளிக் கூத்துக்குப் பக்கவாத்தியம் வாசிக்கச் சொல்லி என்னைக் கே'க்கிறிர். பக்கவாத்தியம் வாசிக்கிறது எண்டால்க் கூடிப் பரவாயில்லை. உம்மடை கூத்து மேடைக்குப் பந்தல்காலாய் நிண்டு சுமக்கச் சொல்லிறிர். எனக்கு ... ... எனக்கு ஒண்டுமே விளங்கேல்லை.

(மனோகரன் கையில் வைத்திருந்த கடிதம் போன்ற ஒரு கடதாசியை வெறுப்புடன் கீழே வீசி எறிந்து ஏதோ, ஓர் அருவருப்பான பூச்சியை மிதிப்பது போல உழக்குகிறான்.)

மனோகரன்: எல்லாம் கண்ணுக்கு முன்னையே நடக்கிது. நான்தான் ஒண்டையும் கவனிக்கேல்லை. அவன் ஒவ்வொரு நாளும் ஏன் வந்து போனான். எண்டதைக்கூடி நான் கவனிக்கேல்லை. இண்டைக்கு இந்தப் பஞ்சாட்சரம் ஏன் கார் பிடிச்சுக்கொண்டு வந்தவன்? அதைக்கூட நான் யோசிச்சுப் பாக்கேல்லை. ஏன் கார்? நான் ஒரு குருட்டு மடையன். கண்ணிருந்தும் பாக்கத் தெரியாதவன். சீ... நான் ஒரு முட்டாள்.

கந்தப்பு: எனக்கு ... எனக்கு ... ஒண்டுமே விளங்கேல்லை. இதுக்கெல்லாம் என்ன கருத்து? செருப்பாலை அடிச்சது போலை... காறித் துப்பினது போலை இருக்கு, உம்மடை வேலை. மனிசன்ற்றை துக்கத்தைப் பகிடி பண்ணிறது போலை இருக்கு. ஒரு மனிசன் செய்யமாட்டான், இப்பிடியான காரியத்தை. இப்பிடி ஒரு விசர்த்தனமான வேலையை நான் இது வரை கேள்விப்பட்டதே கிடையாது.

(தனக்கு அவமானம் நேர்ந்துவிட்டது என்னும் உணர்வு சிறிது சிறிதாக டொ'க்ற்றரின் நெஞ்சிலே விடிந்து கொண்டு வர, சொல்வதென்ன, செய்வ தென்ன என்று அறியாதவராக மனம் புழுங்குகிறார்.)

மனோகரன்: அப்ப உனக்கு என்னிலை அன்பில்லை. வேறை ஒரு ஆளிலை தான் உனக்கு விருப்பம். சரியப்பா. ஆனால், ஏன் இந்த ஏமாத்து? கீழ்த்தரமான துரோகம் ஏன்? எளியதனமான தந்திரத்தாலை என்னப்பா நன்மை உனக்கு? என்ன லாபம்? ஏனப்பா இந்த வேலையை நீ செய்தாய்? நான் உனக்கு என்ன கெடுதி செய்தென்? (டொ'க்ற்றரை நோக்கி) டொ'க்ற்றர், என்ற்றை துர்ப்பாக்கியத்தை நீங்களே நேரிலை கண்டிருக்கிறீங்கள். நீங்கள் விரும்பாமலே, சந்தர்ப்ப வசத்தாலை இங்கை வந்து சேர்ந்திருக்கிறீங்கள். உண்மை முழுவதையும் உங்களுக்கு நான் சொல்லுறென். ஒண்டையும் ஒளிக்காமல், மனம் திறந்து எல்லாத்தையும் சொல்லுறென்... கேளுங்க... டொ'க்ற்ற(ர்), இந்த அநியாயத்தை. சத்தியமாய்ச் சொல்லுறென். நான் ஒரு சொல்லுக்கூடப் பொய் பேசேல்லை. எல்லாம் வெளிவெளியாயச் சொல்லிறென், உங்களுக்கு, அந்த மனிசியை என்ற்றை உயிரைப்போலை விரும்பினென். இல்லை. உயிர் போலை எண்டு சொன்னாலும் போதாது. உயிரைவிட மேலாய் விரும்பினென். அன்பு செலுத்தினென். ஆதரவு காட்டினென். அவளைக் கும்பிடக்கூடத் தயாராய் இருந்தென். அவளுக்காய் எல்லாத்தையும் பலியிட்டென். தியாகம் செய்தென். என்ற்றை சொந்தக்காரர் எல்லாரோடையும் சண்டை பிடிச்சென், டொ'க்ற்ற(ர்). எத்தினை பிழைய ளெல்லாம் செய்திருப்பள்? அதுகள் எல்லாத்தையும் மன்னிச்சென். என்ற்றை சொந்த அம்மாவோ அக்காவோ அந்தத் தவறுகளைச் செய்திருந்தால்க் கூட நான் பொறுத்திருக்க மாட்டென். ஏன், அவளை நான் ஒரு கடுகடுப்பான முகத்தோடைகூடப் பாத்ததில்லை. ஒரு விதமான குறையும் வைக்கேல்லை. அப்பிடி எல்லாம் இருக்க, ஏன் இந்தப் பொய் இவளுக்கு? இந்தக் கபடமும் தந்திரமும்

குள்ளபுத்தியும் ஏன்? உன்ற்றை அன்பு வேணும் எண்டு நான் பிடிவாதம் பிடிக்கேல்லை. பின்னை, ஏன் இந்த எளியதனம்? என்னிலை உனக்கு அன்பில்லை எண்டால்... சரி. உன்னை நான் விரும்பேல்லை. இன்னாரோடை தான் நான் ஓடப்போறென், எண்டு சொல்லியிருக்கலாமே! வெளிவெளியாய்க் கதைச்சிருக்கலாமே. இதைப்பற்றி எல்லாம் என்ற்றை கொள்கை என்ன எண்டு உனக்கு நல்லாய்த் தெரியும். பிறகேன் அப்பா, இந்த மூடுமந்திரம்? (நீள் மேசையிலிருந்த பாமாவின் படத்தை எடுத்து முன்னாற் பிடித்துக் கொண்டு) பாருங்கோ, டொ'க்ற்ற(ர்); இப்பிடிச் சாந்தமான ஒருத்தி, இப்பிடியான கேவலமான ஒரு காரியத்தைச் செய்திருக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கோ, டொ'க்ற்ற(ர்). பாருங்கோ இந்தப் படத்தை.

(டொ'க்கற்றரின் முகத்துக்கு நேரே படத்தை நீட்டுகிறான். டொ'க்ற்றரின் ஆத்திரம் அதிகரிக்கிறது. மிருக வெறி ஒன்று பளீரிடுகிறது, அவர் விழிகளில். ஒவ்வொரு சொல்லாக அழுத்தி அழுத்தி அவர் பேசுகிறார்.)

கந்தப்பு: ஏன் காணும், இதை எல்லாம் எனக்குச் சொல்லுறிர்? இதைப் பற்றி எல்லாம் எனக்கு அக்கறையும் இல்லை. கவலையும் இல்லை. எனக்குத் தேவையில்லைக் காணும் உம்மடை வேலைக்காறன் எண்டு நினைச்சிரா, உம்மடை குளறலையும் கூச்சலையும் கேட்டுக்கொண்டிருக்கிறதுக்கு... உம்மடை அவமானங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறதுக்கு? காணும், இதெல்லாம்.

(மனோகரன் கந்தப்புவிடமிருந்து சிறிது பின்வாங்கி ஆச்சரியத்தோடு அவரைப் பார்க்கிறான்.)

கந்தப்பு: ஏன் காணும் என்னை இங்கை கூட்டி வந்த நீர், இப்ப? நீர் கல்யாணம் பண்ணினிர், வேலை இல்லாமல். நீர் உம்மடை உணர்ச்சிமயமான நாடகத்தை ஆடலாம். அல்லது கோமாளிக்கூத்தை ஆடினாலும் சரி தான். உமக்கு வேறை வேலை இல்லை எண்டால் அதுகளைச் செய்து கொண்டு இரும். ஆனால், என்னை ஏன் காணும் இதுகளுக்கை இழுக்கிறிர்? எனக்கும் உதுகளுக்கும் என்ன அலுவல்? உம்மடை காதல்க் கதையளுக்கையும் சல்லாபங்களுக்கையும் என்னை ஏன் கொண்டு வந்து மினைக்கெடுத்துறிர்? என்னை என் பாட்டிலை விட்டிடும். ஆரேன் உம் தரவழி உல்லாசியளோடை போய் உம்மடை மனிசத்தன்மை, தியாக சிந்தை, பண்பு, பணியாரம்... இதுகளைப் பற்றிப் பேசும். பிரசங்கம் பண்ணும். அல்லது புறுபுறுத்துக் கொண்டு புசத்தும். வேணுமெண்டால் உம்மடை வீணையை எடுத்து, கருணாரசம் ததும்ப ஒரு கீர்த்தனையைப் பிடுங்கி எறியும். நீர் காம்போதியை வாசிச்சால் என்ன, முகாரியிலை அழுது வடிஞ்சால் என்ன? எனக்கென்ன காணும் அதைப்பற்றி? மனிசர் மக்களோடை உம்மடை சேட்டையை வைச்சுக் கொள்ளாதையும். மற்றவைக்கு மரியாதை குடுக்கிறது எப்பிடி எண்டு உமக்குத் தெரியாட்டால், அவைக்குக் கிட்டப் போகாதையும் அவளவு தான் நான் சொல்லக்கூடியது.

மனோகரன்: மன்னிக்க வேணும். இதுக்கெல்லாம் என்ன கருத்து?

கந்தப்பு: கருத்தா கே'க்கிறிர் மிஸ்ற்ற(ர்) மனோகரன்? மனிசரை விளையாட்டுச் சாமான் போலை மதிக்கிறது சரியில்லை எண்டது தான் இதுக்குக் கருத்து. நான் ஒரு டொ'க்ற்ற(ர்). அத்தர் வாசனையும் பரத்தமை மணமும் இல்லாதவையும், டொ'க்ற்றர்மாரும் மற்றத் தொழில்காறர் எல்லாரும் உம்மடை வீட்டு விளக்கு மாறுகள் துடைப்பக்கட்டையள் - எண்டா நினைச்சிர்? விருப்பமெண்டால் நீர் அந்த வேலையைச் செய்யும். ஆனால், துன்பப்படுற ஒரு மனிசனைப் பிடிச்சு, கூத்து மேடைக்குக் குத்துக்கல்லாய் வைச்சுப் பாக்கிறதுக்கு உமக்கு உரிமை இல்லை.

மனோகரன்: என்ன துணிச்சலோடை நீர் எனக்கு உதைச் சொல்லிறிர்?

கந்தப்பு: என்ற்றை துன்ப நிலையைத் தெரிஞ்ச பிறகும் என்னை இங்கை கொண்டு வந்து, உம்மடை அலம்பல்களைக் கே'க்க வைக்கிறதுக்கு உமக்குத்தான் எவளவு துணிச்சல்? மற்றவன்ற்றை மனக்கவலையை நையாண்டி பண்ணிறதுக்கு என்ன உரிமை காணும் இருக்கு உமக்கு?

மனோகரன்: உமக்கென்ன விசரா? என்ன கருணை இல்லாத கல்லுத் தூண் நீர்? நானோ கவலையிலை முழுகி இருக்கிறென். ... ... நீர் ...

கந்தப்பு: கவலை. (உரத்து) கவலை. அந்தச் சொல்லை உச்சரியாதையும். உமக்கும் அதுக்கும் வெகு தூரம். கடைச் செலவுக்குக் காசு போதாதவங்களும் கவலைப்படுறதாய்த் தான் சொல்லிறாங்கள். அடைப்பன் வியாதி பிடிச்ச கோழிச் சாவலும் கவலை தான் படுகிது.

மனோகரன்: டொ'க்ற்ற(ர்), நீர் உம்மை மறந்து பேசுறிர். உப்பிடிப்பட்ட பேச்சுக்குக் கைகாலாலலை தான் மறுமொழி குடுக்கிறது வழக்கம். விளங்குதா, நான் சொல்லிறது? (தன் சட்டைப் பையிலிருந்து இரண்டு காசுத்தாள்களை எடுத்து அவற்றை மேசை மீது அடித்து வைத்து) இந்தாரும். இது நீர் வந்ததுக்காக நான் தர வேண்டிய காசு.

கந்தப்பு: எனக்குக் காசு தரத் தெண்டிக்க வேண்டாம் (காசுத் தாள்களை எடுத்துக் கிழித்தெறிகிறார்.) அவமானத்துக்கு ஈடாய்க் காசு குடுத்துச் சமாளிக்க ஏலாது.

மனோகரன்: டொ'க்ற்ற(ர்), அளவோடை நிறுத்திக் கொள்ளும்.

கந்தப்பு: அளவு என்ன காணும் அளவு? செய்யிறதையும் செய்துபோட்டு, பிறகு எச்சரிக்கை பண்ணிறிரா, எச்சரிக்கை?

மனோகரன்: ஓ, நீர் பெரிய டொ'க்ற்ற(ர்) தான். ஆனால் என்ற்றை நிலைமையையும் கொஞ்சம் யோசிச்சுப் பாரும்.

கந்தப்பு: எனக்கென்ன, வேறை வேலை இல்லையா? உம்மைப் போலை பொழுது போகாத புளிச்சல் ஏவறைக்காறன் எண்டா நினைச்சிர் என்னையும்?

மனோகரன்: மரியாதைக்காய்ப் பாக்கிறென்.

கந்தப்பு: மரியாதையைப் பற்றி என்ன காணும் தெரியும் உமக்கு?

மனோகரன்: டொ'க்ற்ற(ர்), நீங்கள் இனிப் போகலாம்.

கந்தப்பு: போகத்தான் போறென். பின்னை என்ன, உம்மோடை விருந்து சாப்பிடவா வந்தநான்? என்னைக் கொண்டு போய் விடுறதுக்கு ஒழுங்கு பண்ணும்.

மனோகரன்: ஓ... ஒழுங்கு, கொண்டு போய் விடுறதுக்கு ஒழுங்கு. கட்டாயம் செய்யத்தான் வேணும்.

(மேலை மணியைக் கிடு கிடு என அடிக்கிறான். ஒருவரும் வரவில்லை. மீண்டும் அடிக்கிறான். யாரும் இல்லை. கோபாவேசத்துடன் மணியை நிலத்தில் வீசுகிறான். அப்போது ஒரு வேலையாள் வருகிறான்.)

மனோகரன்: எங்கை போய்த் துலைஞ்சிட்டியள் எல்லாரும்? போய் ட்ற்ய்வரிட்டைச் சொல்லு... காரைக் கொண்டு வரட்டாம் எண்டு, இவர் போக வேணும். (வேலையாள் போகத்

திரும்பும்போது) இந்தா, எல்லா வேலைக்காறரையும் வெளியிலை போகச் சொல்லு. நீ மட்டும் நில். அவங்கள் ஒருத்தருக்கும் இனி இந்த வீட்டிலை வேலை இல்லை. துரோகியள். ஒண்டும் தெரியாதது மாதிரி நடிப்பு. நன்றியில்லாத நாயள். எல்லாரும் போய்த் துலையுங்கோ. ம் ... ... நீங்கள் போகலாம்.

(வேலையாள் டொ'க்ற்றரின் பெட்டியைத் தூக்கியபடி அவரை அழைத்துச் செல்கிறான். டொ'க்ற்ற(ர்) வெறுப்போடும் அருவருப்போடும் சினத்தோடும் வெளியேறுகிறார். மனோகரன் நிலைகொள்ளாமல் இரண்டொரு தரம் அங்குமிங்கும் அலைந்தபின், விறுவிறென்று மாடிப்படிகளில் ஏறி, உள்ளறைக்குச் செல்கிறான். சிறிது நேரத்திற் கைத்துப்பாக்கியுடன் இறங்கியவன், நடு மேடைக்கு வந்து, பாமாவின் படத்தை வெறித்துப் பார்க்கிறான். சஞ்சல இசை வலுக்கிறது. நெறியாளர் பக்கப் படிக்கட்டால் ஏறி, கீழ் மேடை நடுப்பகுதிக்கு வருகிறார்.)

நெறியாளர்: என்ன நடந்தது எண்டதை எல்லாம் நீங்கள் பாத்தீங்கள். மனசார டொ'க்ற்றருக்குக் கோபம் வாறது நியாயம் தான். குழந்தையைப் பலிகுடுத்த துக்கம் அவருக்கு. எவளவோ தெண்டிச்சுத்தானே, மனோகரனும் கூட்டி வந்தவன், அவரை!

பெண்சாதி விட்டிட்டு ஓடியிட்டாள் எண்ட துயரம் மனோகரனுக்கு. துயரம் மட்டுமல்ல. ஏமாற்றமும் தான். அவன்ற்றை துயரம் அவனுக்கு.

ஒருத்தர் துயரத்தை மற்றவருக்குச் சொல்லிப் பங்கிட்டுக் கொண்டால், இரண்டு பேருக்கும் துயரம் குறையும் எண்டொரு தத்துவத்தைச் சில பேர் அடிக்கடி சொல்லிறதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால், இப்ப நீங்களே நேருக்கு நேரை பாத்தீங்கள். துயரப்படுற மனங்களுக்கு, நீதி, நியாயம், தருமம் - இதுகளொண்டும் தெரியாது. தங்கடை துயரம் தான், மற்ற எல்லாத்தையும் மூடி மறைச்சுப் போடும். ஆனபடியாலை தான் இவை இரண்டு பேருடைய துயரங்களும் இரண்டு முனையளிலை நிண்டு தத்தளிச்சுதுகள்.

எண்டாலும், டொ'க்ற்றருடைய வெறுப்பும் சினமும் அவ்வளவு நியாயமானவை அல்ல எண்டு சொல்லவும் இடமிருக்கு. டொ'க்ற்ற(ர்) இப்ப வீட்டை போய்க் கொண்டிருக்கிறார். ஒரு வேளை நீங்கள் நினைப்பீங்கள், அவர் தன்னுடைய வீட்டிலை இருக்கிற பெண்சாதியைப் பற்றித்தான் யோசிச்சுக்கொண்டு போறார் எண்டு. மோசம் போன அவருடைய பிள்ளையைப் பற்றித்தான் மனவருத்தப்பட்டுக் கொண்டு போறார் எண்டும் சில வேளை நினைப்பீங்கள். ஆனால் உண்மையிலை இப்ப அவருடைய மனத்திலை நிறைஞ்சிருக்கிறது, மனோகரனுடைய வீடு; அவனுடைய பெண்சாதி பாமாவைக் கூட்டிக்கொண்டு ஓடின சோரநாயகன் பஞ்சாட்சரம், அவனைப்போலை ஆக்களின்ற்றை 'சோக்கு', சொகுசு, உல்லாசம், லீலாவினோதங்கள். இதுகளைப் பற்றி எல்லாம் டொ'க்ற்றருக்குத் தீராத கசப்பு, வெறுப்பு. இந்தக் கசப்பும் வெறுப்பும் அவருக்குச் சாகுமட்டும் தீராது. இரண்டு துயரங்களும் தனித்தனி நிண்டு மோதினதாலை உண்டானதுகள் இரண்டு வெறுப்புகள். இந்த இரண்டு வெறுப்புகளுக் குள்ளையும் டொ'க்ற்றருடைய வெறுப்புத்தான் கடுமையானது, கசப்பானது.
சரி மேடை அடுக்கணியள் எல்லாம் சிதறுப்பட்டுப் போய்க் கிடக்குதுகள். அதெல்லாத்தையும் ஒழுங்கு செய்ய வேணும். நீங்கள் பாத்துக் கொண்டிருக்கக் கூடியதாய் அந்த வேலையை நான் தொடங்கக் குடாது. ஆனபடியாலை, உங்களுக்கு வணக்கம் கூறி விடைபெறுகிறென். (பக்கத்தே பார்த்து) தம்பி, இனித் திரையை மூடி விடும்.

(திரை. 'இரு துயரங்கள்' முற்றும்.)

நாடக ஆசிரியர் : இ.முருகையன் (23.04.1935 - 27.06.2009)

யாழ்ப்பாணம் கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். விஞ்ஞானமாணி, கலைமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கியது.

1950 களில் கவிதை எழுதத் தொடங்கிய இவர் கவிதைகள், பா நாடகங்கள், மேடை நாடகங்கள், திறனாய்வுகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புக்கள் எனப் பல வகையான படைப்புக்களைத் தந்துள்ளார். ஆசிரியர், ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், பல்கலைக்கழகப் பதிவாளர் ஆகிய பதவிகளில் பணிபுரிந்துள்ளார்.

- **எழுதிய நூல்கள்**

1) கவிதை நூல்கள்
   - ஒருவரம் (மொழிபெயர்ப்புக் கவிதை - 1966)
   - நெடும்பகல் (காவியம் - 1967)
   - ஆதிபகவன் (1978)
   - மாடு கயிறு அறுக்கும் (1990)
   - நாங்கள் மனிதர் (1992)
   - ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (2001)

2) பா நாடக நூல்கள்
   - வந்து சேர்ந்தன தரிசனம் (1965)
   - கோபுரவாசல் (1969)
   - வெறியாட்டு
   - மேற்பூச்சி (1995)
   - சங்கடங்கள் (2000)
   - உண்மை (மொழிபெயர்ப்பு 2002)

3) மேடை நாடகங்கள்
   - கடுழியம்
   - அப்பரும் சுப்பரும்

- **நாடக அறிமுகம்**

இந்நாடகம் ருஷிய எழுத்தாளரான அன்ரன் செக்கோவ் என்பவரது சிறுகதையொன்று, எமது சூழலுக்குப் பொருந்தும் வகையில் பாத்திரங்களும் பொருத்தமான கதைக்கருவும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

- **பேசுபொருள் வெளிப்படுத்தப்படும் விதம்**

இரு துயரங்கள் - கந்தப்புவின் பிள்ளையின் அகால மரணம், மனோகரனின் மனைவி கள்ளக்காதலனுடன் ஓடிப் போன துயரம் ஆகிய இரண்டு துயரங்களும் இரு பாத்திரங்களின் மூலமாகச் சித்தரிக்கப்படுகின்றன.

ஒவ்வொருவர் துயரமும் அவரவர்க்கு வலிதானது. இது குறைவானது அது மேலானது என வாதாட முடியாது. ஒருவர் துயரத்தை மற்றவர் பரிவுடன் விளங்கிக் கொள்ளுமிடத்து, அதன் தாக்கம் குறையலாம். சினம் கொண்ட மனம் வீண் விவாதங்களையே வளர்த்துக்கொள்ளும்.

கதைக்கரு

கந்தப்புவிற்கு மகளின் மரணத்தினால் ஏற்பட்ட துயரம். மனோகரனிற்கு மனைவியின் நம்பிக்கைத் துரோகத்தால் ஏற்பட்ட ஆத்திரமும் துயரமும். இரு பாத்திரங்களும் துயரத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் ஏற்படும் வாக்குவாதத்தின் மூலம் ஒரு முடிவையோ ஆறுதலையோ எட்டமுடியவில்லை.

நாடகம் - சாராம்சம்

கந்தப்பு டொக்டருக்கு நீண்ட காலத்தின் பின் பிறந்த மகள், வயிற்றோட்ட வியாதி வந்ததால் இறந்துவிட்டது. அந்தத் துக்கத்தில் அவர் இருந்தவேளையில், மனோகரன் என்பவர் தனது மனைவி அனிற்றிசம் என்ற நோய் வந்து ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அவளுக்கு வைத்தியம் செய்ய வரும்படியும் கந்தப்புவை வற்புறுத்திக் கேட்கின்றார். ஆரம்பத்தில் மறுத்த கந்தப்பு ஒருவாறு சம்மதித்துச் செல்கிறார். அங்கே மனோகரனது மனைவி தனது கள்ளக்காதலன் பஞ்சாட்சரத்துடன் ஓடிவிட்டதையறிந்து, ஆத்திரமும் துக்கமும் அடைந்த மனோகரன், தன்னுடைய மனக்குமுறலைக் கந்தப்புவிடம் கொட்டித் தீர்க்க எத்தனித்தபோது தோன்றிய முரண்பாடுகள்.

பகுதி - 2

1. தமிழ் இலக்கிய வரலாறு

சங்க காலம்

அறிமுகம்

- கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி
- முதல், இடை, கடைச்சங்கங்கள் அமைக்கப்பட்டு தமிழ்ப் பணியாற்றப்பட்ட காலம்
- முடியுடை மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்தனர்
- அரசர்களுக்கும் மக்களுக்குமிடையே சிறந்த உறவு காணப்பட்டது. அரசர்களால் புலவர்கள் ஆதரிக்கப்பட்டனர்
- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய இயற்கையான நில அமைப்பின் அடிப்படையில் மக்களின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது. சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அக, புற ஒழுக்கங்கள் இவ்வடிப்படையிலேயே சித்திரிக்கப்பட்டுள்ளன
- நில அமைப்பிற்கேற்றவாறு மக்கள் தொழில்களில் ஈடுபட்டனர். புகார், முசிறி, கொற்கை முதலான துறைமுகங்கள் இருந்தமைக்கும் அயல் நாடுகளுடனான வணிகம் சிறந்து விளங்கியமைக்கும் சான்றுகள் உள்ளன
- இயற்கைக்கு இயைபான வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. முருகன் (குறிஞ்சி), திருமால் (முல்லை), இந்திரன் (மருதம்), வருணன் (நெய்தல்), கொற்றவை (பாலை) ஆகிய தெய்வங்கள் மக்களால் வழிபடப்பட்டன

இலக்கியங்கள்

அ) எட்டுத்தொகை

புலவர்கள் பலரால் வெவ்வேறு காலங்களில் இயற்றப்பட்ட செய்யுள்களின் தொகுப்பு நூல்கள்.

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. அகநானூறு (நெடுந்தொகை)
4. ஐங்குறுநூறு
5. கலித்தொகை

} அகத்திணை

6. புறநானூறு
7. பதிற்றுப்பத்து
8. பரிபாடல்

} புறத்திணை

ஆ. பத்துப்பாட்டு

1. குறிஞ்சிப்பாட்டு
2. முல்லைப்பாட்டு
3. பட்டினப்பாலை

} அகத்திணை

4. திருமுருகாற்றுப்படை
5. பொருநராற்றுப்படை
6. பெரும்பாணாற்றுப்படை
7. சிறுபாணாற்றுப்படை
8. கூத்தராற்றுப்படை (மலைபடுகடாஅம்)
9. மதுரைக்காஞ்சி

} புறத்திணை

10. நெடுநல்வாடை (இது அகமா, புறமா என்ற சர்ச்சைக்குரிய நூல்)

கபிலர், பரணர், நக்கீரர் முதலிய ஆண்பாற் புலவர்களும் காக்கைபாடினியார், ஔவையார், ஆதிமந்தியார், பாரிமகளிர் முதலிய பெண்பாற் புலவர்களும் செய்யுள்களை இயற்றியுள்ளனர். சில அரசர்களும் செய்யுள்கள் இயற்றியுள்ளனர்.

இலக்கியப் பண்புகள்

பொருள் மரபு

சங்க இலக்கியங்கள், மக்கள் வாழ்க்கை முறையின் அடிப்படையில் அகத்திணை, புறத்திணை என்ற பிரதான பொருள் மரபுகளை உள்ளடக்கியுள்ளன.

அகம்

- மனமொத்த தலைவனும் தலைவியும் தம்முள் கூடிய கூட்டத்து துய்த்த இன்பத்தை இத்தன்மையானதென வெளிப்படுத்த முடியாத உணர்வு அகம் எனப்படும். அதாவது காதலொழுக்கம். அகத்திணைச் செய்யுள்களில் தலைவன், தலைவி முதலானோரின் பெயர் சுட்டப்படமாட்டாது
- அன்பினைந்திணை தூய காதலொழுக்கமாகும். புணர்தல் (குறிஞ்சி), இருத்தல் (முல்லை), ஊடல் (மருதம்), இரங்கல் (நெய்தல்), பிரிதல் (பாலை) ஆகியன அன்பினைந்திணை எனப்படும்
- கைக்கிளை, பெருந்திணை என்பன தூய காதலொழுக்கங்களாகக் கொள்ளப்படுவதில்லை
- கைக்கிளை என்பது ஒருதலைக்காமமாகும். இது மூன்று வகைப்படும்
  - பருவமெய்தாத பேதையிடம் ஆடவனொருவன் காதல்கொண்டு அவளைப் பற்றிப் பலவாறு சொல்லி இன்புறுதல்
  - ஒத்த அன்பினராய தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுக்கூடும் கூட்டத்தின் முன் பெரும்பாலும் தலைவனிடம் நிகழும் காட்சி, ஐயம், தெளிவு, தேறல் என்னும் நிலைகள்
  - கொல்லேறு தழுவுதல் முதலியவை காரணமாக நிகழும் மணமுறைகள்
- பெருந்திணை என்பது பொருந்தாக் காமமாகும். ஒருவன் ஒருத்தியிடம் மிக்க காமத்தனாகி அவளை அடையப்பெறாத நிலையில் மடலேறுதல், வரைபாய்தல் என்பன மூலம் அவளை அடைவதற்கான முயற்சியாகும்
- அகப்பாடல்களில் முதல் (நிலமும் பொழுதும்), கரு (ஐவகை நிலம் - ஒவ்வொன்றுக்கும் உரித்தான தெய்வம், மக்கள், உணவு, பூ, மரம், விலங்கு, யாழ், தொழில் முதலானவை) (ஒழுக்கம்) என்பன சித்திரிக்கப்படுகின்றன.
- இயற்கையோடு ஒட்டிய ஒழுக்கங்கள், இயற்கை வர்ணனைகள் காணப்படுகின்றன
- அணிகள் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள் என்பனவும் சிறப்பாக அமைந்துள்ளன.

உள்ளுறை உவமம்

உவமையை வெளிப்படையாக எடுத்துக் கூறாமல் (அதாவது 'போல', 'அன்ன', 'ஒத்த' என்ற அமைப்பிற் கூறப்படாது.) செய்யுளில் வரும் ஒரு விவரிப்பு மூலம், சொல்ல விரும்புவதைச் சூட்சுமமாக உணர்த்தும் முறைமை உள்ளுறை உவமம் எனப்பட்டது. அதாவது ஒரு உவமை செய்யுளுக்குள்ளே உள்ளுறைந்து இருத்தல் உள்ளுறை உவமம் ஆகும்.

உ - ம் : குறுந்தொகைப் பாடல்: 226

"தயங்கு திரை பொருத தாழை வெண்பூக்
குருகு என மலரும்....."

என்னும் தொடரை உதாரணத்திற்கு எடுத்து நோக்குவோம். கடற்கரையில் மலர்களோடு காட்சி தரும் தாழை மரம் பற்றி விபரிப்பதாக இத்தொடர் அமைந்துள்ளது. தாழையினது வெண்ணிறப் பூ நாரையைப் போல பெருந்துறையில் பூத்துள்ளது என்பது இதன் வெளிப்படைப் பொருள். தாழம்பூவை குருகு என மயங்கி ஒருவரும் எடுக்காது விட, அதன் வாழ்வு வெறுமனே கழிவதுபோல தலைவனால் துய்க்கப்படாத தலைவியினது நிலை இங்கு உள்ளுறையாக உணர்த்தப்படுகின்றது.

இறைச்சி

இது உள்ளுறை உவமத்தைப் போலவே கருப்பொருளில் இருந்து உய்த்துணரப்படும். எனினும் இரண்டிற்கும் வேறுபாடு என்னவெனில், உள்ளுறையில் கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்துமுடியும். இறைச்சியில் கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்து முடிந்து, அதனின்று மற்றொரு தொனிப்பொருள் அவாவப்பட்டு நிற்கும். அதாவது ஒன்றைச் சொல்லும்பொழுது இன்னொன்று நினைவுக்கு வரும். இதனைச் சிலர் சமஸ்கிருதத்தில் பேசப்படும் 'த்வனி' என்பதனுள் அடக்குவர்.

உதாரணம் : **குறுந்தொகைச் செய்யுள்: 225**

"கன்று தன் பயமுலை மாந்த, முன்றில்
தினை பிடி உண்ணும்....."

என்னும் தொடரை நோக்குக.

பெண்யானை தன் கன்றுக்குப் பாலூட்டியபடியே தன் பசிக்கு முற்றத்துத் தினையைத் தின்னுகிறது. அங்ஙனமே நீயும் பொருள் தேடும் உன் கடமையை நிறைவேற்றும் அதேவேளையில் (யானை கன்றிற்குப் பயந்தது / கொடுத்தது போல) இவளது நலனையும் பேண முடியும் என்னும் குறிப்புத் தோன்ற அமைதலின் இ.ஃது இறைச்சிப் பொருளாம்.

புறம்

- புறத்திணை என்பது காதல் தவிர்ந்த ஏனையவற்றைப் பாடுவதாகும். சிறப்பாக போரொழுக்கமும் வீரம், கொடை, நிலையாமை முதலியனவும் புறத்திணையின் பாற்படும். பெயர் சுட்டிய காதல்களும் புறத்திணையினுள்ளேயே வகைப்படுத்தப்படுகின்றன.
- ஐவகைப் போரொழுக்கங்களும் காஞ்சித்திணையும் பாடாண்திணையும் புறத்திணையுள் அடங்கும்.
- வெட்சி (குறிஞ்சி), வஞ்சி (முல்லை), உழிஞை (மருதம்), தும்பை (நெய்தல்), வாகை (பாலை) ஆகியன போரொழுக்கங்களாகும்.
  - காஞ்சித்திணை என்பது யாக்கை, செல்வம், இளமை முதலானவற்றின் நிலையாமையைப் பாடுவதாகும்.
  - பாடாண்திணை என்பது ஒருவரது வீரம், கொடை, புகழ் என்பவற்றை விதந்து கூறுதலும் அறவுரை கூறி வாழ்த்துதலுமாகும்.
- அறக்கருத்துக்களும் சங்கச் செய்யுள்களில் இடம்பெறுகின்றன.

செய்யுள் மரபு

- தனிநிலைச் செய்யுள்களாகச் சங்கச் செய்யுள்கள் காணப்படுகின்றன.
- அகவற்பா (ஆசிரியப்பா) பெருமளவில் கையாளப்பட்டுள்ளது.

  உ- ம்:

  அகநானூறு, புறநானூறு
- வஞ்சிப்பா (மதுரைக் காஞ்சி), கலிப்பா (கலித்தொகை), பரிபாட்டு (பரிபாடல்) முதலான பா வகைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- சிறிய சொற்கள் செய்யுள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- அகச்செய்யுள்கள் பாத்திரக் கூற்றுக்களாக அமைந்துள்ளன.
- புறச்செய்யுள்கள் புலவர் கூற்றுக்களாக அமைந்திருக்கும்.
- சங்க அகச்செய்யுள்கள் நாடகத்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன.
- உள்ளதை உள்ளவாறே கூறுபவையாக இக்காலச் செய்யுள்கள் அமைகின்றன.

- ஒப்பீட்டளவில் சங்க இலக்கியங்களில் தூய தமிழ் கையாளப்பட்டுள்ளது. வடமொழிச் சொற்கள் குறைந்தளவிலேயே பயின்றுள்ளன.

பயிற்சி :

- **பின்வருவன தொடர்பாக விபரிக்குக.**

1. சங்க கால இலக்கியங்களை வகைப்படுத்துவதிலுள்ள இடர்பாடுகள்.
2. சங்ககால இலக்கியப் பொருள் மரபு.
3. சங்க அகச்செய்யுட் பண்புகள்.
4. சங்க புறச்செய்யுட் பண்புகள்.
5. சங்க காலம் இயற்கை நெறிக்காலம்.
6. ஆற்றுப்படை இலக்கியங்களின் பண்புகள்.
7. சங்கச் சான்றோரின் சிறப்புகள்.
8. சங்கச் செய்யுள்களில் அறக்கருத்துக்கள்.

சங்கமருவிய காலம்

அறிமுகம்

- சங்க காலத்தை அடுத்து கி.பி. 3 – கி.பி 6 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி சங்கமருவிய காலம் எனப்படுகிறது.
- இக்காலத்தில் தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி நடைபெற்றது.
- சங்கமருவிய காலத்தில் சமண, பௌத்த மதங்கள் செல்வாக்குப் பெற்றன.
- இக்காலத்தின் இறுதியில் சைவ, வைணவ சமயங்கள் எழுச்சி பெறத் தொடங்கின.
- மக்களிடையே பிறப்பினடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் வலுவடைந்தன.
- ஒழுக்கப் பிறழ்வுகள் காரணமாக, சடங்கு முறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- சமண, பௌத்த மதங்களைப் பரப்பும் முயற்சிகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.
- சமூக வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் எத்தனங்களும், அறவொழுக்கங்களைப் பேணும் முயற்சிகளும் முக்கியத்துவம் பெற்றதை இக்கால இலக்கியங்கள் மூலம் அறியலாம்.
- இக்காலத் தமிழ் இலக்கியங்களில் வடமொழிக் கருத்துக்களும் கதைகளும் இடம்பெறத் தொடங்குகின்றன.
- சடங்குகள், சம்பிரதாயங்கள், யாகங்கள் சமூகத்தில் பின்பற்றப்பட்ட அதேகாலத்தில் சமணரும் பௌத்தரும் ஒழுக்கசீலங்களையும் அறநெறிகளையும் சமுதாயத்தில் முதன்மை பெறவைக்கும் முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்துகின்றனர்.
- அறவொழுக்கங்களின் தேவை சமூகத்தால் உணரப்படலாயிற்று.
- இக்காலத்திலெழுந்த பெரும்பாலான இலக்கியங்கள் மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன.
- தொடர்நிலைச் செய்யுள்கள், காப்பியங்கள் தோற்றம் பெறுகின்றன (சிலப்பதிகாரம், மணிமேகலை).
- அறநூல்கள் பெருமளவில் தோற்றம் பெறுகின்றன.
- சங்கமருவிய கால இலக்கியங்களை அக, புற, அற இலக்கியங்கள், காப்பியங்கள், பிரபந்தங்கள், பாசுரங்கள் என வகைப்படுத்தலாம்.

இலக்கியங்கள்

அறநூல்கள்	அகத்திணை இலக்கியங்கள்	புறத்திணை இலக்கியங்கள்
திருக்குறள் நாலடியார் நான்மணிக்கடிகை இன்னா நாற்பது இனியவை நாற்பது திரிகடுகம் ஆசாரக்கோவை பழமொழி நானூறு சிறுபஞ்ச மூலம் முதுமொழிக் காஞ்சி ஏலாதி	கார்நாற்பது ஐந்திணை ஐம்பது திணைமொழி ஐம்பது ஐந்திணை எழுபது திணைமாலை நூற்றைம்பது கைந்நிலை	களவழி நாற்பது

காப்பியங்கள்	பிரபந்தங்கள்
சிலப்பதிகாரம் மணிமேகலை	அற்புதத்திருவந்தாதி திருவிரட்டைமணிமாலை திருவாலங்காட்டுத் திருப்பதிகங்கள் முதலாழ்வார் பாடிய அந்தாதிகள்

சங்கமருவியகால இலக்கியங்களின் பொதுப் பண்புகள்

- அறக்கருத்துக்கள் நேரடியாகவும் கதைகள் மூலமும் வலியுறுத்தப்படுகின்றன.
- அறக்கருத்தை வலியுறுத்தப் பொருத்தமான வெண்பா யாப்பு இக்காலத்தில் செல்வாக்குப் பெறுகின்றது.
- உலகியல் வாழ்வினை நிராகரிக்கும் அளவிற்கு சமண, பௌத்தர்களின் போதனைகள் அமைந்த நிலையில், அதனால் சலித்துப்போன மக்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பினையும் உற்சாகத்தினையும் ஊட்டுவனவாகச் சைவ, வைணவ பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. அவை அடுத்துவரும் காலத்தில் வளர்ச்சியடைந்தன.
- உணர்ச்சிகளை வெளிப்படுத்தப் பொருத்தமான விருத்தப்பா, கட்டளைக் கலித்துறை முதலான புதிய யாப்புக்களும் அந்தாதி, பதிகம் முதலான புதிய இலக்கிய வடிவங்களும் தோற்றம் பெறுகின்றன.

பயிற்சி :

- **பின்வருவன தொடர்பாக விபரிக்குக.**

1. சங்கமருவிய காலத்தில் பெருமளவில் தோன்றிய அறநூல்கள்.
2. சங்கமருவிய காலத்திலெழுந்த இலக்கியங்களின் பண்புகள்.
3. சங்க இலக்கிய மரபின் செல்வாக்கு, சங்கமருவிய கால இலக்கியங்களிற் காணப்படுதல்.
4. பல்லவர் கால இலக்கிய வளர்ச்சியின் தோற்றுவாயாக, சங்கமருவிய கால இலக்கியங்கள் அமைதல்.
5. அறநூல்கள் கூடுதலாகத் தோன்றியமைக்கான காரணங்கள்.

பல்லவர் காலம்

அறிமுகம்

- கி.பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 9 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியாகும்.
- களப்பிரர் ஆட்சி நலிவடைய, பல்லவராட்சி ஆரம்பமாகின்றது.
- சங்கமருவிய காலத்தில் அத்திபாரமிடப்பட்ட பக்திநெறியின் வளர்ச்சி, பல்லவர் காலத்தில் உச்சம் பெறுகிறது.
- சைவ, வைணவ சமயங்கள் எழுச்சியுற்றன.
- சைவ நாயன்மாரும் வைணவ ஆழ்வார்களும் வைதிக சமயங்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினர்.
- பக்திசார் நூல்கள் கூடுதலாகத் தோன்றின.
- பக்திப் பாசுரங்கள் கூடுதலாக அகத்துறைசார் பாடல்களாகத் தோற்றம் பெறுகின்றன.
- பக்தி இயக்கம், மக்கள் இயக்கமாகப் பரிணமிக்கிறது.
- ஆலய வழிபாட்டு முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இலக்கியங்கள்

- பக்தி இலக்கியங்கள் கூடுதலாகத் தோன்றுகின்றன.
- அக்கால நாயன்மாரும், ஆழ்வார்களும் தமது பக்தியனுபவங்களைப் பதிகங்களாகவும் பிரபந்தங்களாகவும் வெளிப்படுத்துகின்றனர்.
- இறைவனை உறவுமுறையில் பாவனைசெய்து பாடும் பண்பு வளர்ச்சியடைகிறது.
  ‘‘அப்பன் நீ அம்மை நீ.....’’
  ‘‘வாரணமாயிரம் சூழ வலஞ்செய்து.....’’
- உணர்வுபூர்வமான பாசுரங்கள் தோன்றுகின்றன.
- இக்கால இலக்கியங்கள் நெகிழ்வான, எளிமையான மொழிநடையைக் கொண்டிருக்கின்றன.
- உலா, கோவை, கலம்பகம் ஆகிய பிரபந்த இலக்கியங்கள் தோற்றம் பெறத் தொடங்குகின்றன.
- இக்கால இலக்கியங்கள் கனிவு, தெளிவு, பக்திச்சுவை, ஓசைப்பெருக்கு முதலிய சிறப்பியல்புகள் உடையவையாய் இருக்கின்றன.

பல்லவர் கால இலக்கியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I. பக்திசார் இலக்கியங்கள்
- சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் பாடல்கள்
- முதலாழ்வார் மூவர் தவிர்ந்த ஏனைய ஆழ்வார்களின் பாசுரங்கள்
- சேரமான்பெருமாள், திருமூலர் ஆகியோரின் படைப்புக்கள்

II. உலகியல்சார் இலக்கியங்கள்
- பாரத வெண்பா
- நந்திக்கலம்பகம்
- பாண்டிக்கோவை
- பெருங்கதை
- முத்தொள்ளாயிரம்
- ஸ்ரீ புராணம்
- கயசிந்தாமணி

இலக்கியப் பண்புகள்

- இறைவனுடைய தோற்றப் பொலிவு, அருட்சிறப்பு, பெருமை என்பன உணர்வுபூர்வமாக விவரிக்கப்படல்.
- தனித்தனிப் பதிகங்களாகவும் பிரபந்தங்களாகவும் பாடுதல். அடியார்கள் நேரடியாகவும் பாவனை செய்தும் பாடுதல்.
- கடவுளை வாழ்த்தும் பக்திப் பாசுரங்கள் முன்னிலைப் பரவலாகவும் படர்க்கைப் பரவலாகவும் அமைந்துள்ளன.
- இக்காலப் பாடல்களில் தாழிசை, துறை, விருத்தம் ஆகியன பெருகிக் காணப்படுகின்றன.
- இக்காலப் பாடல்களில் வடமொழிப் புராணக் கதைகள், கருத்துகள் எடுத்தாளப்படு கின்றன.
- பொதுமக்களைக் கவரும் இலக்கிய உத்திகள் பயன்படுத்தப்படல்.

பயிற்சி :

- **பின்வருவன தொடர்பாக விபரிக்குக.**

1. சங்கமருவிய கால பக்தி நெறியின் வளர்ச்சி பல்லவர் காலத்தில் காணப்படல்.
2. பல்லவர் காலப் பாடல்களில் பக்திச் சுவை விஞ்சி நிற்றல்.
3. பல்லவர் காலப் பக்திப் பாசுரங்களில் இயற்கை வர்ணனைகள் விஞ்சி நிற்றல்.
4. பல்லவர் காலப் பக்தி இலக்கியப் பண்புகள்.
5. சங்க கால அகத்திணை மரபு, பல்லவர்கால இலக்கியங்களிற் காணப்படல்.

சோழர் காலம்

அறிமுகம்

- கி.பி. 9 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியாகும்.
- கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசங்கள் முழுவதும் முதன்முதலாக வலியதொரு மத்திய அரசின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.
- பேரரசு ஸ்தாபிக்கப்பட்டமையால் எல்லாவகையிலும் வளமிக்க சமுதாயமாக, சோழர் காலச் சமுதாயம் காணப்பட்டது.
- சமயங்கள் சுதந்திரமாக வளரக்கூடிய சூழல் நிலவியது.
- சோழ மன்னர்கள் எல்லா சமயங்களையும் ஆதரித்தனர். உலகியலும் சமயமும் முரண்படாத வகையில் அமைந்திருந்தன. கோயில்கள் சோழர்காலச் சமுதாயத்தில் முக்கிய நிறுவனங்களாகத் திகழ்ந்தன.
- வளமிக்க அமைதியான சூழல் நிலவியமையினால், தன்னம்பிக்கையும் ஒருமைப்-பாட்டுணர்வும் சமூகத்தில் என்றுமில்லாத அளவில் காணப்பட்டன.
- எல்லாத் துறைகளிலும் பெரிதாகவும் சிறப்பாகவும் செய்ய வேண்டுமென்ற உணர்வு மேலோங்கியிருந்தது. பெருங்கோயில்களும் பேரிலக்கியங்களும் உருவானமைக்கு இதுவே அடிப்படையாயிற்று.
- எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு தொடர்பான இலக்கண நூல்கள் பெருமளவில் எழுந்தமை, அக்காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சி பெற்றமைக்குச் சான்றாகும்.
- இக்காலத்தில் தமிழ்க்கல்வியும் வடமொழிக் கல்வியும் வளர்ச்சியடைந்தன.

இலக்கியங்கள்

- கம்பராமாயணம்
- சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி
- நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம்
- பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய புராணங்கள்
- கலிங்கத்துப்பரணி, மூவருலா, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ஆகிய பிரபந்தங்கள்

இலக்கியப் பண்புகள்

- உலகியல் வாழ்வைச் சித்திரிக்கும் இலக்கியங்கள் பெருமளவில் தோற்றம் பெற்றன.
- விரிவான வருணனைகளையும் அலங்காரங்களையும் கொண்ட பேரிலக்கியங்கள் அக்காலத்தில் பெருமளவில் தோன்றின.
- அரசர்களின் புகழை நிலைநாட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்ட பரணி, உலா, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்கள் தோன்றின.

- உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி எனப் பல்வகை அணிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- விருத்தப்பா சோழர் காலத்தில் பெருவழக்காயிருந்த பாவகையாகும்.
- வடமொழிச் செல்வாக்கு அக்கால இலக்கியங்களில் அதிகளவில் காணப்பட்டது.
- பல்வகை இலக்கண நூல்களும் உரைநூல்களும் சோழர் காலத்தில் தோன்றின.

பயிற்சி :

- **பின்வருவன தொடர்பாக விபரிக்குக.**

1. சோழர் கால இலக்கிய வகைகள்.
2. சோழர் காலத்தில் பேரிலக்கியங்கள் அதிகளவில் தோன்றியமைக்கான காரணங்கள்.
3. சோழர் கால பல்துறை இலக்கிய வளர்ச்சியும் பின்னணியும்.
4. சோழர் கால இலக்கியப் பண்புகள்.
5. சோழர் கால இலக்கியங்களில் பல்லவர் கால இலக்கியங்களின் தாக்கம்.
6. பல்லவர் கால இலக்கியங்களுக்கும் சோழர் கால இலக்கியங்களுக்கும் இடையேயான வேறுபாடுகள்.
7. சோழர் காலம் ஒரு காப்பிய காலம்.
8. சோழர் காலச் சிற்றிலக்கியங்களும் அவற்றின் பண்புகளும்.
9. சோழர் காலம் ஒரு பொற்காலம்.

விசயநகர நாயக்கர் காலம்

அறிமுகம்

- கி.பி. 14 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 18 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியாகும்.
- சோழராட்சி நிலைகுலைய தமிழ்நாட்டில் ஏற்பட்ட குறுகியகால பாண்டியராட்சியை அடுத்து இஸ்லாமியர் ஆட்சிக்குத் தமிழகம் ஆட்பட்டது. தென்னாடுகளில் இஸ்லாமியப் பரவுகையைத் தடுக்க முனைந்த விஜய நகர மன்னர்கள் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னாடுகளில் தமது ஆட்சியை நிறுவினர். அவர்களால் தமிழகம் சுமார் முந்நூறு ஆண்டுகள் நேரடியாகவும் பிரதிநிதிகள் மூலமும் ஆளப்பட்டது. பின்னர் அவர்களின் பிரதிநிதிகளாக இருந்த நாயக்க மன்னர்கள் தனியாட்சியை நிறுவி கி.பி. 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆட்சிபுரிந்தனர்.
- அந்நியராட்சி நிலவியமையாலும் அடிக்கடி போர்கள், படையெடுப்புகள் நிகழ்ந்தமையாலும் இக்காலப் பகுதியில் தமிழ்நாட்டில் உவப்பான அரசியற் சூழல் நிலவவில்லை.
- பேரரசு நிலைகுலைந்தமையாலும் உவப்பற்ற அரசியற் சூழல் நிலவியமையாலும் பொருளாதார வளங்குன்றிய காலமாகவே இக்காலம் விளங்கியது.
- சைவமும் வைணவமும் சமயப் பொறையுடன் முன்னெடுக்கப்பட்டன. பாசுபதம், சைவம், சித்தாந்த சைவம், வடகலை வைணவம், தென்கலை வைணவம் ஆகிய மதப் பிரிவுகளும் கேவலாத்துவிதம், விசிட்டாத்துவிதம் முதலிய தத்துவ சாத்திரக் கொள்கைகளும் பரவலடைந்தன. ஆதீனங்களும் மடங்களும் தொண்டு புரிந்தன.
- கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் தமிழ்நாட்டில் அறிமுகமாகிப் பரவின.

இலக்கியங்கள்

- திருவிளையாடற் புராணம் முதலிய புராணங்கள்
- வில்லிபாரதம், பிரபுலிங்கலீலை முதலிய காவியங்கள்
- மோகவதைப்பரணி, திருவாரூருலா, தில்லைக் கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், நால்வர் நான்மணி மாலை, நம்பெருமாள் மும்மணிக்கோவை முதலிய பிரபந்தங்கள்
- திருப்புகழ், கந்தரலங்காரம், தாயுமான சுவாமிகள் பாடல்கள் முதலிய பக்தி இலக்கியங்கள்
- ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலான அற இலக்கியங்கள்
- காளமேகம், இரட்டையர் முதலியோரின் தனிப்பாடல்கள்
- திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, நொண்டி நாடகம் முதலிய பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள்

விசயநகர நாயக்கர்கால இலக்கியப் பண்புகள்

- சமயச் சார்பு, தத்துவச் சார்பு, அறச் சார்பு, பழைமைபோற்றும் பண்பு, வித்துவச் செருக்கு, பொதுமக்கள் சார்பு வெளிப்படும் பல்வகை இலக்கியங்கள் தோன்றின.
- கோயில்கள் / தலங்களின் பெருமையைப் பாடும் புராணங்கள் பெருமளவில் தோன்றின.

- வடமொழிச் செல்வாக்கு அதிகளவிற் காணப்பட்டது.
- உலகியலைப் பாடப் பயன்பட்ட சிற்றிலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தி சமய, தத்துவக் கருத்துக்கள் பாடப்பட்டன.
- யமகம், திரிபு, சித்திரக்கவி முதலிய சொல்லலங்காரம் நிறைந்த பாடல்கள் தோற்றம் பெற்றன.
- ஓசை நயங்கொண்ட சந்தச் சிறப்புமிக்க பாடல்கள் தோற்றம் பெற்றன.
- சிலேடை, நையாண்டி, வசை, விகடம் நிறைந்த பாடல்களின் தோற்றத்தை அக்காலத்தில் காண முடியும்.

பயிற்சி :

- **பின்வருவன தொடர்பாக விபரிக்குக.**
  1. விசய நகர – நாயக்கர் கால இலக்கியங்களும் வகைப்பாடும்.
  2. விசய நகர – நாயக்கர் கால இலக்கியங்களில் அக்கால அரசியல், சமூக, பொருளாதார நிலைகளின் செல்வாக்கு.
  3. விசய நகர – நாயக்கர் கால பொதுமக்கள்சார் இலக்கியங்கள்.
  4. விசய நகர – நாயக்கர் கால இலக்கியப் பண்புகள்.
  5. சோழர் கால இலக்கியங்களும் விசய நகர – நாயக்கர் கால இலக்கியங்களும்.
  6. விசய நகர – நாயக்கர் காலம் ஒரு தத்துவநெறிக் காலம்.
  7. விசயநகர – நாயக்கர் காலம் ஒரு பிரபந்த காலம்.

மேலதிக வாசிப்பு நூற்பட்டியல்

01. தமிழ் இலக்கிய வரலாறு — கலாநிதி சு. வித்தியானந்தன்
02. இலக்கியத் தென்றல் — வி. செல்வநாயகம்
03. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் — டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை
04. தமிழ் இலக்கிய வரலாறு — டாக்டர் மு. வரதராசன்

2. ஈழத்து இலக்கிய வரலாறு

ஆரியச் சக்கரவத்திகளுக்கு முற்பட்டகாலம்

- வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகவே, இலங்கையிலும் தமிழ்ச் சமுதாயம் நிலைபெற்றுவிட்டது என்பதற்கான தொல்லியற் சான்றுகள் காணப்படல்.
- கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விஜயனும் அவனது நண்பர்கள் 700 பேரும் தமிழ்நாட்டைச் சார்ந்த பெண்களை மணம் முடித்ததாகவும் 1000 தமிழ்க் குடும்பங்கள் தொழில்நிமித்தம் வந்து குடியமர்ந்ததாகவும் பாளி மொழியிலான இலங்கை வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றமை.
- கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்பே எல்லாளன் முதலான தமிழ் மன்னர் பலர், பல ஆண்டுகளாக அநுராதபுரத்தில் ஆட்சி செய்ததாகவும் அந்நூல்கள் தெரிவிக்கின்றமை.
- கிறிஸ்து சகாப்தத்துக்கு முற்பட்டவையாகக் கொள்ளப்படும் தமிழ்ப் பிராமி எழுத்துக் களாலான கல்வெட்டுக்கள் முதலான தொல்லியற் சான்றுகள் பல இலங்கையில் காணப்படுகின்றமை.
- இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையில் நெருங்கிய உறவு நிலவியது சங்க இலக்கியங்கள் மூலமும் தொல்லியற் சான்றுகள் மூலமும் புலனாகின்றமை.
- தமிழகத்தில் நெடுங்காலத்துக்கு முன்பே வழக்கொழிந்து போன சொற்கள் பல, இன்றும் இலங்கையில் வழங்கி வருவதனை மொழியியலாளர்கள் எடுத்துக்காட்டுகின்றமை.
- தமிழ்மொழியின் செல்வாக்கு சிங்களமொழியில் துலக்கமாகக் காணப்படல்.
- ஈழத்து என்ற அடைமொழியோடு கூடிய பூதந்தேவனார் என்ற புலவர் பாடிய பாடல்கள் சங்கத்தொகை நூல்களிற் காணப்படுகின்றமை.
- கிறிஸ்து சகாப்தத்துக்கும் ஆரிய சக்கரவர்த்திகள் காலத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், இலக்கியப் பாங்கோடு எழுதப்பட்ட தமிழ்ச் சாசனங்கள் பல இலங்கையின் பிராந்தியங்கள் பலவற்றில் காணப்படுகின்றமை.
- கி.மு. 7 ஆம் நூற்றாண்டில் சம்பந்தர், சுந்தரர் முதலானோர், ஈழத்துத் தலங்கள் மீது பதிகம் பாடியமை.
- தென்னிலங்கையில் சிங்கள அரசுகள் சிறப்புற, வடபாகம் தமிழ் அரசுக்கு உட்பட்டது.
- 1044 இல் இலங்கை முழுவதும் சோழராட்சிக்கு உட்பட்டது.
- பொலனறுவை இராசதானியாக்கப்பட்டிருந்தது.

ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்

அறிமுகம்

- கி.பி. 1215 இல் கலிங்க மன்னனாகிய ‘‘மாகன்’’ படையெடுப்பினால் பொலநறுவை கைப்பற்றப்பட்டது.
- கி.பி. 1216 இல் மாகனின் தம்பி கஜபாகு வட இலங்கையைக் கைப்பற்றியதுடன் தனியரசு உருவாகியது.
- 1236 இல் தம்பதெனியாவைக் கைப்பற்றிய பராக்கிரமபாகு பாண்டியருடைய உதவியுடன் பொலநறுவையைக் கைப்பற்றினான்.
- 1284 இல் பாண்டிய சேனைத் தளபதி, ‘‘ஆரியச் சக்கரவர்த்தி’’ என்ற பெயருடன் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி தனியரசு அமைத்தான்.
- அவனுக்குப் பின் ஆண்ட மன்னர்கள் ஆரியச் சக்கரவர்த்தி என்ற பெயருடன் ஆட்சி செய்தனர்.
- ஏறக்குறைய 400 ஆண்டுகள் போர்த்துக்கேயர் கைப்பற்றும்வரை யாழ்ப்பாண அரசு நிலைபெற்றிருந்தது.

- தனித்துவமான இலக்கியப் பாரம்பரியம் தோற்றம் பெறத் தொடங்கியது.
- பாண்டியர் நிர்வாகத்தில் சேனாதிபதி போன்ற உயர் பதவிகளைப் பெற்றிருந்த பிராமண அதிகாரிகள் யாழ்ப்பாண அரசர்களாகி, சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தினைப் பெற்றிருந்தனர்.
- மாறவர்மன் குலசேகர தேவரின் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் ஆரியச் சக்கரவர்த்திகள் என்பது தனி அதிகாரி ஒருவரின் பெயராகவன்றி ஒரு குலத்தின் சிறப்புப் பெயராக வழங்கி வந்தமையைக் குறிப்பிடுகின்றன.

இலக்கியங்கள்

சோதிட நூல்கள்	வைத்திய நூல்கள்	வரலாற்று நூல்கள்	தலபுராணங்கள்	மொழி பெயர்ப்பு	பொதுமக்கள் சார்பு இலக்கியங்கள்
1. சரசோதி மாலை 2. செகராச சேகர மாலை	1. செகராச சேகரம் 2. பரராச சேகரம்	1. வையா பாடல் 2. கைலாய மாலை 3. கோணேசர் கல்வெட்டு	1. தட்சண கைலாச புராணம் 2. திருக்கரசைப் புராணம்	இரகுவம்சம்	1. கதிரைமலைப் பள்ளு 2. கண்ணகி வழக்குரை

இலக்கியப் பண்பு

- வரலாற்றுணர்வு
- தலபுராண மரபு (வடமொழி தழுவியதும் உள்ளூர் சார்ந்ததும்)
- சமயச் சார்பு
- சாதாரண மக்கள் வாழ்க்கை இலக்கியங்களில் இடம்பெற்றமை.
- நாட்டார் இலக்கிய முறைமையின் செல்வாக்கு
- வித்துவச் சிறப்பு காணப்பட்டமை
- மொழிபெயர்ப்பு முயற்சி - இரகுவம்சம்

பயிற்சி :

பின்வருவன தொடர்பாக விபரிக்குக.

1. யாழ்ப்பாண இராச்சிய கால (ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்) நூல்களை வகைப்படுத்துக.
2. பின்வருவன பற்றி குறிப்புரை எழுதுக.
   i. இரகுவம்சம்
   ii. கதிரை மலைப்பள்ளு
   iii. கண்ணகி வழக்குரை
3. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய தலபுராணங்கள் பற்றி விபரிக்குக.
4. யாழ்ப்பாணத்து அரசர் கால இலக்கியங்களின் பொதுப்பண்புகளையும் சிறப்புப் பண்புகளையும் விபரிக்குக.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலம்

அறிமுகம்

- ஈழத்து வரலாற்றில் அந்நியர் ஆதிக்கம் ஆரம்பிக்கின்றது.
- போர்த்துக்கேயர் 1505 இல் இலங்கையை அடைந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் குறிப்பிடுகின்றன.
- யாழ்ப்பாண இராச்சியத்தை அவர்கள் 1621 இல் கைப்பற்றினர்.
- போர்த்துக்கேயரின் ஆதிக்கம் 1658 வரை நிலவியது.
- இக்காலப் பகுதியை இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் போர்த்துக்கேயர் காலம் எனக் குறிப்பிடுவது மரபாகிவிட்டது.
- கத்தோலிக்க மதம் வலிந்து பரப்பப்பட்ட சூழ்நிலையில், காலங்காலமாகப் பேணி வந்த சைவ சமயப் பண்பாட்டு அம்சங்கள் புறந்தள்ளப்பட்டன.
- போர்த்துக்கேயர் காலத்தில் சமய ரீதியிலான அடக்குமுறை காணப்பட்ட நிலையில் மிகச் சில இலக்கிய முயற்சிகளே இக்காலத்தில் இடம்பெற்றன.
- போர்த்துக்கேயர் காலத்திலும் (1505 - 1658) ஒல்லாந்தர் காலத்திலும் (1658-1796) குறிப்பிட்ட இலக்கிய முயற்சிகளே இடம்பெற்றமையால் இவ்விரு காலங்களையும் இணைத்து போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலம் என இலக்கிய வரலாற்றாசிரியர் குறிப்பிடுவர்.
- பண்டைய காலத்தில் நிலவி வந்த கல்வி மரபு நலிவடையத் தொடங்கியது.
- இலக்கிய, இலக்கண, சமயக்கல்வி மறைமுகமாகப் பயிற்றப்பட்டு வந்தது.
- புதிதாக நிறுவப்பட்ட சுதேசமொழிக் கல்விக்கூடங்களில் வேதாகமக் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது.

இலக்கியங்கள்

போர்த்துக்கேயர் காலம்

1. ஞானப்பள்ளு
2. அர்ச் யாகப்பர் அம்மானை / சந்தியாகுமையோர் அம்மானை

ஒல்லாந்தர் காலம்

காவியம்	-	திருச் செல்வர் காவியம்
புராணம்	-	சிவராத்திரி புராணம் ஏகாதசிப் புராணம் பிள்ளையார் கதை
தூது	-	கண்ணியவளை குருநாத சுவாமி தூது கிள்ளை விடு தூது பஞ்சவன்னத் தூது
அம்மானை	-	திருச்செல்வர் அம்மானை
காதல்	-	வெருகல் சித்திர வேலாயுதர் காதல்
அந்தாதி	-	கல்வளை அந்தாதி மறைசையந்தாதி புலியூரந்தாதி

அகப்பொருட்கோவை - கரவை வேலன் கோவை

பள்ளு - பறாளை விநாயகர் பள்ளு
தண்டிகைக் கனகராயன் பள்ளு
பதிகம் - இணுவில் சிவகாமி அம்மை பதிகம்

ஊஞ்சல் - வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி ஊஞ்சல்
துதி - இணுவில் சிவகாமி அம்மை துதி
பிள்ளைத்தமிழ்- இணுவில் சிவகாமி அம்மை பிள்ளைத்தமிழ்
நாடகங்கள் - அலங்கார ரூபன் நாடகம்
அதிரூபாவதி நாடகம்
வாளபிமன் நாடகம்
நொண்டி நாடகம்
அனுருத்தன் நாடகம்

ஏனைய நூல்கள் - அமுதாகரம் (விச வைத்திய நூல்)
சந்தான தீபிகை (சோதிடம்)
காசியாத்திரை விளக்கம்

இலக்கியப் பண்புகள்

- சமயச் சார்பு (சைவம் / கிறிஸ்தவம்)
- புதிய அனுபவங்களை வெளியிட, பழைய தமிழ் இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டமை
- பலவகையான சிற்றிலக்கியங்கள் தோன்றியமை
  உதாரணம் : தூது, கோவை, பள்ளு, குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், அந்தாதி.
- பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் தோன்றின
  உதாரணம்: பள்ளு, அம்மானை, குறவஞ்சி
- தமிழ் உரைநடை வளர்ச்சிக்கான ஆரம்ப முயற்சிகள் காணப்பட்டமை
  உதாரணம் : மாதகல் மயில்வாகனப் புலவரின் உரைநடை
- மொழிபெயர்ப்பு இடம்பெற்றமை
- விருத்தம், அகவல், கலிப்பா, தாழிசை, சிந்து, கண்ணி முதலான யாப்புக்கள் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டன

பயிற்சி :

- **பின்வருவன தொடர்பாக விபரிக்குக.**

1. போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.
2. பின்வருவன பற்றி, குறிப்புரை எழுதுக.
   i. ஞானப்பள்ளு ii. பறாளை விநாயகர் பள்ளு iii. திருச்செல்வர் காவியம்
3. 'கத்தோலிக்கமதக் கருத்துக்களைப் பரப்புவதற்கு தமிழ் இலக்கிய வடிவங்கள் கையாளப்பட்டன' - அலசுக.
4. போர்த்துக்கேய, ஒல்லாந்தர் கால இலக்கியப் பண்புகளை விபரிக்குக.

மேலதிக வாசிப்பு நூற்பட்டியல்

ஈழத்துத் தமிழிலக்கியச் செல்நெறி — பேராசிரியர் சி. தில்லைநாதன்
ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சி — கலாநிதி சி. சிவலிங்கராஜா
ஈழத்து இலக்கிய வளர்ச்சி — கலாநிதி கே. எஸ். நடராசா
ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு — F.X.C. நடராசா

3. இலக்கணம்

அறிமுகம்

இலக்கணம் என்பது மொழியின் அமைப்பையும் பயன்பாட்டு முறைகளையும் முறையாக விளக்குவதாகும். தமிழ் இலக்கணம் தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பிரிவுகளாகவே வகுக்கப்பட்டுள்ளது. எனினும் பொருளதிகாரத்தில் யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என்பனவும் கூறப்பட்டுள்ளன. இடைக்காலத் தமிழ் இலக்கணத்தில் எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என ஐந்து பிரிவுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. மொழியிலக்கணம் என்ற வகையில் எழுத்தியல், சொல்லியல், தொடரியல் என்பன முக்கியமானவை. மாணவனின் தேவை, மொழியில் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, இலக்கணத்தைக் கற்பித்தல் வேண்டும்.

பழந்தமிழ் இலக்கியங்கள், இடைக்காலத் தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து செய்யுட்பகுதிகள் சிலவற்றையும் உரைநடை இலக்கியங்கள் சிலவற்றையும் மாணவர்களுக்குக் கற்பிப்பது இன்றியமையாததாக உள்ளது. அவ்வாறான இலக்கியங்கள் மாணவர்க்குத் தெளிவாக விளங்கவேண்டுமாயின், அவற்றோடு தொடர்புடைய இலக்கணக் கூறுகளையும் அவ்வக்கால மொழி வழக்குகளையும் அவற்றோடு தொடர்புபடுத்திக் கற்பிப்பதற்கு முன்கூட்டியே திட்டமிடுவது இன்றியமையாததாகும்.

இலக்கியக் கல்விக்கு மட்டுமன்றி மொழியறிவு விருத்திக்கும் உதவும் வகையில் தற்கால மொழி வழக்குகள், அருகிய வழக்குகள், மறைந்த வழக்குகள் முதலான விவரங்களையும் மாணவர்க்குக் கற்பித்தல் வேண்டும். மேலும் குறிப்பிட்ட பாடப்பரப்புகளை அடியொற்றி இலக்கணம் தொடர்பான வினாக்களை வினவி, மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளை அவ்வப்போது மட்டிடுவதும் முக்கியமானது.

தரம் 12 இற்கான ஆசிரியர் வள நூலில்,

1. எழுத்தியல்
2. பதவியல்
4. சொல்லியல்
   - சொற்பாகுபாடு
   - பெயர்ச்சொல்
   - வினைச்சொல்

என்னும் அலகுகளுக்கான வழிகாட்டற் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

மரபு ரீதியான இலக்கணத்தைக் கற்பதோடு, தேவைப்படுமிடங்களில் தற்கால வழக்குகளையும் மொழியியல் நுட்பங்களையும் மாணவர்க்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

1.0 எழுத்தியல்

எழுத்து என்பது, அடிப்படையில் மொழிக்கு முதற்காரணமாகிய ஒலிகளையும் அவ்வொலிகளுக்கான வரிவடிவத்தையும் குறிப்பதாகும்.

1.1 எழுத்தின் வகைகள்

தமிழ்மொழியில் வழங்கும் அடிப்படை ஒலிகளை ***முதல் எழுத்து*** என்றும், அடிப்படை ஒலிகளாக அமையாது அவற்றைச் சார்ந்து அமையும் ஒலிகளைச் ***சார்பெழுத்து*** என்றும் கூறுவர்.

1.1.1. முதலெழுத்து

முதலெழுத்துக்கள் உயிரெழுத்து, மெய்யெழுத்து என இருவகைப்படும். தமிழில் 12 உயிரெழுத்துக்களும் 18 மெய்யெழுத்துக்களும் உள்ளன.

உயிரெழுத்துக்கள் : அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

மெய்யெழுத்துக்கள் : க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

உயிரெழுத்துக்கள்

அகரம் முதலிய பன்னிரண்டும் உயிர்போலத் தனித்தியங்கும் வல்லமை உடையவையாகையால் **உயிரெழுத்துக்கள்** எனப்பட்டன. இவை ஆவி எனவும் பெயர்பெறும்.

மெய்யெழுத்துக்கள்

ககரம் முதலிய பதினெட்டும், உயிரின்றி இயங்காத உடல்போலத் தாமாக இயங்கும் வன்மை அற்றனவாகையால் **மெய்யெழுத்துக்கள்** எனப்பட்டன. இவை உடல், உடம்பு, ஒற்று, புள்ளி எனவும் பெயர்பெறும். மெய்யெழுத்துக்களை அவற்றின் ஒலிப்பின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்துவர்.

1. வல்லினம் (வலிய ஒலிப்புடையவை)
   க், ச், ட், த் ப், ற்
   இவை வன்கணம் என்றும் வலி என்றும் பெயர்பெறும்.

2. மெல்லினம் (மெல்லிய ஒலிப்புடையவை)
   ங், ஞ், ண், ந், ம், ன்
   இவை மென்கணம் என்றும் மெலி என்றும் பெயர்பெறும்.

3. இடையினம் (இடைப்பட்ட ஒலிப்புடையவை)
   ய், ர், ல், வ், ழ், ள்
   இவை இடைக்கணம் என்றும் பெயர்பெறும்.

மாத்திரை:

எழுத்துக்களை உச்சரிப்பதற்கு எடுக்கும் கால அளவினை அளவிடும் அலகினை மாத்திரை என்பர். கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுது, ஒரு மாத்திரை அளவு என்று சொல்லப்படுகிறது. உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும், ஒலிக்கும் கால அளவின் அடிப்படையிலே குற்றெழுத்து என்றும் நெட்டெழுத்து என்றும் வகைப்படுத்தப்படும். குற்றெழுத்துக்கள் ஒரு மாத்திரை அளவாகவும் நெட்டெழுத்துக்கள் இரு மாத்திரை அளவாகவும் ஒலிக்கின்றன. மெய்யெழுத்துக்கள் அரைமாத்திரை ஒலிப்புடையன.

உயிர்க்குறில் - அ, இ, உ, எ, ஒ

உயிர்நெடில் - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

குறில் எழுத்துக்கள் குற்றெழுத்துக்கள் என்றும் நெடில் எழுத்துக்கள் நெட்டெழுத்துக்கள் என்றும் அழைக்கப்படும்.

1.1.2. சார்பெழுத்து

முதலெழுத்துக்களைச் சார்ந்து நின்று இயங்குபவை சார்பெழுத்துக்களாகும்.

- உயிரும் மெய்யும் சேர்ந்த ஒலிப்புநிலைக்கான அடையாளமாக அமைந்த உயிர்மெய்களும்,
- உயிரென்றோ மெய்யென்றோ கொள்ளமுடியாத ஆய்தமும்,
- முதலெழுத்துக்களுள் சில, சொற்களில் அமையும்போது, தமக்குரிய ஒலிப்பு அளவில் ஒலிக்காது சிறிது வேறுபட்டு (நீண்டு / குறுகி) ஒலிப்பனவாக அமைந்தவையும் சார்பெழுத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன.

சார்பெழுத்துக்கள் பத்து வகைப்படும்.

i.	உயிர்மெய்	ii.	ஆய்தம்
iii.	உயிரளபெடை	iv.	ஒற்றளபெடை
v.	குற்றியலுகரம்	vi.	குற்றியலிகரம்
vii.	ஐகாரக் குறுக்கம்	viii.	ஔகாரக் குறுக்கம்
ix.	மகரக் குறுக்கம்	x.	ஆய்தக் குறுக்கம்

I. உயிர்மெய்

மெய்யெழுத்துடன் உயிரெழுத்துச் சேர்ந்து ஒலிப்பதை உயிர்மெய்யெழுத்து என்கிறோம்.

18 மெய்யுடனும் 12 உயிர்களும் சேரும். அவ்வவற்றுக்குத் தனியான வரிவடிவம் உண்டு.

எடுத்துக்காட்டு : க் + அ = க
க் + ஆ = கா

18 மெய் x 12 உயிர் = 216 உயிர்மெய்யெழுத்துக்கள்.

உயிர்மெய் எழுத்தில் உள்ள உயிரெழுத்தின் மாத்திரையே கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டு : க் + அ = க - 1 மாத்திரை (உயிர்மெய்க் குற்றெழுத்து)
க் + ஆ = கா - 2 மாத்திரை (உயிர்மெய் நெட்டெழுத்து)

II. ஆய்தம்

மூன்று புள்ளிகளையுடைய (∴) எழுத்து வடிவம் ஆய்தம் எனப்படுகிறது. முப்புள்ளி, முப்பாற்புள்ளி தனிநிலை எழுத்து என்பன இதன் வேறு பெயர்களாகும். இதற்குரிய மாத்திரை ½. இது சொல்லில் இடம்பெறும்போது தனிக் குற்றெழுத்துக்கும் வல்லின உயிர்மெய் எழுத்துக்கும் இடையில் வரும்.

எடுத்துக்காட்டு : அ∴து, எ∴து, அ∴றிணை.

குற்றெழுத்துக்கும் ஒரு வல்லின மெய்க்கும் இடையிலேயே வருமென்ற இடச்சார்பு காரணமாக சார்பெழுத்து எனப்பட்டது. இக்கால வழக்கில் மேற்கூறிய விதிக்குள் அமையாமலும் (வேற்றுமொழிச் சொல் காரணமாக) வருகின்றன.

எடுத்துக்காட்டு : நு∴மான்

III. உயிரளபெடை

அளபெடை என்பது அளபு எடுத்தலாகும். அதாவது எழுத்து நீண்டொலித்தல் என்பதாகும். உயிரெழுத்துக்களில் நெட்டெழுத்துக்கள் மட்டுமே அளபெடுக்கும். நெட்டெழுத்துக்கள் ஏழும் தமக்குரிய மாத்திரையினின்று நீண்டொலித்தல், உயிரளபெடை எனப்படும். சொல்லின் முதல், இடை, இறுதி நிலைகளில் இவை நீண்டொலிப்பதுண்டு.

எடுத்துக்காட்டு :	ஓஒதல் வேண்டும்	-	சொல்லின் முதல்
	தெய்வம் தொழாஅள்	-	சொல்லின் இடை
	நசைஇ	-	சொல்லின் இறுதி

நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தற்கு அறிகுறியாக அதனதன் இனக்குற்றெழுத்து அருகில் எழுதப்படும். இதற்குரிய மாத்திரை 3 ஆகும்.

IV. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையுமிடத்து, மெல்லின எழுத்துக்கள் ஆறும், ர், ழ் தவிர்ந்த நான்கு இடையின எழுத்துக்களும் ஆய்த எழுத்துமாக பதினொரு எழுத்துக்களும் தமக்குரிய அரைமாத்திரையிலிருந்து நீண்டொலித்தல் **ஒற்றளபெடை** எனப்படும். நீண்டு ஒலித்தற்கு அடையாளமாக அதே எழுத்து அதன் பக்கத்தில் எழுதப்படும். (ஆய்தமும் ஒற்றளபெடைக்குள்ளே கொள்ளப்படுவதைக் கவனத்திற்கொள்க.)

எடுத்துக்காட்டு : இலங்ங்கு வெண்பிறை
திர**ள்ள்** சேனை
எ∴..∴கிலங்கிய கையராய்

- சொல்லின் இடையிலும் இறுதியிலுமே மெய்யெழுத்து அளபெடுக்கும்.
- சொல்லின் இடையில் மட்டும் ஆய்தம் அளபெடுக்கும்.
- ஒற்றளபெடைக்குரிய மாத்திரை 1 ஆகும்.

V. குற்றியலுகரம்

உகரம் தன்மாத்திரையைவிடக் குறைந்தொலிப்பின் குற்றியலுகரம் எனப்படும். அது தனிக்குற்றெழுத்து அல்லாத மற்றைய எழுத்துக்களின் பின்னே சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஏறிவரும்.

எடுத்துக்காட்டு : ஆடு, பாக்கு, கயிறு.

குற்றியலுகரத்துக்கு உரிய மாத்திரை ½. குற்றியலுகரத்தை அதன் அயல் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறாக வகைப்படுத்துவர்.

குற்றியலுகரத்தின் வகைகள்

1. வன்றொடர்க் குற்றியலுகரம் - நாக்கு, பேச்சு, தட்டு
2. மென்றொடர்க் குற்றியலுகரம் - தங்கு, நெஞ்சு, வண்டு
3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - நெய்து, மார்பு, சால்பு
4. நெடிற்றொடர்க் குற்றியலுகரம் - பாகு, தூசு, நாடு
5. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - வரகு, பயறு, படகு
6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் - அஃது, இஃது, எஃகு

VI. குற்றியலிகரம்

இகரம் தன் மாத்திரையின்றும் குறுகி ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும். குற்றியலுகரத்தைக் கொண்ட சொல்லோடு யகரத்தைக் கொண்டு ஆரம்பிக்கும் சொல் வந்து புணருமாயின் உகரம் இகரமாகத் திரிந்து குறைந்து ஒலிக்கும். இதற்கும் மாத்திரை ½ ஆகும்.

எடுத்துக்காட்டு : வண்டு+ யாது = வண்டியாது
நாகு + யாது = நாகியாது
காடு + யாது = காடியாது

VII. ஐகாரக் குறுக்கம்

சொல்லின் முதலிலோ இடையிலோ ஈற்றிலோ வரும் ஐகாரம் தனக்குரிய மாத்திரையிலிருந்து குறைந்தொலிப்பது ஐகாரக் குறுக்கம் ஆகும். இதற்குரிய மாத்திரை 1 ஆகும்.

எடுத்துக்காட்டு : முதலில் வருதல் - ஐயர், ஐப்பசி
இடையில் வருதல் - கலைஞர், அமைச்சர்
ஈற்றில் வருதல் - வாழை, பனை

- ஐகாரம் தனி எழுத்தாகவோ ஓரெழுத்தொரு மொழியாகவோ வரும்போது குறுகாது.

VIII. ஔகாரக் குறுக்கம்

சொல்லின் முதலில் வரும் ஔகாரம் தன் மாத்திரையிலிருந்து குறைந்தொலிப்பது ஔகாரக் குறுக்கம் ஆகும். இதற்குரிய மாத்திரை 1 ஆகும்.

எடுத்துக்காட்டு : ஔவையார், வௌவால், சௌகரியம்

- சொல்லின் முதலில் வரும்போது குறுகும் ஔகாரம், தனித்து ஒலிக்கும்போது குறுகாது.

IX. மகரக் குறுக்கம்

மகரம் தனக்குரிய ½ மாத்திரையிலிருந்து குறுகி ஒலிப்பது மகரக் குறுக்கம் எனப்படும். இதற்குரிய மாத்திரை ¼ .

எடுத்துக்காட்டு: போன்ம், மருண்ம், தரும்வளவன்

X. **ஆய்தக் குறுக்கம்**

ஆய்தம் தனக்குரிய மாத்திரையிலிருந்து குறுகி ஒலிப்பது ஆய்தக் குறுக்கமாகும். இதற்குரிய மாத்திரை ¼. சொற்புணர்ச்சியின்போது லகர, ளகர ஈற்றுச் சொற்களின் முன் தகரம் வரின் லகர, ளகர ஈறுகள் ஆய்தமாகத் திரிந்து குறுகி ஒலிக்கும்.

கல் + தீது ➞ க.ஃறீது
முள் + தீது ➞ மு.ஃடீது
அல் + திணை ➞ அ.ஃறிணை

1.1.3. கூட்டெழுத்து / சந்தியக்கரம்

உயிரெழுத்துக்களில் ஐ, ஔ என்னும் இரண்டும் கூட்டெழுத்து அல்லது சந்தியக்கரம் எனப்படும். இவை அய், அவ் என்றும் எழுதப்படுகின்றன. பண்டைக் காலத்தில் இவை அஇ, அஉ என்றும் எழுதப்பட்டுள்ளன. தற்காலத்தில் அவ்வாறு எழுதப்படுவதில்லை.

ஐ	ஔ
அய் அஇ	அவ் அஉ

1.1.4. கிரந்த எழுத்துக்கள்

- தற்காலத் தமிழில் சில கிரந்த எழுத்துக்களும் கையாளப்படுகின்றன.
  ஜ, ஸ, ஷ, ஹ, ஸ்ரீ, க்ஷ

எடுத்துக்காட்டு :

ஜ - ஜலம், பங்கஜம்

ஸ - சரஸ்வதி

ஷ - புஷ்பம்

ஹ - ஹரன்

ஸ்ரீ - ஸ்ரீநிவாஸ்

க்ஷ - க்ஷேமம்

1.1.5. சுட்டெழுத்துக்களும் வினாவெழுத்துக்களும் இனவெழுத்துக்களும்

I. சுட்டெழுத்துக்கள்

அ, இ, உ என்னும் மூன்றும் சுட்டுப்பொருளில் வரும்போது சுட்டெழுத்துக்கள் எனப்படும். சொல்லிலிருந்து பிரிக்க முடியாத வகையில் இவ்வெழுத்துக்கள் அமையும்போது அகச்சுட்டு என்றும் பிரிக்கக்கூடிய வகையில் அமையும்போது புறச்சுட்டு என்றும் குறிப்பிடப்பெறும்.

- பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் சேய்மையிலுள்ள பொருளை அகரம் சுட்டி நிற்கும்.
- பேசுவோனுக்கு அண்மையிலுள்ள பொருளை இகரம் சுட்டி நிற்கும்.
- கேட்போனுக்கு அண்மையிலுள்ள பொருளை உகரம் சுட்டி நிற்கும்.

எடுத்துக்காட்டு :

(அ) அவன், அவள், அவர்கள்
அது, அவை
இவன், இவள், இவர்கள்
இது, இவை
உது, உவை
} அகச்சுட்டுகள்

(ஆ) அம்மனிதன்
அவ்வதிகாரிகள்
அப்பிள்ளை
இம்மாணவன், இப்பாடகி
இத்தலைவர்கள்
இம்மாடு, இவ்விடயங்கள்
உம்மனிதன்
உவ்வீடு
} புறச்சுட்டுகள்

- தற்காலத்தில் உகரம் சுட்டுப்பொருளில் வருவது அரிதாக உள்ளது.

II. வினாவெழுத்துக்கள்

தமிழில் சில எழுத்துக்கள் வினாப்பொருளைத் தருகின்றன. அவையாவன எ, ஏ, யா, ஆ, ஓ என்னும் ஐந்துமாம். அவற்றுள் எ, யா என்பன சொல்லின் முதலில் வினாப்பொருளில் வரும். ஆகாரமும் ஓகாரமும் சொல்லின் இறுதியில் வினாப்பொருளில் வரும். ஏகாரம் சொல்லின் முதலிலும் இறுதியிலும் வினாப்பொருளில் வரும்.

எடுத்துக்காட்டு :

எ	-	எவன்? எது? எவர்?
ஆ, ஓ	-	தந்தையா? சென்றனரோ?
ஏ	-	ஏன்? ஏது?
		பாம்பே?
யா	-	யாது? யாவை? யாவர்? யாங்ஙனம் ?

- தற்காலத்தில் ஆ மொழி முதலிலும் வினாப்பொருளில் வரும்.
  எடுத்துக்காட்டு : ஆர்?

- வினாவெழுத்துக்கள் அகவினா, புறவினா என இரு வகைப்படும்.
  எடுத்துக்காட்டு : என்ன? - அகவினா
  எப்பொருள்? - புறவினா

III. **இனவெழுத்துக்கள்**

உயிரெழுத்துக்களுள் குறில் ஐந்துக்கும் ஒத்த நெடில் ஐந்தும், ஐகாரத்துக்கு இகரமும், ஔகாரத்துக்கு உகரமும் இனம்.

அ - ஆ
இ - ஈ
உ - ஊ
எ - ஏ
ஒ - ஓ
ஐ - இ
ஔ - உ

மெய்யெழுத்துக்களுள் வல்லினம் ஆறுக்கும் முறையே மெல்லினம் ஆறும் இனம்.
அந்த இனமுறை வருமாறு:

க் - ங்
ச் - ஞ்
ட் - ண்
த் - ந்
ப் - ம்
ற் - ன்

இடையினம் ஆறும் இனவெழுத்துக்கள் இல்லாதவை.

மதிப்பீட்டு வினாக்கள்

குறுவிடை வினாக்கள்

1. முதலெழுத்து, சார்பெழுத்து என்பவற்றை விளக்குக.
2. மாத்திரை என்றால் என்ன?
3. சார்பெழுத்தின் வகைகள் பத்தும் எவை?
4. 'அளபெடை' என்றால் என்ன?
5. 'சந்தியக்கரம்' என்பதை விளக்குக.
6. தமிழில் கிரந்த எழுத்துக்கள் பயன்படுத்தப்படுதலை எடுத்துக்காட்டுகளினூடாக விளக்குக.
7. குற்றியலுகரத்தின் வகைகளை உதாரணந் தந்து விளக்குக.
8. அகச்சுட்டு, புறச்சுட்டு என்பவற்றிற்கு உதாரணம் தருக.
9. வினாவெழுத்துக்கள் ஐந்தினையும் குறிப்பிட்டு ஒவ்வோர் உதாரணம் தருக.
10. வல்லின மெய்கள் எவை? அவற்றின் இனவெழுத்துக்கள் எவை?

கட்டுரை வினாக்கள்

1. தமிழ் எழுத்துக்களின் வகை, தொகை பற்றி விளக்கக் குறிப்புரை தருக.
2. தமிழிலுள்ள சார்பெழுத்துக்கள் பற்றி விளக்கமான குறிப்பு எழுதுக.

எண்ணக்கரு வரைபடம்

எழுத்துக்களின் வகை



⟷ இன எழுத்துக்கள்

அ - ஆ	க் - ங்
இ - ஈ	ச் - ஞ்
உ - ஊ	ட் - ண்
எ - ஏ	த் - ந்
ஐ - இ	ப் - ம்
ஒ - ஓ	ற் - ன்
ஔ - உ	

தமிழில் இடம்பெறும் கிரந்த எழுத்துக்கள்

ஜ	ஸ	ஷ	ஹ	ஸ்ரீ	க்ஷ

1.2 எழுத்துக்களின் ஒலிப்புமுறை

I. **எழுத்துக்கள்** **பிறப்புக்குரிய இடங்கள்**

1. உயிர் எழுத்துக்கள் - } தொண்டை
2. இடையின மெய்யெழுத்துக்கள் - }
3. வல்லின மெய்யெழுத்துக்கள் - மார்பு
4. மெல்லின மெய்யெழுத்துக்கள் - மூக்கு
5. ஆய்தம் - தலை

II. ஒலிப்பிறப்புக்கு முயற்சி செய்யும் உறுப்புக்கள்

III. இதழ், பல், நா, அண்ணம் (மேல்வாய்)

i. **முயற்சி**		**உயிர் எழுத்துக்கள்**
• அங்காத்தல்	-	அ, ஆ
• இதழ் குவிதல்	-	உ, ஊ, ஒ, ஓ, ஔ
• அங்காப்புடன் அடிநாவின் ஓரமானது அண்ணப்பல்லைப் பொருந்துதல்	-	இ, ஈ, எ, ஏ, ஐ

ii.		
• மேல்வாயை நாவினடி பொருந்துதல்	-	ய்
• மேல்வாய்ப் பல்லடியை நாநுனி பொருந்துதல்	-	ர்
• மேல்வாய்ப் பல்லடியை நாநுனி அழுத்துதல்	-	ல்
• மேல்வாய்ப்பல் கீழுதட்டைப் பொருந்துதல்	-	வ்
• மேல்வாய் நடுப்பகுதியை நாநுனி பொருந்துதல்	-	ழ்
• மேல்வாய் முன்பகுதியை நாநுனி அழுத்துதல்	-	ள்

• நாக்கினடி, மேல்வாயினடியைப் பொருந்துதல்.	-	ங்
• நாக்கின் நடுப்பகுதி, மேல்வாய் நடுப்பகுதியை பொருந்துதல்	-	ஞ்
• நாக்கின் நுனிப்பகுதி வளைந்து மேல்வாய் முன்பகுதியைப் பொருந்துதல்	-	ண்
• மேல்வாய்ப் பல்லினது அடியை நாக்கு நுனி பொருந்துதல்	-	ந்
• மேலிதழும் கீழிதழும் பொருந்துதல்	-	ம்
• மேல்வாயை நாநுனி பொருந்துதல்	-	ன்

• நாக்கினடி, மேல் வாயினடியைப் பொருந்துதல்	-	க்
• நாக்கின் நடுப்பகுதி, மேல்வாய் நடுப்பகுதியைப் பொருந்துதல்	-	ச்
• நாக்கின் நுனிப்பகுதி வளைந்து மேல்வாய்க் கடைப்பகுதியைப் பொருந்துதல்	-	ட்
• மேல்வாய்ப் பல்லினது அடியை நா நுனி பொருந்துதல்	-	த்
• மேலிதழும் கீழிதழும் பொருந்துதல்	-	ப்
• மேல்வாயில் நாநுனி மிகப் பொருந்துதல்	-	ற்

பிறப்புக்கு முயற்சி செய்யும் உறுப்புக்களுள் இதழ், நா எனும் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு மொழியியலாளர்கள் வெவ்வேறு நிலையில் வகைப்படுத்துவதையும் நாம் காணலாம்.

1. இதழ்

- இதழ் குவியாத உயிர் : அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ
- இதழ் குவிந்த உயிர் : உ, ஊ, ஒ, ஓ, ஔ

2. நா

- முன்னுயிர் : இ, ஈ, எ, ஏ
- இடையுயிர் : அ, ஆ
- பின்னுயிர் : உ, ஊ, ஒ, ஓ

3. நா

- மேல் உயிர் : இ, ஈ, உ, ஊ
- நடு உயிர் : எ, ஏ, ஒ, ஓ
- கீழ் உயிர் : அ, ஆ

நாவானது மேல், நடு, கீழ் இடங்களில் நிற்றல், முன், இடை பின் இடங்களில் நிற்றல் என்பனவற்றைக் கொண்டு பின்வருமாறும் வகைப்படுத்தலாம்.

நா	குறில்	நெடில்	இதழ்
மேல் முன் உயிர்	இ	ஈ	குவிவு இல்லை
நடு முன் உயிர்	எ	ஏ	குவிவு இல்லை
மேல் பின் உயிர்	உ	ஊ	குவிவு உண்டு
நடு பின் உயிர்	ஒ	ஓ	குவிவு உண்டு
கீழ் இடை உயிர்	அ	ஆ	குவிவு இல்லை

இவற்றுள்ளே முன்னுயிர்களாகிய இ, ஈ, எ, ஏ எனும் நான்கும் தம்மை அடுத்து ட், ண், ள், ழ் (மெய்யாக / உயிர்மெய்யாக) வரும்போதும் ற் தவிர்ந்த (ற, றா ....) மூல ஒலியிலிருந்து சிறிது வேறுபட்டு ஒலிக்கின்றன.

ட், ண், ள், ழ் தவிர்ந்த இடத்து வரும்போது		ட், ண், ள், ழ் ஆகியவற்றின் முன்வரும்போது
இ	இது, பினை, தினை, விலை, இலை	இடு, பிணை, திணை, விளை, இழை
ஈ	ஈது, மீன், சீல், ஈகை	ஈடு, வீண், சீள், ஈழை
எ	எது, என், வெல்லம், எரு	எடு, எண், வெள்ளம், எழு
ஏ	ஏது, பேன், வேலை, ஏல்	ஏடு, பேண், வேளை, ஏழ்

உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் பொருள் வேறுபடுத்தும் சொற்களை ஆக்கும் ஒலிகளாய் அமைகின்றன. அவற்றை **ஒலியன்கள்** என மொழியியலாளர்கள் கூறுவர்.

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் **உயிர் ஒலியன்கள்** என்று சொல்லப்படும். இவ்வொலியன்கள் சில சந்தர்ப்பங்களில் வெவ்வேறு உச்சரிப்புக்களை உடையனவாயமையும். அவ்வேறுபட்ட உச்சரிப்புகளை **மாற்றொலிகள்** என்பர். உதாரணமாக 'இ' என்னும் ஒலியன் இனி என்பதில் முன்னுயிராக ஒலிக்கும். இடி என்னும் சொல்லில் நா சிறிது பின் செல்ல ஒலிக்கும்.

மெய் ஒலிகள் பிறப்பு

பிறக்கும் இடங்கள்	பிறக்கும் முறைகள்					
	அரை உயிர்	ஆடொலி	வருடொலி	மருங் கொலி	மூக்கொலி	வெடிப் பொலி
அண்ணம்	ய்	-	-	-	ஞ்	ச்
கடையண்ணம்	-	-	-	-	ங்	க்
நுனியண்ணம்	-	-	ர்	ல்	ன்	ற்
வளைநா	-	-	-	ள், ழ்	ண்	ட்
பல்	-	-	-	-	ந்	த்
உதட்டுப்பல்	வ்	-	-	-	-	-
ஈரிதழ்	-	-	-	-	ம்	ப்

- நடுநா, அண்ணத்தைத் தொடும்போது பிறப்பது - அண்ண ஒலிகள்.
- கடைநா, கடையண்ணத்தைத் தொடும்போது பிறப்பது - கடையண்ண ஒலிகள்.
- நாநுனி, நுனியண்ணத்தைப் பொருந்தும்போது பிறப்பது - நுனியண்ண ஒலிகள்.
- நாநுனி, மேல்நோக்கி வளைந்து நடுஅண்ணத்தைத் தொடும்போது பிறப்பது - வளைநா ஒலி
- நாநுனி, மேற்பல்லின் உட்புறத்தைப் பொருந்தும்போது பிறப்பது - பல் ஒலி
- உதட்டில் மேற்பல் பொருந்தும்போது பிறப்பது - உதட்டுப் பல் ஒலி.
- இதழ்கள் இரண்டும் பொருந்தும்போது பிறப்பது - ஈரிதழ் ஒலி.
- வாய்க்குள் காற்றைத் தடைசெய்து திடீரென்று காற்றை வாயினால் வெளிவிடும்போது பிறப்பது - வெடிப்பொலி.
- ‘ச’ என்பது வெடிப்பொலி எழுத்து, இருப்பினும் கடைநா கடையண்ணத்தைத் தொட்டு, பிரியும்போது காற்றானது சற்று உரசிச் செல்ல ஒலிக்கப்படுவதனால் இந்த எழுத்து மட்டும் வெடிப்பொலிக்குள்ளே வெடிப்புரசொலியாகக் கொள்ளப்படுகிறது.
- வாய்க்குள் காற்றைத் தடைசெய்யாமல் காற்றை மூக்கினால் வெளிவிடும்போது பிறப்பது - மூக்கொலி.

- i. நாநுனி, நுணியண்ணத்தைத் தொட, காற்று நாவின் இரு விளிம்புகளினாலும் வெளியேறும்போதும்.
  ii. நா, மேல்நோக்கி வளைந்து நடு அண்ணத்தைத் தொட காற்று இரு விளிம்புகளினாலும் வெளியேறும்போதும் பிறப்பது – மருங்கொலி.
- உயிரொலிக்குரிய தன்மையையும் மெய்யொலிக்குரிய தன்மையையும் கொண்டிருப்பதனால் அரையுயிர் என்று சொல்லப்படும்.

- மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் **மெய்யொலியன்கள்** என்று சொல்லப்படும். இவற்றுக்கும் மாற்றொலிகள் உள.
- மெய்யொலியன்களுள்ளே க், ச், ட், த், ப், ற் எனும் மெய்யொலியன்களுக்குப் பின்வரும் மாற்றொலிகள் வருகின்றன.

ஒலியன் க	கரம்	என்பதில்	'க'	என்பது மாற்றொலி	(k)
	பாகல்	என்பதில்	'க'	என்பது மாற்றொலி	(h)
	பங்கம்	என்பதில்	'க'	என்பது மாற்றொலி	(g)
ஒலியன் ச	சத்தம்	என்பதில்	'ச'	என்பது மாற்றொலி	(s)
	ஆட்சி	என்பதில்	'ச'	என்பது மாற்றொலி	(ch)
	மஞ்சு	என்பதில்	'ச'	என்பது மாற்றொலி	(j)
ஒலியன் ட	தடம்	என்பதில்	'ட'	என்பது மாற்றொலி	(d)
	தண்டம்	என்பதில்	'ட'	என்பது மாற்றொலி	(d)
	ஆட்சி	என்பதில்	'ட'	என்பது மாற்றொலி	(t)
ஒலியன் த	தலை	என்பதில்	'த'	என்பது மாற்றொலி	(t)
	சந்தம்	என்பதில்	'த'	என்பது மாற்றொலி	(d)
	பதம்	என்பதில்	'த'	என்பது மாற்றொலி	(th)
ஒலியன் ப	பட்டு	என்பதில்	'ப'	என்பது மாற்றொலி	(p)
	ஆம்பல்	என்பதில்	'ப'	என்பது மாற்றொலி	(b)
	சபலம்	என்பதில்	'ப'	என்பது மாற்றொலி	(bh)
ஒலியன் ற	அறம்	என்பதில்	'ற'	என்பது மாற்றொலி	(r)
	வற்றல்	என்பதில்	'ற'	என்பது மாற்றொலி	(tr)

'ந்' மெய்யாகச் சொல்லுக்கு இடையில் மட்டுமே பல் மூக்கொலியாக உச்சரிக்கப்படும். (பந்து, சந்தம்) சொல்லின் முதனிலையில் 'ந்' மெய் நுனியண்ண மூக்கொலியாகிய 'ன்' ஆகவே உச்சரிக்கப்படுகின்றது. (நான், நீ, நெல்...)

குறிப்பு

- உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் என்பன ஒலிக்கப்படும் முறைகளை உதாரணங்களுடன் விளக்குக.
- மாற்றொலிகள் பற்றி, பொருத்தமான எடுத்துக்காட்டுகள் மூலம் அறிமுகஞ் செய்க.

1.3 எழுத்துக்களின் பரம்பல்

சொல்லாக்கத்தில் எழுத்துக்கள் பயின்றுவரும் முறைமையே எழுத்தின் பரம்பல் எனப்படுகிறது. தமிழிலே சொல்லின் முதலில் இன்ன இன்ன எழுத்துக்கள்தாம் வரும் என்றும், சொல்லின் இறுதியில் இன்ன இன்ன எழுத்துக்கள்தாம் நிற்கும் என்றும், சொல்லின் இடையில் இன்ன இன்ன மெய்யெழுத்துக்கள்தாம் சேர்ந்து நிற்கும் (மயங்கும்) என்றும் வரையறுக்கும் விதிகள் இலக்கண நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை தமிழ் ஒலி மரபின் அடிப்படையிலே அமைந்தவை. இவ்வகையான விதிகள் பிறமொழிகளின் தாக்கத்திலிருந்து தமிழின் தனித்தன்மை கெடாதவாறு காப்பவையாகும்.

1. சொல்லில் முதலில் வரும் எழுத்துக்கள் - முதனிலை / மொழி முதல் எழுத்துக்கள்
2. சொல்லின் ஈற்றில் நிற்கும் எழுத்துக்கள் - இறுதிநிலை / ஈற்று நிலை எழுத்துக்கள்
3. சொல்லின் இடையில் மெய்யெழுத்துக்கள் மயங்கிவருதல் - இடைநிலை மெய்ம்மயக்கம்

1.3.1. முதனிலை எழுத்துக்கள்

(அ) 12 உயிர் எழுத்துக்களும் சொல்லின் முதலில் நிற்கும்.

எடுத்துக்காட்டு : அணி, ஆடை முதலியன.

(ஆ) வல்லின மெய்களில் க், ச், த், ப் என்னும் நான்கும் 12 உயிருடன் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

எடுத்துக்காட்டு : கனி, காடு, கிளி, கீரி, குடி, கூடு, கெடு, கேடு, கைதி, கோடு, கௌமாரம்

(இ) மெல்லின மெய்களில் ந், ம் இரண்டும் 12 உயிர்களுடனும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும் ஞகரமெய் அ, ஆ, எ, ஒ என்னும் நான்கு உயிரோடும் வரும்.

எடுத்துக்காட்டு :

ந்	-	நண்டு, நாய் முதலியன
ம்	-	மலர், மாது முதலியன
ஞ்	-	ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்குதல்
ங்	-	ஙனம் (இடம்), அங்ஙனம், இங்ஙனம்

(ஈ) இடையின மெய்களில் யகரமெய் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிருடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

எடுத்துக்காட்டு : யவனர், யாது, யுகம், யூகம், யோகம், யௌவனம்

தற்கால வழக்கு

1. மொழிக்கு முதலில் வராதவை எனக்குறிப்பிடும் எழுத்துக்களில் சில பிறமொழித் தொடர்பு காரணமாக முதனிலையயாக வரும்.

எடுத்துக்காட்டு :

ட்	-	டட்லி, டாக்டர்
ற்	-	றேடியோ, றாக்கை, றம்புட்டான்
ர்	-	ரயர், ரியூப், ரீங்காரம்
ல்	-	லட்டு, லொத்தர், லேகியம்

1.3.2. இறுதிநிலை எழுத்துக்கள்

(அ) உயிர் எழுத்துக்களுள் எகரம் தவிர்ந்த 11 எழுத்துக்களும் சொல்லின் இறுதியில் நிற்கும்.

எடுத்துக்காட்டு : பல, பலா, கிளி, தேனீ, ஏடு, பூ, சே (எருது), கை, நொ (வருத்து), போ, வௌ

(ஆ) மெய்யெழுத்துக்களுள் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொன்றும் மொழிக்கு இறுதியில் வரும்.

எடுத்துக்காட்டு : உரிஞ், மண், வெரிந் (முதுகு), மரம், பொன், மெய், வேர், வேல், தெவ் (பகை), யாழ், தாள்.

தற்கால வழக்கு

1. ஏ, ஓ, ஔ என்பன இன்றைய வழக்கில் அருகியே காணப்படுகின்றன.
2. ஞ், ந், வ் என்பன மொழியின் இறுதியில் வருவது அருகியே காணப்படுகின்றன. ‘‘வ்’’ என்பது செக்கோவ், குறிஸ்சேவ், ராமராவ் முதலிய பிறமொழிப் பெயர்ச் சொற்களில் வருவது உண்டு.
3. மொழி இறுதியில் வரா எனக் குறிப்பிட்ட வல்லின மெய்கள் இக்காலத்தில் பிறமொழியில் அமைந்த பெயர்ச்சொற்களில் வருவதுண்டு.

எடுத்துக்காட்டு :

க்	-	ஈராக்
ச்	-	சூரிச்
ட்	-	டேவிட்
த்	-	பாக்தாத்
ப்	-	ஜோசப்
ற்	-	ஜெனற்

1.3.3. இடைநிலை மெய்ம்மயக்கம்

சொற்களின் இடையில் மெய்யெழுத்துக்கள் இணங்கி வரும் முறைமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

1. க், ச், த், ப் என்னும் நான்கு மெய்களும் தம்மோடு தாம் மயங்கி (சேர்ந்து) நிற்கும்.

   எடுத்துக்காட்டு : பக்கம் - (க் + க்) மச்சம் - (ச் + ச்)
   சுத்தம் - (த் + த்) அப்பம் - (ப் + ப்)

   இவ்வாறு ஒரே மெய் இரட்டித்து வருவது உடனிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.
   க், ச், த், ப் என்ற நான்கும் உடனிலை மெய்ம்மயக்கமாகவே வரும்.

2. ர், ழ் என்னும் இரு மெய்களும் தம்மொடு பிறமெய் மயங்கி (சேர்ந்து) நிற்கும்.

   எடுத்துக்காட்டு : சோர்வு- (ர் + வ்)
   வாழ்வு - (ழ் + வ்)

   இவ்வாறு தம்மொடு பிறமெய்கள் மயங்குவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். ர், ழ் ஆகிய இரண்டும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவே வரும்.

3. மேற்குறிப்பிட்ட ஆறு மெய்களும் தவிர்ந்த ஏனைய பன்னிரு மெய்களும் உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகவும் வரும்.

   எடுத்துக்காட்டு : நட்டம் - நட்பு
   கற்பு - கற்றல்

4. மூன்று மெய்கள் மயங்கி (சேர்ந்து) வரும் சந்தர்ப்பங்களில் ய், ர், ழ் என்னும் மெய்களுள் ஒன்று முதலில் நிற்கும்.

   எடுத்துக்காட்டு : ய் - வாய்க்கால்
   காய்ச்சல்
   சாய்ந்தது

   ர் - பார்ப்பான்
   உயர்ச்சி
   சேர்ந்தார்

   ழ் - வாழ்க்கை
   காழ்ப்பு
   பாழ்ங்கிணறு

தற்கால வழக்கு

- க, த, ப ஆகிய வல்லின எழுத்துக்கள் தற்காலத்தில் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக பல இடங்களில் எழுதப்படுகின்றன.

  எடுத்துக்காட்டு: பக்தி, அக்னி
  ஆத்மா
  சப்தம்

மதிப்பீட்டு வினாக்கள்

1. இடைநிலை மெய்ம்மயக்கத்தின் இருவகைகளையும் உதாரணம் தந்து விளக்குக.
2. சொல்லுக்கு முதலில் 12 உயிரெழுத்துக்களுடனும் சேர்ந்து வரும் மெய்யெழுத்துக்கள் எவை?
3. சொற்களின் இடையில் மூன்று மெய்கள் மயங்கி வருவதற்கு இரண்டு எடுத்துக்காட்டுக்கள் தருக.

2.0 பதவியல்

- எழுத்து தனித்தோ தொடர்ந்தோ பொருள் தருவது பதம்.

ஓரெழுத்துச் சொற்கள்

எடுத்துக்காட்டு: கோ (அரசன்)
பூ (மலர்)
ஆ (பசு)

ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலான சொற்கள்

எடுத்துக்காட்டு: தாய், தந்தை, கடவுள்

- சொல், பதம், கிளவி, மொழி என்பன ஒரு பொருளை உணர்த்துவன. சொல்லை ஆக்கக் கூறுகளாகப் பகுத்தாயும் இலக்கணப் பகுதி பதவியல் எனப்படும்.

- சொற்கள் பகாப்பதம், பகுபதம் என இருவகைப்படும்.

பகாப்பதம் :

பகுதி, விகுதி முதலான உறுப்புக்களாகப் பகுக்க முடியாத சொல், **பகாப்பதம்** எனப்படும். பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உள்ளன.

எடுத்துக்காட்டு:

- **பெயர்ப் பகாப்பதம்** : இலங்கை, நிலம், மரம்
- **வினைப் பகாப்பதம்** : சிரி, வா, போ
- **இடைப் பகாப்பதம்** : மற்று, கொல், ஏ
- **உரிப் பகாப்பதம்** : உறு, தவ, நனி

பகுபதம்

பகுதி விகுதி முதலிய சொல்லாக்கக் கூறுகளை இனங்காணத்தக்க சொல், **பகுபதம்** எனப்படும். **பெயர்ச்சொல், வினைச்சொல்** எனும் இருவகைச் சொற்களிலும் பகுபதங்கள் அமையும். அவ்வகையில் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

பகுபதச் சொல்லொன்றில் இடம்பெறும் கூறுகளை அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை **பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்** எனப்படும். பகுபதம் ஒன்றில் இந்த ஆறு உறுப்புக்களும் கட்டாயம் அமையும் என்பதில்லை. ஆனால் குறைந்தபட்சம் **பகுதி, விகுதி** என்னும் இரு உறுப்புக்களும் அமையும்.

2.3.1 பெயர்ப்பகுபதம்

எடுத்துக்காட்டு:

- **ஊரார்** = ஊர் + ஆர்
  பகுதி விகுதி

- **அறிஞன்** = அறி + ஞ் + அன்
  பகுதி பெயர் இடைநிலை விகுதி

2.3.2 வினைப்பகுபதம்

எடுத்துக்காட்டு:

- கூடும் = கூடு + உம் (இரண்டு உறுப்புக்கள்)
  பகுதி விகுதி

- உண்டான் = உண் + ட் + ஆன் (மூன்று உறுப்புக்கள்)
  பகுதி இடைநிலை விகுதி

- உண்டனன் = உண் + ட் + அன் + அன் (நான்கு உறுப்புக்கள்)
  பகுதி இடைநிலை சாரியை விகுதி

- பிடித்தனன் = பிடி + த் + த் + அன் + அன்
  பகுதி சந்தி இடைநிலை சாரியை விகுதி
  (ஐந்து உறுப்புக்கள்)

- நடந்தனன் = நட + த்(ந்) + த் + அன் + அன்
  பகுதி சந்தி விகாரம் இடைநிலை சாரியை விகுதி
  (ஆறு உறுப்புக்கள்)

2.3.3. பகுபத உறுப்புக்கள்

பகுதி : ஒரு பகுபதத்தின் அடிச்சொல்லே பகுதியாகும். இது சொல்லின் தொடக்கத்தில் அமையும்.

விகுதி : சொல்லின் இறுதியில் நிற்கும் உறுப்பு. திணை, பால், எண், இடம் உணர்த்துவது. சில விகுதிகள் காலத்தையும் உணர்த்துவன.

இடைநிலை : சொல்லின் இடையே நிற்கும் உறுப்பு. தெரிநிலை வினைச்சொற்களில் காலத்தை இது உணர்த்தும். பெயர் இடைநிலைகளும் உள. இவை காலம் உணர்த்தா.

சந்தி : பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் உறுப்பு. பகுதியோடு இடைநிலை புணரும்போது, அவற்றிற்கிடையில் தோன்றுவது சந்தி.

5. **சாரியை** : பகுபத உறுப்புக்களுக்கிடையே இயைந்து வருவது சாரியை எனப்படுகிறது.

6. **விகாரம்** : பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே வந்த சந்தி திரிந்து விகாரப்படுவது விகாரம் எனப்படும். சில சந்தர்ப்பங்களில் பகுதியும் விகாரம் அடையும்.

பகுதி (முதனிலை)

தெரிநிலைப் பகுபதங்களுக்குப் பெரும்பாலும் நட, வா முதலிய வினைச்சொற்களும், சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொற்களும் பகுதிகளாக வரும். தெரிநிலை வினைப்பகுதிகள் பெரும்பாலும் ஏவல் வடிவிலேயே அமையும்.

- **நடந்தான்** - பகுதி = நட (வினையடி)
- **சித்திரித்தான்** - பகுதி = சித்திரம் (பெயரடி)
- **போன்றான்** - பகுதி = போல் (இடையடி)
- **சான்றான்** - பகுதி = சால் (உரியடி)

தெரிநிலை வினைப்பகுதிகள் வி, பி முதலிய விகுதி பெற்றேனும் விகாரப்பட்டேனும் பிறவினைப் பகுதிகளாய் வரும்.

எடுத்துக்காட்டு:

- செய்வித்தான் - பகுதி = செய்வி (செய் + வி)
- நடப்பித்தான் - பகுதி = நடப்பி (நட + பி)
- திருத்தினான் - பகுதி = திருத்து (திருத்து)
- தேற்றினான் - பகுதி = தேற்று (தேறு)

செய்வினை வடிவம், செயப்பாட்டு வினை வடிவத்தைப் பெற்றும் தெரிநிலை வினைச்சொல்லின் பகுதியாக வருவதுண்டு.

- தேடப்பட்டான் - தேடப்படு
- முடிக்கப்பட்டது - முடிக்கப்படு

தற்காலத் தமிழில் வழங்கும் தெரிநிலை வினைச்சொற்கள் பலவற்றின் பகுதிகள் கூட்டுவினைப் பகுதிகள் என்று கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டு: **ஓடிக்கொண்டிருப்பான்** என்ற வினைச் சொல்லின் பகுதி, **ஓடிக்கொண்டிரு** என்பதாகும்.

இக்கூட்டுவினைப்பகுதியில் ஓடு என்ற அடிப்படை வினையடியோடு மேலும் பல **ஒட்டுக்கள்** அமைந்துள்ளன. (ஓடு + கொள் + இரு)

விகுதி

விகுதி என்பது பகுபதங்களின் இறுதியிலே வந்து திணை, பால், எண், இடம் என்பனவற்றையோ ஏவல், வியங்கோள் முதலான பொருள்களையோ உணர்த்தி நிற்கும் ஒரு சொல்லாக்கக்கூறு ஆகும்.

பெயர் விகுதிகள் :	குழையன் (அன்)	கோமான் (மான்)
	வானத்தான் (ஆன்)	பிறன் (ன்)
	குழையர் (அர்)	குழையள் (அள்)
	தோன்றல் (அல்)	வானத்தார் (ஆர்)

தொழிற்பெயர் விகுதிகள்

(தல்) நடத்தல்
(அல்) ஆடல்

செய்தமை
செய்கின்றமை } மை

செய்தது
செய்கின்றது
செய்வது } து

பண்புப்பெயர் விகுதிகள்

(மை) நன்மை (ஐ) தொல்லை (சி) மாட்சி (பு) மாண்பு
(அம்) நலம் (றி) நன்றி

தெரிநிலை வினைமுற்று விகுதிகள்

நடந்தனன் (அன்)
நடந்தான் (ஆன்) } ஆண்பால் விகுதிகள்

நடந்தனள் (அள்)
நடந்தாள் (ஆள்) } பெண்பால் விகுதிகள்

நடந்தனர் (அர்) - பலர்பால்
நடந்தார் (ஆர்) - மரியாதை ஒருமை

நடந்தது (து) - அ.ஃறிணை
நடந்தன (அ) - அ.ஃறிணை

நடந்தேன் (ஏன்) - தன்மை ஒருமை
நடந்தாய் (ஆய்) - முன்னிலை ஒருமை
நடப்போம் (ஓம்) - தன்மை பன்மை
நடத்தி (இ) - ஏவல் ஒருமை
நடமின் (மின்) - ஏவல் பன்மை
நடந்தனர் (அர்) படர்க்கை பன்மை

நடந்தனை (ஐ) - முன்னிலை ஒருமை
நடந்தீர் (ஈர்) - முன்னிலைப் பன்மை

குறிப்பு வினைமுற்று விகுதிகள்

கரியன் (அன்) கரியன (அ)
கரியள் (அள்) கரிது (து)
கரியர் (அர் வில்லி (இ)

தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள்

செய்த (அ) செய்கின்ற (அ) செய்யும் (உம்)

குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி

கரிய (அ)

தெரிநிலைவினையெச்ச விகுதிகள்

நடந்து (உ) ஓடி (இ) உண்ணா (ஆ)
உண்ண (அ) உண்டால் (ஆல்) உண்ணாமல் (மல்)
போய் (ய்)

பிறவினை விகுதிகள்

செய்வி (வி) உருட்டு (டு) போக்கு (கு) பாய்ச்சு (சு)
நடப்பி (பி) நடத்து (து) எழுப்பு (பு) பயிற்று (று)

செயப்பாட்டுவினை விகுதி

கட்டப்பட்டான் (படு)

வியங்கோள்வினை விகுதி

வாழ்க (க) வாழிய (இய) வாழியர் (இயர்)

இடைநிலை

பகுபதங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் நிற்கும் இடைச் சொற்கள் இடைநிலை எனப்படும். அவை **பெயரிடைநிலை, வினையிடைநிலை** என இருவகைப்படும்.

(அ) **பெயரிடை நிலைகள்**: இவை காலங்காட்டுவதில்லை.

எடுத்துக்காட்டு:

- **கலைஞன்** (கலை+ **ஞ்** + அன்)
- **ஓதுவான்** (ஓது + **வ்** + ஆன்)
- **வலைச்சி** (வலை + **ச்** + இ)

(ஆ) **வினை இடைநிலைகள்:** தெரிநிலை வினைப் பகுபதங்களில் வரும் இடைநிலைகள் காலங்காட்டுவனவாய் அமையும். அந்த வகையில் அவை இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

- **இறந்தகால இடைநிலைகள்** : த், ட், ற், இன், ன், இ

செய்தான் = செய் + த் + ஆன்
உண்டான் = உண் + ட் + ஆன்
தின்றான் = தின் + ற் + ஆன்
ஓடினான் = ஓடு + இன் + ஆன்
போனான் = போ + ன் + ஆன்
கூடியது = கூடு + இ + அ + து

- **நிகழ்கால இடைநிலைகள்** : ஆநின்று, கின்று, கிறு

நடவாநின்றான் = நட + ஆநின்று + ஆன்
நடக்கின்றான் = நட + கின்று + ஆன்
நடக்கிறான் = நட + கிறு + ஆன்

- ஆநின்று என்னும் இடைநிலை தற்கால வழக்கில் இல்லை.

- **எதிர்கால இடைநிலைகள்**

உண்பான் = உண் + ப் + ஆன்
செய்வான் = செய் + வ் + ஆன்

- **எதிர்மறை இடைநிலைகள்** : இல், அல் ஆ

நடந்திலன் = நட+ த்த + இல் + அன்
நடக்கின்றிலன் = நட + கின்று + இல் + அன்
கண்டானல்லன் = கண்டான் + அல் + அன்
நடவான் = நட + வ் + ஆ + ன்

தெரிநிலை வினைகளில் இடைநிலைகளே பெரும்பாலும் காலங்காட்டும். சில சந்தர்ப்பங்களில் விகுதிகளும் பகுதிகளும் காலங்காட்டுவதுண்டு.

சந்தி

பகுதி, இடைநிலை என்பனவற்றை ஒலிமரபின் அடிப்படையில் இயைபுபடுத்துவதற்குச் சிலவேளைகளில் சந்தி எனும் பகுபத உறுப்பு உதவுகிறது.

எடுத்துக்காட்டு:

1. படித்தான்

படி + **த்** + த் + ஆன் (த்)
பகுதி சந்தி இடைநிலை விகுதி

2. பார்ப்பாள்

பார் + **ப்** + ப் + ஆள் (ப்)
பகுதி சந்தி இடைநிலை விகுதி

சாரியை

பகுபத உறுப்புகள் பொருத்தமாகச் சார்ந்து இயைய வருவது சாரியை ஆகும். அன், அத்து, அ முதலிய பல சாரியைகள் உள்ளன.

எடுத்துக்காட்டு:

1. உண்டனன்
   உண் + ட் + **அன்** + அன் (அன்)
   பகுதி இடைநிலை சாரியை விகுதி

2. புத்தளத்தான்
   புத்தளம் + **அத்து** + ஆன் (அத்து)
   பகுதி சாரியை விகுதி

3. ஓடியது
   ஓடு + இ + **அ** + து (அ)
   பகுதி இடைநிலை சாரியை விகுதி

விகாரம்

மெல்லின மெய், வல்லின மெய்யாகலும் வல்லின மெய் மெல்லின மெய்யாகலும் குற்றெழுத்து நெட்டெழுத்தாகலும், நெட்டெழுத்து குற்றெழுத்தாகலும் இல்லாத எழுத்து தோன்றலும் உள்ள எழுத்து கெடுதலும் (தொகுதலும்) ஒரெழுத்து இன்னோரெழுத்தாகத் திரிதலும் விகாரங்கள் ஆகும்.

எடுத்துக்காட்டு:

1. விழுந்தான்
   விழு + த் (ந்) + த் + ஆன் (வல்லின மெய் மெல்லினமாதல்)
   பகுதி சந்தி விகாரம் இடைநிலை விகுதி

2. செத்தான்
   சா + த் + த் + ஆன் (ஒரெழுத்து இன்னோரெழுத்தாக திரிந்தது)
   (செ)
   பகுதி சந்தி இடைநிலை விகுதி (ச் + ஆ → ச் + எ)

3. கண்டாள்
   காண் + ட் + ஆள் (நெட்டெழுத்து குற்றெழுத்தாதல்)
   (கண்)

மதிப்பீட்டு வினாக்கள்

மாணவர்களுக்குரிய இலக்கணச் செயற்பாடுகள் யாவும் அவர்களுக்குரிய குறித்த பாடப்பரப்புக்களில் இருந்து கொடுக்கப்படல் உகந்தது என எதிர்பார்க்கப்படுகிறது.

1. மேல்வரும் பாடலடிகளில் அமைந்துள்ள ஒரெழுத்துச் சொல்லை இனங்கண்டு எழுதுக.

   "கோவலன் சென்று, கொள்கையின் இருந்த
   கவுந்தி ஐயையைக் கைதொழுதேத்தி ..."
   (சிலப்பதிகாரம் - ஊர் காண் காதை)

2. சென்று, தொழுதேத்தி என்பவற்றைச் சந்தி பிரித்தெழுதுக.

2. பந்தியில் தடித்த எழுத்திலுள்ள சொற்களை பெயர், வினை, இடை என வேறுபடுத்திப் பட்டியலிடுக.

"**தமிழ்** வளர்த்த முடிமன்னராகிய சேர, சோழ, பாண்டியருங் **கழிந்துபோயினர்.** அகத்தியனாரை முதலாகக் கொண்ட **புலவர்** பெருமக்கள் குழுமியிருந்து தமிழாராய்ந்த முச்சங்கங்களும் அழிந்துபோயின. செல்வத்தில் **வளர்ந்த** சீமாட்டி அல்லலுற்றலைகின்ற தன்மை **போல்** தமிழ்மாது பொலிவிழந்து **தோன்றுகின்றாள்.**

'தமிழ்த்தொண்டு' (கட்டுரை - சுவாமி விபுலாநந்தர்)

3. (அ) பின்வரும் அடிகளில் தடித்த எழுத்துக்களிலுள்ள சொற்களைப் பகுபதம் - பகாபதம் என வேறுபடுத்திப் பட்டியலிடுக.

(ஆ) பகுபதங்களாக அமைந்தவற்றைப் பகுத்து, பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களைக் குறித்துக் காட்டுக.

(இ) பகுபதம் என இனங்கண்டவற்றைப் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என அட்டவணைப்படுத்துக.

- தமிழைப் படிக்கப் படிக்க இன்பம் **தருகிறது**.
- **அலங்காரம்** செய்யாமல் அவள் வெளியில் **செல்லமாட்டாள்.**
- "**நான்** ஏன் **பிறந்தேன்?**" என்று ஒவ்வொருவரும் **கேளுங்கள்.**

4. பின்வருவனவற்றைப் பகுபத உறுப்புக்களாகப் பகுத்துக்காட்டுக.

(i) அழுதான் (ii) வீழ்த்தினான் (iii) அடைவான் (iv) கூனி
(v) கோழிகள் (vi) பெற்றுக்கொண்டான் (vii) நிமிர்த்தினான்

5. பின்வருவனவற்றுள் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

(அ) **'மூழ்கினான்'** என்பதன் சரியான பிரிப்பு

(i) மூழ்கு + கினா +ன் (ii) மூழ் + கி +ஆன்
(iii) மூழ்கி + கின் +ஆன் (iv) மூழ்கின் + ஆன்
(v) மூழகு + கின் +ஆன்

(ஆ) **'நொந்தது'** என்பதன் சரியான பகுதி

(i) நொ (ii) நோ (iii) நொந்து (iv) நோதல் (v) நோகுதல்

(இ) **'வெட்கப்பட்டான்'** என்பதன் சரியான சந்திபிரிப்பு

(i) வெட்கம் + படு + ஆன்
(ii) வெட்கப்பட்டு +ஆன்
(iii) வெட்கப்படு + ஆன் (iv) வெட்கப்படு + ட் + ஆன்
(v) வெட்கம் + பட்டு +ஆன்

3.0 சொல்லியல்

3.1. சொல்லின் இயல்பும் வகையும்

(அ) சொல்லின் இயல்பு

- ஒருவர் தம் கருத்தினைப் பிறர்க்கு அறிவிப்பதற்கும் பிறர் கருத்தினைத் தாம் அறிவதற்கும் கருவியாக அமைவது சொல்லாகும். ஓரெழுத்தாலாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகளாலாயினும் அமைந்து பொருளை உணர்த்தி நிற்பது அதன் இயல்பாகும்.

(ஆ) சொல்லின் வகைகள்

- சொற்களைத் தமிழ் இலக்கணம் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைகளாகக் கூறும்.

- நால்வகைச் சொற்களுள்ளே, பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தனித்து நின்று பொருளுணர்த்தவல்லன. இடைச்சொற்களும் உரிச்சொற்களும் தனித்தியங்கும் ஆற்றல் இல்லாதனவாய்ப் பெயரையும் வினையையும் சார்ந்து நின்றே பொருள் உணர்த்த வல்லன.

3.2. சொல்லின் பண்புகள்

I. பொருளுணர்த்தும் பண்பு

- பொருளுணர்த்தும் அடிப்படையில் மூவகை மொழிகள் உள்ளன. அவையாவன ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி என்பனவாகும்.

(ஆ) தொடர்மொழி

- பகுபதமாயினும் பகாப்பதமாயினும் ஒரு சொல் தனியாக நின்று ஒரு பொருளை உணர்த்துமிடத்து, அது **ஒருமொழி** எனப்படும்.

  எடுத்துக்காட்டு : தீ, நிலம், நட, நடந்தான்

(ஆ) ஒருமொழி

- ஒரு சொல்லைத் தொடர்ந்து இன்னொன்றோ, பலவோ வருமிடத்து, அத்தொடர் பல பொருளைத் தருவதாக அமையும். அதுவே **தொடர்மொழி** எனப்படும்.

  எடுத்துக்காட்டு : பொன்முடி, இராப்பகல், நிலத்தைக் கடந்தான்

(இ) பொதுமொழி

- ஒரு சொல்லாய் நின்று ஒரு பொருளைத் தந்தும் அதுவே தொடர்மொழியாய் நின்று வேறு பொருளைத் தருவதாயும் சில சொற்கள் அமையலாம். அவை **பொதுமொழி** எனப்படும்.

  எடுத்துக்காட்டு : தாமரை, வேங்கை

- தாமரை என்பது அப்பெயருள்ள கொடியைக் குறிக்குமிடத்து அது ஒருமொழியாகும். அது தா + மரை எனத் தொடர்மொழியாக அமைந்து தாவும் மரையைக் குறிக்கும்.

- வேங்கை என்பது புலியைக் குறிக்கும்பொழுது ஒரு மொழியாகும். அது வேகுங் கையைக் குறிக்கும் பொழுது தொடர்மொழியாகும்.

- தற்காலத்தில் பொதுமொழி அருகிக் காணப்படுகிறது.

II. இரு வகைகளாக வழங்கும் பண்பு

- சொற்கள் இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்னும் இரண்டு வகைகளில் வழங்கிவரும்.

(அ) இயல்பு வழக்கு

- எப்பொருளுக்கு எச்சொல் அமைந்ததோ அப்பொருளை அச்சொல்லாற் கூறுதல் **இயல்பு வழக்கு** எனப்படும்.

- இயல்பு வழக்கில் மூன்று வகைகள் உள்ளன. அவையாவன :
  1. இலக்கணமுடையது
  2. இலக்கணப்போலி
  3. மரூஉ

1. இலக்கணமுடையது

- இலக்கண நெறிமுறையாக வழங்கிவரும் சொற்கள் **இலக்கணமுடையது** என்ற வகையில் அடங்கும். (இவ்வகையில் உள்ள சொற்களே அதிகம்.)

எடுத்துக்காட்டு : நிலம், நீர், நன்னிலம்

2. இலக்கணப்போலி

- இலக்கண நெறிமுறை இல்லையாயினும் இலக்கணமுடையது போல், சான்றோரால் தொன்றுதொட்டு வழங்கிவரும் சொற்கள் சில **இலக்கணப் போலி** எனப்படும்.

எடுத்துக்காட்டு : இல்முன் என்பதை முன்றில் (முற்றம்) என்றும்
நகர்ப்புறம் என்பதை புறநகர் என்றும்
கோவில் என்பதை கோயில் என்றும்
பொதுவில் என்பதை பொதியில் என்றும் வழங்குதல்.

3. மரூஉ

- இலக்கணமுடைய சொற்கள் சில இடையிலே சில எழுத்துகள் கெட்டும், சில எழுத்துத் திரிந்தும் சில எழுத்துத் தோன்றியும் மருவி வழங்கி வருகின்றன. அவை **மரூஉ** எனப்படும்.

எடுத்துக்காட்டு :

இலக்கணமுடையது		**மரூஉ**
அருமருந்தன்ன	-	அருமந்த
வாழ்நாள்	-	வாணாள்
சோழநாடு	-	சோணாடு
பாண்டியநாடு	-	பாண்டிநாடு

(ஆ) தகுதி வழக்கு

- ஒரு பொருளை உணர்த்துவதற்கு உரிய இயல்பான சொல்லாற் சொல்வது தகுதியன்றென்று கருதி, வேறு வார்த்தைகளால் வழங்குவது **தகுதி வழக்கு** ஆகும். இதுவும் மூவகைப்படும். அவையாவன:
  1. இடக்கரடக்கல்
  2. மங்கலம்
  3. குழூஉக்குறி

1. இடக்கரடக்கல்

- நன்மக்களிடத்தே சொல்லத் தகாத சொல்லை (இடக்கரை) மறைத்து வேறு வார்த்தைகளாற் சொல்லுவது **இடக்கரடக்கல்** ஆகும்.

எடுத்துக்காட்டு:

மலங்கழுவி வந்தேன் என்பதைக் கால்கழுவி வந்தேன் என்று கூறுதல்.
மலங்கழித்தல் என்பதைக் கொல்லைக்குப் போதல் என்று கூறுதல்.

2. மங்கலம்

- மங்கலமில்லாத வார்த்தைகளைத் தவிர்த்து மங்கலமாகச் சொல்லுவது **மங்கலம்** ஆகும்.

எடுத்துக்காட்டு:

மங்கலமில்லாதது	**மங்கல வழக்கு**
செத்தார்	துஞ்சினார், காலமானார், இறையடி சேர்ந்தார்
இடுகாடு	நன்காடு
நச்சுப்பாம்பு (நாகம்)	நல்ல பாம்பு

3. குழூஉக்குறி

- ஒரு குழுவினர் யாதாயினும் ஒரு காரணம் பற்றி ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லைத் தவிர்த்து வேறு வார்த்தையால் குறிப்பது **குழூஉக்குறி** ஆகும்.

எடுத்துக்காட்டு : சொல்விளம்பி (வேடர், கள்ளைக் குறிப்பது)
பறி (பொற்கொல்லர், பொன்னைக் குறிப்பது)

III. திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தும் பண்பு

- சொற்கள் (பெயர், வினை) பொதுவாக திணை, பால், எண், இடம் என்பனவற்றை உணர்த்துகின்றன.

(அ) இருதிணை

- உயிருள்ளனவும் உயிரில்லாதனவுமாகிய பொருள்களைக் குறிக்கும் சொற்கள் எல்லாம் உயர்திணை, அ∴றிணை என்னும் இரண்டு தொகுதிகளுள் அடக்கப்படும்.

- திணை என்பது சாதியைக் குறிக்கும். உயர்வாகிய சாதி உயர்திணை. உயர்வல்லாத சாதி (அல் + திணை) அ∴றிணை. பகுத்தறிவின் அடிப்படையிலேயே உயர்திணை, அ∴றிணை என்பன பிரிக்கப்படுகின்றன. பகுத்தறிவுள்ள மக்கள், தேவர், நரகர் ஆகியோரைக் குறிக்கும் சொற்கள் உயர்திணை என்ற தொகுதியுள் அடக்கப்படுவர். விலங்கு, பறவை முதலிய உயிருள்ள பொருள்களையும் நிலம், நீர் முதலிய உயிரற்ற பொருள்களையும் குறிக்கும் சொற்கள் அ∴றிணை என்ற தொகுதியுள் அடக்கப்படும். பிள்ளை, குழந்தை என்பன பகுத்தறிவில்லாத காரணத்தால் அச்சொற்கள் அ∴றிணையில் அடக்கப்படும்.

(ஆ) ஐம்பால்

- திணை என்னும் தொகுதி, பால் என்னும் பகுதிகளைக் கொண்டுள்ளது. பால் எனும் பகுதி, ஆண் - பெண் என்ற பேதத்தையும், ஒருமை - பன்மை என்ற எண் பேதத்தையும் காட்டும் வகையில் வகுக்கப்பட்டுள்ளது.

- உயர்திணையில் மூன்று பால்கள் உள்ளன. ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பன அவையாகும். ஆண்பால் ஆண்களின் ஒருமையைக் குறிப்பதாயும் பெண்பால் பெண்களின் ஒருமையைக் குறிப்பதாயும் அமைந்திருக்கும். பலர்பால் என்பது ஆடவர், காளையர் என்பன போன்ற ஆண் பன்மையையும் மங்கையர் மகளிர் என்பன போன்ற பெண் பன்மையையும் மக்கள், அவர் என்பன போன்ற அவ்விருவர் பன்மையையும் குறித்து நிற்கும்.

- அ∴றிணையில் இரண்டு பால்கள் உள்ளன. ஒன்றன் பால், பலவின் பால் என்பன அவையாகும். அ∴றிணையில் ஆண் - பெண் பேதம் கருத்திற் கொள்ளப்படாமல் எண்ணே அடிப்படையாக அமைகின்றது.

எடுத்துக்காட்டு:

உயர்திணை

1. அவன் / வந்தான் - ஆண்பால்
2. அவள் / வந்தாள் - பெண்பால்
3. அவர் / வந்தார் - பலர்பால் (இக்கால வழக்கில் மரியாதை ஒருமை)

அ∴றிணை

1. அது / வந்தது - ஒன்றன்பால்
2. அவை / வந்தன - பலவின்பால்

தற்கால வழக்கு

- இன்று 'கள்' எனும் விகுதி பெற்று வருவனவே பலர்பாலை உணர்த்துகின்றன.

எடுத்துக்காட்டு: ஆசிரியர்கள்
மாணவர்கள்
தொழிலாளர்கள்

'ஆர்','ர்' எனும் விகுதி 'கள்' பெற்று வருவன இன்று மரியாதையாக ஒருவரைக் குறிப்பதற்குப் பயன்படுகின்றன. அவர்
ஆசிரியர்
அதிபர்
புலவர்

(இ) மூவிடம்

- இருதிணை ஐம்பால் உணர்த்தும் சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்றும் மூவிடங்களுள் ஒன்றை உணர்த்தும்.

- பேசுவோன் தன்னைக் குறிப்பிடும் சொல் தன்மை இடத்தை உணர்த்தும்.

எடுத்துக்காட்டு : நான், நாம்

- பேசுவோர் முன்னிலையில் உள்ளவரைக் குறிப்பிடும் சொல் முன்னிலை இடத்தை உணர்த்தும்.

எடுத்துக்காட்டு : நீ, நீங்கள்

- பேசப்படும் பொருள் படர்க்கை இடமாகும். அதாவது, தன்மை, முன்னிலைச் சொற்கள் தவிர்ந்த ஏனையவை யாவும் படர்க்கை இடத்தை உணர்த்தும்.

எடுத்துக்காட்டு : அவன், அவர்கள்
பறவை, விலங்கு



3.1.3 சொற்பாகுபாடு

- சொற்களை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என நான்காக இலக்கண நூலார் பாகுபடுத்தியுள்ளார். (பொருண்மை பற்றி வந்த பாகுபாடு இலக்கிய வழக்கு)

(அ) இயற்சொல்

- இயல்பாகப் பொருளறியத்தக்க வகையில் வழங்கும் தமிழ்ச் சொற்கள் இயற்சொற்கள் எனப்படும். இலக்கணத்தொழிற்பாட்டின் அடிப்படையில் பெயர், வினை, இடை, உரி என நான்காக வகைப்படுத்தப்படும்.

எடுத்துக்காட்டு :

1. பெயரியற் சொல் - மண், பொன்
2. வினையியற் சொல்- நடந்தான், உண்கிறான் } வேற்றுமை உருபுகள் முதலியன
3. இடையியற் சொல் - ஐ - அவனை
   ஆல் - மண்ணால்
4. உரியியற் சொல் - அழகு, அன்பு
   (அழகு, அன்பு முதலியன பண்பை உணர்த்துமளவில் உரியியற் சொற்கள் ஆகும். அவை வேற்றுமை ஏற்குமிடத்து, பெயர்ச் சொற்கள் ஆகும்.) ‘‘அன்புத் தொல்லை’’ என்னும் தொடரில் ‘‘அன்பு’’ அடையாகப் பண்பை உணர்த்தும் உரியியற் சொல்லாக அமைகின்றது. ‘‘அன்புக்குப் பணிந்தான்’’ என்னும் தொடரில் அன்பு வேற்றுமை உருபேற்ற பெயர்ச் சொல்லாக அமைகின்றது.

(ஆ) திரிசொல்

- செய்யுளிலே மட்டும் வழங்குவனவாயும் இடம்நோக்கிப் பொருள் அறிந்துகொள்ள வேண்டியவையாயும் உள்ள சொற்கள் திரிசொற்கள் எனப்படும். இச்சொற்கள் ஒரு பொருள் குறித்த பல சொற்களாயும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாயும் வழங்கும்.
- திரிசொல்லும் பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகைகளிலும் வரும்.

எடுத்துக்காட்டு :

1. **பெயர்த்திரிசொல்:** மலை எனும் இயற்சொல்லுக்கு வெற்பு, விலங்கல், வரை என்பன செய்யுள் வழக்குச் சொற்கள். இவை ஒரு பொருள் குறித்த பல சொற்கள். ஆழி எனும் செய்யுள் வழக்குச் சொல் கடல், சக்கரம், வட்டம், சில்லு முதலிய பல பொருள்களைக் குறிக்கும். இது பல பொருள் குறித்த ஒரு சொல்.

2. வினைத்திரிசொல்: செப்பினான், கழறினான், கிளந்தான், மொழிந்தான் என்பன சொன்னான் எனும் ஒரு பொருள் குறித்து வழங்கும்.
வரைந்தான் எனும் ஒரு சொல் நீங்கினான், கொண்டான், நிருணயித்தான் எனும் பல பொருள் குறித்து வழங்கும்.

3. இடைத்திரிசொல்: கொல் எனும் இடைச்சொல் செய்யுளிலே ஒலிக்குறிப்பு, ஐயப்பொருள், அசைநிலை எனப் பல பொருள் குறித்து வரும். ஏ, என என்பன எண்ணுப்பொருள் தருவன.

4. உரித்திரிசொல்: கடி எனும் உரிச்சொல் காப்பு, கூர்மை, அச்சம், விளக்கம் எனப் பல பொருள் குறித்து வரும்.
சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் உரிச்சொற்கள் மிகுதிப் பொருளைத் தருவன.

(இ) வடசொல்

- தமிழ் நடைபெற்று, தமிழோடு கலந்து வழங்கும் ஆரிய மொழிச் சொற்களே வடசொற்கள் எனப்படும். வடமொழிச் சொற்கள் இருவகைகளாகத் தமிழிலே கலந்தன.

1. தற்சமம்

- ஒலி மாறுபாடின்றித் தமிழில் வழங்கும் ஆரியச் சொல் தற்சமம் எனப்படும். ஆரிய மொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவான ஒலிகளாலான சொற்கள் இவ்வகையில் அடங்கும்.

எடுத்துக்காட்டு: கமலம், குங்குமம், காரணம், அமலம் முதலியன.

2. தற்பவம்

- தமிழிலே திரிபெய்தி வழங்கும் ஆரியச்சொற்கள் இவ்வகையில் அடங்கும். ஆரிய மொழிக்குச் சிறப்பான எழுத்துக்களையுடைய சொற்கள், தமிழ் ஒலிமரபுக்கு ஏற்றவாறு விகாரம் பெற்று வழங்குமிடத்து, தற்பவம் எனப்படும்.

எடுத்துக்காட்டு: அரசன், அமைச்சன், அரங்கம், ஆசாரம், ஆதி, கணம், சூது, தவம், தூது, நாகரிகம், நாவாய் பாக்கியம், பாவம், மந்திரி

(ஈ) திசைச்சொல்

- ஆரியமல்லாத அயல்மொழிகளிலிருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்கள் இவ்வகையில் அடங்கும். பிற திசைகளிலிருந்து தமிழிற் கலந்த சொற்களாதலால், இவை திசைச் சொற்கள் எனப்படும்.

1. கிரேக்க மொழிச்சொற்கள்:
ஓரை (நேரம்), கன்னல் (கடிகாரம்), சுருங்கை, யவனர் முதலியன.

2. அரபு மொழிச் சொற்கள்:
இமாம் (இஸ்லாமிய சமயத் தலைவர்) இலாகா, தகவல், வசூல் முதலியன.

3. பாரசீக மொழிச் சொற்கள்:
சிப்பந்தி, சுமார், துப்பாக்கி, சால்வை முதலியன.

4. **உருது மொழிச் சொற்கள்:**
அசல், அத்தர், அண்டா, ஆசாமி, இறாத்தல், இனாம், ஊதுவத்தி, கசாப்பு, கெடுபிடி, கப்பி, காலி, குத்தகை, சந்தா, சராசரி, சாமான்.

5. **தெலுங்கு மொழிச் சொற்கள்:**
இடாப்பு, இரவிக்கை, இராணுவம், இலஞ்சம், ஒயில், கபோதி, சந்தடி, விருது.

6. **கன்னட மொழிச் சொற்கள்:** அட்டிகை, சமாளித்தல், சொத்து.

7. **மலையாள மொழிச் சொற்கள்:** கொச்சி, தளவாடம்

8. **மராத்தி மொழிச் சொற்கள்:**
அட்டவணை, அபாண்டம், கைலாகு, குண்டான், சாம்பார்.

9. **போர்த்துக்கேய மொழிச் சொற்கள்:**
அலமாரி, அலவாங்கு, அன்னாசி, கடுதாசி, கதிரை, கோப்பை.

10. **ஒல்லாந்த மொழிச் சொற்கள்:**உலாந்தா, சாக்கு, துட்டு, தோம்பு.

11. **பிரெஞ்சு மொழிச் சொற்கள்:** குசினி, துருப்பு, பட்டாளம், லாந்தர்.

12. **ஆங்கில மொழிச் சொற்கள்:**
கார், பஸ், தொன், கோப்பி, சீமெந்து, சைக்கிள், வங்கி.

13. **சிங்கள மொழிச் சொற்கள்:** தோடை, வத்தாளை, கொறுக்காப்புளி.

தற்கால வழக்கு

- தமிழிலே அன்று முதல் இன்று வரை பல மொழிகளிலிருந்தும் சொற்கள் வந்து கலந்துள்ளன. இவ்வாறு கலந்த பல சொற்கள் அன்றாடப் பேச்சு வழக்கில் மட்டுமன்றி எழுத்து வழக்கிலும் நின்று நிலவுகின்றன.

- தமிழில் வந்து கலந்துள்ள திசைச் சொற்களுள் ஆங்கில மொழியின் செல்வாக்கு பெரும் பங்கு வகிக்கின்றது. ஆட்சியியல், பொருளியல், வணிகவியல், அறிவியல், மருத்துவவியல், பொறியியல், தொழினுட்பவியல், கணினித்துறை என்பன போன்ற புதுப்புதுத் துறைகளிலே தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. இதனால் புதுப்புதுச் சொற்களும் புதுப்புது மொழிமரபுகளும் தமிழிற் புகுந்து வருகின்றன. பல நூற்றுக்கணக்கான ஆங்கிலச் சொற்கள் கலைச் சொற்களாகப் பாடநூல்களிலே பயின்று வருகின்றன. பொதுமக்களுடைய அன்றாடப் பேச்சில் மட்டுமன்றி, இலத்திரனியல் ஊடகங்களான தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளிலும் பல ஆங்கிலச் சொற்கள் இடம்பெற்று வருகின்றன.

எண்ணக்கரு விளக்கப்படம்

சொற்பாகுபாடு

இலக்கிய வழக்கிற் பயிலுஞ் சொற்களைச் சிறப்பு நோக்கி இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் எனப் பண்டை இலக்கணகாரர் நான்காகப் பாகுபடுத்தியுள்ளனர்.



* அழகு, அன்பு முதலியன பண்பை உணர்த்துமளவிலே உரிச்சொற்களாகும். அவை வேற்றுமையேற்குமிடத்துப் பெயர்ச்சொற்களாகும்.

3.2 பெயர்ச்சொல்

3.2.1 பெயர்ச்சொல் என்பதன் விளக்கம்

- பெயர்ச்சொல்லாவது பொறிகட்கும் மனத்துக்கும் விடயமாகிய பொருளை உணர்த்துஞ் சொல்லாகும்.
- இடுகுறியாயும், காரணக்குறியாயும் மரபுமுறையாகவும் புதிதுபுதிதாய் ஆக்கப்பட்டும் பெயர்ச்சொற்கள் பயின்று வருகின்றன.
- பெரும்பாலான பெயர்ச்சொற்கள் காலங்காட்டுவதில்லை.
- வேற்றுமை ஏற்பது பெயர்ச்சொற்களுக்குரிய சிறப்பியல்பு ஆகும்.
- இரு திணைகளிலும் (உயர்திணை, அ.ஃறிணை) ஐம்பாலிலும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்) மூவிடத்திலும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) ஒன்றினை ஏற்பனவாயும் பொதுவாக அமைவனவாயும் பெயர்ச்சொற்கள் பயின்றுவருகின்றன.

3.2.2 பெயர்ச்சொல்லின் வகைகள்

I. பெயரிடப்படும் அடிப்படையிலான வகையீடு

- இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரணவிடுகுறிப்பெயர் எனப் பெயரிடப்படும் அடிப்படையில் பெயர்ச்சொற்களை மூன்று வகைகளுள் அடக்கலாம்.

(அ) இடுகுறிப்பெயர்

- ஒரு காரணங் கருதாது, பொருளை உணர்த்தி நிற்கும் பெயர் **இடுகுறிப்பெயர்** ஆகும்.

எடுத்துக்காட்டு: மரம், மலை

(ஆ) காரணப்பெயர்

- யாதாயினும் ஒரு காரணம் பற்றிப் பொருளை உணர்த்தி நிற்கும் பெயர் **காரணப்பெயர்** ஆகும்.

எடுத்துக்காட்டு: பறவை, அணி

(பறப்பதனால் பறவை எனவும், அணியப்படுவதால் அணி எனவும் வந்தமையால், அவை காரணப் பெயர்கள் ஆகும்.)

(இ) காரண இடுகுறிப் பெயர்

- காரண இடுகுறிப் பெயராவது, காரணங் கருதியபொழுது காரணப் பெயராகவும் அக்காரணங் கருதாதபொழுது இடுகுறிப்பெயராகவும் நின்று பொருளை உணர்த்தும் பெயராகும்.

எடுத்துக்காட்டு: முள்ளி, கறங்கு, நாற்காலி.

(முள்ளி என்பது காரணங் கருதி, முள்ளையுடைய செடிகள், மரங்கள் பலவற்றை உணர்த்துமாயினும் காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய் முள்ளி என்னும் ஒரு செடியையே உணர்த்துகிறது.

கறங்கு என்பது காரணங் கருதியபொழுது, சுழலுதலையுடைய பல பொருள்கள் உணர்த்துமாயினும் காரணங் கருதாதபொழுது காற்றாடி என்னும் ஒரு பொருளையே உணர்த்துகிறது.

நாற்காலி என்பது காரணங் கருதியபொழுது நாலு கால்களை உடைய ஆடு, மாடு, முதலிய பல பொருள்களை உணர்த்துமாயினும் காரணங் கருதாதபொழுது கதிரை என்னும் ஒரு பொருளையே உணர்த்துகிறது.)

- இடுகுறிப் பெயர்கள், காரணப் பெயர்கள் என்பன பொதுப்பெயர், சிறப்புப் பெயர் என இரு வகைப்படும். பொதுப்பெயராவது பல பொருள்களுக்கும் பொதுவாக அமையும் பெயராகும்.

எடுத்துக்காட்டு: மரம் - இடுகுறிப் பொதுப்பெயர்
விலங்கு, பறவை } காரணப் பொதுப்பெயர்

- சிறப்புப் பெயராவது ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாகி வரும் பெயராகும்.

எடுத்துக்காட்டு: ஆல், மா, பலா } இடுகுறிச் சிறப்புப் பெயர்கள்

கரி, காரி } கருமை நிறங்கொண்டவற்றிற்குரிய காரணச் சிறப்புப் பெயர்கள்.
(கரி - யானை; காரி - கரிக்குருவி)

மதிப்பீட்டு வினாக்கள் :

- பின்வரும் சொற்களைத் தனித்தனியே ஆராய்ந்து, அவை இடுகுறிப் பெயர்களா, காரணப் பெயர்களா, காரண இடுகுறிப் பெயர்களா என்று தெளிவாக்குக.

- வானொலி, தொலைக்காட்சி, மின், தொலைபன்னி, கரைசல், சேர்வை, மின்காட்டி, சூழி, தொடை, அளவி, குழாயி, முக்காலி, தேற்றம், நிறுவல், கருதுகோள்.

II. உணர்த்தப்படும் பொருள் அடிப்படையிலான வகையீடு

- பெயர்ச்சொற்களை, அவை உணர்த்தும் பொருள் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

(அ) பொருட்பெயர்

- பொருளை உணர்த்தும் பெயர்கள் பொருட் பெயர்கள் ஆகும்.

எடுத்துக்காட்டு: மக்கள், மாடு, மரம்

(ஆ) இடப்பெயர்

- இடத்தை உணர்த்தும் பெயர்கள் இடப்பெயர்கள் ஆகும்.

எடுத்துக்காட்டு: உலகம், நாடு, ஊர்

(இ) காலப்பெயர்

- காலத்தை உணர்த்தும் பெயர்கள் காலப்பெயர்கள் ஆகும்.

எடுத்துக்காட்டு: யுகம், ஆண்டு, கோடை

(ஈ) சினைப்பெயர்

- ஏதாவது ஓர் உறுப்பை (சினையை) உணர்த்தும் பெயர்கள் சினைப்பெயர்கள் ஆகும்.

எடுத்துக்காட்டு: தலை, கண், கொம்பு, இலை

(உ) குணப்பெயர் / பண்புப்பெயர்

- ஏதாவது பண்பினை (குணத்தினை) உணர்த்தும் பெயர்கள் குணப்பெயர்கள் (பண்புப் பெயர்கள்) ஆகும்.

எடுத்துக்காட்டு: வெண்மை, அழகு, அன்பு, வட்டம் முதலியன.

(ஊ) தொழிற்பெயர்

- தொழிலை உணர்த்தும் பெயர் தொழிற்பெயர் ஆகும். அது வினையடியாகப் பிறந்து, வினை நிகழ்வினை அல்லது நிகழாமையை உணர்த்தும்.

எடுத்துக்காட்டு : உண்ணல், உடுத்தல், உறங்கல் முதலியன.

(எ) வினையாலணையும் பெயர்கள்

- வினையடியாகப் பிறந்து, செயலையும் காலத்தையும் கருத்தையும் உணர்த்தும் பெயர் வினையாலணையும் பெயர் எனப்படும்.

எடுத்துக்காட்டு: விழுந்தவன் எழுந்து ஓடுகிறான். இங்கு 'விழுந்தவன்' என்பது வினையாலணையும் பெயர். இது விழுதல் என்ற செயலையும் இறந்த காலத்தையும் 'அவன்' என்ற கருத்தாவையும் உணர்த்துகின்றது.

- ஓன் / ஓர் விகுதி பெற்றும் வினையாலணையும் பெயர் வரும்.

எடுத்துக்காட்டு: **வந்தோன், வந்தோர்**

- பழந்தமிழில் வினைமுற்றுகள் சிலவேளைகளில் பெயர்த்தன்மைப்பட்டு, (வேற்றுமை உருபுகள் ஏற்க இடமளித்து) பெயர்களாக இயங்குமிடத்து, அவை வினையாலணையும் பெயர்கள் எனப்படும்.

எடுத்துக்காட்டு: **நடந்தானைக்** (நடந்தவனை) கண்டேன்.
பெற்றாரைப் போற்றி வாழ்.
வந்தோரால் இப்பரிசில்கள் தரப்பட்டன.
கடவுளைக் **கண்டவர்** எவரும் இலர்.

III. இட வேறுபாட்டடிப்படையிலான வகையீடு

பெயர்கள் இடவேறுபாட்டடிப்படையில் தன்மைப் பெயர்கள், முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்கள் என மூன்று வகைப்படும்.

பேசுவோன் தன்னைப் பற்றிப் பேசுவது தன்மை இடம், பேசுவோனால் எதிர்முகமாக்கப்பட்டுக் கேட்கும் பொருள் முன்னிலை இடம், பேசப்படும் பொருள் படர்க்கை இடம்.

(அ) தன்மைப் பெயர்கள்

ஒருமை - நான், யான்
பன்மை - நாம், யாம், நாங்கள், யாங்கள்

(ஆ) முன்னிலைப் பெயர்கள்

ஒருமை - நீ
பன்மை - நீர், நீயிர், நீவிர், எல்லீர், நீங்கள்

(இ) படர்க்கைப் பெயர்கள்

தன்மை, முன்னிலைப் பெயர்கள் அல்லாத மற்றைய பெயர்கள் யாவும் படர்க்கைப் பெயர்கள் ஆகும். படர்க்கைப் பெயர்களிலேயே திணை, பாற்பாகுபாடு உள்ளது.

1. ஆண்பாற் பெயர் :

அன், ஆன், மன், மான், ன் என்னும் விகுதிகள் பெற்றுவரும்.

எடுத்துக்காட்டு:
கண்ணன் - 'அன்' விகுதி
ஊரான் - 'ஆன்' விகுதி
வடமன் - 'மன்' விகுதி
கோமான் - 'மான்' விகுதி
பிறன் - 'ன்' விகுதி

2. பெண்பாற் பெயர்

அள், ஆள், இ, ள் என்னும் விகுதிகள் பெற்றுவரும்.

எடுத்துக்காட்டு:	இளையள்	-	'அள்' விகுதி
	இளையாள்	-	'ஆள் விகுதி
	பொன்னி	-	'இ' விகுதி
	பிறள்	-	'ள்' விகுதி

3. பலர்பாற் பெயர்

அர், ஆர், கள், மார், ர் என்னும் விகுதிகள் பெற்றுவரும்.

எடுத்துக்காட்டு:	கவிஞர்	-	'அர்' விகுதி
	ஊரார்	-	'ஆர் விகுதி
	குருக்கள்	-	'கள்' விகுதி
	தேவிமார்	-	'மார்' விகுதி
	பிறர்	-	'ர்' விகுதி

உயர்திணையில் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்று பிரிவுகளே உள்ளன.

ஆண்பால், பெண்பால் என்பனவற்றிற்கான பன்மையை உள்ளடக்கும் வகையில் பலர்பாற் பெயர்கள் அமைந்துள்ளமை பழைய இலக்கண மரபு.

எடுத்துக்காட்டு:	மாணவன்	-	ஆண்பால்
	மாணவி	-	பெண்பால்
	மாணவர்	-	பலர்பால்
	மகன்	-	ஆண்பால்
	மகள்	-	பெண்பால்
	மக்கள்	-	பலர்பால்

4. ஒன்றன்பாற் பெயர்

து என்னும் விகுதி பெற்றுவரும்.

எடுத்துக்காட்டு : அது, பிறிது.

5. பலவின்பாற் பெயர்

வை, அ, கள் என்னும் விகுதிகள் பெற்று வரும்.

எடுத்துக்காட்டு : அவை, பல, மாடுகள்

- அ.ஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டு பிரிவுகளே உள்ளன.
- அ.ஃறிணையில் ஆண், பெண் வேறுபாடு இல்லை. எண் வேறுபாடு (ஒருமை, பன்மை) மட்டுமே உள்ளது.

IV. சிறப்புப் பெயர்களும் பொதுப் பெயர்களும்

சிறப்புப் பெயர்கள்

இப்பெயர்கள் ஏனையவை போல் விகுதி பெறாது உயர்திணையிலும் அ.ஃறிணையிலும் ஆண், பெண் பால்களை உணர்த்தி நிற்கும் பெயர்களாகும். விகுதி பெறாமல் பால் காட்டுவதாலேயே இவை சிறப்புப் பெயர்கள் ஆகின்றன.

(அ) உயர்திணை ஆண்பாற் சிறப்புப் பெயர்கள் :
கோ, வேள், குரிசில், தோன்றல்

(ஆ) உயர்திணை பெண்பாற் சிறப்புப் பெயர்கள் :
மங்கை, மடந்தை, தையல்

(இ) அ.ஃறிணைப் பெண் பெயர் :
பிடி, பிணை, மந்தி

பொதுப் பெயர்கள்

திணை, பால், எண், இடம் என்பனவற்றுக்குப் பொதுவாக அமையும் வகையிற் சில பெயர்ச் சொற்கள் காணப்படுகின்றன. எவ்வெவ் வகைகளில் அப்பெயர்கள் பொதுவாக உள்ளன என்பதைப் பின்வருமாறு நோக்கலாம் :

(அ) இருதிணைப் படர்க்கைப் பொதுப்பெயர் :

தந்தை, தாய், ஆண், பெண், தான், தாம்.

எடுத்துக்காட்டு:	**உயர்திணை**	**அ∴றிணை**
	தந்தை இவன்	தந்தை இவ்வெருது
	தாய் இவள்	தாய் இப்பசு

அவர்களுள் ஒருவர் மட்டுமே ஆண்.
ஆண் குழந்தை பிறந்தது.
உரையாடிய பெண் கோபமுற்றாள்.
பெண் மயில் ஆடியது.
தான் என்னும் படர்க்கைப் பெயர் இரு திணைக்கும் பொதுவாய் ஒருமையில் வரும்.

அவன்தான் கூறினான் -	உயர்திணை ஆண்பால்	இருதிணைக்கும் பொது - ஒருமை
அவள்தான் கூறினாள் -	உயர்திணைப் பெண்பால்	
அதுதான் நிலைமையாகும் -	அ∴றிணை ஒன்றன்பால்	

தாம் என்னும் படர்க்கைப் பெயர் இறுதிணைக்கும் பொதுவாய் பன்மையில் வரும்.

புலவர்தாம் இவ்வாறு கூறினர்-	உயர்திணை பலர்பால்	இருதிணைக்கும் **தாம்** பொது - பன்மை
அவைதாம் இதன் விடைகள் -	அ∴றிணை பலவின்பால்	

(ஆ) இருதிணை மூவிடப் பொதுப்பெயர்

எடுத்துக்காட்டு :

'எல்லாம்' என்னும் சொல் பொதுப்பெயராக அமைவதைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளிற் காண்க.

நாமெல்லாம் முடிவு கூறிவிட்டோம்	-	தன்மை
நீங்களெல்லாம் என்ன முடிவு எடுத்தீர்கள்?	-	முன்னிலை
அவர்களெல்லாம் சென்றுவிட்டனர்	-	உயர்திணைப் படர்க்கை
அவையெல்லாம் முடிந்துபோன கதைகள்	-	அ∴றிணைப் பலவின்பால்

(இ) உயர்திணை ஆண், பெண் இருபாற் பொதுப்பெயர் :

ஒருவர், பேதை, ஊமை முதலியன.

எடுத்துக்காட்டு: ஆடவருள் ஒருவர் பேசினார்
மகளிருள் ஒருவர் பாடினார்
ஊமை ஓடி வந்தான்
ஊமை அழுதாள்

(ஈ) அஃறிணை இருபாற் பொதுப்பெயர் / பால்பகா அஃறிணைப் பெயர்

அஃறிணை ஒன்றன்பாலுக்குரியது என்னும் விகுதியையோ, அஃறிணைப் பலவின்பாலுக்குரிய வை, கள், அ என்னும் விகுதிகளையோ பெறாது வரும் அஃறிணைப் பெயர்கள் ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் பொதுப்பெயர்களாகும். அப்பெயர்கள் கொண்டு முடியும் வினைகளைப் பொறுத்தே அவற்றின் பால் எதுவெனக் கொள்ளப்படும். அவை பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனவும் பெயர்பெறும்.

எடுத்துக்காட்டு: குயில் கூவியது; குயில் கூவின
கண் சிவந்தது; கண் சிவந்தன

தற்கால வழக்கு

- தன்மைப் பெயர்களாக நான், நாம், நாங்கள் என்பனவே இன்று பெருவழக்கில் உள்ளன. யான், யாம், யாங்கள் என்பன அருகியே காணப்படுகின்றன.

- முன்னிலைப் பன்மைப் பெயர்களாக உள்ள நீயிர், நீவிர், எல்லீர் என்பன செய்யுள் வழக்கிலேயே உள்ளன. நீர், நீங்கள் என்பனவே இன்றைய வழக்கில் உள்ளன.

- படர்க்கை ஆண்பாலுக்குரிய விகுதிகளாகக் குறிப்பிடப்பட்ட அன், ஆன், மன், மான், ன் என்பனவற்றுள் இறுதி மூன்றும் இன்றைய வழக்கில் அருகியே காணப்படுகின்றன.

- பலர்பாலுக்குரிய பெயர் விகுதிகள் பெரும்பான்மை 'கள்' விகுதியைப் பெற்று வருகின்றன. பண்டைய இலக்கண நூல்களில் அஃறிணைக்கு உரியதாகக் கூறப்பட்ட ''கள்'' விகுதி, இன்று விகுதி மேல் விகுதியாய் உயர்திணைப் பலர்பாலை உணர்த்தி வருகின்றது. ஒருவரைக் குறிக்குமிடத்திலும் மரியாதைக்காக ''கள்'' விகுதி சேர்க்கப்படுவதுண்டு.

  எடுத்துக்காட்டு :

  ஆசிரியர் → ஆசிரியர்கள்
  அவர் → அவர்கள்
  ஊரார் → ஊரார்கள்
  சிறார் → சிறார்கள்

  பலர்பால் உணர்த்தும் 'ஆர்' விகுதி 'ஓர்' எனத் திரிந்தும் வருவதுண்டு.

  எடுத்துக்காட்டு :

  நல்லார் - நல்லோர்
  இளையார் - இளையோர்

- வினையாலணையும் பெயர்கள் பல இன்று 'ஓர்' எனும் விகுதியைப் பெறுகின்றன.

  எடுத்துக்காட்டு :

  காயமடைந்தோர்
  சித்திபெறாதோர்

- உயர்திணை இருபாற் பொதுப்பெயர்களாக இக்கால வழக்கில் ஏராளமான சொற்கள் பயின்று வருகின்றன.

  எடுத்துக்காட்டு :

  அகதி, அறிவாளி, ஆணையாளர், உலோபி, ஏழை, சனாதிபதி, குற்றவாளி, சட்டத்தரணி, செயலாளர், சோம்பேறி, ஞானி, தைரியசாலி, நீதிபதி, நோயாளி, பிரதிவாதி, புத்திசாலி, புலவர், முதலாளி, மேதை.

3.2.3 பெயர்ச்சொல்லாக்கம்

பெயர்ச்சொற்கள் பல்வேறு முறைகளில் ஆக்கப்படுகின்றன. முக்கியமாக அமையும் முறைகள் வருமாறு :

i. சில பெயர்ச்சொற்கள் பகுதி, விகுதி முதலிய பகுபத உறுப்புகளாகப் பிரிக்க முடியாதவையாக உள்ளன.
எடுத்துக்காட்டு : பொருள், குடை, முதல்

ii. பெயர்ப்பகுதிகள் பல்வேறு விகுதிகளைப் பெற்று வெவ்வேறு பெயர்ச்சொற்களாக அமைந்துள்ளன.

எடுத்துக்காட்டு :
பொன்னன், முடியன், சடையன் (‘அன்’ விகுதி)
யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான் (‘ஆன்’ விகுதி)
பொன்னி, ஊழி (‘இ’ விகுதி)
தலைவர், கலைஞர், மீனவர், ஊரவர், நாட்டவர் (‘அர்’ விகுதி)
நகரத்தார், ஊரார், அடியார், அகத்தார் (‘ஆர்’ விகுதி)
உடையோர், மறையோர் (‘ஓர்’ விகுதி)
தலைமை, முறைமை, நிலைமை (‘மை’ விகுதி)

iii. வினை வடிவங்களிலிருந்து உண்டாகும் பெயர்கள்.

1. சில வினையடிகள் பெயர்ச்சொற்களாகவும் வழங்குகின்றன. இவை முதனிலைத் தொழிற்பெயர்கள் ஆகும்.

எடுத்துக்காட்டு :
பூ, கட்டு, தளிர், முடி, இணை, பணி, எதிர், பிடி, அணை, பொரி, புகழ் முதலியன.

2. முதனிலை திரிந்த தொழிற்பெயர்களும் காணப்படுகின்றன.

(அ) வினையடியின் முதலுயிர் நீளல்

எடுத்துக்காட்டு: பெறு - பேறு
பொரு - போர்
கரு - கார்
விடு - வீடு

(ஆ) வினைப்பகுதியின் ஈற்று உயிர்மெய் இரட்டித்தல்.

எடுத்துக்காட்டு: எழுது - எழுத்து
ஒழுகு - ஒழுக்கு
மாறு - மாற்று
கூடு - கூட்டு
பூசு - பூச்சு

(இ) வினைப்பகுதியின் ஈற்று வல்லின மெய் மெல்லின மெய்யைப் பெறுதல்.

எடுத்துக்காட்டு: பகு - பங்கு

3. வினைப்பகுதிகளுக்குப் பல்வேறு தொழிற்பெயர் விகுதிகளைச் சேர்ப்பதனால் தொழிற் பெயர்கள் ஆக்கப்படுகின்றன.
எடுத்துக்காட்டு : ‘தல்’ விகுதி - கொடுத்தல்
‘அல்’ விகுதி - ஓடல்

4. எதிர்மறைத் தொழிற்பெயர்கள், காலங்காட்டுந் தொழிற்பெயர்கள் என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

நடவாமை செய்யாமை	எதிர்மறைத் தொழிற்பெயர்
கிடைத்தமை கூறியது	இறந்தகாலத் தொழிற்பெயர்
கிடைக்கின்றமை கூறுகின்றது	நிகழ்காலத் தொழிற்பெயர்
நடப்பது வருவன	எதிர்காலத் தொழிற்பெயர்

5. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், எதிர்மறை என்பனவற்றை உணர்த்தும் வினையாலணையும் பெயர்கள் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

இறந்தோர்	-	இறந்த கால வினையாலணையும் பெயர்
வருகின்றவர்கள்	-	நிகழ்கால வினையாலணையும் பெயர்
போவோர்	-	எதிர்கால வினையாலணையும் பெயர்
சமுகமளியாதோர்	-	எதிர்மறை வினையாலணையும் பெயர்

v. இடைச் சொற்களை அடியாகக் கொண்டும் பெயர்ச்சொற்கள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

பிறன், மற்றவன், போன்றான்	-	பிற, மற்று, போல் என்னும் இடைச்சொற்கள் அடியாகப் பிறந்தன.
அவன், இவன்	-	அ, இ என்னும் சுட்டிடை அடியாகப் பிறந்தன.
எவன், யாவன்	-	எ, யா என்னும் வினாவிடைச் சொல் அடியாகப் பிறந்தன.

vi. உரிச்சொற்களை அடியாகக் கொண்டும் பெயர்ச்சொற்கள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

சான்றோன்	-	சால் என்னும் உரிச் சொல்லடியாகப் பிறந்தது.

vii. கூட்டுப்பெயர்கள்

1. பெயர் + பெயர்
   எடுத்துக்காட்டு : கோயில், வாய்க்கால், இடையூறு.

2. மையீற்றுப் பண்புப்பெயர் + பெயர்
   எடுத்துக்காட்டு : வெண்பா, வெற்றிலை

viii. மாற்றுப்பெயர்

ஒரு பெயர்ச்சொல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய பெயர்ச்சொல் மாற்றுப் பெயர் எனப்படும். இது பதிலீட்டுப் பெயர், பிரதியீட்டுப் பெயர் எனவும் அழைக்கப்படும்.

தான், தாம், தன், அவன், யாராவது, எவையேனும், என்னை, உன்னை.

1. கண்ணன் பாடினான். **தான்** இனிப்பாடுவதில்லை எனக் கூறினான்.
2. மாலதி **தன்** புத்தகத்தைத் தேடினாள்.
3. மாணவர்கள், **தாங்கள்** விளையாடப் போவதாகக் கூறினார்கள்.
4. மதி பாடம் படித்தான். ஆனால் அவனுக்கு **அது** விளங்கவில்லை.
5. மாணவர்களுள், **யாராவது** இதற்கு மறுமொழி கூறலாம்.
6. ஐந்து வினாக்கள் தரப்பட்டுள்ளன. **எவையேனும்** இரண்டுக்கு விடை எழுதுக.
7. நான் வீட்டில் இருப்பேன். **என்னைப்** பார்க்க அங்கு வரலாம்.
8. நீ எங்கே போகிறாய்? **உன்னை** எங்கே காணலாம்.

தற்கால வழக்கு

- காரன், காரி என்ற துணைச் சொற்களுடன் கூடிய பல பெயர்ச்சொற்கள் இன்று வழக்கிலுள்ளன.

எடுத்துக்காட்டு :	வேலைக்காரன்	வேலைக்காரி
	வீட்டுக்காரன்	வீட்டுக்காரி
	பணக்காரன்	பணக்காரி
	கீரைக்காரன்	கீரைக்காரி

- சாலி, வான், மான், வந்தர் என்னும் துணைச் சொற்கள் சேர்ந்து பெயர்ச்சொற்கள் வழங்கிவருகின்றன.

எடுத்துக்காட்டு : பொறுமைசாலி, பலசாலி, பாக்கியவான், புத்திமான், தனவந்தர், செல்வந்தர்.

குறிப்பு

- பெயர்ச்சொல்லாக்க முறைகளை விளங்கியதன் பின்னர், ஒவ்வொரு முறையிலும் ஆக்கப்படும் பெயர்களை மாணவர்கள் தனியாகவோ குழுவாகவோ தேடச் செய்யவும், அவற்றைச் செவ்வை பார்க்கவும் ஆவன செய்க.

3.2.4 ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர், அப்பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளிற்குத் தொன்றுதொட்டு வழங்கிவரின், அது ஆகுபெயர் எனப்படும். குறிப்பாற் பொருளுணர்த்துதல் ஆகுபெயரின் முக்கியமான பண்பாகும். ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

1. **பொருளாகுபெயர்** - மல்லிகை சூடினாள்.

இங்கு பொருளின் பெயர் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வருதலால், பொருளாகுபெயர் ஆயிற்று.

2. **இடவாகுபெயர்** - ஊர் அடங்கியது.

ஊர் என்னும் இடப்பெயர் அங்குள்ள மக்களுக்கு ஆகிவருதலால், இது இடவாகுபெயர் ஆகும்.

3. **காலவாகுபெயர்** - கார்த்திகை பூத்தது

இங்கே கார்த்திகை என்னும் காலப்பெயர் அக்காலத்திற் பூக்கும் ஒரு கொடிக்கு ஆவதால் அது காலவாகுபெயர் ஆகும்.

4. **சினையாகுபெயர்** - வெற்றிலை நட்டான்

இங்கே வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் கொடிக்கு ஆவதால், அது சினையாகுபெயர் ஆகும்.

5. குணவாகுபெயர் - வெள்ளை குரைத்தது

இங்கே வெள்ளை என்னும் குணத்தின் (நிறம்) பெயர் அந்நிறம் பொருந்திய நாய்க்கு ஆகிவந்தது.

6. தொழிலாகுபெயர் - பொரியல் உண்டான்

இங்கே பொரியல் என்னும் தொழிற்பெயர் அதனோடு தொடர்புடைய உணவிற்கு ஆவதால், அது தொழிலாகுபெயர் ஆயிற்று.

7. எண்ணலளவையாகுபெயர் - கன்னத்தில் இரண்டு கொடுத்தான்

இங்கே இரண்டு என்னும் எண்ணுப்பெயர் அவ்வளவைக் கொண்ட தாக்குதலுக்கு (அடிக்கு) ஆகி வருதலால் அது எண்ணலளவையாகுபெயர் ஆகும்.

8. எடுத்தலளவையாகுபெயர் - ஒரு கிலோ வாங்கினேன்

இங்கே கிலோ என்னும் எடுத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட பொருளுக்கு ஆகிவந்தது.

9. முகத்தலளவையாகுபெயர் - சோற்றுக்கு ஒரு கொத்துப் போதும்

இங்கே கொத்து என்னும் முகத்தலளவைப்பெயர் அவ்வளவையுடைய தானியத்துக்கு ஆவதால் அது முகத்தலளவையாகுபெயர் ஆகும்.

10. நீட்டலளவை ஆகுபெயர் - எனக்கு மூன்று மீற்றர் போதும்

இங்கே மீற்றர் என்னும் நீட்டலளவைப்பெயர் அவ்வளவையுடைய (பொருளுக்கு) ஆவதால், அது நீட்டலளவை ஆகுபெயர் ஆயிற்று.

11. சொல்லாகுபெயர் - இந்நூலுக்கு உரை செய்தான்.

இங்கே உரை என்னும் சொல்லின் பெயர், அதன் பொருளுக்கு ஆகி வருதலால் அது சொல்லாகுபெயர்.

12. தானியாகுபெயர் - விளக்கு முரிந்தது.

இங்கே விளக்கு என்னும் தானியின் (தானத்தில் உள்ளதன்) பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற்கு ஆதலால், அது தனியாகுபெயர் ஆயிற்று.

13. கருவியாகுபெயர் - திருவாசகம் ஓதினான்.

இங்கே வாசகம் என்னும் கருவிப்பெயர் அதன் காரியமாகிய ஒரு நூலிற்கு ஆகி வந்தது.

14. காரியவாகுபெயர் - அலங்காரம் கற்றான்

இங்கே அலங்காரம் என்னும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்துவதற்குக் கருவியாகிய நூலிற்கு ஆவதாற் காரியவாகுபெயர்.

15. கருத்தாவாகுபெயர் - திருவள்ளுவர் படித்தான்

இங்கே திருவள்ளுவர் எனும் கருத்தாவின் பெயர், அவரால் இயற்றப்பட்ட நூலுக்கு ஆவதால் அது கருத்தாவாகுபெயர்.

16. உவமையாகுபெயர் - காளை வந்தான்

இங்கே காளை என்னும் உவமையின் பெயர் அதனை உவமையாகக் கொண்ட ஆடவனுக்கு ஆதலால் அது உவமையாகுபெயர் ஆயிற்று.


சொல்
பெயர்ச்சொல்
வினைச்சொல்
இடைச்சொல்
உரிச்சொல்
1.
அறுவகைப்பெயர்
பொருட்பெயர்
இடப்பெயர்
காலப்பெயர்
சினைப்பெயர்
குணப்பெயர்
தொழிற்பெயர்
2.
மூவிடப்பெயர்
தன்மைப்பெயர்
முன்னிலைப்பெயர்
படர்க்கைப்பெயர்
3.
இடுகுறிப்பெயர்
காரணப்பெயர்
காரண இடுகுறிப்பெயர்
4.
மாற்றுப்பெயர்
ஆக்கப்பெயர்
கூட்டுப்பெயர்
தொழிற்பெயர்
வினையாலணையும் பெயர்
5
ஆகுபெயர்
பொருளாகு பெயர்
இடவாகு பெயர்
காலவாகு பெயர்
சினையாகு பெயர்
குணவாகு பெயர்
தொழிலாகு பெயர்
எண்ணலளவை ஆகுபெயர்
எழுத்தலளவை ஆகுபெயர்
முகத்தலளவை ஆகுபெயர்
நீட்டலளவை ஆகுபெயர்
சொல்லாகு பெயர்
தானியாகு பெயர்
கருவியாகு பெயர்
காரியவாகு பெயர்
கருத்தாவாகு பெயர்
உவமையாகு பெயர்

4.2.5 வேற்றுமை

4.2.5.1 வேற்றுமை என்பதன் விளக்கம்

பெயர்ச் சொல்லுக்குரிய சிறப்புப் பண்பு வேற்றுமை ஏற்பதாகும். சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் உணர்த்தும்போது பெயர்ச்சொற்கள் வாக்கியங்களில் தம் இலக்கணத் தொழிற்பாட்டில் வேறுபடுகின்றன. இவ்வாறு **இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுதல்** வேற்றுமை எனப்படும். பெயர்ச்சொல்லின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவதை பெயர்ச்சொல்லின் உருவ வேறுபாடுகள் வெளிப்படுத்தி நிற்கும். இவ்வாறான உருவ வேறுபாடுகளை வேற்றுமை உருபுகள் மூலம் இனங்காணலாம். இலக்கணத் தொழிற்பாடு ஒவ்வொன்றும் பிரதானமாக ஒவ்வொரு பொருளை உணர்த்துவதாக அமையும். அவ்வாறு உணர்த்தப்படும் பொருள் வேற்றுமைப் பொருள் எனப்படும்.

கமலன் என்ற பெயர்ச்சொல் வேற்றுமை ஏற்கும்போது ஏற்படும் இலக்கண ரீதியான மாற்றங்கள் பின்வருமாறு அமையும்.

	வேற்றுமை	**வேற்றுமை உருபு**	**வேற்றுமைப் பொருள்**
1. கமலன் பாடினான்.	1 ஆம் வேற்றுமை	.....	எழுவாய்
2. பாலன் கமலனைக் கண்டான்	2 ஆம் வேற்றுமை	ஐ	செயப்படு பொருள்
3. கமலனால் இக்கவிதை எழுதப்பட்டது.	3 ஆம் வேற்றுமை	ஆல்	கருத்தா
4. கமலனுக்குப் பரிசில் வழங்கப்பட்டது.	4 ஆம் வேற்றுமை	கு	கொடை
5. கமலனிடமிருந்து பாலன் வேறுபட்டவன்.	5 ஆம் வேற்றுமை	இடமிருந்து	ஒப்பு
6. கமலனது ஓவியம் அழகானது.	6 ஆம் வேற்றுமை	அது	உடைமை
7. கமலனில் ஒரு குற்றமும் இல்லை.	7 ஆம் வேற்றுமை	இல்	இடம்
8. கமலனே, இங்கே வா.	8 ஆம் வேற்றுமை	.....	விளி

இவ்வாறு ஒவ்வொரு வேற்றுமைக்கும் தனித்தனி உருபும் பொருளும் உண்டு.

வாக்கியத்தில் வரும் ஒவ்வொரு பெயர்ச்சொல்லும் இத்தகைய இலக்கணத் தொழிற்பாடுகளுள் ஒன்றினைப் புரிவதனாலேதான் வாக்கியத்தின் பொருள் இயைபுபட்டுத் தெளிவாகப் புலப்படுகிறது.

பின்வரும் அட்டவணை ஒவ்வொரு வேற்றுமைக்கும் உரிய உருபு, பொருள், சொல்லுருபு என்பவற்றைக் காட்டுகிறது.

வேற்றுமை	உருபு	பொருள்	உதாரணம்	சொல்லுருபு	உதாரணம்
எழுவாய் வேற்றுமை (1ஆம் வே.)	----	எழுவாய்	மகிழன் வந்தான்		------- -
செயப்படு பொருள் வேற்றுமை (2ஆம் வே.)	ஐ	செயப்படுபொருள் - ஆக்கல் - அழித்தல் - அடைதல் - நீத்தல் - ஒத்தல் - உடைமை	★ வீட்டைக் கட்டினான். ★ கண்ணாடியை உடைத்தான். ★ மாலையில் கொழும்பை அடைந்தான். ★ தபோதனர்கள் நாட்டைத் துறந்தார்கள். ★ அவள் மானை ஒத்தாள். ★ வதனி செல்வத்தை உடையவள்.	-----	-------
கருவி வேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை (3 ஆம் வே.)	ஆல் ஆன் ஓடு ஓடு	கருவி கருத்தா உடனிகழ்ச்சி	தூரிகையால் வரைந்தான் உழவனால் விளைவிக்கப்பட்டது. ஆசிரியரோடு மாணவர்கள் சென்றனர். ஆசிரியரொடு மாணவர்கள் சென்றனர்.	கொண்டு உடன்	மாலதி மலர்கள் கொண்டு மாலை தொடுத்தாள். பாகனுடன் யானை சென்றது.
கொடை வேற்றுமை (4 ஆம் வே.)	கு	கொடை பகை நட்பு தகுதி முறை முதற் காரணம் நிமித்த காரணம .	வறியவருக்கு உணவு கொடுத்தான். கௌரவர்க்குப் பகை பாண்டவர். குமரனுக்கு நண்பன் இன்பன். அரசர்க்குரியது செங்கோன்மை நளனுக்கு மனைவி தமயந்தி தாலிக்குப் பொன் உருக்கினான். விருந்துக்கு அழைத்தான்.	ஆக - உணவிற்காக உழைத்தான் பொருட்டு - கூலியின் பொருட்டு வேலை செய்தான். நிமித்தம் - கூலியின் பொருட்டு வேலை செய்தான்.	
நீங்கல் வேற்றுமை (5 ஆம் வே.)	இன் இல்	நீங்கல் ஒப்பு எல்லை ஏது	பாடசாலையின் நீங்கினான். தேனின் இனிய சொல். இலங்கையின் வடக்கு கடல். கல்வியில் பெரியன் கம்பன்.	நின்று இருந்து நின்றும் இருந்தும் காட்டிலும் பார்க்கிலும் விட	மலையினின்று இறங்கினான். எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. வீட்டினின்றும் புறப்பட்டான். வீட்டிலிருந்தும் புறப்பட்டான். அவனைக்காட்டிலும் இவன் நல்லன். அவனைப் பார்க்கிலும் இவன் சிறியவன். கண்ணனை விட மாலன் உயர்ந்தவன்.

	உருபு	பொருள்	உதாரணம்	சொல்லுருபு	உதாரணம்
உடைமை வேற்றுமை (6 ஆம் வே.)	அது		தற்கிழமை உறுப்பு - மரத்தினது கிளை பண்பு - வானினது நீலம் தொழில் - குழந்தையினது நடை ஒன்றன் கூட்டம் - நெல்லினது குவியல் பலவின் கூட்டம் - வீரர்களது வரிசை ஒன்று திரிந்து ஒன்றாதல் - எள்ளினது எண்ணெய் பொருள் - அருச்சுனனது வில் இடம் - மாணவரது நூலகம் காலம் - முருகனது வேனில்	உடைய	இனியனுடைய ஓவியம். இனியவனுடைய புத்தகம். குமரனுடைய பாடல்.
இட வேற்றுமை (7ஆம் வே)	இல் கண் இடம்	இடம் தற்கிழமை பிறிதின் கிழமை	விண்ணில்உள்ள நட்சத்திரங்கள். மரத்தின்கண் மலர்கள் நிறைந்துள்ளன. தாயினிடம் பேரன்பு கொண்டவள்.	இடம்	அப்பாவிடம் பணம் இருக்கிறது
விளி வேற்றுமை (8ஆம் வே)	.....	விளி	நண்பனே வருக. தம்பீ வா அன்னாய் பாராய். பிள்ளைகாள் கேளீர்.		

வேற்றுமையை இக்கால மொழியியலாளர் பின்வருமாறு பாகுபடுத்துவர்.

வேற்றுமை	உதாரணம்
01. எழுவாய்	**மாலா** பாடினாள்
02. செயப்படுபொருள்	தாய் **மாலாவைத்** தேடினாள்
03. கருவி	வாளால் வெட்டினாள்
04. உடனிலை	மாலா **(தாயுடன்)** சென்றாள் மாலா **(தாயோடு)** சென்றாள் மாலா **(தாயொடு)** சென்றாள்
05. அடைதல்	அவன் **கண்டிக்குச்** சென்றான்
06. புறப்பாடு	அவன் **கொழும்பிலிருந்து** கண்டிக்குச் சென்றான்.
07. ஒப்புமை	**காக்கையில்** கருமையானது நாவற்பழம்
08. உடைமை	**எனது** புத்தகம் **என்னுடைய** வீடு
09. இடம்	**கூட்டில்** வாழும் பறவை
10. விளி	**மகனே,** இங்கு வா.

மதிப்பீட்டு வினாக்கள்

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உருபுகளை இனங்கண்டு அவை எத்தனையாம் வேற்றுமை உருபுகள் என எழுதுக. அவை உணர்த்தும் பொருளையும் எழுதுக.
   i. சிற்பி உளியால் செதுக்கினான்.
   ii. முனிவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்தார்கள்.
   iii. கண்ணின் இமை துடித்தது.
   iv. மாணவருக்கு வேண்டியது நல்லொழுக்கம்.
   v. மகளே, நன்றாய் வாழ்.
   vi. ஊரின் வடக்கே பூங்கா உள்ளது.
   vii. பரதனுடன் சத்துருக்கன் சென்றான்.

2. நான்காம் வேற்றுமை உருபினை எடுத்துக்கூறி அவ்வேற்றுமைக்குரிய பொருளை உதாரணம் தந்து விளக்குக.

3. 5ஆம் வேற்றுமையுருபின் பொருள் என்ன? நீங்கல் பொருளிலும், எல்லைப் பொருளிலும் எவை சொல்லுருபுகளாக வரும்? உதாரணம் கூறுக.

4. 6ஆம் வேற்றுமையினுடைய உருபுகள் யாவை? இவ்வேற்றுமையின் பொருள் என்ன? தற்கிழமைப் பொருள் எத்தனை வகைப்படும்? உதாரணம் தருக.

4.2.5.2 பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது சாரியை பெறுதல்

(அ) சில பெயர்கள் வேற்றுமை உருபேற்கும்போது சாரியை பெற்றே வரும்.

i. `ம்′ என்னும் மெய்யை இறுதியாகக் கொண்ட பெயர்கள் வேற்றுமையுருபு ஏற்கும்போது `அத்து′ என்னும் சாரியை பெற்றுவரும்.

உதாரணம் : (குளம் + ஐ) = குளம் + அத்து + ஐ = குளத்தை எனவும் குளத்தால், குளத்துக்கு எனவும் வரும்.

ஆனால் மூவிடப் பொதுப் பெயரான எல்லாம் என்பது மாத்திரம் `அற்று′ சாரியை பெற்று இறுதியில் முற்றும்மையும் பெற்றுவரும்.

உதாரணம் : (எல்லாம் + ஐ) = எல்லாம் + அற்று + ஐ + உம் எல்லாவற்றையும்.

ii. ஐ ஈற்றுச் சுட்டுப் பெயர்களும் வினாப் பெயர்களும் பண்புப் பெயர்களும் அற்று சாரியை பெற்றுவரும்.

ஆனால் 4 ஆம் வேற்றுமை கு உருபும் 7 ஆம் வேற்றுமையின் `கண்′ உருபும் பெறும்போது அற்று சாரியையுடன் 'இன்' சாரியையும் பெற்று வரும்.

அவை + கு ➞ அவை + அற்று + இன் + கு = அவற்றிற்கு
அவை + கண் ➞ அவை + அற்று + இன் + கண் = அவற்றின்கண்

iii. அகர ஈற்று அஃறிணைப் பெயர்கள் 'அற்று' சாரியை பெற்று வரும்.

உதாரணம்: பல + அற்று + ஐ = பலவற்றை

ஆயினும் 4 ஆம் வேற்றுமையுருபும் 7 ஆம் வேற்றுமையின் `கண்′ உருபும் பெறும்போது `அற்றுச்′ சாரியையோடு இன் சாரியையும் பெற்று வரும்.

உதாரணம்: (பல + கு) ➞ பல + அற்று + இன் + கு = பலவற்றிற்கு
(பல + கண்)➞ பல + அற்று + இன் + கண் = பலவற்றின் கண் எனவும் வரும்.

iv. ல், ள், ர், ண், ன் என்பவற்றை ஈறாகக் கொண்ட பெயர்களோடு 4ஆம் வேற்றுமை உருபு சேரும்போது உகரச் சாரியை பெற்று வரும்.

உதாரணம்: (பல் + கு) ➞ பல் + உ + கு = பல்லுக்கு
(வாள்+ கு) ➞ வாள் + உ + கு = வாளுக்கு
(ஊர் + கு) ➞ ஊர் + உ + கு = ஊருக்கு
(விண்+ கு) ➞ விண் + உ + கு = விண்ணுக்கு
(மான்+ கு) ➞ மான் + உ + கு = மானுக்கு

v. 7 ஆம் வேற்றுமை `கண்′ உருபு ஏற்கும்போது பெயர்கள் `இன்′ சாரியை பெற்று வரும்.

உதாரணம் : வான் + கண் = வான் + இன் + கண் = வானின்கண்
கடல் + கண் = கடல் + இன் + கண் = கடலின்கண்

அது, இது, உது என வரும் சுட்டுப் பெயர்களும் எது எனும் வினாப் பெயரும் 3 ஆம், 4 ஆம், 6 ஆம் வேற்றுமை உருபுகளும் 7 ஆம் வேற்றுமையின் கண் உருபும் ஏற்கும்போது அன் சாரியை பெற்று வரும்.

உதாரணம் : அது + ஆல் = அது + அன் + ஆல் = அதனால்
அது + கு = அது + அன் + கு = அதற்கு
அது + அது = அது + அன் + அது = அதனது
அது + கண் = அது + அன் + கண் = அதன்கண்
எது + ஆல் = எது + அன் + ஆல் = எதனால்

(ஆ) சில பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது சாரியை பெற்றும் பெறாமலும் வரலாம். அச்சாரியைகள் ஒலிநயங் கருதி வருவதால் நீக்கப்படக்கூடியவை.

i. 5 ஆம் வேற்றுமை தவிர்ந்த ஏனைய வேற்றுமை உருபுகள் சேரும்போது பெரும்பாலும் 'இன்' சாரியை பெற்றும் பெறாமலும் வரும்.

உதாரணம் : பறவையை - பறவையினை
கல்லால் - கல்லினால்
புல்லுக்கு - புல்லினுக்கு
சிலவற்றது - சிலவற்றினது
குளத்தில் - குளத்தினில்

ii. அது, இது, உது என வரும் சுட்டுப்பெயர்களும் எது எனும் வினாப்பெயரும் 2 ஆம், 5 ஆம் வேற்றுமை உருபேற்கும்போது 'அன்'' சாரியை பெற்றும் பெறாமலும் வரலாம்.

அதை - அதனை
இதில் - இதனில் (5ஆம் வேற்றுமை)
எதில் - எதனில் (5ஆம் வேற்றுமை)

iii. ஆ (பசு), மா (விலங்கு) கோ (இறைவன்) எனும் பெயர்கள் 4 ஆம் வேற்றுமை தவிர்ந்த வேற்றுமை உருபுகள் சேரும்போது 'ன்' சாரியையேனும் 'இன்' சாரியையேனும் பெற்றும் பெறாமலும் வரும்.

ஆவை – ஆனை – ஆனினை
மாவை – மானை – மானினை
கோவை – கோனை – கோனினை

4 ஆம் வேற்றுமை உருபேற்கும்போது உகரச் சாரியை பெறும். 'இன்' சாரியையோடு உகரச் சாரியை பெறுதலுமுண்டு.

ஆவுக்கு – ஆவினுக்கு
மாவுக்கு – மாவினுக்கு
கோவுக்கு – கோவினுக்கு

மதிப்பீட்டு வினாக்கள்.

1. அவை, இவை, எவை எனும் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது அடையும் மாற்றத்தை விளக்குக.
2. 'ம்' என்னும் மெய்யை இறுதியாகக் கொண்ட பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது அடையும் மாற்றத்தை விபரிக்குக.
3. 'இன்' சாரியை பெற்று வேற்றுமை உருபு ஏற்று வரும் ஐந்து பெயர்களைக் குறிப்பிடுக.
4. ஆறாம் வேற்றுமைப் பொருள் தற்காலத்தில் உணர்த்தப்படும் முறையினை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

4.2.5.3 வேற்றுமை மயக்கம்

வேற்றுமை மயக்கம் இருவகைப்படும். அவையாவன:

i. உருபு மயக்கம் ii. பொருள் மயக்கம்

உருபு மயக்கம்

ஒரு வேற்றுமை உருபு நிற்பதற்குரிய இடத்தில் இன்னொரு வேற்றுமை உருபு நிற்பது உருபு மயக்கம் ஆகும்.

எடுத்துக்காட்டு :

i. காலத்தினால் செய்த உதவி ii. தெருவால் போனான்

(காலத்தில் செய்த உதவி, தெருவில் போனான் என்றே வரவேண்டும். அதாவது 'இல்' உருபு வரவேண்டிய இடத்தில் 'ஆல்' உருபு வந்துள்ளது.)

பொருள் மயக்கம்

ஒரு வேற்றுமை உருபு தனக்குரிய வேற்றுமைப் பொருளையும் அதேவேளை இன்னொரு வேற்றுமையின் பொருளையும் தருவது, பொருள் மயக்கம் ஆகும்.

எடுத்துக்காட்டு :

i. **அரிசியைச் சோறு ஆக்கினான்.**
(இங்கு 'ஆல்' வேற்றுமை உருபு தனக்குரிய கருவிப் பொருளையும் உணர்த்திக் கொண்டு, இரண்டாம் வேற்றுமைக்குரிய ஆக்கற் பொருளையும் உணர்த்துகிறது.)

ii. **தூணிற் சார்ந்தான்**
(இங்கு 'இல்' வேற்றுமை உருபு தனக்குரிய இடப்பொருளையும் உணர்த்திக்கொண்டு, இரண்டாம் வேற்றுமைக்குரிய அடைதற் பொருளையும் உணர்த்துகிறது.)

iii. **தூணைச் சார்ந்தான்**
(இங்கு 'ஐ' வேற்றுமை உருபு தனக்குரிய அடைதற் பொருளையும் உணர்த்திக் கொண்டு ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளையும் உணர்த்துகிறது.)

4.3 வினைச்சொல்

4.3.1 வினைச்சொல் என்பதன் விளக்கம்

- வினைச்சொல் என்பது செயலை உணர்த்துவதாகும். ஒரு பெயர்ச்சொல் எவ்வாறு பொருளை உணர்த்துகின்றதோ, அவ்வாறே வினைச்சொல் அப்பொருளின் புடைப்பெயர்ச்சியை - இடநகர்வை - செயலை உணர்த்துகிறது. வாக்கிய அமைப்பில் வினைச்சொல்லுக்கு முக்கிய இடமுண்டு. வாக்கியம் உணர்த்தும் பொருள் முக்கியமாக வினைச் சொல்லினாலேயே உணர்த்தப்படுகிறது. வினைச்சொற்கள் பெயர்ச்சொற்களைப்போல வெற்றுமை உருபுகளை ஏற்பதில்லை. வினைச்சொற்களின் முக்கிய இயல்பு காலத்தை உணர்த்துவதாகும்.

I. முற்றுவினை / வினைமுற்று

பகுதி, இடைநிலை, விகுதி ஆகிய உறுப்புக்களைக் கொண்டதாய் ஒரு கருத்தை முடிக்கும் சொல்லாய் அமைவது **முற்றுவினை** ஆகும்.

II. எச்சவினை

சில சந்தர்ப்பங்களில் பகுதியுடன் எச்ச விகுதி சேர்ந்தும் எச்சவினை அமையும். எனவே இவ்வெச்சங்கள் பாலை உணர்த்துவதில்லை. இச்சொற்கள் வினைமுற்றுக்கள் போலத் தனித்தியங்காமல் வேறொரு பெயர்ச்சொல்லுடனோ வினைச்சொல்லுடனோ சேர்ந்து பொருள் தருகின்றன.

எடுத்துக்காட்டு :

வந்தான்	- உயர்திணை ஆண்பால்		
வந்தாள்	- உயர்திணை பெண்பால்		
வந்தார்	- உயர்திணை பலர்பால்		வினைமுற்று
வந்தது	- உயர்திணை ஒன்றன்பால்		
வந்தன	- அ.ஃறிணை பலவின்பால்		

வந்த
வந்து } எச்சம்

எச்சங்கள் எவற்றைக் கொண்டு முடிகின்றனவோ அவற்றின் அடிப்படையில் இரண்டு வகைப்படும். அவையாவன:

1. பெயரெச்சம் 2. வினையெச்சம்

1. பெயரெச்சம்

பெயர்ச்சொற்களைக் கொண்டு முடிகின்ற எச்சம் **பெயரெச்சம்** ஆகும்.

எடுத்துக்காட்டு:

(படித்த 'அ' விகுதி) படித்த மாணவன்
படித்த பாடம்

(குடித்த 'உம்' விகுதி) குடிக்கும் குழந்தை
குடிக்கும் பால்

2. வினையெச்சம்

வினைச்சொல்லைக் கொண்டு முடிகின்ற எச்சம் **வினையெச்சம்** ஆகும்.

எடுத்துக்காட்டு :

சிரித்து	-	மகிழ்ந்தான்	'உ' விகுதி
	-	வாழ்வோம்	
ஓடி	-	விழுந்தான்	'இ' விகுதி
	-	முடிந்தது	
போய்	-	உறங்கினர்	'ய்' விகுதி
	-	திரும்பினான்	
போக	-	நினைத்தான்	'அ' விகுதி
	-	யோசிக்கிறான்	
தந்தால்	-	கொடுப்பேன்	'ஆல்' விகுதி
	-	வருவேன்	

மதிப்பீட்டு வினாக்கள்

I. அ.பின்வரும் செய்யுளில் தடித்த எழுத்திலுள்ள எச்சங்கள் பெயரெச்சங்களா, வினையெச்சங்களா என இனங்காணச் செய்க.

ஆ. அவ்வெச்சங்களின் விகுதிகள் எவையென எடுத்துக் கூறச் செய்க.

உரைத்த கூனியை உவந்தனன். உயிர் உறத் **தழுவி,**
நிரைத்த மா மணி ஆரமும் நிதியமும் **நீட்டி,**
இரைத்த வேலை சூழ் உலகம் என் மகற்கு ஈந்தாய்,
தரைக்கு நாயகன் தாய் இனி நீ எனத் தணியா.

II. அ. பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து அதிலே தடித்த எழுத்திலுள்ள எச்சங்கள் பெயரெச்சங்களா, வினையெச்சங்களா என இனங்காணச் செய்க.

ஆ. அவ்வெச்சங்களில் காணப்படும் விகுதிகள் எவையென எடுத்துக் கூறச்செய்க.

1. முன்னே **காட்டிய** நூல்களைவிட மேல்வரும் மருத்துவ நூல்களும் கிறீன் இடாக்குத்தராலும் அவர் மாணவராலும் **மொழிபெயர்த்து** வெளியிடப்பட்டன.

2. யாம் பண்டு மணல் **நிறைந்த** தெருவில் சிற்றில் புனைந்தும் சிறு சோறட்டும் **விளையாடுங்கால்,** அவற்றைக் காலால் சிதைத்தும், யாங் கூந்தலிற் **புனைந்த** பந்தை எடுத்துக் கொண்டோடியும் மனம் நோவத்தக்க **அளவிறந்த** குறும்புகளைச் **செய்யும்** அந்தச் சிறுவனாகிய பட்டியை நீ அறிவாயன்றே.

3. **போகச்** சொன்னவனைப் பார்த்தான்.

4.3.2 தெரிநிலைவினையும் குறிப்புவினையும்

- வினைச்சொல்லில் காலம் காட்டும் உறுப்பு ஒன்று இடம்பெற்றிருக்குமானால் அது வெளிப்படையாகவே காலம் காட்டும். அவ்வாறு வெளிப்படையாகக் காலம் காட்டும் வினைகள் தெரிநிலை வினைகள் எனப்படும்.

- வினைச்சொல்லில் காலம் காட்டும் உறுப்பு ஒன்று இடம்பெறாதிருப்பின் அது வாக்கியத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பொறுத்தே காலத்தைக் காட்டும். அவ்வாறு வெளிப்படையாகக் காலத்தைக் காட்டாது குறிப்பாகக் காட்டுவது குறிப்புவினை எனப்படும்.
  எடுத்துக்காட்டு :

  1. குமரன் பழத்தை **உண்டான்.**
     உண்டான் : உண் + ட் + ஆன் (ட் - இறந்தகால இடைநிலை)
  2. மாலதி கைவினைப் பொருள்களைச் **செய்கின்றாள்.**
     செய்கின்றாள் : செய் + கின்று + ஆள் (கின்று - நிகழ் கால இடைநிலை)
  3. நிசாம் கதைப்புத்தகங்களை ஈடுபாட்டுடன் **படிப்பான்.**
     படிப்பான் : படி + ப் + ஆன் (ப் - எதிர்கால இடைநிலை)
  4. அவன் சமையல் வேலையில் **சமர்த்தன்.** (குறிப்பு வினை)
  5. கம்பன் கல்வியிற் **பெரியன்.** (குறிப்பு வினை)

தெரிநிலை வினைகள் இடைநிலைகளால் மட்டுமன்றிச் சிலவேளைகளில் பகுதி இரட்டித்தும் சிலவேளைகளில் விகுதிகளைக் கொண்டும் காலத்தை உணர்த்தும்.

சமர்த்தன், பெரியன் என வந்துள்ள வினைச் சொற்கள், தெரிநிலைவினைகள் போல வெளிப்படையாகக் காலத்தைக் காட்டாமல், காலத்தை உய்த்து உணர வைக்கின்றன.

முன்பு **சமர்த்தனாய்** இருந்தான்.
இப்போது **சமர்த்தனாய்** இருக்கின்றான்.
இனி **சமர்த்தனாய்** இருப்பான்.

எனக் குறிப்பாகக் காலத்தை உணர்த்தி நிற்கின்றன. இதனால் இவை குறிப்புவினை முற்றுக்களாகும்.

குறிப்புவினைகள் பெரும்பாலும் பெயரடிகளைக் கொண்டு ஆக்கப்படுகின்றன. சிலவேளைகளில் சுட்டு, வினா முதலிய இடைச்சொல்லடியாகவும் பிறக்கின்றன.
எடுத்துக்காட்டு:

1. அயோத்தியை ஆண்ட இராமன் குடிமக்களுக்கு **இனியன்.**
2. விமலாவுக்கு கமலா **உறவினள்.**
3. இராமன், கிருஷ்ணன் ஆகிய இருவரும் **கரியர்.**
4. கடுகு சிறிதானாலும் காரம் **பெரிது.**
5. மரபிலக்கியங்கள் வாசிப்பதற்குச் **சிறந்தன.**
6. குளத்தில் நீந்தும் அன்னங்கள் **அழகானவை.**
   (இங்கு குறிப்பு வினை பெயரடியாகப் பிறந்தது.)

1. அன்னம் பாலை நீரிலிருந்து பிரித்து உண்ணக்கூடியது. நன் மாணாக்கர் நிலையும் **அத்தன்மையது.** (அ – சுட்டு இடைச்சொல்)

2. பணவீக்கத்தினால் உயர்வர்க்கத்தினரின் பொருளாதார நிலை பாதிப்புற்றதாயின் ஏழை எளியவர்களின் நிலை **எத்தன்மையது.** (எ – வினா இடைச்சொல்)

- தெரிநிலைவினைமுற்றுக்களில் பால் காட்டும் விகுதிகள் இருப்பதுபோலவே குறிப்புவினை முற்றுக்களிலும் பால் காட்டும் விகுதிகள் இடம்பெறுகின்றன.

- இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவான குறிப்பு வினைகளும் தமிழில் பயின்று வருகின்றன.

  வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று வினைக்குறிப்புமுற்றுச் சொற்களும் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகி வரும்.
  எடுத்துக்காட்டு:

அவன்	நான்	நீ	வேறு இல்லை உண்டு யார்
அவள்	யான்	நீர் / நீங்கள்	
அவர்கள்	நாம் / நாங்கள்		
அது	யாம்		
அவை			

(யார் என்பது 'ஆர்' என விகாரப்பட்டும் வரும்.)

- முற்று, எச்சம் என்ற பாகுபாடு தெரிநிலைவினை, குறிப்புவினை என்ற இரண்டு வகைகளுக்கும் உண்டு.

  எடுத்துக்காட்டு:

	முற்று	**எச்சம்**
தெரிநிலை வினை	பார்த்தேன் ஓடுகின்றன	பார்த்த, பார்க்கின்ற, பார்க்கும் பார்த்து, பார்க்க, பார்த்தால் ஓடிய, ஓடுகின்ற, ஓடும் ஓடி, ஓட, ஓடினால்
குறிப்பு வினை	கரியன் தீது (தீயது)	கரிய தீய

- தற்கால வழக்கில் குறிப்புவினைகள் அருகியே காணப்படுகின்றன.

தற்காலத்தில் 'அல்ல' என்பதும் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவான குறிப்பு வினைமுற்றாகப் பயன்படுகிறது.

எடுத்துக்காட்டு:

நான் அவனுக்குப் பகைவன் அல்ல.
நாம் அவருக்குப் பகைவர்கள் அல்ல.
நீ அவருக்குப் பகைவன் அல்ல.
நீங்கள் அவருக்குப் பகைவர்கள் அல்ல.
அவன் நமக்கு எதிரி அல்ல.
அவள் நமக்கு எதிரி அல்ல.
அவர்கள் நமக்குப் பகைவர்கள் அல்ல.
அது சரியல்ல.
அவை சரியல்ல.

4.3.3. உடன்பாட்டு வினையும் எதிர்மறை வினையும்

வினை (செயல்) நிகழ்வினை உணர்த்தும் வினைகள் உடன்பாட்டு வினைகள் எனவும், வினை (செயல்) நிகழாமையை உணர்த்தும் வினைகள் எதிர்மறை வினைகள் எனவும் அழைக்கப்படும். எல்லா வினைகளுமே உடன்பாடாகவும் அமையும். எதிர்மறையாகவும் அமையும். உடன்பாட்டு வினையோடு எதிர்மறையுணர்த்தும் அல், இல், ஆ ஆகிய எதிர்மறை இடைநிலைகள் சேர, எதிர்மறைவினை உண்டாகிறது.

எடுத்துக்காட்டு :-

உடன்பாடு	எதிர்மறை
உண்க - உண் + க செய்க - செய் + க	உண்ணற்க - உண் + அல் + க செய்யற்க - செய் + அல் + க
பார்த்தான் - பார் + த் + த் + ஆன்	பார்த்திலன் - பார் + த் + த் + இல் + அன் (இங்கு 'த்' எனும் இறந்தகால இடைநிலையுடன் இல் என்ற எதிர்மறை இடைநிலை சேர்ந்து வந்துள்ளது.)
பிரிந்தான் - பிரி + த்(ந்) + த் + ஆன்	பிரிந்திலன் - பிரி + த்(ந்) + த் + இல் + அன் (இங்கு 'த்' எனும் இறந்தகால இடைநிலையுடன் இல் என்ற எதிர்மறை இடைநிலை சேர்ந்து வந்துள்ளது.)

தற்கால வழக்கு

1. தற்கால மொழிவழக்கில் அல், இல் என்றும் எதிர்மறை இடைநிலைகள் அருகிக் காணப்படுகின்றன. 'ஆ' என்னும் எதிர்மறை இடைநிலை பெருவழக்கில் உள்ளது.

   எடுத்துக்காட்டு :-

   வந்தார் - வாரார்
   தந்தான் - தரான்
   போவான் - போகான்
   சிரிப்பான் - சிரியான்

2. 'இல்லை' என்னும் எதிர்மறை முற்று சேர்ந்து எதிர்மறைகள் ஆக்கப்படுகின்றன.

   எடுத்துக்காட்டு :-

   படித்தனர்
படிக்கின்றனர் } - படிக்கவில்லை

   பசிக்கிறது - பசிக்கவில்லை
   நடந்தது - நடக்கவில்லை

   ஓடியது
ஓடினர் } - ஓடவில்லை

3. ‘மாட்டு’ என்னும் துணைவினை சேர்த்து எதிர்மறைகள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

வெல்லுவான்	-	வெல்லமாட்டான்
போவேன்	-	போகமாட்டேன்
செய்வாய்	-	செய்யமாட்டாய்

4. ஏவல் வினைகளில் ஒருமையில் ‘ஆ’ என்னும் எதிர்மறை இடைநிலையுடன் ஏகாரப் பின்னொட்டு சேர்ந்து எதிர்மறைகள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

நீ கவிதையை **வாசி**	-	உடன்பாடு
நீ தவறானவற்றை **வாசியாதே**	-	எதிர்மறை
நீ நல்ல விடயங்களைப் **பார்**	-	உடன்பாடு
நீ தீய விடயங்களைப் **பாராதே**	-	எதிர்மறை

5. ஏவல் வினைகளில் பன்மையில் ‘ஆ’ என்னும் எதிர்மறை இடைநிலையுடன் பல்வேறு விகாரங்களுடன் எதிர்மறைகள் ஆக்கப்படுவதுண்டு.

எடுத்துக்காட்டு :

இருங்கள்	-	இருக்காதீர்
	-	இராதீர்
	-	இருக்காதீர்கள்
	-	இராதீர்கள்
படியுங்கள்	-	படியாதீர்
	-	படிக்காதீர்
	-	படியாதீர்கள்
	-	படிக்காதீர்கள்

6. ஏவல், வியங்கோள் வினைகளுடன் ‘வேண்டாம்’ என்கின்ற எதிர்மறைத் துணைவினை சேரந்து எதிர்மறை வினைகள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

படி
படியுங்கள் } படிக்கவேண்டாம்
படிக்கவும்

நில்
நில்லுங்கள்
நிற்க } நிற்க வேண்டாம்
நிற்கவும்

7. தற்கால வழக்கிலும் எச்சங்கள் உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் இடம்பெறுவதுண்டு.

எடுத்துக்காட்டு :

சூரியன் **எழுந்த** பொழுது இருள் கரைந்தது.
நிலா **எழாத** வேளையில் இருள் கவியும்.

அவள் பணத்தை **எடாது** போனாள்.
அவள் பணத்தைக் **கொடுக்காமற்** போனாள்.

8. இன்று பல்வேறு வடிவங்களில் எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

எடுத்துக்காட்டு :

சிரியாமல்	-	சிரி + (ய்) + ஆ + மல்
சிரியாது	-	சிரி + (ய்) + ஆ + து
சிரிக்காமல்	-	சிரி + (க்) + ஆ + மல்
சிரிக்காது	-	சிரி + (க்) + ஆ + து

4.3.4. செயப்படுபொருள் குன்றியவினையும் செயப்படுபொருள் குன்றாவினையும்

தமிழிலுள்ள எல்லா வினைகளும் செயப்படுபொருளுடன் இயங்குவதில்லை. சில வாக்கியங்களில் வரும் வினைகள் செயப்படுபொருள் உடையவை. சில செயப்படுபொருள் இல்லாதவை.

எடுத்துக்காட்டு :

தொகுதி I

மாணவர்கள் பாடம் **படி**க்கின்றனர். (படி)
உழவன் வயலை **உழு**தான். (உழு)
மாணவ மன்றத்தினர் நாடகம் **நடி**த்தனர். (நடி)
கிளி பழத்தை **உண்**டது. (உண்)

தொகுதி II

கமலா கதை **படி**க்கின்றாள். (படி)
வசந்தன் நிலத்தை **உழு**தான். (உழு)
சிறுவர் தாம் கற்ற கதையை **நடி**த்தனர். (நடி)
ஏழைக்கிழவி பழஞ்சோறு **உண்**டாள். (உண்)

தொகுதி III

மாணவர்கள் கவனமாகப் **படி**த்தனர். (படி)
வசந்தன் மாடுகள் கொண்டு **உழு**தான். (உழு)
மாணவர்கள் சிறப்பாக **நடி**த்தனர். (நடி)
குழந்தை சுவைத்து **உண்**டது. (உண்)

மூன்று தொகுதிகளிலும் படி, உழு, நடி, உண் என்னும் வினைகளைக் கொண்ட வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன.

மூன்றாவது தொகுதியில் செயப்படுபொருள் இடம்பெறவில்லை. ஆயினும் அவ்வாக்கியங்களில் செயப்படுபொருள்கள் மறைந்து நிற்கின்றன.

இதனால் செயப்படுபொருள்கள் வாக்கியங்களில் இடம்பெற்றாலும் இடம்பெறாவிட்டாலும் படி, உழு, நடி, உண் என்னும் வினைகள் செயப்படுபொருள் கொண்ட வினைகள் ஆகும். இவை செயப்படுபொருள் குன்றா வினைகள் எனப்படும்.
எல்லா வினைகளும் செயப்படுபொருளுடன் இயங்குவதில்லை.

தொகுதி IV

எடுத்துக்காட்டு :

மரதன் ஓட்டப்பந்தயத்தில் பல மாணவர்கள் **ஓடி**னார்கள். (ஓடு)
எட்டாம் வகுப்பு மாணவர்கள் கல்விச் சுற்றுலாச் **சென்**றனர். (செல்)
வகுப்பு மாணவர்கள் அனைவரும் கொல் என்று **சிரி**த்தனர். (சிரி)
சங்கீதக் கச்சேரி கேட்பதற்கு எல்லோரும் **வந்**தனர். (வா)
குறித்த நேரத்திற்குச் சமூகமளிப்பதற்காக விரைவாக **நட**ந்தனர். (நட)

தொகுதி IV இல் தரப்பட்ட வாக்கியங்கள் செயப்படுபொருள்களை அவாவி நிற்பன அல்ல. இவ்வினைகள் **செயப்படுபொருள்கள் குன்றிய வினைகள்** எனப்படும்.

4.3.5 தன்வினையும் பிறவினையும்

வினையடியால் உணர்த்தப்படும் செயலைத் தானே செய்வது **தன்வினை** எனப்படும். ஒரு வினையின் பயன் பிறரை அல்லது பிறிதொன்றைச் சேருமாயின் அது **பிறவினை** எனப்படும். அதாவது வினை நிகழ்த்துபவன் தானே அவ்வினையின் பயனை அடையாமல் பிறிதொருவர் அல்லது பிறிதொன்று அப்பயனை அடைதல் பிறவினை எனப்படும்.

I. வி, பி என்னும் விகுதிகள் பெற்று வரும் வினைகள் பிறவினைகளாகுமென இலக்கண நூல்கள் கூறும்.

எடுத்துக்காட்டு :

1. நான் கம்பராமாயணம் படித்தேன். (படி) - தன்வினை
   மாணவர்களுக்கு பாடம் படிப்பித்தேன். (படிப்பி) - பிறவினை

2. கடினமான கணக்கை இலகுவாகச் செய்தாய். (செய்) - தன்வினை
   மாணவர்களைக் கொண்டு ஒப்படைகளைச் செய்வியுங்கள் (செய்வி) – பிறவினை

3. அவள் காலால் நடந்தாள். (நட) - தன்வினை
   பிள்ளையை மெல்ல மெல்ல நடப்பித்தனர். (நடப்பி) - பிறவினை

II. சிலவேளைகளில் வி, பி ஆகிய இரண்டு விகுதிகளும் சேர்ந்து பிறவினைகளாக அமைவதுண்டு.

எடுத்துக்காட்டு :

எல்லா உடற்பயிற்சிகளையும் **செய்விப்பி** என்று ஆசிரியர் வகுப்புத்தலைவனிடம் கூறினார். (செய்விப்பி) - பிறவினை

III. சில இடங்களில் வினையடிகளிலுள்ள ஈற்றுயிர் மெய்யெழுத்திலுள்ள மெய் இரட்டிப்பதன் மூலம் தன்வினைகள் பிறவினைகளாகின்றன.

1. கமலா நடனம் ஆடினாள். (ஆடு) - தன்வினை
   கமலா பம்பரம் ஆட்டினாள். (ஆட்டு) - பிறவினை

2. நிலத்தில் நீர் ஊறியது. (ஊறு)
   மரத்துக்கு நீரை ஊற்றினான். (ஊற்று)

3. மழையின்றிப் பயிர் வடியது. (வாடு) - தன்வினை
   வெட்கமும் துக்கமும் விமலாவை வாட்டின. (வாட்டு) - பிறவினை

4. பிள்ளைப்பாசத்தினால் தாய் உருகினாள். (உருகு) - தன்வினை
   பட்டறையில் தொழிலாளி இரும்பை உருக்கினான். (உருக்கு) - பிறவினை

IV. வினையடிகளில் உள்ள மெல்லொற்று (மெல்லின மெய்கள்) வல்லொற்றாகி (வல்லின மெய்கள்) பிறவினைகளாவதும் உண்டு.

1. தன் தவறை உணர்ந்து அவன் மனம் வருந்தினான். (வருந்து) - தன்வினை
   சர்வாதிகாரி குடிமக்களை வருத்தினான். (வருத்து) - பிறவினை

2. அவர்கள் வந்தவுடனேயே வீடு திரும்பினார்கள். (திரும்பு) - தன்வினை
   கொள்ளையர் வழிபோக்கர்களை திசை திருப்பினார்கள். (திருப்பு) - பிறவினை

3. மேசையின் நீளத்திற்கு பலகையின் நீளம் பொருந்தியது. (பொருந்து) - தன்வினை
   பிள்ளை விளையாட்டுத் துண்டங்களைச் சரியாகப் பொருத்தியது.
   (பொருத்து) - பிறவினை

V. கு, சு, டு, து, பு, று என்பன சில தன்வினையடிகளுடன் சேரும்போது பிறவினைகள் ஆகின்றன.

1. இராமனோடு சீதை காட்டுக்குப் போனாள். (போ) - தன்வினை
   கைகேயி இராம இலட்சுமணரை காட்டுக்குப் போக்கினாள். (போக்கு) - பிறவினை

2. வாய்க்காலில் தண்ணீர் வேகமாகப் பாய்கிறது. (பாய்) - தன்வினை
   வாடிய பயிர்களுக்கு தோட்டக்காரன் நீர் பாய்ச்சினான். (பாய்ச்சு) - பிறவினை

3. கடற்கரையில் உரல் உருளுகிறது. (உருள்) - தன்வினை
   வீதி அமைப்போர் உருளையை உருட்டினர். (உருட்டு) - பிறவினை

4. புத்தாடை அணிந்தபிள்ளை ஊஞ்சலில் இருந்தது. (இரு) - தன்வினை
   நோய்வாய்ப்பட்டிருந்த தாயை குமணன் கட்டிலில் இருத்தினான்.
   (இருத்து) – பிறவினை

5. அதிகாலை ஐந்து மணிக்கு அவன் நித்திரை விட்டெழுந்தான். (எழு) - தன்வினை
   பாரிய சத்தம் அனைவரையும் எழுப்பியது. (எழுப்பு) - பிறவினை

6. மாணவர்கள் மொழியை ஆர்வமாகப் பயின்றனர். (பயில்) - தன்வினை
   செயலமர்வின்போது வளவாளர்கள் சிறப்பாகப் பயிற்றினர். (பயிற்று) - பிறவினை

VI. சில தொழிற்பெயரெச்சங்களும் ஆட்டு, ஊட்டு என்னும் பின்னொட்டுக்களைப் பெற்று பிறவினைகளாவதுமுண்டு.

எடுத்துக்காட்டு :

சிரி ➞ சிரிப்பு ➞ **சிரிப்பூட்டு** - (பிறவினை)
குளி ➞ குளிப்பு ➞ **குளிப்பாட்டு** - (பிறவினை)

VII. ஏலவே பிறவினைப் பகுதிகளாக உள்ளவை சிலவேளைகளில் ‘வி’ விகுதிபெற்றும் பயன்படுத்தப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

ஆடு ➞ ஆட்டு ➞ ஆட்டுவி
தோன்று ➞ தோற்று ➞ தோற்றுவி

VIII. தற்கால வழக்கில் செய், பண்ணு, வை முதலியன சேர்ந்து தன்வினைகள் பிறவினைகளாகின்றன.

எடுத்துக்காட்டு :

பாடு ➞ பாடச்செய்	செய் ➞ பாடச் செய்
உண் ➞ உண்ணப்பண்ணு	பண்ணு ➞ உண்ணப்பண்ணு
படி ➞ படிக்கவை	வை ➞ படிக்கவை

4.3.6 செய்வினையும் செய்பாட்டுவினையும்

செய்வினை

எழுவாய் வேற்றுமையாகவுள்ள பெயர்ச்சொல் ஒரு வாக்கியத்தின் வினைச் சொல்லுக்குரிய கருத்தாவாக அமையுமிடத்து அவ்வாக்கியத்தின் வினை **செய்வினை** எனப்படும். இது **தனிவாக்கியங்களுக்கே** சாலப் பொருந்துவதாகும்.

எடுத்துக்காட்டு :

1. என் அன்னையின் முகத்தில் துன்பமும் இன்பமும் ஒருங்கு **தோன்றின.**
2. விஞ்ஞான சாஸ்திரங்களைத் தமிழில் எழுதும் பணியில் மிசனரிமாரும் இச் செமினரியில் கற்றுத் தேர்ந்த மாணவரும் **இறங்கினர்.**
3. ஆங்கிலக் கல்வியையும் தமிழ்க்கல்வியையும் இக்கல்வி நிலையத்தில் உயர்ந்த முறையில் மாணவருக்குக் **கற்பித்துவந்தனர்.**
4. யான் மெல்ல மெல்லத் தண்ணீர் **வார்க்கத் தொடங்கினேன்.**
5. கிறின் இடாக்குத்தர் மட்டும் இந்நூல்களை மொழிபெயர்க்கும் வேலையில் ஈடபட்டாரென **எண்ணுதல்கூடாது.**

இவை போன்ற வாக்கியங்களை மாணவர்கள் செய்வினை வாக்கியங்கள் என இனங்காண்பதற்கு கையாளக்கூடிய வழிமுறைகள் வருமாறு:

(அ) வாக்கியங்களை வாசித்து அவற்றில் இடம்பெற்ற வினைமுற்றுக்களைக் கண்டறிதல்.

முதலாவது வாக்கியம்	-	தோன்றின
இரண்டாவது வாக்கியம்	-	இறங்கினர்
மூன்றாவது வாக்கியம்	-	கற்பித்துவந்தனர்
நான்காவது வாக்கியம்	-	வார்க்கத் தொடங்கினேன்
ஐந்தாவது வாக்கியம்	-	எண்ணுதல்கூடாது.

(ஆ) வினைமுற்றுக்களைச் சரியாக இனங்கண்டதன் பின்னர் அவ்வினைகளுக்கும் எழுவாய்க்கும் இடையிலான தொடர்பு எத்தகையது எனக் கண்டறிக. (வாக்கியத்தின் வினைமுற்றினால் உணர்த்தப்படும் செயல் அவ்வாக்கிய எழுவாயால் உணர்த்தப்பட்டது என்பதைப் பார்த்தல்.)

வினைமுற்றின் செயலை நிகழ்த்தியவர் எழுவாய்க் கருத்தாவாயின் அவ்வாக்கியம் செய்வினை வாக்கியம் என்ற முடிவுக்கு மாணவர்கள் வருவதற்கு வழிநடத்துதல். (இவ்வழிமுறைகளை மாணவர் குழுக்களாகப் பிரிந்து மேற்கொள்ள ஆவன செய்க.)

செயப்பாட்டுவினை

ஒரு வாக்கியத்தில் வரும் எழுவாயும் அவ்வாக்கியத்தின் வினைமுற்றால் உணர்த்தப்படும் செயலின் கருத்தாவும் வேறுவேறாக அமையின் அவ்வினை **செயப்பாட்டு வினையாகும்.**

எடுத்துக்காட்டு :

1. முதன்முதல் தமிழ்மொழியில் விஞ்ஞானத்துறையில் நூல் யாழ்ப்பாணத்திலேயே எழுதப்பட்டது.
2. இப்புதுச் சொற்கள் யாவும் உடுக்குறியினால் காட்டப்பட்டுள்ளன.
3. ஆங்கில தமிழ் அகராதியொன்று யாழ்ப்பாணத்திலுள்ள நாவலர் அச்சியந்திர சாலையில் பதிக்கப்பட்டது.
4. அரும்புநகை, மொட்டுநகை, போதுநகை, பூநகை என்று பல நகைகள் அந்த நகையுட் காணப்படுகின்றன.
5. கூட்டத்திலிருந்து பிரிந்து வந்த மதயானை சேனைப் பயிர்ச்செய்கையிலீடுபட்ட விவசாயிகளால் கொல்லப்பட்டது.

செய்வினை வாக்கியங்களை இனங்காண்பதற்கு (அ, ஆ) குறிப்பிடப்பட்ட வழிமுறைகள் செயப்பாட்டுவினை வாக்கியங்களை இனங்காண்பதற்கும் பயன்படுத்தப்படலாம்.

வினைமுற்றின் செயலை நிகழ்த்தியவர் வேறாகவும் எழுவாய் வேறாகவும் அமையுமாயின் அவ்வாக்கியம் செயப்பாட்டுவினை வாக்கியம் என்ற முடிவுக்கு மாணவர் வருவதற்கு வழிநடத்துக.

(இவ்வழிமுறைகளை மாணவர் குழுக்களாகப் பிரித்து மேற்கொள்ள ஆவன செய்க.)

4.3.7 ஏவல்வினையும் வியங்கோள்வினையும்

ஏவல் வினை

முன்னிலையிலுள்ளோரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுவதற்கு (உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ) பயன்படும் வினை ஏவல் வினையாகும். இவ் ஏவல் வினைமுற்று ஏவல் ஒருமை, ஏவற்பன்மை என இருவகைப்படும்.

ஏவல் வினைகள் இடைநிலைகளின்றித் தாமே எதிர்காலம் காட்டுவனவாகும்.
இவை உடன்பாட்டுப் பொருளிலும் எதிர்மறைப் பொருளிலும் வரும்.

I. உடன்பாட்டு ஏவல் ஒருமை

1. ஆய், இ, அல், ஏல், ஆல் என்னும் விகுதிகள் பெற்று முன்னிலை உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்று அமையுமெனப் பழந்தமிழ் இலக்கணகாரர் கூறுவர்.
   எடுத்துக்காட்டு :

   i. உண்ணாய்
   ii. உண்ணுதி
   iii. உண்ணல்
   iv. உண்ணேல்
   v. மறால் (மறுக்காதே)
   (இவை பழந்தமிழ் இலக்கியங்கில் காணப்படுவன.)

2. வினையடிகள் பெரும்பாலும் ஏவல் ஒருமை வினைகளாக வருவது இன்றைய மொழிவழக்காகவுள்ளது.

   எடுத்துக்காட்டு : வா, இரு, நட, போ, நடத்து, உருட்டு, புரட்டு, கைவிடு, எடுத்துக்கொள், செய்துகாட்டு முதலியன.

II. எதிர்மறை ஏவல் ஒருமை

வினையடிகளுடன் எதிர்மறை இடைநிலையையும் ‘ஏ’ கார விகுதியையும் பெற்றுவரும்.

எடுத்துக்காட்டு : செய்யாதே
நில்லாதே
போகாதே
கைவிடாதே

III. உடன்பாட்டு ஏவற்பன்மை

வினையடிகளுடன் ஈர், உம், மின் என்னும் விகுதிகள் சேர்ந்து ஏவற்பன்மை வினைகள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு : உண்ணீர்
உண்ணும்
உண்மின்

தற்காலத்தில் ஏவற்பன்மைகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

நடவுங்கள், நில்லுங்கள், வாருங்கள், நடத்துங்கள்.

இவை தன்மையை உணர்த்துவது மட்டுமன்றி மரியாதையை உணர்த்தவும் பயன்படுத்தப்படுகின்றன.

IV. எதிர்மறை ஏவற்பன்மை

வினையடிகளுடன் எதிர்மறை இடைநிலையும் / ஈர் என்னும் முன்னிலைப்பன்மை விகுதியும் 'கள்' விகுதியும் பெற்று இவ்வினைமுற்றுக்கள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

செய்யாதீர்கள்
போகாதீர்கள்
ஓடாதீர்கள்

வியங்கோள் வினை

- வியங்கோள் என்பது மரியாதையைக் கொள்ளுதல் (வியம் - மரியாதை)
- க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள் வியங்கோள் வினை முற்றுக்களாம்.

எடுத்துக்காட்டு :

வெல்க - 'க' விகுதி
வாழிய - 'இய' விகுதி
வாழியர் - 'இயர்' விகுதி
வர - 'அ' விகுதி
ஓம்பல், எனல் - 'அல்' விகுதி

- வியங்கோள் வினைகள் இருதிணை ஐம்பால் மூவிடயங்களுக்கும் பொதுவாகிய ஏவல் வினைகளுமாகும்.

எடுத்துக்காட்டு :

ஐம்பால் - அவன் வளர்க, அவள் வளர்க, அவர்கள் வளர்க, அது வளர்க, அவை வளர்க.

மூவிடம் - நான் செல்க, நீ செல்க, அவர்கள் செல்க.

இருஎண் - நீ பாடுக, நீங்கள் பாடுக.

இருதிணை - அவன் ஆள்க, அவை ஆள்க.

வியங்கோள் வினை பின்வரும் பொருள்களில் உணர்த்தப்படும்.

☞ வாழ்த்துதல் பொருள் : வாழ்க, வளர்க, ஓங்குக.

☞ வைதல் பொருள் : வீழ்க, அழிக, தொலைக.
(வெறுப்பை, எதிர்ப்பை, கோபத்தைத் தெரிவித்தல்.)

☞ விதித்தல் பொருள் : செய்க, தருக, எழுதுக.

☞ வேண்டுதல் பொருள் : அருள்க, கலைக, பொழிக.

எதிர்மறை வியங்கோள் வினை

பகுதிக்கும் வியங்கோள் விகுதிக்கும் இடையில் 'அல்' என்னும் எதிர்மறை இடைநிலை பெற்றுவரும் சந்தர்ப்பங்களில் எதிர்மறை வியங்கோள் பொருள் உணர்த்தப்படுகின்றது.

எடுத்துக்காட்டு :

மறவற்க – மற + அல் + க
உண்ணற்க – உண் + அல் + க

தற்கால வழக்கு

1. இய, இயர், அ, அல் என்னும் விகுதிகள் இன்றைய வழக்கில் இல்லை. 'க' விகுதி மட்டுமே பெருவழக்காக உள்ளது.

2. இன்று 'அட்டும்' என்பதும் வியங்கோள் வினை விகுதியாகப் பயன்படுகிறது.

   மழை பொழியட்டும்
   அறியாமை இருள் அகலட்டும்
   வையகம் செழிக்கட்டும்
   அநியாயக்காரர் ஒழியட்டும்

3. இக்காலத்தில் வியங்கோள் விகுதிகள் பால் இடங்களுள் ஒன்றிற்கு உரியனவாக அமைதலுமுண்டு.
   எடுத்துக்காட்டு :

   - நடக்கக்கடவன்
     நடக்கக்கடவள்
     நடக்கக்கடவர்
   - நடப்பானாக.
     நடப்பாளாக.
     நடப்பாராக.
     நடப்பதாக.
     நடப்பனவாக.

ஏவல் வினைக்கும் வியங்கோள் வினைக்குமிடையிலான வேறுபாடு

ஏவல்வினை	வியங்கோள்வினை
• ஏவல் பொருளில் மட்டும் வரும் • ஒருமை பன்மை வேறுபாடுடையது • முன்னிலையில் மட்டும் வரும்	• வாழ்த்துதல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகிய நான்கு பொருளில் வரும். • ஒருமை, பன்மை வேறுபாடற்றது. • இருதிணை ஐம்பால் மூவிடம் என்பவற்றுக்கும் பொதுவாக வரும்.

4.3.8 தனிவினையும் கூட்டுவினையும்

தனிவினை

அடிச் சொல் ஒன்றினைப் பகுதியாகக் கொண்டு அமைக்கப்படும் வினை **தனிவினை** (அல்லது **முதல் வினை** எனப்படும்.)
எடுத்துக்காட்டு :

தனிவினையடிகள் : வா, இரு, நட, எழுது முதலியன.
வந்தான்
இருப்பான்
நடந்தன
எழுதுவாள்

தனிப்பெயரடிகள் : கதை, கோபம், சித்திரம், பயம் முதலியன.
கதைத்தான்
கோபிப்பான்
சித்திரித்தாள்
பயந்தனர்

தனி இடையடிகள் : போல், மற்று முதலியன.
போன்றான்
மற்றது

தனி உரியடிகள் : சால், மாண் முதலியன.
சாலும்
மாண்டது

கூட்டுவினை

ஒன்றுக்கு மேற்பட்ட அடிச்சொற்கள் சேர்ந்து அமைக்கப்படும் வினை **கூட்டுவினை** எனப்படும்.

எடுத்துக்காட்டு : கண்டுபிடி (காண் + பிடி)
வெட்கப்படு (வெட்கம் + படு)

இரண்டு அடிகளும் பிணைந்து நிற்பதால் உச்சரிப்பிலும் பொருளிலும் கூட்டுவினை ஒருமைத்தன்மை பெறுகிறது.
பெரும்பாலான மொழிவழக்கினை நோக்கினால் கூட்டுவினைகள் வினை வழிக்கூட்டுவினை, பெயர் வழிக்கூட்டுவினை என இரண்டாக வகுக்கலாம். முதலில் நிற்கும் அடி வினையடியாயும் அதைத் தொடர்ந்து ஏனைய அடி இடம்பெறும் இடத்து அது வினைவழிக்கூட்டுவினை எனப்படும்.

முதலில் நிற்கும் அடி பெயரடியாயும் அதைத் தொடர்ந்து ஏனைய அடி இடம் பெறுமிடத்து பெயர்வழிக் கூட்டுவினை எனப்படும்.

எடுத்துக்காட்டு :

பற்றவைத்தான்
வரப்பண்ணினான்
உண்ணச்செய்தனர்
} வினைவழிக்கூட்டுவினை

கோபப்பட்டனர்
அச்சுறுத்தினான்
போரிட்டான்
} பெயர்வழிக்கூட்டுவினை

கூட்டுவினைமுற்றின் ஆக்கம்

1. செய்து என்னும் வினை எச்சமும் வினையும் சேர்ந்து ஆக்கப்படுதல்.

எடுத்துக்காட்டு :

மகிழ்ந்திருந்தாள் - மகிழ்ந்து + இரு (இரு - துணைவினை)
போய்விட்டனர் - போய் + விடு (விடு - துணைவினை)
வந்திருந்தான் - வந்து + இரு (இரு - துணைவினை)

2. ‘செய’ / செய்ய என்னும் எச்சத்துடன் வினை சேர்ந்து ஆக்கப்படுதல்.

எடுத்துக்காட்டு :

செய்யப்பார்த்தேன் - செய்ய + பார் (பார் - துணைவினை)
கூறப்போகிறேன் - கூற + போ (போ - துணைவினை)
வரப்பண்ணினார் - வர + பண்ணு (பண்ணு - துணைவினை)

3. தற்கால வழக்கில் சிலவேளைகளில் முதல் வினையுடன் ஒன்றுக்கு மேற்பட்ட வினைகளும் சேர்ந்து கூட்டுவினைகள் ஆக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

பார்த்துக்கொண்டிருக்கிறான் - பார் + கொள் + இரு
(கொள், இரு என்பன துணைவினைகள்)
உண்ணப்பண்ணிவிட்டான் - உண் + பண்ணு + விடு
(பண்ணு + விடு என்பன துணைவினைகள்)

பயன்படுத்தப்படுகின்றன - பயன் + படு + படு
(படு + படு என்பன துணைவினை)

4. பெயரும் வினையும் சேர்ந்து ஆக்கப்படுதல்.
எடுத்துக்காட்டு :

இன்புற்றான் - இன்பம் + உறு (உறு - துணைவினை)
காயப்பட்டான் - காயம் + படு (படு - துணைவினை)
கேள்வியுற்றான் - கேள்வி + உறு (உறு - துணைவினை)

எதிர்மறை வினையெச்சங்களுடனும் வினையடிகள் சேர்ந்து நிபந்தனைப் பொருளில் கூட்டுவினைகள் ஆக்கப்படுவதுண்டு.

எடுத்துக்காட்டு :

செய்யாவிட்டால் (செய்யா + விடு)
படிக்காவிட்டால் (படிக்கா + விடு)
நடக்காவிட்டால் (நடக்கா + விடு)
காணாவிட்டால் (காணா + விடு)
கற்காவிட்டால் (கற்கா + விடு) ➞ விடு - துணைவினை

5. இடையடியுடன் வினைகள் சேர்ந்தும் கூட்டு வினைகள் ஆக்கப்படும்.

எடுத்துக்காட்டு :

மேற்கொண்டார் - மேல் + கொள் (கொள் - துணைவினை)
கீழ்ப்படிந்தனர் - கீழ் + படி (படி - துணைவினை)
முன்னேறினான் - முன் + ஏறு (ஏறு - துணைவினை)

குறிப்பு :

1. தனிவினை, கூட்டுவினை என்பன இரண்டும் விகுதி, இடைநிலை முதலான ஒட்டுக்களைப் பெற்று வினைமுற்றுகளாகவும் எச்சங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

   எடுத்துக்காட்டு :

தனிவினை	**கூட்டுவினை**
படித்தான்	தூங்கிவிட்டான்
படித்தனர்	கேள்வியுற்ற
படித்த	முன்னேறிய
படித்து	

2. கூட்டுவினைகளில் பெயர், வினை, இடை என்பன முதலில் நிற்கும் அடிகளாகவும் சேர்ந்து வரும் வினைகள் தமக்குரிய பொருளை இழந்து வினையாக்கத்திற்கு துணையாக அமையும் வினைகள் துணைவினைகள் என்பதை மாணவர்க்கு தெளிவுபடுத்துக.

3. எச்சத்தொடர்களுக்கும் கூட்டுவினைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை மாணவர்க்குத் தெளிவுபடுத்துக.
   எச்சத்தொடர்களில் இடம்பெறும் எச்சங்களுக்கும் முடிக்கும் சொற்களுக்கும் வேறுவேறு பொருள் உண்டு. ஆனால் கூட்டுவினைகளில் முதல் அடியும் துணைவினையும் சேர்ந்து ஒரு சொல்லாய் நின்று ஒரே பொருளைத் தருகின்றன.

   எச்சத்தொடர் - படித்துமுடித்தான் (இங்கு படித்தல், முடித்தல் ஆகிய இரு வேறு செயல்கள் நிகழ்ந்துள்ளன.)

   கூட்டுவினை - தூங்கிவிட்டான் (இங்கு தூங்குதல் என்ற செயல் ஒன்றே நிகழ்ந்துள்ளது.)

4.3.9. வினைச்சொற்கள் காலங்காட்டுதல்

வினைச்சொல்லின் முக்கியமான பண்பு காலங்காட்டுதலாகும். வினைசெயலை உணர்த்துவது: செயல் நிகழ்ந்து முடிந்ததாக அமையலாம். நிகழ்ந்து கொண்டு இருப்பதாக அமையலாம். நிகழவிருப்பதாகவும் அமையலாம்.

நிகழ்ந்து முடிந்தது	-	இறந்தகாலம்	-	வந்தான்
நிகழ்ந்து கொண்டிருப்பது	-	நிகழ்காலம்	-	வருகிறான்
நிகழ இருப்பது	-	எதிர்காலம்	-	வருவான்

எனவே வினைகள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு காலத்தை உணர்த்துகிறது.

வினைமுற்றுக்கள் காலங்காட்டுதல்

வினைமுற்றுக்கள் பெரும்பாலும் மூன்றுவகைகளில் காலத்தைக் காட்டுகின்றன.

1. இடைநிலைகள் காலங்காட்டுதல்.
2. விகுதிகள் காலங்காட்டுதல்.
3. பகுதி இரட்டித்துக் காலங்காட்டுதல்.

1. இடைநிலைகள் காலங்காட்டுதல்

தமிழிலுள்ள பெரும்பாலான வினைமுற்றுக்கள் இடைநிலைகளாலேயே காலத்தை உணர்த்துகின்றன. இடைநிலைகள் வினைமுற்றுக்களில் காலம் காட்டும் உறுப்புக்களாக அமைந்து தெரிநிலை வினைமுற்றுக்களில் காலத்தை வெளிப்படையாகக் காட்டுகின்றன.

இறந்தகால இடைநிலைகள்

த், ட், ற், இன், இ, ன் என்பன இறந்தகாலத்தை உணர்த்துவன.

எடுத்துக்காட்டு :

1. படித்தேன் - படி + த் + **த்** + ஏன் (த் - இடைநிலை)
2. உண்டான் - உண் + **ட்** + ஆன் (ட் - இடைநிலை)
3. தின்றான் - தின் + **ற்** + ஆன் (ற் - இடைநிலை)
4. பாடினான் - பாடு + **இன்** + ஆள் (இன் - இடைநிலை)
5. பேசியது - பேசு + **இ** + அ + து (இ - இடைநிலை)
6. போனார் - போ + **ன்** + ஆர் (ன் - இடைநிலை)

நிகழ்கால இடைநிலைகள்

ஆநின்று, கின்று, கிறு என்பன நிகழ்காலத்தை உணர்த்துவன:

எடுத்துக்காட்டு :

நடவாநின்றான்- நட + **ஆநின்று** + ஆன் (ஆநின்று - இடைநிலை)
பாய்கின்றான் - பாய் + **கின்று** + ஆன் (கின்று - இடைநிலை)
நடக்கிறான் - நட + **கிறு** + ஆன் (கிறு - இடைநிலை)

எதிர்கால இடைநிலைகள்

ப், வ் என்பன எதிர்காலத்தை உணர்த்தும் இடைநிலைகள்.

எடுத்துக்காட்டு :

காண்பார் - காண் + **ப்** + ஆர் (ப் - இடைநிலை)
செல்வான் - செல் + **வ்** + ஆன் (வ் - இடைநிலை)

2. விகுதிகள் காலங்காட்டுதல்

தெரிநிலைவினைமுற்றுகளில் சிலவேளைகளில் இடைநிலைகளின்றி சிலவிகுதிகளும் காலங்காட்டும்.

- செய்யுள்களில் து, தும், று, றும் என்னும் விகுதிகள் இறந்தகாலமும் எதிர்காலமும் காட்டும்.

எடுத்துக்காட்டு :

செய்யும் = செய் + உம்
கூடும் = கூடு + உம்

3. பகுதி காலங்காட்டுதல்

சிலவேளைகளில் பகுதி இரட்டித்து காலங்காட்டுவதும் உண்டு.

கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்களை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துப் பகுதிகள் சில இரட்டித்து இறந்தகாலங்காட்டும்.

எடுத்துக்காட்டு :

புகு → புக்கு + ஆன் - புக்கான்
நகு → நக்கு + ஆன் - நக்கான்
தொடு → தொட்டு + ஆன் - தொட்டான்
விடு → விட்டு + ஆன் - விட்டான்
பெறு → பெற்று + ஆன் - பெற்றான்
உறு → உற்று + ஆன் - உற்றான்

தற்கால வழக்கு

இன்றைய வினைச்சொற்கள் துணைவினைகளைப் பெற்று கீழே காட்டியவாறு கால நுட்பங்களை உணர்த்துகின்றன.

இறந்தகாலம்

1. தனி இறப்பு – நீ எழுதினாய்
   (சாதாரண வழக்கு)
2. இறப்புத் தொடர்ச்சி – நீ எழுதிக்கொண்டிருந்தாய்
3. இறப்பு நிறைவு – நீ எழுதியிருந்தாய்

நிகழ்காலம்

1. தனி நிகழ்வு – நீ எழுதுகின்றாய்
2. நிகழ்வுத் தொடர்ச்சி – நீ எழுதிக்கொண்டிருக்கின்றாய்
3. நிகழ்வு நிறைவு – நீ எழுதியிருக்கின்றாய்

எதிர்காலம்

1. தனி எதிர்வு – நீ எழுதுவாய்
   (சாதாரண வழக்கு)
2. எதிர்வு தொடர்ச்சி – நீ எழுதிக்கொண்டிருப்பாய்
3. எதிர்வு நிறைவு – நீ எழுதியிருப்பாய்

குறிப்புவினை காலங்காட்டுதல்

- தற்காலத்தில் குறிப்புவினைகள் காலங்காட்டும் வகையில் பயன்படுத்தப்படுவதில்லை.
- வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள் முக்காலத்திற்கும் பொதுவானவை.
- டு, று என்னும் விகுதிகளை ஈற்றிலுடைய குறிப்பு வினைமுற்றுக்கள் செய்யுள்வழக்கில் இடம்பெற்றுள்ளன.

பொருட்டு	-	பொருளுடையது
அற்று	-	அத்தன்மையது
இற்று	-	இத்தன்மையது
எற்று	-	எத்தன்மையது

இவையும் இறந்தகாலத்தையே உணர்த்துகின்றன.

எச்சங்கள் காலங்காட்டுதல்

பெயரெச்சம்

பெயரெச்சம் இடைநிலைகள் மூலமும் விகுதி மூலமும் காலத்தை உணர்த்துகின்றது.

படித்த	-	இறந்தகால பெயரெச்சம் (த் - இடைநிலை)
படிக்கின்ற	-	நிகழ்கால பெயரெச்சம் (கின்று - இடைநிலை)
வரும்	-	எதிர்கால பெயரெச்சம் (உம் - விகுதி)

வினையெச்சம்

இலக்கணகாரர் வினையெச்சங்களை மூன்று வகைகளுள் அடக்கி விளக்குவர்.

1. உ, இ, ய் முதலிய விகுதிகளைக் கொண்ட வினையெச்சங்கள் காரணப்பொருளில் வந்து இறந்தகாலத்தை உணர்த்துகின்றன. (செய்து என்னும் வாய்பாடு)

   எடுத்துக்காட்டு : **படித்து** முடித்தான்
   பாடி மகிழ்ந்தான்
   போய் வந்தான்

2. 'அ' என்னும் விகுதி கொண்டு முடியும் வினையெச்சங்கள் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்து நிகழ்காலத்தை உணர்த்துகின்றன. (செய என்னும் வாய்பாடு)

   எடுத்துக்காட்டு : மழை **பெய்ய** வயல் நிறையும்
   ஆசிரியர் **வர** மாணவர் எழுந்தனர்

3. 'இன்','ஆல்' என்னும் விகுதிகளுடன் கொண்டு முடியும் வினையெச்சங்கள், காரியப் பொருளிலோ நிபந்தனைப் பொருளிலோ வந்து எதிர்காலத்தை உணர்த்துவன. (செய்தால் என்னும் வாய்பாடு)

   எடுத்துக்காட்டு : மழை **பெய்யின்** நிலம் நனையும் (காரியப்பொருள்)
   ஆசிரியர் **வந்தால்** பாடம் நடக்கும் (நிபந்தனை)

எண்ணக்கரு விளக்கப் படம்



மேலதிக வாசிப்பு நூற்பட்டியல்

- **இலக்கணம்**

இலக்கணச் சுருக்கம்	ஆறுமுகநாவலர்
நன்னூல் காண்டிகையுரை	ஆறுமுகநாவலர்

- **மேலதிக வாசிப்பு**

இலக்கணத் தெளிவு	பண்டிதர் க. வீரகத்தி
அடிப்படைத் தமிழ் இலக்கணம்	க. சொக்கலிங்கம்
அடிப்படைத் தமிழ் இலக்கணம்	சு. வேலுப்பிள்ளை
மொழியும் தமிழ் இலக்கணமும்	பேராசிரியர் எம். எ. நு.ஃமான் அ. சண்முகதாஸ் மற்றும் மனோன்மணி சண்முகதாஸ்
தமிழ்மொழி வரலாறு	டாக்டர் சி. சக்திவேல்
இக்கால மொழியியல்	முத்துச் சண்முகன்